
வானதி
பதிப்பகம்



# மூவிரண்டு ஏழு

ரா.கி.ரங்கராஜன்

# மூவிரண்டு ஏழு

ரா. கி. ரங்கராஜன்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : 1970
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட் 1992

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 25-00

நேரு அச்சகம் 43 அம்மையப்பன் தெரு சென்னை-600014

# பதிப்புரை

சேது!

பத்து வயது சிறுவனாக இருந்தபோது அவன் தந்தைக்கு, அவன் கண்முன்னாலேயே நீதிமன்றத்தில் தூக்கு தண்டனை விதிக்கப்படுவதைக் கண்டு திக்பிரமையடைந்து நின்றுவிடுகிறான். கொலைகாரனின் மகன் என்று தன்னையும், கொலைகாரனின் மனைவி என்று தன் தாயையும் பழித்து இழித்து ஒதுக்கிய உற்றார், உறவினர்களிடமிருந்து பிரிந்து, வளர்ந்து, படித்து பட்டதாரியாகி ஐந்து நட்சத்திர ஓட்டலான 'ஓட்டல் உமா'வின் மானேஜராகவும் வளர்ந்துவிடுகிறான்.

ஓட்டல் தொழிலில் சேதுவுக்குள்ள நுண்ணறிவையும், முன்முயற்சியையும், அவன் முதலாளிக்கு எவ்வளவு விசுவாசமாக பாடுபடுகிறான் என்பதையும் கண்டு, அவனை வேறு சில 'பிரபல ஓட்டல்' முதலாளிகள் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் ஓட்டலுக்கு இழுத்துக்கொள்ள வலைவீசுகிறார்கள்.

அந்த வலையில் அவன் மாட்டிக்கொள்ளவிருந்த நேரத்தில் அவன் காதலி இருந்திகாவும், 'ஓட்டல் உமா'வின் தொழிலாளர்களும்

சேர்த்து எப்படி அவனை மீட்டு வருகிறார்கள் என்பது நாவலின் உச்சகட்ட காட்சி.

குமுதம் பத்திரிகையின் துணை ஆசிரியரான திரு. ரா. கி. ரங்கராஜன் அவர்களின் விறுவிறுப்பான நாவல் இது.

வாசகர்களுக்கு நல்ல விருந்தாக அளித்த ஆசிரியர் திரு. ரா. கி. ரங்கராஜன் அவர்களைப் பாராட்டுகிறேன்.

**ஏ. திருநாவுக்கரசு**
**வானதி பதிப்பகம்**

# மூவிரண்டு ஏழு

## 1

நூற்றேழு. 107.

மூன்று பிளாஸ்டிக் இலக்கங்களும் என்னை முறைத்தன.

அறையின் முன்னால் போய் நின்றுகொண்டேன். டையை இழுத்துவிட்டுக்கொண்டேன். கிராப்பை அழுத்திக்கொண்டேன். ஷூஸ் நுனியில் தென்பட்ட அழுக்கின் சந்தேகத்தை அகற்றிக்கொண்டேன்.

எவ்வளவு சாதுவான அறை! இதைப்பற்றியா அத்தனை புகார்கள்?

ஆட்காட்டி விரலின் நுனியினால் தட்டினேன். 'ஓட்டல் உமா'வின் மானேஜர் என்ற முறையில், மூன்று நான்கு மாதங்களுக்கொருமுறை நான் செய்ய நேரிடுகிற கசப்பான கடமை இது. செய்யாதிருக்க முடியாது.

''எஸ், கமின்.'' என்று குரல் வந்தது. அவன்தான்.

கதவைத் தள்ளிக்கொண்டு நுழைந்தேன். (லேசான கிறீச்சொலி. பெயிண்ட் அடிக்கும்போது கவனிக்கச் சொல்ல வேண்டும். ஏர்கண்டிஷனின் குளிர்ச்சி என்னை அணைத்துக்கொண்டது.

"குட்மார்னிங்" உள்ளே நுழைந்த நான் மறுகணமே இயங்கத் தயாரானேன்.

சோப்பின் நறுமணம் கமகமவென அறையெங்கும் குவிய, அப்போதுதான் குளியலறையிலிருந்து வெளிப்பட்டிருந்தாள். முழங்காலிலிருந்து கழுத்துவரை ஒரு மெல்லிய ஸாரியை மட்டுமே சுற்றிக்கொண்டிருந்தாள், இடைக்கால நிவாரணமாக. "பரவாயில்லை, வாருங்கள்."

முதலில் அவளுடைய முழுதும் எனக்குப் புலப்படவில்லை. விசாலமான நெற்றி மேல் பகுதியும், அதன்மேல் சிலுசிலுவென அசைந்த கூந்தல் இழைகளும்தான் நான் பார்த்தேன். துவாலையினால் முகத்தை அழுந்தத் துடைத்தவண்ணமே கொஞ்சம் கொஞ்மாகத் துவாலையைக் கீழிறக்கினாள். பென்ஸில் கோடு போன்ற புருவங்கள், பிறகு நீண்ட நயனங்கள், பிறகு எடுப்பான நாசி, பிறகு கதுப்பான கன்னங்கள், பிறகு ஸ்பாஞ்சில் செய்தாற்போன்ற ஜிவு ஜிவுவென்ற அதரங்கள்— இவ்வாறு படிப்படியாகத்தான் அவள் வதனத்தைக் கண்டேன்.

நம்பகமான மூலதனத்தைத்தான் முதலீடு செய்திருக்கிறான்.

"எனக்கு அவசரமில்லை. நீங்கள் டிரெஸ் பண்ணிக்கொண்டான பிறகு சொல்லியனுப்புங்கள். வருகிறேன்." என்றேன்.

"ஏன் சிரமம்?" அவள், வலதுகாலை ஒரு நாற்காலியின் மீது தூக்கி வைத்துக்கொண்டு அதே தேங்காய்ப்பூத் துவாலையினால் முழங்காலின் கீழே ஈரம் போகத் துடைத்துக்கொண்டாள். "நீங்கள் இந்த ஓட்டலில்..."

"மானேஜர்" என்று வாக்கியத்தை முடித்தேன். "என் பெயர் சேது. உங்களைப் பார்க்க வருவதாகப் பையனிடம் சொல்லியனுப்பினேனே?"



"சொன்னான், சொன்னான்... மானேஜர் என்றால் இவ்வளவு பெரிய ஓட்டல் மொத்தத்துக்குமா?" கையால் வட்டம் போட்டு, கண்ணையும் அகட்டிச் சுழற்றி, மிகையான ஆச்சரியத்தை வெளிப்படுத்தினாள் அவள். "வயதில் இளைஞராக இருக்கிறீர்களே!"

மேடம்! இந்த அஸ்திரம் ரொம்பத் துருப்பிடித்தது.

நான் செருமிக்கொண்டேன். சொல்ல வேண்டியது தான். அதைச் சொல்வதற்கென்று ஒரு 'பத்தா' இருக்கிறது. ஆங்காங்கே ஏற்ற இறக்கங்கள் கொடுத்து, முகத்திலேயும் தக்க பாவங்களைத் தந்து, ஜனரஞ்சகமாகக் கச்சேரியை முடித்தாக வேண்டும். அதுவொன்றும் கஷ்டமில்லை. நூறு முறை மேடையேறியவன் நான்.

"உங்களைப்போலக் கலகலப்பான, சோஷலான, சுறுசுறுப்பும் துடி துடிப்பும் உள்ள பெண்கள் எப்போதாவது ஒருமுறைதான் எங்கள் ஓட்டலுக்கு வருகிறார்கள். அழுது வடிகிற இடங்களுக்குப் பிரகாசம் கொடுப்பவர்கள் நீங்கள்தான். இருந்தாலும், இந்தப் போலீஸ் இலாகா இருக்கிறதே—சே! ரசனையற்ற பிறவிகள்!"

புத்தகத்தில் அடுத்த பக்கத்தைப் புரட்டினாற்போல, அவள் முகத்தின் செயற்கையான இனிமை மாறியது. நான் பார்க்க வருவதாகச் சொல்லியனுப்பியபோதே சற்று ஊகித்திருப்பாள். இப்போது மிச்சமும் புரிந்துவிட்டது.

ஆனால் ஆடியன்ஸுக்குத் தெரிந்த பாட்டென்பதற்காகப் பாகவதர் பாதியில் எழுந்து போகமுடியுமா? சொச்சத்தையும் ஒப்பித்தேன். "அட, போலீசாரைத்தான் சரிபண்ணுகிறோம் என்றாலும், இந்த அக்கம்பக்கத்து ரூம்காரர்கள்..."

"என்ன சொல்கிறார்கள்?"

''நீங்கள் ஏதோ தமாஷாகப் பேசிச் சிரித்துக்கொண்டு, ஆடிப்பாடிக்கொண்டு இருக்கிறீர்களல்லவா? அவர்களுக்குத் தூக்கம் கெடுகிறதாம் பன்னிரண்டு மணியாகிவிட்டால கப் சிப்பென்று அடங்கிவிட வேண்டும் என்று ஒரு குருட்டுக் கொள்கை...''

''ஹாஹ்ஹா!'' பொந்து விழுந்த சிரிப்பொன்றை வெளியிட்டாள் அவள். ''உங்களுக்கு உலக அனுபவம் போதாது.'' டிரஸ்ஸிங் டேபிளின் மேலறையை இழுத்தாள். புஸ்ஸென்று நோட்டுக் கற்றைகள் சீறின. இருப்பதற்குள் பெரிய அளவும் பெரிய இலக்கமும் கொண்ட இரண்டு தாள் களை எடுத்து என்னிடம் நீட்டினாள். ''தப்பாக நினைத்து விடாதீர்கள்— உங்களுக்கல்ல! புகார் சொல்பவர்களின் வாயை அடைக்க இது உதவும். இல்லையா?''

இரண்டு கரென்ஸி தாள்களையும் திரும்ப டிராயருக்குள் வைத்து மூடிவிட்டு டெலிபோனை எடுத்தேன். ''ஒன் நாட் ஸெவனிலிருந்து பேசுகிறேன். ராமப்பிரம்மத்தைக் கூப் பிட்டு, கெஸ்ட் ரிஜிஸ்டரைக் கொஞ்சம் அனுப்பி வைக்கச் சொல். தாங்க்ஸ்.'' என்றேன்.

அவள், 'நெயில் கட்ட'ரைக் கொண்டு நகங்களின் நுனி யைக் கத்தரித்துக்கொண்டிருந்தாள். கோபத்தினால் அவளுடைய உண்மையான வயது வெளிப்பட்டுக்கொண் டிருந்தது. பாவம், அவளுக்கே தெரியாது.

பதிவுப் புத்தகத்தைக் கொடுத்துவிட்டுப் போனான் பையன்.

பக்கங்களைப் புரட்டிக் கண்டுபிடித்தேன். ''மதறாஸை நன்கு சுற்றிப் பார்த்துவிட்டீர்களல்லவா?''

''ஏன்?''



''வருகையின் நோக்கம் என்ற பத்தியில், 'ஸைட் ஸீயிங்' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதனால் சொன் னேன். புறப்படும் தேதி என்று இன்றைத் தேதியைப் போட்டு விடுகிறேன்.'' நான் பேனாவைத் திறந்தேன்.

''மிஸ்டர் மானேஜர்!''

''எந்த இடத்துக்குப் போகிறீர்கள் என்று குறிப்பிட வேண்டும். என்ன போடட்டும்?''

பசும் புதருக்குப் பின்னாலிருந்து வருகிற புலிபோல, அவளுடைய புன்னகையைப் பிளந்துகொண்டு சினம் தன் சொருபத்தைக் காட்டியது. ''நீ ஒரு சாதா மானேஜர். உன்னுடன் நான் பேசத் தயாராயில்லை. உன் 'பாஸ்' யார்— இந்த ஓட்டலின் புரொப்ரைட்டர்? நாளொன்றுக்கு முப்பத்தைந்து ரூபாய் வீதம் பதினைந்து நாளாக நான் தந்து வருகிறேன். இன்னும் ஒரு மாசம் தருவேன். முதலாளிக்குத் தெரியும் அந்தப் பணத்தின் அருமை! எங்கே அவர்? நான் அவரைப் பார்க்க வேண்டும்.''

''ஓ. நானே அழைத்துப் போகத் தயார். வெளியே காத்திருக்கிறேன். முறையாக டிரஸ் முடித்துக்கொண்டு வாருங்கள்.'' என்று கூறிவிட்டு அறைக்கு வெளியே வந்தேன்.

இவள்மாதிரி ஒழுக்கங்கெட்ட நபர்களுக்கு நம்பீசனின் முன்னிலையில் நிற்கக்கூடத் தகுதி கிடையாது. ஆனால் யாரையும் நான் தடுத்து நிறுத்தக் கூடாதென்று கட்டளை. 'என்னைப் பார்க்கவேண்டும் என்பவர்கள் பார்த்துவிட்டுப் போகட்டுமே? அதிலென்ன நஷ்டம்?' என்பார்.

அவள் வெளியே வந்தாள்—முன்பிருந்ததே பரவா யில்லை என்னும்படியான அலங்கோலத்துடன் கதவையும் திறந்தே போட்டபடி புறப்பட்டவளை உடனே பின்தொட ராமல், கதவைச் சாத்திப் பூட்டிவிட்டுக் கிளம்பினேன்.

புதிய நீச்சல் குளத்தின் மறுகரையில் கட்டப்பட்ட புதிய பிளாக் இது. குளத்தின் சிமெட்டிக் கரை வழியே அவள் நடந்து செல்லும் வேகத்தைப் பார்த்து, நீந்திக் கொண்டிருந்த இரண்டொரு இளைஞர்கள் மெல்ல விசிலடித் தார்கள். சிரிக்க முயன்ற ஓட்டல் சிப்பந்திகள், நானும் வரு வதைக் கண்டு திடுக்கிட்டு வேறுபுறம் திரும்பிக்கொண் டார்கள். ஸலூனையும், கார் பார்க்கையும், குழந்தைகள் பூங்காவையும் கடந்து, ஏ பிளாக்கின் வெராந்தாவில் நடக்கத் தொடங்கியதும் நான் முன் சென்று வழி காட்டி னேன், நம்பீசனின் ஏர்கண்டிஷன் அறைக்கு.

“ஒரு நிமிடம்,” என்று அறைவாசலில் அவளிடம் கேட்டுக்கொண்டேன். “மிஸ்டர் நம்பீசனுக்கு நரம்புத் தளர்ச்சி நோய் இருக்கிறது. உணர்ச்சி வசப்பட்டுப் பேசும் படி அவரைச் செய்துவிடாதீர்கள். மற்றப்படி நீங்கள் எது சொன்னாலும் எனக்கு ஆட்சேபமில்லை. குறுக்கிடாமல் இங்கேயே நின்றுகொள்கிறேன்.”

தீக்குச்சி கிழித்தாற்போல் சரக்கென்று என்னை முறைத்துவிட்டு அவள் உள்ளே சென்றாள்.

ஐந்து நிமிஷம் ஆகியிருக்கும்.

பஸ்ஸரில் அழைப்பு வந்தது. உள்ளே போனேன். சோபாவில் சப்பணமிட்டாற்போல் அமர்ந்திருந்தார் நம்பீசன். எதிரில் கால்மீது கால் போட்டுக்கொண்டு அவள் இருந்தாள்.

நம்பீசன் புன்சிரிப்புடன், “என்னப்பா சேது, ரூமைக் காலி செய்யும்படி இவர்களைக் கட்டாயப்படுத்துகிறா யாமே, உண்மையா?” என்று கேட்டார்.

“ஆமாம் சார்... வந்து...”



“சரி, சரி. உண்மையா என்று தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன்,” என்ற நம்பீசன் அவள் பக்கம் திரும்பி, “காஷியரிடம் கணக்குக் கேட்டுக்கொள்ளுங்கள், வணக்கம்,” என்று கை குவித்தார்.

அவள் குபுக்கென்று எழுந்தாள். “என்னது! இவ்வளவு நேரம் நான் சொன்னதைக் கேட்டும்...”

“மன்னியுங்கள்,” நம்பீசன் வாசல் கதவைத் திறந்து வைத்துக்கொண்டார். “வாடிக்கையாளரின் கட்சிதான் சரி என்று பெரும்பாலான ஸ்தாபனங்கள் கொள்கை வைத்துக்கொண்டிருக்கின்றன. சில ஸ்தாபனங்கள் சிப்பந்தி களின் கட்சிதான் சரி என்று வைத்துக்கொள்வதுண்டு. ‘ஓட்டல் உமா’வில் சேது சொல்வதுதான் சரி என்று வைத் திருக்கிறோம்... சேது, இவர்களுக்கு டாக்ஸி அமர்த்திக் கொடப்பா.”

“எஸ் ஸார்.”

“எந்த இடியட்டின் தயவும் எனக்குத் தேவை யில்லை.” புயல்போல் எங்களைத் தாண்டிக்கொண்டு அவள் தன் அறையிருக்கும் திசையில் வேகமாய் நடந்தாள்.

“ஒரு இடியட்டுக்கு இன்னொரு இடியட்டின் தய தேவையில்லைதான்.” கடகடவென்று சிரித்தபடி நம்பீச என் தோளில் கை வைத்தபடியே என்னுடன் ஆபீ அறையை நோக்கி வரலானார்.

அந்த மாதிரி வேளைகளில் நான் பெருமையினால் மலையளவு பூரித்து, பணிவினால் கடுகளவு சிறுத்துப் போவது வழக்கம். இப்போதும் அப்படிப்பட்ட கலவையான உணர்ச்சிகளே என்னை ஆட்கொண்டன

“ஸிலோன் குக் வேறு ஒருவன் ஏற்பாடு செய்துவிட் டேன் சார்.” என்று தெரிவித்தேன்.

''பலே, பலே. ஸிலோன் மீல்ஸ் கிடைக்குமா என்று நாளைக்கு ஒருவர் கேட்கிறபோது கையைப் பிசையக் கூடாது... அப்புறம், அந்த ஸைகோதெரபி ஸெமினார்—அவர்கள் போன் பண்ணினார்களாமே!''

''ஆமாம். ஏ. ஸி. ஹால் போதாது என்றார்கள். லெஃப்ட் விங்கில் இருக்கிற சின்ன ஹாலையும் ரெடி பண்ணியிருக்கிறேன்,'' என்று உறுதி கூறினேன்.

ஆபீஸ் அறையில் வேலையாக இருந்த எல்லாக் குமாஸ்தாக்களும் நம்பீசன் நுழைந்ததுமே எழுந்து கொண்டார்கள். ''உட்கார்ந்திருங்கள், உட்கார்ந்திருங்கள்...'' என்று கையமர்த்திய நம்பீசன், ''கடிதம் ஏதாவது வந்திருக்கிறதா என்று பார்த்துப் போகத்தான் நான் வந்தேன்'' என்றார்.

''ஆமாம் சார். இதோ.'' அஸிஸ்டென்ட் மானேஜரான கிழவர் ராமப்பிரம்மத்தின் கை, முதலாளியிடம் ஒரு நீல உறையைத் தந்தது. ஆனால் ஆசாமி என்னைப் பார்த்து ஏனோ கண் சிமிட்டினார். மற்றக் குமாஸ்தாக்களும் என்னைப் புன்சிரிப்புடன் பார்த்தார்கள். ஓ! அந்த 107'வது எண் அறை காலி செய்யப்படுகிற செய்தி இவர்களுக்கு எட்டிவிட்டதா!

தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்தார் நம்பீசன். ''என்னடா, பதினைந்து நாளைக்கு மேலாகிறதே கௌதமனிடமிருந்து கடிதம் வந்து என்று நினைத்தேன்...வந்துவிட்டது...''

வெளிநாட்டுத் தபால் தலைகள் அடங்கிய உறையைப் பிரிக்காமலே அதைத் தடவிக் கொடுத்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தார் அந்தப் பிரியமுள்ள தந்தை. ஸ்விட்ஜர்லந்தில் உள்ள மகனின் கையைத் தொட்டுவிட்டு, அந்த இனிய ஸ்பரிசத்துடன் இங்கே இவர் கையையும் தொட வந்துள்ள உறையல்லவா அது!



திடீரென அவர் முகபாவம் மாறியது. முகத்திலும் கழுத்திலும் கையிலும் நரம்புகள் இறுகுவதைக் கண்டேன். புஜத்தில் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. கதவைப் பாய்ச்சலுடன் தள்ளித் திறந்துகொண்டு தன் அறைக்கு ஓடினார் வயதுக்கு மீறிய வேகத்துடன்.

''ராமப்பிரம்மம்! அந்த மாத்திரை! எடுங்கள், எடுங்கள்!'' என்று கத்தினேன் நான்.

பியூன் தாசரதி குறுக்கிட்டான். ''அவர் ரூமிலேயே இருக்கிறது சார். சீக்கிரம் போங்க! இந்தாங்க சாவிக் கொத்து!''

''கொடு.'' கொத்துச்சாவியைப் பறித்துக்கொண்டு ஓடினேன் நம்பீசனின் அறைக்கு. என் ஷூஸ்களின் சத்தம் என்னையே துரத்திக்கொண்டு வருகிற மாதிரி ஒலித்தது.

கதவைத் தள்ளினேன்.

''வராதே! வரா... வர்...'' மூச்சுத் திணறி, பேச்சுக் குமுறும் வேதனை முனகல்... அது அவர் வழக்கம்தான்-அவருடைய நோயின் இழிமையை, அந்த அவஸ்தையை யாரும் கண்டுவிடக்கூடாது. அவமானம் தாளாமல் துடிப்பார்.

சரிவரத் தாளிடாத கதவைப் பிளந்துகொண்டு உள்ளே நுழைந்தேன். என்ன கொடுமையான காட்சி! பன்முறை பார்த்ததுதான் என்றாலும்—

கொடுத்தே பழக்கப்பட்ட கைகள், அனாதைகள் அணைத்துக்கொள்வதற்காகவே ஏற்பட்ட கால்கள், கருணையின் திசையிலேயே நிலைத்திருக்கும் விழிகள், இங்கிதமானதை மட்டுமே பேசும் வாய்—இவற்றையெல்லாம் கடவுளே, ஏனிப்படி விலுக் விலுக்கென்று ஆட்டிப் படைக்கிறாய்?

தரைக் கம்பளத்திலே புரளும் அந்த லட்சாதிபதியின்
தளர்ந்த மேனியைத் தாங்கிப் பிடித்து, சாவிக்கொத்தைக்
கொடுத்தேன். உடைகளைத் தளர்த்திவிட்டு, நாக்கைக்
கடித்துக் கொண்டுவிடாதபடி பல்லிடுக்கில் ஒரு ரப்பர்
துண்டைப் பொருத்தினேன். தன் டையை இறுகப் பிடித்
திருந்த அவருடைய கரம் மெல்லத் தளர்ந்து தோய்ந்தது.

சில நிமிடங்களில் அவர் கண் விழித்தபோது என் கண்
குளமாகியிருந்தது. "எல்லாம் தெரிந்த நீங்கள் இப்படி
இருக்கலாமா சார்? டாக்டர் கொடுத்த மருந்தை ஒழுங்
காகச் சாப்பிட்டு வந்தால் என்றைக்கோ குணமாகி
யிருக்குமே?" என்று துக்கத்துடன் சொல்லி, இரும்புப்
பெட்டகத்தின் மீதிருந்த குப்பியிலிருந்து 'எபிடோன்
கார்டினால்' மாத்திரை எடுத்துத் தந்தேன். அவரை என்
மார்பில் சாய்த்துக்கொண்டு தண்ணீர் கொடுத்து மாத்
திரையை விழுங்கச் செய்தேன்.

"ஒன்றுமில்லை எனக்கு, கலவரப்படாதே" என்று
சோகையான ஒரு புன்னகையுடன் என் தோளை அழுத்தி
எழுந்துகொண்டு சோபாவில் அமர்ந்தார் நம்பீசன்.
என்னைத் தவிர வேறு யாரேனும் வந்துவிட்டார்களோ
என்று கவலையுடன் கதவை நோக்கின அவர் கண்கள்.

அந்த வெளிநாட்டுத் தபால் உறை தரையிலேயே
கிடந்தது வாய் திறவாமல்—திறக்கப்படாமல். எடுத்து அவ
ரிடம் தந்தேன். மகனிடமிருந்து கடிதம் வந்த ஆனந்தம்
தான் அவருக்கு வலிப்பை ஏற்படுத்தியிருக்குமோ?

வெட்கம் கலந்த குரலில் நம்பீசன் சொன்னார்:
"இதோ... இதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்... நானும்
இப்படிப்பட்ட அனுதாபத்துக்குரிய பிறவிதானே என்று
ஏதேதோ எண்ணங்கள் தோன்றின..." உறையின்மீது
ஒட்டப்பட்டிருந்த ஒரு பிரசார பில்லையைச் சுட்டிக் காட்
டினார்.



"வலிப்பு நோயாளிகளுக்கு வேலை கொடுத்து ஆதரி
யுங்கள்" என்ற கோரிக்கையைத் தாங்கியிருந்தது அந்தப்
பில்லையில் இருந்த வாசகம்.

எனக்குத் தொண்டை கரகரத்தது. "நீங்கள் ஆயிரக்
கணக்கான திடகாத்திரர்களுக்கு வேலை கொடுத்து ஆதரிக்
கிறவர். இதை ஒரு பொருட்டாக எடுத்துக்கொண்டீர்
களே!" என்று சிரித்துச் சமாளித்தேன். அதேசமயம்,
ஸ்விட்ஜர்லந்திலுள்ள அந்த இங்கிதமற்ற மகன்மீது கட்டுக்
கடங்காத ஆத்திரம் வந்தது. தந்தையின் வியாதி பற்றி
அறிந்தவன் வேண்டுமென்றே இதை ஒட்டி அனுப்பினானா?
அல்லது தற்செயலாக நேர்ந்ததா?

"படியப்பா சேது." மஸ்லின் துணி போன்ற சவ்வுக்
காகிதத்தை என்னிடம் தந்தார் நம்பீசன், வெள்ளெழுத்துக்
கண்ணாடி அருகில் இல்லாதது மட்டும் காரணமல்ல.
மகனின் வாசகத்தைக் காது குளிரக் கேட்க வேண்டும் என்ற
ஆசையாலும்தான்.

ஆனால் படிப்பதற்குப் பத்து வரிகளுக்கு மேல் இருக்க
வில்லை, பரீட்சை நெருங்கி வருகிறதாம். படிப்புத்
தொல்லையாம். செலவுக்குப் பணம் போதவில்லை.
அன்புள்ள கௌதமன்.

அவ்வளவுதான் உயிரற்ற, ஈரமற்ற உள்ளத்தைக்
கொஞ்சமும் தொடாத வரிகள்.

ஏனோ தெரியவில்லை. கௌதமனைப்பற்றி எப்போது
நினைத்தாலும், ஓர் எதிரியை நினைக்கிற மாதிரி கோபம்
தான் எழுகிறது எனக்கு.

நம்பீசனோ மகனின் அன்புக் கடலில் குளித்துக்கொண்
டிருந்தார். "பார்த்தாயா சேது? என்னை ஓய்வெடுத்துக்
கொள்ளுங்கள், வீட்டோடு இருங்கள் என்று நீ மூச்சுக்கு

மூன்னூறு தரம் சொல்கிறாயே, கௌதமன் சொல்கிறானா? கிடையாது. ஏன்? பிராக்டிகலான பையன். படிப்பை முடித்துக்கொண்டு வர வேண்டும், அப்பாவிடமிருந்து பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். பிறகு அவரைப் பங்களாவிலே உட்கார்த்தி வைத்து உபசரிக்க வேண்டும்— இப்படி எதையும் பிராக்டிகலாகப் பார்க்கிறவனப்பா கௌதமன். இல்லை? நீ என்ன சொல்கிறாய்?''

''ஆமாம் சார்'' என்று பதிலளித்துவிட்டு, போனை எடுத்து ஆபரேட்டரைக் கூப்பிட்டு, "காரை ஆபீஸ் ரூம் வாசலுக்குக் கொண்டுவரச் சொல். ஸார் பங்களாவுக்குப் போக வேண்டும்'' என்றேன். என் குரலிலிருந்த உறுதியைப் புரிந்துகொண்ட நம்பீசன் ஆட்சேபம் சொல்லாமல் வீட்டுக்குப் போக எழுந்துகொண்டார்.

கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டுபோய்க் காரில் ஏற்றியனுப்பினேன். உடனே பங்களாவுக்குப் போன் செய்து, சமையற்காரனைக் கூப்பிட்டு, எஜமானரைத் தக்கபடி கவனித்துக் கொள்ளும்படி சொன்னேன். நம்பீசனுக்கு அப்பா மாதிரி அந்தக் கிழவர். அக்கறையாய்ப் பார்த்துக் கொள்வார்.

வெராந்தாவுக்கு வந்து நின்றுகொண்டிருந்தபோது, "சும்மா சொல்லவில்லை, சேது. சொந்தப் பிள்ளைகூட அவரை இப்படிக் கவனித்துக்கொள்ள மாட்டான்,'' என்றார் ராமப்பிரம்மம்.

''இதற்கு மேலும் செய்யக் கடமைப்பட்டவன் நான். செய்யத்தான் தெரியவில்லை.'' என்றேன்.

''ஆனால் முதலாளியைக் காக்காய் பிடிக்கிறவன் என்று உன்னைப் பரிகாசம் செய்கிறவர்களும் உண்டு.''



''இருந்துவிட்டுப் போகட்டும். இன்று நான் மனிதனாகத் தலைதூக்கி நிற்பதற்குக் காரணமாயிருந்தவர் நம்பீசன்தான்...''

''இப்படிப் பொதுப்படையாகவே சொல்கிறாயே தவிர, ஏன், எப்படி என்று என்னிடம் ஒரு தரம்கூட நீ விவரம் சொன்னதில்லை. அப்படி என்னதான் உதவி செய்தார் நம்பீசன் உனக்கு?''

''சந்தர்ப்பம் வரும்போது சொல்கிறேன்.'' என்பதோடு நிறுத்திக்கொண்டேன்.

கசப்பான எண்ணங்கள் அடுக்கடுக்காகப் பல எழவிருந்ததை நிறுத்திவிட்டது, ஆபீஸ் அறை எதிரே வந்து நின்ற டாக்ஸி. அந்த 107'ம் எண் அறைக்காரிதான். டாக்ஸி டிரைவர் மூலமே பணத்தையனுப்பினாள். ரெஜிஸ்டரில் கையெழுத்திட்டாள். ரசீது பெற்றுக்கொண்டாள். இறங்கி வரவேயில்லை.

நானும் ராமப்பிரம்மமும் ரகசியமாகப் புன்சிரிப்பைப் பரிமாறிக்கொண்டோம். டாக்ஸி நகர்ந்துவிட்டது.

"ஓட்டலில் ரொம்பப்பேர் உன்மீது கோபமாயிருக்கிறார்கள்.'' என்றார் ராமப்பிரம்மம். 'எவ்வளவு பேருக்கு அவள் நல்ல பொழுபோக்காக, குஷியும் குதூகலமும் கொடுத்துக்கொண்டிருந்தாள்! கெடுத்துவிட்டாயே எல்லாவற்றையும்!''

அவருடைய கிண்டல் சிரிப்பைப் புரிந்துகொண்டு, "அது சரி, பிற்பாடு போலீஸ் ஸ்டேஷனில் கிடைக்கக்கூடிய கும்மாளத்தையும் சேர்த்துத்தான் கெடுத்துவிட்டேன்.'' என்றேன்.

''உன் அம்மா நங்கநல்லூரில்தானே இருக்கிறார், சேது?''

"ஆமாம். ஏன்?"

"ஒருநாள் நேரே அவரிடம் போய், 'உங்கள் பிள்ளையை இப்படி மரக்கட்டையாய் வளர்த்திருக்கிறீர்களே? ஓட்டலையும் நம்பிசனையும் தவிர வேறு ஒன்றுமே கிடையாதா அவனுக்கு?' என்று கேட்கப்போகிறேன்!"

"என் அம்மாவைப்பற்றி உங்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். உங்கள் 'புகாரைக் கேட்டு இரட்டிப்புச் சந்தோஷம் ஏற்படும் அவளுக்கு!" என்று பதிலளித்தேன்.

"நிஜமாய்ச் சொல், சேது. இந்தக் காதல் கீதல் என்பதெல்லாம் உனக்கு..."

நானும் அவருடைய வேடிக்கைப் பேச்சைத் தொடர்ந்தேன்: "ஓ! ஏன் இல்லாமல்? ஏராளமாய் உண்டு என் கனவுக் கன்னிக்காகக் காத்திருக்கிறேன் சார்! என்றைக்காவது ஒருநாள், எங்கேயோ ஓரிடத்திலிருந்து எனக்காக ஒரு காதலி ஓடிவரத்தான் போகிறாள். அவள் காதைத் திருகு திருகென்று திருகி, 'அடி என் இச்சைக்கினிய பச்சைக் கிளியே! எங்கேயடி பறந்து கொண்டிருந்தாய் இத்தனை காலமும்!' என்று..."

"என்ன, நிறுத்திவிட்டாய்?" என்ற ராமப்பிரம்மம் நான் பார்க்கும் திசையில் தானும் பார்த்தார்.

ரிஸப்ஷன் ஹாலிலிருந்து ஒரு பெண் வந்துகொண்டிருந்தாள்.

என்னை நெருங்கியதும், "மிஸ்டர் சேது என்பவர் யார்?" என்று கேட்டாள்.

அவள் கேள்வி என் காதில் விழவில்லை. 'என்ன இனிமையான குரல்!' என்ற எண்ணம்தான் ஏற்பட்டது.

# 2

'என்ன இனிமையான குரல்!' என்ற எண்ணம்தான் ஏற்பட்டது.

ஆனால் சுதாரித்துக்கொண்டு, "சேது என்பது நான்தான். உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று என் வழக்கமான புன்சிரிப்புடன் விசாரித்தேன். ராமப்பிரம்மம் தன் அலுவலைக் கவனிக்கச் சென்றுவிட்டார்.

"இந்த ஓட்டலில், தங்குவதற்கான சார்ஜிலேயே சேர்ந்ததுதானா சாப்பாட்டுக் கட்டணமும்? அல்லது இது தனி, அது தனியா?" என்று கேட்டாள் அவள்.

கேவலம் ரூபாய் விஷயத்தை அவள் எடுப்பாள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை.

தங்கும் கட்டணத்தோடு சேர்ந்ததுதான் சாப்பாட்டுக் கட்டணமும். அதைச் சொன்னேன்.

அவள், மேலும் கறாராக, "அதாவது இங்கே தங்குகிறவர் இங்கே சாப்பிட்டாலும் சாப்பிடாமலிருந்தாலும் அந்தக் கட்டணத்தை வசூலித்துவிடுவீர்கள்?" என்று கேட்டாள்.

"ஆமாம்."

"அதைத்தான் ரிஸப்ஷனிஸ்டிடம் கேட்டேன். மானேஜரைக் கேளுங்கள் என்று அனுப்பினார்'' என்றாள் அவள். ''நான் வெளியிலே அடிக்கடி போகிறவள். நண்பர்கள் நிறைய உண்டு. சாப்பிடச்சொல்லிப் பலபேர் உபசாரம் பண்ணுவார்கள். 'இல்லையில்லை ஓட்டலில் பணம் வசூலித்துவிடுவார்கள்' என்று சொல்லி அங்கெல்லாம் சாப்பிடாமல் இங்கேயே வந்துவிட வேண்டும் என்கிறீர்களா?''

சண்டைக்கென்றே புறப்பட்ட மாதிரி அவள் வினாக்களைத் தொடுத்தது எனக்கு ஆத்திரமூட்டிற்று. ஆனால் நான் பொறுமை இழக்கவில்லை; புன்னகையையும்தான்.

''நீங்கள் சொல்வது உண்மை. ஆனால் ஓட்டல் விதிகள் அப்படித்தான் இருக்கிறது'' என்றேன்.

''என்னைப் பொறுத்தமட்டில், இங்கே நான் சாப்பாடு சாப்பிடாத வேளைகளில் அதற்குண்டான சார்ஜை கழித்துவிடவேண்டும். ஆபீசில் சொல்லிவிடுங்கள்'' என்றாள் அவள் விடாப்பிடியாக.

பண விஷயத்தில் மட்டும் வாதாட வாதாட சூடுதான் அதிகரிக்கும். "உங்கள் இஷ்டப்படியே செய்துவிடுகிறோம்'' என்றேன்.

''நன்றி.'' அவள் திரும்பினாள்.

''ஆனால் ஒரு நிபந்தனை'' என்றேன்.

நின்றாள்.

''சாப்பாடு தேவைப்படாது என்றால் இரண்டு மணி நேரம் முன்னதாகத் தெரிவித்துவிட வேண்டும்'' என்றேன். தினமொன்றுக்கு மூன்று மூட்டை அரிசி செலவாகும் ஓட்டலில் இந்த ஒருத்தி சாப்பாடு வேண்டாமென்று முன்னதாகச் சொல்வதாலும் பெரிய லாபம் வந்துவிடப் போவதில்லை. திடீரென்று சாப்பாட்டுக்கு வந்து நிற்பதாலும் குடி முழுகிவிடப் போவதில்லை. இருந்தாலும் வீம்புக்காகச் சொல்லி வைத்தேன்.



அவள் சிறிதும் தயங்காமல், ''இரண்டு மணி நேரமென்ன, ஆறு மணி நேரம் முன்கூட்டியே சொல்லிவிடுகிறேன். ஏன், இன்றிரவு சாப்பாடு வேண்டுமானால் இப்போதே சொல்லிவிட்டேன். வேண்டாம். சரிதானா?'' என்று தெரிவித்துவிட்டுப் போய்விட்டாள்.

நீண்ட கூந்தலின் தொடக்கத்தில் சரியச் சரியச் சூடியிருந்த பூவுடன், சில்வர் கிரே நிற ஸாரிக்கு மெஜெண்டா நிறச் சோளி கட்டியும் கூற அவள் திரும்பிச் செல்கின்ற பின்னழகைக் கண்டபோது, ஏன் இவள் இவ்வளவு கருமித்தனமாக இருக்க வேண்டும் என்ற வருத்தம் ஏற்பட்டது.

பின்னால் வந்து நின்றிருந்த ரிஸப்ஷனிஸ்ட் காளிதாஸ் என் காதினருகே ஒரு தகவலைச் சொன்னான்:

''சாப்பாட்டுக் கட்டணத்துக்காக இவ்வளவு சண்டை போடுகிறாளே அந்தப் பெண் தங்கியிருப்பது எங்கே தெரியுமா சார்? ஏ பிளாக் காட்டேஜில்.''

''என்னது! நிஜமாகவா?'' என்றேன் ஆச்சரியத்துடன்.

''ரெஜிஸ்டரில் வேண்டுமானால் பாருங்கள். இன்று காலையில்தான் வந்தாள். கிருத்திகா என்று பெயர்.''

'காட்டேஜ்' என்பது ஒரு தினத்துக்கு ஐம்பது ரூபாய் வாடகையுள்ள இடம். நான்கு வசதியான பெரிய அறைகள் கொண்டது. மூன்று அறை ஏர் கண்டிஷன் செய்யப்பட்டது. ஆறு ஏழுபேர் கொண்ட குடும்பம் சௌகரியமாகத் தங்கலாம். 'ஓட்டல் உமா'விலேயே அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவது இங்கேதான்.

''அப்படியானால் குடும்பத்துடனா வந்திருக்கிறாள்?'' என்று காளிதாஸைக் கேட்டேன்.

''இல்லை. இவள் ஒருத்திதான். மற்றவர்கள் பிற்பாடு வருவார்களோ என்னவோ. சுமார் ஒரு மாத காலம் தங்க வேண்டியிருக்கும் என்று ரெஜிஸ்டரில் குறித்திருக்கிறாள்.''

''காரியம்?''

''கலை நிகழ்ச்சிகள் என்று இருக்கிறது'' என்றான் காளிதாஸ்.

நான் மேலே கேட்குமுன், நம்பீசனைக் கொண்டுபோய் விடச் சென்றிருந்த கார் திரும்பி வந்தது.

பாலாஜி நகரில் இருந்தது அவருடைய பங்களா. ஆனால் ஷெட் வசதி கிடையாது. ஆகவே கார் ஓட்டலிலேயேதான் இருக்கும். தேவைப்படும்போது போன் செய்து வரவழைத்துக்கொள்வார். ஸ்விட்ஜர்லந்திலிருந்து மகன் திரும்பி வந்து, குடும்பம் என்று ஏற்படுகிறபோது இன்னும் வசதியான பெரிய பங்களா கட்டிக்கொள்ள வேண்டும் என்று அவருக்கு உத்தேசம்.

டிரைவர் என்னை நோக்கி வந்தான்.

''சௌகரியமாய்க் கொண்டுபோய் விட்டாயா?'' என்று கேட்டேன்.

''ஆமாம் சார். ஹார்லிக்ஸ் சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போய்விட்டார். உங்களிடம் ஒரு விஷயம் சொல்லச் சொன்னார்'' என்றான் டிரைவர்.

''என்ன?''

''அவர் ஸன்னுக்கு ஏதாவது கடிதம் போடுவதாயிருந்தால், உடம்பு சௌகரியமில்லை என்பதை எழுத வேண்டாமென்று சொல்லச் சொன்னார்.''

''சரி எழுதவில்லை'' என்றேன்.

ஓட்டல் தொழிலைப் பற்றி ஐரோப்பிய நாடுகளில் தொழிற் பயிற்சி பெற்று வருகிற கௌதமனுக்கு நான் எங்கே கடிதம் எழுதப்போகிறேன்? செலவுக்குப் பணம் அனுப்புவது



சம்பந்தமாக அவன் அப்பா ஏதாவது தகவல் தெரிவிக்கச் சொல்கிற சந்தர்ப்பங்களில் தெரிவிப்பேன். அதுவும், 'இவ்வாறு உங்கள் தந்தை தெரிவிக்கச் சொன்னார்' என்று எழுதித்தான் கையெழுத்திடுவேன்.

மணி மூன்றடிக்கவிருந்தது.

'கிச்ச'னுக்கும் 'ஸ்டோ'ருக்கும் இடையிலிருந்த நடையில் எனக்கென ஒரு சாப்பாட்டு மேஜை உண்டு. அங்கே அமர்ந்து, ஆறிப்போன பண்டங்களைச் சூடுபண்ணித் தரச் சொல்லிச் சாப்பாட்டை முடித்துக்கொண்டபோது, ஸேவரி மாஸ்டருக்கும் ஸ்வீட் மாஸ்டருக்கும் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்ட ஒரு சண்டையைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு நினைவு வந்தது. ஆனால், 'மெஸ்'ஸின் பக்கம் எட்டிப் பார்த்தபோது, இருவரும் அந்த வாரத்துக்கான ரேஸ்களின் 'டிப்ஸ்'களைப் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டிருப்பதைக் கண்டேன்!

'ஸி' பிளாக்கில் நாலாவது ஃப்ளோரிலுள்ள என் அறைக்குப் புறப்பட்டேன். சோபாவும் கட்டிலும் மெத்தையும் ஷவரும் ரெப்ரிஜிரேடரும் உள்ள வசதியான அறை என்னுடையது. அங்கே போய்ப் பத்து நிமிடமாவது அம்மாடி என்று படுத்திருக்க வேண்டும் போல் இருந்தது. மேலும், நம்பீசன் வலிப்புடன் புரண்டபோது அவரைக் கவனித்ததில் கோட், டை, பாண்ட் எல்லாமே மடிப்புக் கலைந்துவிட்டன. அவற்றையும் மாற்றிக்கொள்ள வேண்டும்.

நங்கநல்லூரில் தனியே வசித்து வரும் அம்மாவுக்கு இன்றைக்கும் மணியார்டர் பண்ணமுடியாமல் போய் விட்டது. நாளைக்காவது அனுப்பிவிட வேண்டும்...

ஸி பிளாக்கை நோக்கிச் செல்லும்போது, எதிர்வரிசையிலுள்ள காட்டேஜின் வாசலில் ஒரு 'வான்' வந்து நிற்பதைக் கவனித்தேன்.

அவள்—இருத்திகா—'வானி'லிருந்து பெரிய டிரங்குப் பெட்டிகள் இறக்கப்படுவதை மேற்பார்வை செய்துகொண்டிருந்தாள். அடேயப்பா! எவ்வளவு 'லக்கேஜ்'கள்!

நானும் ஒத்தாசை செய்த மாதிரி காட்டிக்கொள்ள நினைத்து, வண்டிக்குள்ளிருந்து ஒரு ஸூட்கேஸை வெளியில் எடுத்தேன். தூக்கிக்கொண்டு நாலடி வைத்திருக்க மாட்டேன்—

மடாலென்று அந்த ஸூட்கேஸின் வாய் திறந்து கொண்டது!

உள்ளேயிருந்து, பளபளவென்ற வளைகளும், முத்து மாலைகளும், கண்ணாடித் துண்டுகள் வைத்துத் தைத்த அங்கிகளும், பாவாடைகளும் வெளியே விழுந்து உருண்டன.

முதல் நம்பர் மடையனாக என்னை நான் செய்து கொண்டுவிட்ட அதிர்ச்சியில் ஒருகணம் செயலற்று நின்று விட்டேன். "ஐயையோ!" என்று பதறியோடி வந்தாள் இருத்திகா. சிதறியவைகளைத் திரட்டி, ஸூட்கேஸுக்குள் வைத்தாள். நானும், "வெரி ஸாரி..." என்று திரும்பத் திரும்ப முனகியவண்ணம் பொறுக்கினேன்.

சிமெட்டிப் பாதையில் விழுந்ததால் சில மாலைகள் அறுந்து தெறித்திருந்தன. இரண்டு வளைகள்—தூள்!

உள்ளங்கையில் அந்தத் துண்டுகளை வைத்துப் பார்த்தவள், "ஹூம்! நாலு ரூபாய் போச்சு!" என்றாள்.

எனக்கு வந்த எரிச்சலை வெளிக்காட்டாமல், "இங்கே சைனா பஜாரில் கிடைக்கும். வாங்கித் தருகிறேன்" என்று கேட்டேன்.

"வெறும் பேச்சு வேண்டாம். வாங்கியே தந்து விடுங்கள்" என்றாள் அவள் கண்டிப்புடன்.



இரவு எட்டு மணி.

பார் அசோசியேஷன் டின்னருக்காக வந்துகொண்டிருந்த விருந்தாளிகளை ரூஃப் கார்டனுக்கு அனுப்பிக் கொண்டிருந்த சமயம் பையன் வந்து, கிஷண்ராம் வந்திருப்பதாகச் சொன்னான்.

ஓட்டலுக்குத் தேவையான எல்லா வகைத் துணிகளையும் சப்ளை செய்யும் பெரிய வியாபாரி அவர்.

ஆபீஸ் அறைக்குப் போனேன். எல்லாக் குமாஸ்தாக்களும் போய்விட்டார்கள். கிஷண்ராம் மட்டும்தான் உட்கார்ந்திருந்தார். "ஏதோ சோபா உறைகள் ரொம்ப காடியாக இருப்பதாய்ச் சொன்னீர்களாமே? எந்தத் துணியைச் சொன்னீர்கள்?" என்றார் என்னைக் கண்டதும்.

"நீங்கள் உட்கார்ந்திருக்கிற சோபாவையே பாருங்கள். அந்த உறைதான். கண்ணைக் குத்துகிறது அந்தப் பச்சைக் கலர்" என்றேன்.

கிஷண்ராம் எழுந்து நின்று பார்த்துவிட்டு, "ஹூம்! இதன் அருமை உங்களுக்குத் தெரியாது!" என்றார் மனத்தாங்கலுடன். "உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் உங்கள் பர்ஸுக்கும் பிடிக்காது!"

நான் முறுவல் செய்தேன்.

கிஷண்ராம் தொடர்ந்தார்: "ஆனால் உங்கள் பாஸின் மகன் இருக்கிறாரே கௌதமன், அவருக்கு நிச்சயமாய்ப் பிடிக்கும். இல்லாவிட்டால் இதே துணியை முன்னூறு ரூபாய்க்கு வாங்கிப் போவாரா?"

நான் திடுக்கிட்டேன். "என்ன சொல்கிறீர்கள்? கௌதமன் எப்போது வாங்கினார்? எங்கே?"

"பாம்பேயில் எங்களுக்கு ஒரு ஷோ ரூம் இல்லை? அங்கே இரண்டு மாசம் முந்தி வாங்கினாரே?"

''சரியாய் நினைவுபடுத்திச் சொல்லுங்கள். கௌதமன் ஐரோப்பாவில் இருக்கிறார்—ஒரு வருட காலமாக!''

''அப்படியா?'' ஜெயராம் தலையைச் சொறிந்தார். ''நான் அவருடன் பேசச் சந்தர்ப்பப்படவில்லை... துணியை வாங்கிக்கொண்டு போகிறதுதான் பார்த்தேன்... கௌதம னாக இருக்காதோ ஒருவேளை?''

''இருக்கவே இருக்காது. அத்தோடு முன்னூறு ரூபாய்க்கு ஏன் சோபாத் துணிகளை வாங்கிக்கொண்டு போக வேண்டும்? குடித்தனம் வைத்திருப்பவர்களுக்கு அல்லவா அது தேவை?'' என்றேன்.

''ஆமாம், ஆமாம்,'' என்று சொல்லிவிட்டு, பச்சைக்குப் பதில் வேறு நிறத்தில் சோபாவுக்கான துணிகளை அனுப்புவ தாக வாக்களித்தபின் புறப்பட்டுச் சென்றார் ஜெயராம்.

ரூஃப் கார்டன் விருந்தைக் கவனிக்க நானும் விரைந் தேன். சில்லறை சில்லறையாகப் பல அலுவல்கள், காஷியரி டம் கணக்குப் பெற்றுக்கொண்டு, பாங்குக்கு நாளை அனுப்ப வேண்டிய தொகையைப் பெட்டகத்தில் பத்திரப் படுத்திய பின்னர், சப்பாத்தி பாலுடன் இரவு உணவை முடித்துக்கொண்டு என் ரூமை அடைந்து, உடம்பின் ஒவ் வொரு உறுப்பும் கெஞ்சக் கெஞ்சக் கெஞ்ச, பொத் தென்று கட்டிலில் விழுந்தபோது கடியாரத்தில் மணி முள் பதினொன்றாவது எண்ணுடன் சல்லாபித்துக் கொண் டிருந்தது.

ஜெயராம் சொன்ன தகவல் ஒருபுறமும் நானூறு ரூபாயை வெகு கண்டிப்பாய்க் கேட்ட இந்திராவைப் பற்றிய சிந்தனை மறுபுறமுமாக நான் திரும்பித் திரும்பிப் புரண்டு கொண்டிருந்தேன்.

எதிர் வரிசையில், காட்டேஜ்களின் விளக்குகள் அணைந்துவிட்டன. இந்திரா தங்கியுள்ள போர்ஷனில் மட்டும் விடி விளக்குத் தெரிந்தது.



கட்டிலில் எழுந்து உட்கார்ந்துகொண்டு கவனித்தேன். ஏன் என்றுமில்லாதபடி இந்தப் பெண் என் சிந்தனையைக் கலைத்துக்கொண்டிருக்கிறாள்?

நான் பார்த்தவாறிருக்கையில் அவளுடைய போர்ஷனில் ஜன்னல் வழியே ஏதுவோ எறியப்பட்டது.

என்னவாயிருக்கும் அது?

கதவைச் சாத்திக்கொண்டு வெளியே வந்தேன். லிப்ட் பையன் போய்விட்டான். படிகளின் வழியே இறங்கி கீழே வந்தேன். சும்மா உலாத்துகிறவன்போல் மெள்ள நடந்தேன் காட்டேஜ்களின் ஓரமாக.

ஜன்னலுக்கு வெளியே இந்திரா எறிந்திருந்தவை, வாழைப்பழங்களின் தோல்கள்தான்!

பழம்தான் குடிக்கட்டும், பால்தான் அருந்தட்டும், பாதம் அல்வாதான் புசிக்கட்டும், போகிற குப்பையை ரூமுக்குள்ளே இருக்கிற குப்பைத் தொட்டிக்குள் போடக் கூடாது?

தோல்களை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டுத் திரும்பினேன்.

அறைக்குள் நுழைந்தபோது டெலிபோன் மணி அடித்துக்கொண்டிருந்தது.

எடுத்தேன். இரவு ட்யூட்டியில் உள்ள ஆபரேட்டர், ''ராஜகுமாரி ஆர்ட்ஸ் செகரட்டரி தில்லைநாயகம் கூப்பிடு கிறார். தரட்டுமா...'' என்று கேட்டார்.

ஒரு நிமிடம் யோசித்தேன். தில்லைநாயகத்தைத் தொல்லைநாயகம் என்று அடிக்கடி நான் நினைப்பதுண்டு. இரண்டு விஷயம் அவரிடம் எனக்குப் பிடிக்காது. ஒன்று, நெருக்கடியான சமயம் பார்த்து யாருக்காவது ஃபோன் செய்வார். இரண்டாவது, வார்த்தைக்கு வார்த்தை 'அம்மா' போடுவார்.

''போடு'' என்றேன் அலுப்புடன்.

''யார் சேதுவாம்மா? நான்தான் தில்லைநாயகம் பேசுகிறேன் அம்மா'' என்றார். ''ரொம்ப அகாலம், இல்லை? மன்னிக்கணும் அம்மா.''

''பரவாயில்லை சார்'' என்றேன்.

''ஒன்றுமில்லை. ஒரு தகவல் மிஸ் ரஜனி வந்து விட்டாளோ? எந்த ரூம் தெரியுமா?''

' மிஸ் ரஜனியா? யார்?'' என்றேன் புரியாமல்.

''சேது நீ ஒரு கிணற்றுத் தவளை அம்மா. ரஜனியைத் தெரியாது? புகழ்பெற்ற மணிபுரி நாட்டியக்காரி. அடுத்த வாரம் அவளுக்குப் பல நிகழ்ச்சிகள் இருக்கிறது ஊட்டியில். உங்கள் ஓட்டலில்தான் தங்கப்போவதாக எழுதியிருந்தாள், தெரியாதாம்மா உனக்கு?'' என்றார் தில்லைநாயகம்.

''தெரியாதே'' என்று தெரிவிக்கும்போதே, கலை நிகழ்ச்சிகள்— கண்ணாடி வளையல்— முத்துமாலை— கிருத்திகா—அனைத்தும் ஒருசேர நினைவில் எழுந்தன. ''ஏன் சார், மிஸ் கிருத்திகா என்று ஒருத்தி வந்திருக்கிறார். அவர்...''

''கிருத்திகா வந்துவிட்டாளா?'' என்றார். ''அப்படி யானால் ரஜனியும் வந்துவிடுவாள் நாளை அல்லது மறு நாள்.''

''இந்தக் கிருத்திகாவும் ரஜனி குழுவில் ஒருத்தியா?'' என்றேன்.

''ரஜனியின் செகரட்டரி இந்தப் பெண். பாவம்.''

''ஏன் என்ன பாவம்?''

''அவளைக் கசக்கிப் பிழிந்துவிடுவாள் ரஜனி. அந்தப் பெண் அவளிடம் சிக்கிக்கொண்டு படுகிற பாடு—அப்பப்பா! பழகியவர்களுக்குத்தான் தெரியும்! ஒவ்வொரு பைசாவுக்கும்



கணக்குக் காட்டியாக வேண்டும், சாப்பாட்டுக்குக் கால் ரூபாய் அதிகமாய்ப் போய்விட்டது என்றால்கூடக் கண்ணிலே விரலை விட்டு ஆட்டிவிடுவாள்!... அடியம்மா, ரஜனி வந்ததும் எனக்குத் தகவல் கொடு!''

அவர் டெலிபோனை வைத்துவிட்டார். நான் வெராந்தாவுக்குச் சென்று நின்றேன். கிருத்திகாவின் காட்டேஜை நோக்கி என் பார்வை சென்றது.

மெல்லக் கீழிறங்கி வந்தேன், ஒவ்வொரு படியையும் கணக்கெடுக்கிறவன்போல. 'கார் பார்க்'குக்குப் பக்கத்திலிருந்த மேடையில் இரண்டு ஓட்டல் பையன்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். தாழ்ந்த குரல்தான் என்றாலும், இரவின் நிசப்தத்தில் தெளிவாகக் கேட்டது.

''பார்த்தாலும் பார்த்தேன், அதுபோலப் பிசுநாறியைப் பார்த்ததில்லேப்பா! ராச் சாப்பாடு மிச்சமாச்சுன்னு சொல்லி, சும்மாவே படுத்திட்டான் போலிருக்குது. அப்பாலே பசி வயித்தைக் கிள்ளியிருக்குது. என்னைக் கூப்பிட்டு, 'எங்கேயாச்சும் மூணு வாழைப்பழம் வாங்கியா'ன்னு ஒரு ரூவா கொடுத்தது.''

''இங்கே எவன் கடை திறந்திருக்கிறான்?''

''அதான் சொல்ல வரேன். வேலை மெனக்கெட்டு மெயின் ரோடுக்குப் போய்ப் பழம் வாங்கியாந்து கொடுக்கிறேன், மிச்சம் சில்லறையை வெச்சுக்கப்பான்னு கொடுக்காது? கணக்குப் போட்டு வாங்கிக்கிட்டாள் மகராசி!''

நாசூக்காய்ச் செருமிவிட்டு மேலே நடந்தேன்.

கிருத்திகாவின் காட்டேஜில் விடி விளக்கு எரிந்துகொண்டிருந்தது. ஆனால் ஏர்கண்டிஷன் அறையில் அல்ல. பக்கத்திலிருந்த சாதாரண அறையில். காற்றுக்காக ஜன்னல் திறந்திருந்தது.

சோகமான விளக்கொளியில் கிருத்திகாவின் உயரமான உருவம் தென்பட்டது. கூஜாவைச் சரித்து, இரண்டு டம்ளர் தண்ணீர் விழுங்கிவிட்டு, வெறும் தரையில் அவள் படுத்துக் கொள்வதைக் கண்டேன்.

என் உள்ளத்தில் அவளைக் குறித்து முதல் தடவையாக ஈரம் கசிந்தது.

# 3

எங்கிருந்தோ வந்த யாரோ ஒருத்தி இந்தக் கிருத்திகா. வரவேற்பு அறையின் ரெஜிஸ்டரில் உள்ள நூற்றுக்கணக்கான பெயர்களில் அதுவும் ஒரு பெயர். ஆங்கிலத்தில் எழுதினால் எட்டெழுத்து. தமிழில் எழுதினால் ஐந்தெழுத்து. முன்னும் சம்பந்தமில்லாமல் பின்னும் உறவில்லாமல் போய்விடுகின்ற எவ்வளவோ பேர்களில் ஒருத்தி. வாருங்கள். இதோ சாவி. பையா, அறையைக் காட்டு. எல்லாம் வசதியாயிருந்ததா? எப்போது மதறாஸ் வந்தாலும் ஓட்டல் உமா நினைவில் இருக்க வேண்டும். 'டோட்டல்' சரிதானே? பையா, காரைக் கொண்டுவரச் சொல். வணக்கம், வணக்கம், வணக்கம். இப்படி நெட்டுருப் போட்ட வார்த்தைகளாலேயே கட்டப்பட்ட உலகத்தில், எங்கிருந்து வந்தாள் சதையும் ரத்தமும் மனமும் உணர்ச்சிகளும் கொண்ட இந்த ஏழைப் பெண்? வந்ததுதான் வந்தாள், என்னை எதற்காக உலுக்குகிறாள்?

சேது யோசனை பண்ணி வார்த்தைகளை விடு. அவளா உலுக்குகிறாள் உன்னை? நீயல்லவா ஊரெல்லாம் உறங்கி விட்ட இந்த நடுநிசியில் முன்பின் தெரியாத அவளை உலுக்கிக் கொண்டிருக்கிறாய்...



வெகுநேரம் கழித்து உறங்கியதாலோ என்னவோ காலையில் கண் விழித்தபோது, மார்கழி வெய்யில் சுள்ளென்று அடிக்காவிட்டாலும் பளீரென்று உருவாகியிருந்தது.

டீலக்ஸ் பஸ்ஸின் ஹாரன் இடைவெளி கொடுத்து ஊதிக்கொண்டிருந்தது. இன்று ஞாயிற்றுக்கிழமையல்லவா? 'ஸைட் ஸீயிங்'குக்காகப் பஸ் புறப்பட்டுக் கொண்டிருக்கிறதுபோலும். விருந்தாளிகளுக்கு நினைவூட்டத்தான் அந்த ஹாரன் ஓசை.

பிளாஸ்கில் பையன் கொண்டு வந்திருந்த காப்பியை அருந்திவிட்டு, லிஃப்டின் வழியே கீழிறங்கி, ஆபீஸ் அறையை அடைந்தேன்.

நீரூற்றுக்குப் பக்கத்தில் டீலக்ஸ் பஸ் நின்றிருந்தது. டிரான்ஸிஸ்டரும் பிளாஸ்கும் பிக்னிக் கூடைகளுமாக ஓட்டல் விருந்தாளிகள் ஏறிக்கொண்டிருந்தார்கள். குழந்தைகள் பஸ் ஜன்னலுக்கு வெளியே தலைகளையும் கைகளையும் நீட்டி ஆரவாரம் செய்துகொண்டிருந்தன.

'ஓட்டல் உமா'வுக்குச் சொந்தமானதல்ல அந்த பஸ். பிரைவேட் கம்பெனியொன்று எங்கள் உதவியுடன் ஞாயிற்றுக்கிழமை தோறும் அதை நடத்தி வருகிறது. சென்னையையும் சுற்றுப்புறங்களையும் அழைத்துச் சென்று காட்டிவிட்டு இரவு ஒன்பது மணிக்குத் திரும்பி வருவார்கள்.

“குட்மார்னிங் மானேஜர் சார்.” டீலக்ஸ் பஸ்ஸின் டிரைவரான முனியப்பன் ஹாரனிலிருந்த கையை எடுத்துவிட்டு எனக்கு 'விஷ்' பண்ணினார்.

“குட்மார்னிங்!” என்ற பதிலுடன் என் அலுவலக அறைக்குள் புகுந்தேன்.

மொசைக் தரையைக் கழுவிக்கொண்டிருந்தார்கள். அந்த நாற்றம் எனக்குப் பிடிக்கவில்லை. வரவேற்பு அறைக்குச் சென்று, விருந்தாளிகளின் ரெஜிஸ்டரைப் புரட்டினேன். யார் யார் போயிருக்கிறார்கள், யார் யார் வந்திருக்கிறார்கள் என்ற விவரங்களை மனத்தில் வாங்கிக்கொண்டிருந்த வேளையில்—

''மிஸ் கருமி வருகிறாள்!'' என்றான் காளிதாஸ்.

இருத்திகாதான் வந்துகொண்டிருந்தாள். அவள் கையில் காலைத் தினசரி இருந்தது.

காளிதாஸின் 'ரஃப்' நோட்டிலிருந்த காகிதத்தை எடுத்து, சிறு துண்டுகளாகக் கிழித்து, அவசரம் அவசரமாக எழுதலானேன்.

என்னைத்தான் தேடி வந்திருக்க வேண்டும். என் அறையில் எட்டிப் பார்த்துவிட்டு, பிறகு ரிஸப்ஷன் ஹாலை நெருங்கி வந்தாள்.

''வணக்கம்'' என்று நான் முந்திக்கொண்டேன்.

அவள் பதிலுக்கு வணக்கம் கூறவில்லை. பதற்றத்துடன், ''இந்தப் பேப்பரை என் ரூமில் கொண்டுவந்து போட்டது யார்? நான் கேட்கவில்லையே?'' என்றாள்.

''பேப்பர் பையன், ஒவ்வோர் அறையிலும் தானே கொண்டுபோய்ப் போடுவது வழக்கம். பெரும்பாலானவர்கள் வேண்டாமென்று மறுப்பதில்லை'' என்றேன்.

''மன்னியுங்கள். நான் மறுக்க வேண்டியிருக்கிறது'' என்றாள் அவள்.

''இப்படியே வையுங்கள். பையனிடம் திருப்பியனுப்பிவிடுகிறேன்'' என்றேன். ''ஸைட் ஸீயிங் பஸ் போகிறதே, நீங்கள் போகவில்லையா? சென்னைக்கு நீங்கள் அதிக முறை வந்ததில்லை போலிருக்கிறதே?''



ஒரு வினாடி அவள் கண்களில் ஆர்வம் பளிச்சிட்டது. ஊரைச் சுற்றவும் வேடிக்கைகளைப் பார்க்கவும் அவளுக்குள்ள ஆசை, அவளையும் மீறி வெளிப்படுகிற மாதிரி தோன்றியது.

''எவ்வளவு சார்ஜ்?'' என்று கேட்டாள்.

''பத்து ரூபாய்'' என்றேன். ''கொஞ்சம் பொறுங்கள். நீங்கள் அதிர்ஷ்டக்காரியாக இருந்தால், கட்டணம் இல்லாமலே சென்று வரலாம்.''

கிருத்திகா மட்டுமல்ல, காளிதாஸும் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

நான் சொன்னேன்: ''கட்டணம் செலுத்தியவர்களுக்குப் போனது போக, பஸ்ஸில் இடம் மிஞ்சியிருந்தால், அத்தனை டிக்கெட்டுகளுக்கும் சீட்டுப் போட்டுக் குலுக்குகிறோம். போகாதவர்களின் பெயர்களைச் சீட்டில் எழுதிக் குலுக்கி எடுப்போம். யார் பெயர்கள் வருகிறதோ அவர்கள் இலவசமாக பஸ்ஸில் போகலாம். அதற்குண்டான கட்டணத்தைப் பஸ் கம்பெனிக்கு நாங்களே கொடுத்துவிடுவோம்.''

''சரி?''

முழங்கையை ஊன்றிக் கழுத்தை உயர்த்தி அவள் என்னைப் பார்த்தாள். அரைவட்டமான பாலிஷ் பலகையில் அவள் முகத்தின் பிரதிபிம்பம் 'மாடர்ன் ஆர்ட்'' போல அசைந்தது.

''இன்றைக்கு ஒரே ஒரு சீட் மிஞ்சியிருக்கிறது. உங்களைக் கேட்காமலே உங்கள் பெயரைச் சேர்த்திருக்கிறேன்.'' என்றவன் ''காளிதாஸ்! எடு!'' என்று சீட்டுக்களைக் குலுக்கிப் போட்டேன்.

காளிதாஸ் ஒரு சீட்டைப் பொறுக்கி எடுத்தான். பிரித்தான்.

''மிஸ் கிருத்திகா'' என்று படித்துவிட்டு, அவளிடம் காட்டினான்.

கிருத்திகா திடுக்கிட்டாள்: ''என் பெயரா?''

''ஏன்? உங்களுக்கு அவசர வேலை எதுவும் இல்லையென்றால் போய்விட்டு வாருங்களேன்?'' என்றேன்.

''அவசர வேலையில்லை... ஒரு டிரங்க்கால் எதிர்பார்த்தேன்... இதுவரை வராததால் இனி நாளைக்குத்தான்... பஸ் எப்போது திரும்பி வரும்?''

''இரவு ஏழு எட்டு மணிக்கெல்லாம் திரும்பிவிடலாம். போங்கள்'' என்று ஊக்குவித்தேன்.

''அப்படியானால் சரி'' என்றாள் ஆவலுடன். ''ஒரு நிமிடத்தில் டிரஸ் மாற்றிக்கொண்டு வந்துவிடுகிறேன்...'

அவள் தன் அறைக்குத் திரும்பினாள். பாவம், சாரமில்லாத அவள் வாழ்க்கையில் இந்த ஒரு சின்ன இன்பத்தையாவது சேர்க்க முடிந்ததே!

''ஏன் சார் நான் ஒன்று கேட்கிறேன், கோபிக்கமாட்டீர்களே?'' என்றான் காளிதாஸ்.

''தெரியும்—இந்த இலவசப் பிரயாணச் சீட்டுத் திட்டம் எப்போது ஆரம்பமாயிற்று என்று கேட்பாய். இன்றுதான் ஆரம்பித்தது. இன்றோடு முடிவடைந்தது. ஆனால் பஸ் டிக்கெட்டுக்கான பணத்தை என் கணக்கில் காஷியரிடம் வாங்கிக் கொடுத்துவிடு'' என்று பதிலளித்துவிட்டு, 'கிருத்திகா' என்ற ஒரே பெயரைக் கொண்ட மற்ற ஏழு சீட்டுக்களையும் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டேன்.

சில நிமிடங்களுக்குள் கிருத்திகா பஸ்ஸுக்கு வந்தாள். பிரமாதமாக உடை மாற்றம் செய்துகொள்ளவில்லையென்றாலும், இரண்டொரு சிறு மாற்றங்கள் அவள் அழகைத்



தூக்கிக் காட்டியிருந்தன. குழந்தையைப் போன்ற குதூகலம் அவள் நடையில் எதிரொலித்தது. எனக்குக் கை வீசிக் காட்டிவிட்டு பஸ்ஸில் ஏறியமர்ந்துகொண்டாள்.

நான் எல்லா 'கெஸ்ட்'டுகளுக்குமே விடை கொடுக்கிற மாதிரி பஸ்ஸின் அருகில் சென்று நின்றிருந்தேன்.

பஸ் நகரத் தொடங்கியது.

ஓட்டல் பையன் ஒருவன் ஓடி வந்தான் டெலிபோன் ஆபரேட்டரின் அறையிலிருந்து. ''ஹோல்டான்! ஹோல்டான்!'' என்று அவன் கூறவே பஸ் நின்றது.

''மிஸ் கிருத்திகான்னு யாரும் இருக்கிறாங்களா பஸ்ஸிலே?'' என்றான்.

''ஏன்? நான்தான்.'' என்று பஸ்ஸுக்கு வெளியே தலையை நீட்டினாள் கிருத்திகா திகைப்புடன்.

"டிரங்க் கால் வந்திருக்கிறது அம்மா, பம்பாயிலேயிருந்து.'' என்றான் பையன்.

''ஓகோ...'' அவள் வெகு வேகமாக இறங்கினாள். ''எனக்காகக் காத்திருக்க வேண்டாம்.'' என்று பஸ்ஸை அனுப்பிவிட்டு, டெலிபோன் அறைக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றாள்.

பேச்சை முடித்துக்கொண்டு வெளியே வந்தபோது அவளுடைய பார்வை, நடை எல்லாவற்றிலும் பதற்றம் தெரிந்தது.

நேரே என்னிடம் வந்தாள். ''உடனே ஆளனுப்பி, என் காட்டேஜை நன்றாகச் சுத்தப்படுத்தச் சொல்லுங்கள். குழாய், லைட், ஏர்கண்டிஷன், பாத்ரூம் எல்லாம் ஒழுங்காக இருக்கிறதா என்று செக் பண்ணச் சொல்லுங்கள். பக்கத்துக் காட்டேஜில் ஏதோவொரு பெரிய குடும்பம் இருக்

கிறது. ஏகப்பட்ட சத்தம். அவர்களைக் கொஞ்சம் அமைதி
யாக இருக்கச் சொல்லுங்கள். காப்பி நல்ல ஸ்ட்ராங்காய்
இருக்க வேண்டுமென்று பையனிடம்...''

''இருங்கள், இருங்கள். ஒரு நிமிடம்.'' அவளுடைய
படபடப்பைக் குறைப்பதற்காகவே நான் புன்னகை
செய்தேன். ''யார் வருகிறார்கள்?''

'மிஸ் ரஜனி. என் எஜமானி. பம்பாயில் பிளேனில்
கிளம்புகிறாள். மத்தியான்னம் இரண்டு மணிக்கு வந்து
சேருவாள். மீனம்பாக்கம் போவதற்கு ஒரு கார் ஏற்பாடு
செய்ய வேண்டும்...''

பேசிக்கொண்டே கிருத்திகா தன் காட்டேஜை நோக்கிப்
பறந்தாள். கண்ணுக்குத் தெரியாத ஒரு சாட்டை அவள்
முதுகில் சாடிக்கொண்டிருப்பதை என்னால் உணர
முடிந்தது.

பிற்பகல் மூன்றரை மணிக்கு. ஒரு மாபெரும் காரில்
ரஜனி வந்திறங்கினாள். இங்கொன்றும் அங்கொன்றுமாக
ஓட்டல் ஊழியர்களின் தலைகள் எட்டிப் பார்த்தன. நான்
கடுமையாக ஒரு முறைப்பு முறைத்ததன் பேரில் பனிரென்று
எல்லாம் மறைந்துபோயின.

முன்னாள் ஷெரீபும் பிரபல வர்த்தகருமான ஒரு வட
இந்தியருடையது அந்தக் கார். பலமுறை பார்த்திருக்
கிறேன். ஆனால் என்னவோ சொந்த வண்டியிலிருந்து
இறங்குவது போன்ற கம்பீரத்துடன் அவள், கார் ஜன்னலில்
கை வைத்தாளோ இல்லையோ, டிரைவர் இறங்கி, சுற்றிக்
கொண்டு ஓடிவந்து கதவைத் திறந்துவிட்டான்.

பேரழகி என்று கூறமுடியாது அவளை. ஆனால் கவர்ச்சி
யான தோற்றத்துக்குத் தேவையான எல்லா அம்சங்களை
யும் அவள் பெற்றிருந்தாள். பகட்டிலேயே வாழ்பவளாத



லால், எப்படி அலங்காரம் செய்துகொண்டால் கண்ணுக்கும்
குளிர்ச்சியாக, மனத்துக்கும் போதையாக இருக்கும்
என்பதைத் தெரிந்து வைத்திருந்தாள். மெல்லிய சால்
வையை அவள் போர்த்தியிருந்த நேர்த்தி, பாமரேனியன்
நாய்க்குட்டியைச் செல்லமாக அதட்டிய ஒயில், கதவைத்
திறந்துவிட்ட டிரைவருக்குத் 'தாங்க்யூ' சொன்ன லாகவம்,
அகப்படுகிற மீன்களையெல்லாம் அள்ள வேண்டுமென்று
வலையை விரித்துப் போடுவதுபோல் கண்களைச் சுழற்றி
விழுத்த ஒய்யாரம், புல்நுனியில் வெட்டுக்கிளி உட்காருகிற
மாதிரி, பட்டும் படாததுமாகக் கால்களைப் பூமியிலே
வைத்த மென்மை.

—இவ்வளவும் சேர்ந்து, கை தேர்ந்த நாட்டியக்காரி
யொருத்தியின் முன்னிலையில் நாம் நிற்கிறோம் என்கிற
அச்சத்தையும் பணிவையும் நொடியில் ஏற்படுத்திவிட்டன.

''வரவேண்டும்'' என்று போர்ட்டிகோ படியில் நின்று
கைகுவித்த என்னிடம், ''நீங்கள்தான் மானேஜரா?''
என்றாள்.

''ஆமாம்.''

''அதோ நிற்கிறானே உங்கள் வாட்ச்மேன். அவனுக்கு
'மேனர்ஸ்' கற்றுக் கொடுங்கள்'' என்றாள்—குரலை உயர்த்
தாமல், வார்த்தையில் சீற்றத்தைக் காட்டிவிடாமல்.

''என்ன செய்தான்?'' என்று கேட்டேன், சற்றுத்
தள்ளி நின்றிருந்த எங்கள் வாட்ச்மேனைத் திகைப்புடன்
பார்த்து.

என்ன செய்யவில்லை என்று கேளுங்கள். வி.ஐ.பி.
''என்ன செய்யவில்லை என்று கேளுங்கள். வி.ஐ.பி.
களின் கார் வந்து நின்றால், இரண்டு படி கீழேயிறங்கி வந்து
கதவைத் திறந்துவிட வேண்டியது அவன் வேலை. டிரைவர்
செய்யக்கூடாது அதை.''

எனக்குப் பேச்சே வரவில்லை.

"உங்கள் புத்திமதிக்கு மிக்க நன்றி. இனி சரியாய் நடந்துகொள்ளச் சொல்கிறேன்." என்று சமாளித்தேன்.

"தட்ஸ் குட்." என்று கூறிவிட்டு, அவள் ஓட்டலுக்குள் வந்தாள். அவளுடைய பாமரேனியன், செயின் நீளமாயிருந்ததால், வரவேற்பு அறை சோபாவின் மீது ஏறிப் படுத்துக்கொண்டது.

'உங்கள் காட்டேஜ் அதோ அந்த பிளாக்கில் இருக்கிறது" என்று நான் சுட்டிக் காட்டிய திசையிலிருந்து ஓட்டமும் நடையுமாய் வந்துகொண்டிருந்தாள் கிருத்திகா.

"தூங்கிக்கொண்டிருந்தாயா?" என்பதுதான் ரஜனியின் முதல் கேள்வி. "தலையை ஏன் இப்படிப் பிசாசு மாதிரி வைத்துக்கொண்டிருக்கிறாய்?"

ஓர் சங்கடச் சிரிப்புடன் கூந்தலை அழுத்திவிட்டுக் கொண்ட கிருத்திகா, "பிரயாணம் சௌகரியமாயிருந்ததா?" என்று விசாரித்தாள். பாமரேனியனுக்கு, ரஜனியைக் காட்டிலும் கிருத்திகாவிடம் அதிக ஒட்டுதல் போலும். எஜமானியை விட்டுவிட்டு, எஜமானியின் செகரட்டரியிடம் வந்து ஒட்டிக்கொண்டது அது.

வெராந்தாவில் நின்றவாறே, ஓட்டல் மொத்தத்தையும் விழியால் வளைத்து அளவெடுத்தாள் ரஜனி. "பெரிய ஓட்டல்தான்."

"ஆமாம். மனைக்கட்டு மட்டும் நாற்பது கிரவுண்டு." என்று தெரிவித்தேன்.

"மெட்றாஸில் இந்த ஏரியாவெல்லாம் 'காஸ்ட்லி' என்கிறார்களே, உண்மையா?"

"ஆமாம். கிரவுண்ட் ஐம்பதாயிரம் அறுபதாயிரம் கொடுத்தாலும் கிடைப்பதில்லையாம்." என்றேன்.



அவள் உதடுகளை மடித்துக்கொண்டு தலையை ஆட்டி யோசனை செய்தாள். "அப்புறம் கட்டிடம் வேறு பத்துப் பன்னிரண்டு லட்சம் செலவாகியிருக்கும்..."

இந்த ஓட்டலை விலைக்கு வாங்கப்போகிறாளா என்ன? அற்பத்தனமாய்க் கணக்குப் போட்டுக்கொண்டு... சே! ஒரு நாட்டிய ராணியா இவள்!

"இதுதான் புரொப்ரைட்டரின் அறை. உங்களைச் சந்திப்பதில் சந்தோஷப்படுவார். ஒரு நிமிடம் பார்த்துவிட்டு, பிறகு உங்கள் ஜாகைக்குப் போய் விடலாம்" என்றேன்.

"நானே அவரைப் பார்க்க ஆசைப்பட்டேன்" என்றாள் ரஜனி.

கிருத்திகா வெளியில் தங்கிவிட்டாள். நம்பீசன் எங்கள் பேச்சுக் குரல் கேட்டு, வரவேற்பதற்காக எழுந்து வந்துகொண்டிருந்தார்.

அறிமுகம் செய்து வைத்தேன்.

"லவ்லி ப்ளேஸ்..." என்று பாராட்டினாள் ரஜனி. "ஒரு நாள் 'தரோ'வாகச் சுற்றிப் பார்க்க ஆசையாயிருக்கிறது."

"ஓ, சந்தோஷமாய். என் மானேஜர் சேது உங்களை அழைத்துப்போவார்." என்றார் நம்பீசன்.

"வித் ப்ளெஷர்" என்றேன்.

பாமரேனியனை மார்போடணைத்துக்கொண்டு காத்திருந்த கிருத்திகா, ரஜனியை முன்னே செல்லவிட்டு, நிழல் போல் பின்னால் வந்திருந்தாள்.

ரஜனியின் நாட்டியக் குழுவைச் சேர்ந்த முக்கியமான நான்கு பெண்கள் வேறு இடங்களில் தங்கியிருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டேன். எடுபிடி வேலை செய்வதற்காக ரஜனியுடன் வந்திருந்த ஒரு கறுப்பான சுறுசுறுப்

பான ஆள். ரஜனியின் சொந்த லக்கேஜ்களுடன் ஒரு டாக்ஸியில் வந்து இறங்கி பெட்டிகளைப் பிரித்து ரஜனியின் தேவைக்கும் ருசிக்கும் தக்கபடி அங்கங்கே வைத்தான்.

''பரவாயில்லை... முன்னால் சின்னதாக ஒரு 'லான்' இருந்தால் நன்றாயிருக்கும்...'' என்று சொன்னவாறு காட்டேஜைப் பார்வையிட்டாள் ரஜனி.

கிருத்திகா வெகு நேரமாய் வாயே திறக்கவில்லை. ''சரி... ஆமாம்... இல்லை...'' என்று தலையாட்டுவதோடு அவளுடைய பதில்கள் பூர்த்தியாகிக் கொண்டிருந்தன.

அவர்கள் உள்ளே சென்றிருந்தார்கள்.

நடுவே ஒருமுறை, ''கிச்சன் சப்பல்ஸ் இரண்டும் ரொம்ப 'டஸ்டி'யாக இருந்தது. பிஜு சரியாய்ச் செய்வதில்லை. நீயே சுத்தம் பண்ணிவிடு.'' என்று கிருத்திகாவிடம் ரஜனி கூறும் ஒரு வாக்கியம் காதில் விழுந்தது.

என் கையில் விரல்கள் ஒன்றையொன்று கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தன. இருப்பதா நகருவதா என்று யோசித்தேன். ரஜனியின் வேலையாள் பிஜு சற்றுமுன் வெளியே எடுத்து வைத்திருந்த சில அழகுப் பொருள்களில் குரங்காட்டி பொம்மையொன்று இருந்தது. தந்தத்தில் செய்யப்பட்டது.

வெறுப்பும் கசப்பும் மேலிட அதைக் கையிலெடுத்து உருட்டிக்கொண்டிருந்தேன்.

தற்செயலாக, பொம்மையின் அடிப்புறத்துக்கு என் பார்வை சென்றது.

பீடத்தின் அடிப்புறத்தில் ஒரு வெள்ளைக் காகிதம் ஒட்டப்பட்டிருந்தது. அதில்—

''ஆருயிர் ரஜனிக்கு, அடிமை கௌதமன்—பம்பாய்— அக்டோபர், 68.''



அடிமை!

திடுக்கிட்டவனாய் மீண்டும் கவனித்தேன்.

நம்பீசனின் குமாரன் கையெழுத்துதான்.

ரஜனி, இந்த ஒட்டலை அளவெடுக்கிற மாதிரி பார்வை விட்டது, கணக்கிட்டது—அனைத்துக்கும் பொருள் என்ன என்று அப்போதுதான் எனக்குப் புரிந்தது.

# 4

ரஜனியின் காட்டேஜிலிருந்து வெளியேறிய என்னை யாரும் கவனிக்கவுமில்லை. நானும் யாரிடமும் சொல்லிக் கொள்ளவுமில்லை. காற்றில் பறக்கும் சருகைப்போல என் இச்சையில்லாமலே திசை தெரியாமலே அலுவலக அறையை நோக்கி நடந்தேன்.

ஆக, துணி வியாபாரி ராம்கிஷன் பம்பாயில் கௌதமனைப் பார்த்ததாகச் சொன்னது உண்மைதான். சோபாவுக்கான துணிகளைக் கௌதமன் வாங்கிச் சென்றதும் உண்மைதான்.

சேர்ந்தாற்போல் அவன் பம்பாயிலேயே தங்கியிருந்தால், நம்பீசனையும் அவனையும் தெரிந்த பலபேர் அவனைக் கவனித்திருப்பார்கள். ஆகையால், இரண்டு மாதங்களுக்கு முன்பு அப்பாவுக்குத் தெரியாமல் வந்து விட்டு, அப்படியே திரும்பிச் சென்றிருக்கிறான்.

ரான ஆள். ரஜனியின் சொந்த லக்கேஜ்களுடன் ஒரு டாக்ஸியில் வந்த இறங்கி பெட்டிகளைப் பிரித்து ரஜனியின் தேவைக்கும் ருசிக்கும் தக்கபடி அங்கங்கே வைத்தான்.

“பரவாயில்லை... முன்னால் இன்னதாக ஒரு ‘லான்’ இருந்தால் நன்றாயிருக்கும்...” என்று சொன்னவாறு காட்டேஜைப் பார்வையிட்டாள் ரஜனி.

கிருத்திகா வெகு நேரமாய் வாயே திறக்கவில்லை. “சரி... ஆமாம்... இல்லை...” என்று தலையாட்டுவதோடு அவளுடைய பதில்கள் பூர்த்தியாகிக் கொண்டிருந்தன.

அவர்கள் உள்ளே சென்றிருந்தார்கள்.

நடுவே ஒருமுறை, “கிச்சன் சப்பல் இரண்டும் ரொம்ப ‘டல்’லாக இருந்தது. பிஜு சரியாய்ச் செய்வதில்லை. நீயே சுத்தம் பண்ணிவிடு.” என்று கிருத்திகாவிடம் ரஜனி கூறும் ஒரு வாக்கியம் காதில் விழுந்தது.

என் கையில் விரல்கள் ஒன்றையொன்று கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தன. இருப்பதா நகருவதா என்று யோசித்தேன். ரஜனியின் வேலையாள் பிஜு சற்றுமுன் வெளியே எடுத்து வைத்திருந்த சில அழகுப் பொருள்களில் குரங் காட்டி பொம்மையொன்று இருந்தது. தந்தத்தில் செய்யப் பட்டது.

வெறுப்பும் கசப்பும் மேவிட அதைக் கையிலெடுத்து உருட்டிக்கொண்டிருந்தேன்.

தற்செயலாக, பொம்மையின் அடிப்புறத்துக்கு என் பார்வை சென்றது.

பீடத்தின் அடிப்புறத்தில் ஒரு வெள்ளைக் காகிதம் ஒட்டப்பட்டிருந்தது. அதில்—

“அருமை ரஜனிக்கு, அடிமை கௌதமன்—பம்பாய்—
அக்டோபர், 18.”



அடிமை!

திடுக்கிட்டவனாய் மீண்டும் கவனித்தேன்.

நம்பீசனின் குமாரன் கையெழுத்துதான்.

ரஜனி, இந்த ஒட்டலை அளவெடுக்கிற மாதிரி பார்வை யிட்டது. கணக்கிட்டது—அனைத்துக்கும் பொருள் என்ன என்று அப்போதுதான் எனக்குப் புரிந்தது.

## 4

ரஜனியின் காட்டேஜிலிருந்து வெளியேறிய என்னை யாரும் கவனிக்கவுமில்லை. நானும் யாரிடமும் சொல்லிக் கொள்ளவுமில்லை. காற்றில் பறக்கும் சருகைப்போல என் இச்சையில்லாமலே திசை தெரியாமலே அலுவலக அறையை நோக்கி நடந்தேன்.

ஆக, துணி வியாபாரி ராம்கிஷன் பம்பாயில் கௌதமனைப் பார்த்ததாகச் சொன்னது உண்மைதான். கௌதமன் வாங்கிச் சோபாவுக்கான துணிகளைக் சென்றதும் உண்மைதான்.

சேர்ந்தாற்போல் அவன் பம்பாயிலேயே தங்கியிருந் தால், நம்பீசனையும் அவனையும் தெரிந்த பலபேர் அவனைக் கவனித்திருப்பார்கள். ஆகையால், இரண்டு மாதங்களுக்கு முன்பு அப்பாவுக்குத் தெரியாமல் வந்து விட்டு, அப்படியே திரும்பிச் சென்றிருக்கிறான்.

‘‘என்ன, மிஸ் ரஜனிக்கு எல்லாம் வசதியாக இருக்கிறதா, பார்த்தாயா?’’ என்ற குரல் என்னை வரவேற்றது. அலுவலக அறைக்கெதிரில் நம்பீசன்தான் நின்றிருந்தார் காரில் ஏறுவதற்குத் தயாராக.

‘எல்லா வசதிகளையும் உரிமையுடன் பறித்துக்கொள் வதற்காகத்தான் அவள் வந்திருக்கிறாள்’ என்று சொல்ல வில்லையே தவிர, மனத்துக்குள் ஆங்காரமான வார்த்தைகள் உருவாயின.

‘‘ஊம்’’ என்றேன்.

‘‘போக வேண்டியதுதானே?’’ என்றார் நம்பீசன்.

எனக்கு எதுவும் நினைவில்லை. ‘‘எங்கே சார்?’’ என்றேன்.

‘‘பல்லாவரத்துக்கு’’ என்றார்.

அவருக்கு நான் நினைவூட்ட வேண்டியது போக, எனக்கு அவர் நினைவூட்டும்படி ஆகிவிட்டது.

‘ஆமாம், ஆமாம்’ என்று அவருடன் ஏறிக்கொண்டேன்.

வெளிநாட்டினருக்கு ஏற்ற வகையில், மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு அருகில், இன்னோர் ஓட்டல் கட்ட வேண்டுமென்பது அவருடைய நெடுநாளைய திட்டம். ஆனால், வருடத்துக்கு இரண்டு தடவை மனைக்கட்டைப் பார்ப்பதையும், எஞ்சினியரொருவருடன் அதைப்பற்றி ஆசையாகப் பேசுவதையும் தவிர, மளமளவென்று வேலையில் இறங்குவதற்கான அவசரமோ அவசியமோ ஏற்படக் காணோம்.

இன்றும் அதேபோல் சென்றோம், பார்த்தோம், பேசினோம், திரும்பினோம்.

என் நினைவெல்லாம் குரங்காட்டிப் பொம்மைமீது இருந்தன. தகப்பனுக்குத் துரோகம் செய்யும் மகன்மீது இருந்தன. மணிப்புரி நாட்டியக்காரியிடம் இருந்தன.



‘‘சேது என்றைக்காவது ஓர் ஓட்டல் கட்ட நீ நினைத்தால் என் யோசனையையோ தவறுதலையோ என்னிடம் சொல்வதற்குமுன், ‘‘நீ என்றைக்காவது ஓட்டல்...’’ என்று ஒரு வாக்கியத்தைப் போடுவது அவருடைய வழக்கம். நான் உடனே, ‘‘எனக்கேன் சார் அதெல்லாம்? காலமெல்லாம் உங்கள் கீழே பணியாற்றினால் போதும்’’ என்று பதிலளித்த பிறகே, ‘‘எதைச் சொல்கிறீர்கள்?’’ என்று கேட்பேன்.

இன்று என் வழக்கமான வாக்கியம் மறந்துவிட்டது. ‘‘ஊம்...’’ என்றேன்.

‘‘கட்டுவதுதான் கட்டுகிறாய், ‘‘ஐடியல் ஓட்டலாகக் கட்டு என்பேன். எது ஐடியல் ஹோட்டல்? ஐம்பது அறைகளுக்கு மேல் போகக்கூடாது. பன்னிரண்டு லட்சம் இன்வெஸ்ட்மெண்ட். கஸ்டமர், மானேஜ்மெண்ட் இருவருக்கும் திருப்தியான முறையில் நிர்வாகம் நடக்கும். மாதத்துக்கு நெட் ப்ராஃபிட் பதினைந்தாயிரம்—டாக்ஸெல்லாம் போக. போதும் என்கிறேன். என்ன?’’ என்று நம்பீசன், நான் கட்டப்போகாத (அவரும் கட்டத் தவ விட்ட) ஓட்டலுக்கான அறிவுரையை வழங்கிக் கொ டிருந்தார்.

டிரைவர் ஹெட்லைட்டைப் போட்டான். சாலை அஸ்தமன இருட்டில் புதையத் தொடங்கியது.

தோல் பையைத் திறந்தேன். மாத்திரைக் குப்பிக் காகக் கையை விட்டேன்.

‘‘நானே கொண்டு வந்திருக்கிறேன்!’’ என்னை ஆச்சரியத்திலாழ்த்தினார் நம்பீசன். ‘‘கௌதமன் வரும்போது உடம்பைக் கிண்ணென்று வைத்துக்கொள்ளப் போகிறேன்’’ என்றவர், டிரைவர் தயாராய் வைத்திருந்த பிளாஸ்கை வாங்கி, தம் சட்டைப் பையிலிருந்த மாத்திரைகளை ஒழுங் காக விழுங்கினார். அவர் முகத்தில் பெருமை ஜொலித்தது.

வெளியே எடுக்
நான் தோல் பையில் விட்ட கையை வெளியே எடுக்காமலே இருந்தேன். ''என்ன யோசனை?'' என்றார்.

''பணம் '' பைக்குள்ளிருந்து பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்தேன். ''அம்மாவுக்கு அனுப்ப வேண்டுமென்று இரண்டு நாளாய் வைத்திருக்கிறேன் மறந்து மறந்து...''

''டிரைவர்! வண்டியை நிறுத்து,'' நம்பீசன் கட்டளை விட்டார். ''நல்லவேளை, இன்னும் ஐந்து மைல் போன பிறகு சொல்லாமல் இப்போதே சொன்னாயே! இறங்கு முதலில். போய்ப் பார்த்துவிட்டு வா. ரொம்ப மோசம் நீ!'' என்று என்னைக் கண்டித்தார்.

இறங்கிக் கொண்டேன்.

''யார்? என்று கேட்டாள் அம்மா, நான் கதவை இரு முறை தட்டிய பிறகும். அப்படிப் பயந்தவளாக வாழ்ந்தே ஐம்பது வருடங்களை அவள் ஓட்டிவிட்டாள்.

''நான்தான் அம்மா சேது! உன் பிள்ளை சேது!'' என்று இரண்டு தடவை கத்தினேன். பிறகுதான் வாசல் விளக்குப் போடப்பட்டது. இரண்டு கதவுகளைத் திறந்துகொண்டு அம்மா வெளிப்பட்டாள்.

''சின்னப் பாட்டி இல்லையா?'' என்றேன். அம்மாவுக்குச் சின்னம்மாவான ஒரு கிழவி, வருடத்தில் பாதி நாள் அவளுடன் தங்கியிருப்பது வழக்கம்.

''ஸ்ரீரங்கம் போயிருக்கிறாள். அதனால்தான் ரொம்ப ஜாக்ரதையாய்க் கதவெல்லாம் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு, சாயங்காலமே சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுத்துவிட்டேன்.'' என்னை ஏற இறங்கப் பார்த்தாள் அம்மா. ''சேது, ரொம்ப இளைத்திருக்கிறாயே?''

''த்ஸ..'' நான் பணத்தை எடுத்து அம்மாவிடம் தந்தேன்.



''என்னடா சேது, இந்த வேளையிலே சின்னம்மாகூட இல்லாதபோது, இவ்வளவு பணத்தைக் கொண்டுவந்து கொடுக்கிறாய்?'' தயக்கத்துடன் நோட்டுக்களை வாங்கிக் கொண்டு. டிரங்குப் பெட்டிக்குள் வை துப் பூட்டினாள். பெட்டியை அலமாரிக்குள் வைத்து அதையும் பூட்டிய பிறகு கூட அவளுடைய மிரட்சி குறையவில்லை. அம்மா! நீ மட்டும் இப்படிப் பயந்து சாகிறவளாக இல்லாமல், தைரியமும் துணிச்சலுமாக இருந்திருந்தால், அப்பாவை எப்படியெப்படியோ நல்வழிப் படுத்தியிருக்க முடியுமே? மூன்றே பேர் கொண்டிருந்த ஒரு சின்னஞ் சிறு குடும்பம் ஊர் சிரிக்கும்படி ஆகாமல் தடுத்திருக்க முடியுமே?...

''உன் முதலாளி சௌக்கியமாக இருக்கிறாரா, சேது? அவர் பிள்ளை லட்டர் போட்டுக்கொண்டிருக்கிறானா?'' என்றாள் அம்மா.

''போடுகிறான், போடுகிறான்.'' அம்மா வாங்கியிருந்த புதிய எவர்சில்வர் காப்பி ஃபில்ட்டரை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''என்னமோ, அந்தப் பிள்ளையின்மீது உயிரையே வைத்திருக்கிறார் உன் முதலாளி.''

''ஆமாம். அதனால்தான் அதை எப்போது எடுக்கலாமென்று பிள்ளை வேளை பார்த்துக்கொண்டு இருக்கிறான்.'' என்றேன் தோல்வி மனப்பான்மையுடன்.

''சேது!'' அம்மா என்னருகில் வந்து என் முகத்தைப் பயத்துடன் பார்த்தாள். ''ஏன் அப்படிச் சொல்கிறாய்? கௌதமன் நல்ல பிள்ளையில்லையோ? தப்புத் தண்டாவுக்குப் போகமாட்டானே? தகப்பனாரோடு சண்டை போட்டுக்கொண்டிருக்கிறானா?''

''என்னை எதுவும் கேட்காதே, அம்மா. மொத்தத்தில் கௌதமனுக்குக் கெட்ட சகவாசம் சேர்ந்திருக்கிறது. தகப்பனாருடைய நம்பிக்கையை அவன் காப்பாற்றப் போவதில்லை. அவ்வளவுதான் சொல்வேன்.''

''ஐயையோ! என்னடா சேது, அப்படிச் சொல்லி விட்டாய்?'' அம்மா கண்ணைத் துடைத்துக்கொண்டாள். ''நம்பீசன் எவ்வளவு நல்ல மனிதர்! கொலைகாரனின் பெண் என்று என்னையும் சாதி, கொலைகாரனின் பிள்ளை என்று உன்னையும் ஊரே ஒதுக்கி வைத்திருந்தபோது அவர் தானே தனி மனிதராய் நமக்குக் கை கொடுத்தார்? நாமும் மானமாய்ப் பிழைக்கலாம் என்று வழி பண்ணித் தந்தார்? இன்றைக்கு அவர் குடும்பம் பாழாகிற மாதிரி ஒரு நிலைமை இருந்தால், நாம் ஏதாவது செய்யவேண்டாமா? ஒன்றுமே முடியாதா, சேது? யோசனை பண்ணிப் பாரப்பா.'

''ஆகட்டும். கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொள். பயப்படாமலிரு.''

நான் வெளியேறினேன்.

தண்ணீருக்கு நெருப்பின் சக்தி கிடையாது. உண்மை. ஆனால் அதுவே பலவீனமான ஒரு பெண்மணியின் கண்ணி லிருந்து வரும்போது அக்கினித் திராவகமாக மாறிவிடும் போலும்.

அம்மாவின் கண்ணீர் என்னை உசுப்பிவிட்டது.

'கௌதமனைத் திருத்த நம்பீசனின் குடும்பத்தைக் காப்பாற்ற, நாம் யார்?' என்று அந்த நிமிடம்வரை எண்ணி யிருந்தேன். அதை மாற்றிவிட்டது அம்மாவின் கண்ணீர். 'கோழைத்தனமாகக் கையைப் பிசையாதே! ஏதாவது செய்! என்று தார்க்குச்சி போட்டன சூடான அந்த இரண்டு மூன்று துளிகள்.

அழுக்குத் துணிகளைக் கூடைக்குள் அடைக்கிறமாதிரி என் கசப்பான எண்ணங்களை அமுக்கிவிட்டு, தெம்பான எண்ணங்களைத் தைக்கொண்டேன்.

மறுநாள் கிருத்திகாவை ரூஃப் கார்டனில் பார்க்க நேரிட்டபோது—



'என்ன பைத்தியக்காரன் நான்! இவள் ஒருத்தி துணைக்கு இருக்கும்போது!' என்று திடீரென நினைவு வந்தது.

ரஜனியும் சபா காரியதரிசிகள் சிலரும் ஐஸ் கிரீமைச் சுவைத்தவாறே அளவளாவிக்கொண்டிருந்தார்கள். ரஜனி யின் சிரிப்பு, மத்தாப்பூ கொளுத்திய மாதிரி இருந்தது. பிரகாசமும் உண்டு. விஷமும் உண்டு. பாமரேனியன்— அதன் பெயர் 'ஜி' என்று தெரிந்துகொண்டேன்—ஒரு தனி நாற்காலியில் குந்தினாற்போல் உட்கார்ந்திருந்தது.

சற்றுத் தள்ளி, குவியலாகப் பூத்தொட்டிகள் வைக்கப் பட்டிருந்த இடத்தினருகே கிருத்திகா மறைவாக நின்றிருந் தாள். குரலுக்கு எட்டும்படியும் பார்வைக்கு எட்டாத படியும் நிற்க வேண்டுமென்பது கட்டளை போலும்.

ஓட்டல் துணிகள் சலவை செய்யப்படும் இடம், ரூஃப் கார்டனின் மறு கோடியில் இருக்கிறது. அங்கே மெஷி னொன்று சரியாக வேலை செய்யவில்லையென்று கேள்விப் பட்டு, அதைப் பார்த்துவிட்டு இந்தண்டைக் கோடிக்கு வந் போதுதான் நான் கிருத்திகாவைப் பார்த்தேன்.

ஏன் அவள் நின்றிருக்கும் பாவத்தில் ஒரு கலவரம்?

''குட்மார்னிங்'' என்றேன். அவள் ஒரு துள்ளலுட என்னைத் திரும்பிப் பார்த்தாள். கறுப்புத் திரை போட்டுக் கொண்ட மாதிரி ஒரு கவலை அவள் வதனத்தைக் கப்பி யிருந்தது. ''ஏன் என்னவோ போலிருக்கிறீர்கள்?'' என்றேன்.

''ஒன்றுமில்லையே?' என்றாள்.

நம்பவில்லை நான். ''சொல்லுங்கள்' என்று வற் புறுத்தினேன்.

கிருத்திகா சிறிது தயங்கிவிட்டு, ''மிஸ்டர் சேது! உங் களால் ஓர் உதவி செய்ய முடியுமா?'' என்று என்னைக்

கேட்டாள். அந்த மூன்று நாள் பழக்கத்தில் அவள் என்னை என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டது அதுதான் முதல் தடவை.

''காத்திருக்கிறேன்'' என்றேன்.

''என்னுடன் வாருங்கள்'' என்று கூறித் தன் காட்டேஜுக்கு அழைத்துச் சென்றாள்.

உள்ளே நுழைந்ததுமே, அந்த இடத்தை எவ்வளவு கச்சிதமாகவும் சுத்தமாகவும் வைத்திருக்கிறாள் என்பதை அறிந்து ஆச்சரியமும் மகிழ்ச்சியும் கொண்டேன். அந்தக் குரங்காட்டி பொம்மை அங்கேதான் இருந்தது. ஆனால் நேற்றுப்போல் இன்று நான் மனம் கலங்கவில்லை.

சுவர் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த ஸ்டீல் அலமாரியைக் காட்டினாள் கிருத்திகா. பீரோவின் முதுகுக்கும் சுவருக்கும் நடுவே மூன்று அல்லது நாலு அங்குல இடைவெளிதான் இருக்கும்.

''என் ஹாண்ட்பாக் அங்கே விழுந்துவிட்டது. கையை என்ன நீட்டினாலும் எடுக்க வரவில்லை...'' என்றாள் வெட்கத்துடன்.

''இவ்வளவு வசதிகள் கொண்ட அறையில் ஹாண்ட்பாக்கை வைக்க நல்ல இடம் பார்த்தீர்கள்!'' என்றேன்.

அவள் புன்னகை செய்தாள். அதனால் இரண்டு மடங்கு அழகாய்க் காணப்பட்டாள்.

மண்டியிட்டு அமர்ந்து, என் விலாவும் பீரோவின் விலாவும் இடிக்கிற மாதிரி திருப்பிக்கொண்டு, கையை இடுக்கில் செலுத்தித் துழாவினேன்.

ஹாண்ட்பாக் தட்டுப்பட்டது. ஆனால் பிடித்து எடுக்கும் அளவுக்கு எட்டவில்லை. இன்னும் உடம்பை வளைத்தபோது—



மின்சார அதிர்ச்சி என்று பொதுவாகச் சொல்வார்கள். ஆனால் மின்சாரத்தில் இந்தக் குளுமை இருக்க முடியாது. அந்த ஒரு கணத்தில் நான் எண்ணற்ற பல விஷயங்களை மறந்தேன். தலைபோகிற பிரச்சினைகள்கூடச் சல்லடையில் ஊற்றப்பட்ட தண்ணீர் போலக் கண்ணிமைக்கும் நேரத்துக்குள் நினைவிலிருந்து வடிந்துபோய், அந்த ஸ்பரிசத்தின் இனிமை மட்டுமே நின்றது.

பீரோவின் மறுபக்கத்தில் இருந்தபடியே கிருத்திகாவும் தன் கையை நீட்டித் துழாவியிருக்கிறாள் என்று அறிந்து கொண்டேன்.

அதேசமயம் எனக்கு வேறொரு தெம்பும் ஏற்பட்டது. என்னைத் தனியே தன் அறைக்குக் கூப்பிடுகிறாளே என்று முதலில் என்னவோபோல் எண்ணினேன். இவளுக்கும் என்னிடம் அக்கறை இருந்துதான் கூப்பிட்டிருக்கிறாள் என்று இப்போது புரிந்தது. கௌதமன் விஷயம் சுலபமாக முடிந்துவிட்டது என்று என்னை நானே பாராட்டிக் கொண்டேன்.

''ரொம்ப தாங்ஸ்'' என்று சொல்லி என்னிடமிருந்து ஹாண்ட்பாக்கைப் பெற்றுக்கொண்டாள் கிருத் [illegible] ''ரஜனி அவசரமாக ஏதாவது பணம் கேட்பாள். அ[illegible] டாக்ஸியில் திடுமென்று புறப்பட வேண்டியிரு[illegible] சில்லறைப் பணமெல்லாம் இந்த ஹாண்டபாக்கில் [illegible] வைத்திருக்கிறேன். காலையிலிருந்து எடுக்க முடியா[illegible] விழித்துக்கொண்டிருந்தேன்'' என்றாள்.

திரும்பவும் நாங்கள் ரூஃப் கார்டனை அடைந்தபோது அவர்கள் எழுந்துகொண்டிருந்தார்கள். ரஜனியின் சிரிப்பைப் பெற்றுக்கொண்டவர்களில் ஒருவர், சர்வரின் டிப்புக்கும் சேர்த்துச் சில்லறையைப் பரிதாபத்துடன் தட்டில் வைக்கும் காட்சியைப் பாராதமாதிரி ரஜனி லிஃப்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

பின்னாலேயே இழுக்கப்படும் கோலம்போல அவள் செல்லும் கிருத்திகாவை எப்படி நிறுத்திக்கொள்வது?

"நீ வரவேண்டாம்" என்று ரஜனியே என் விருப்பத்தை அறிந்த மாதிரி அவளை நிறுத்திவிட்டாள். தன்னைத் தேடி யார் யார் வரக்கூடும் என்பதையும் என்னென்ன சொல்ல வேண்டும் என்பதையும் பாக்குச் சீவுகிற மாதிரி கிருத்திகா விடம் பேசி முடித்துவிட்டு லிஃப்டுக்குள் நுழைந்துவிட்டாள். அவளுடைய வட்டத்துக்கு வெளியே ஒதுக்கப்படுபவள் கிருத்திகா. தங்கச் செருப்பு அணிந்திருந்தால்தான் அந்த வட்டத்தைத் தாண்டலாம் போலிருக்கிறது.

''நீங்கள் எதுவும் சாப்பிடவில்லையே வாருங்கள்'' என்று அழைத்தேன்.

''ஐஸ்கிரீம் ஒத்துக்கொள்ளாது எனக்கு'' என்றாள்.

''ஒத்துக்கொள்ளக் கூடிய வகைகளும் நாங்கள் தயாரிக் கிறோம். வாருங்கள்'' என்றேன்.

ஹாண்ட்பாக்கை மீட்டுக் கொடுத்தவனுக்கு நன்றி தெரிவிப்பதுபோல், அவள் என்னுடன் வரப் புறப்பட்டாள்.

இனிப்பு வந்தது. எதிரெதிர் நாற்காலிகளில் உட் கார்ந்துகொண்டோம். அவளுடைய புடவையின் அடி வாரத்து மடிப்புக்கள் என் ஷூவைத் தொட்டுக்கொண் டிருந்தன.

''மணிபுரியில் நல்ல தேர்ச்சி பெற வேண்டுமானால், அஸ்ஸாமியர்களால்தான் முடியும் என்று யாரோ சொன் னார்கள். ஆனால் மிஸ் ரஜனி நன்றாய்த் தமிழ் பேசுகிறார். நீங்களும்தான்'' என்று பேச்சை ஆரம்பித்தேன்.

''வட இந்தியாவில் எந்தெந்த மூலைகளிலெல்லாமோ தமிழர்கள் குடியிருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரி யாதா?'' கிருத்திகா ஸ்பூனினால் கட்டில் இறுக்கிக்



கொண்டே பேசினாள். ''என்னுடையது வங்காளத்தில் குடியேறிய குடும்பம். ரஜனி அஸ்ஸாமில் குடியேறியவள். எங்கேயோ எப்படியோ சேர்ந்தோம்.'' அவள் பெருமூச்சு விடவில்லை. ஆனால் அதன் ஓசையை என் மனக் காது கேட்டது.

''இப்போது இருவருமாகப் பம்பாயில் குடியேறி விட்டீர்கள். இல்லையா?''

''ஆமாம். மலபார் ஹில்லில் ஒரு சிறு பங்களா இருக் கிறது. முன்பு ரஜனியின் அம்மா இருந்தாள். இறந்து போய் ஐந்து வருடமாகிறது.''

''அப்படியானால், பம்பாய் ஜாகையில் நீங்கள் இரண்டே பேர் தான்?''

''ஆமாம். வேலைக்காரர்கள் இரண்டுபேர் உண்டு.''

''வேறு யாரேனும் தெரிந்தவர்கள் வந்தால் போனால் தங்குவார்கள்.''

''இருக்கலாம்.'' அவளுடைய பதில்களில் வாக்கியங் களின் நீளம் கொஞ்சம் கொஞ்சமாகச் சுருங்கிக்கொண் டிருப்பதை உணர்ந்தேன். ஆயினும் எப்போது மிக ராஜ தந்திரமாக நடந்துகொண்டு வெகு சாமர்த்தியமாகப் பே வேண்டுமோ அந்த நிமிடம் பார்த்து, முட்டாள்தனமா கெடுத்துக்கொண்டேன்.

''ரஜனியின் நெருங்கிய நண்பர்கள் எல்லோரையு உங்களுக்கும் தெரிந்திருக்கும், இல்லையா?'' என்றேன்.

''ஏன்?''

''கௌதமன் என்ற ஒருவரைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்'' என்றேன்.

இன்னும் அவள் பலகாரத்தில் எதையுமே தொடவில்லை என்பதை அப்போதுதான் கண்டேன். இனிப்புத் தட்டை மெல்ல நகர்த்திவிட்டு, நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு எழுந்தாள் கிருத்திகா.

''மன்னிக்க வேண்டும். நீங்கள் உங்கள் எஜமானருக்கு விசுவாசமாக இருக்க நினைப்பதுபோலவே, நானும் என் எஜமானியிடம் இருக்க வேண்டாமா?'' என்றாள்.

போய்விட்டாள்.

# 5

விண்ணாரமாய் நான் கண்டுகொண்டிருந்த ஆசைக் கனவை, பூ வென்று ஒரே ஊதலில் ஊதிக் கலைத்துவிட்டுக் கிருத்திகா போய்விட்டாள்.

அதுவரை என்னைப் பார்த்துக்கொண்டிருந்த ஸர்வர், அதன்பிறகு என்னைப் பார்க்காத மாதிரி திரும்பிக் கொண்டான். நான் அமைதியாக இருப்பவன்போல் பாசாங்கு செய்துகொண்டு, மெதுவாக என் ஐஸ்கிரீம் கப்பைக் காலி செய்த பின்னரே எழுந்துகொண்டேன்.

லிஃப்டில் இறங்கி வந்து என் அறையை அடைவதற்குள், வாழ்க்கையில் அதுவரை அலசி ஆராய்ந்திராத கேள்விகளை யெல்லாம் கேட்டுக்கொள்ள நேரிட்டது. ஏனெனில் அந்த மாதிரியான சோதனை எனக்கு வந்ததில்லை. சந்தர்ப்ப மில்லாததால் கெடாதிருப்பவனைப்போல, புனிதத்தைப் பற்றிய உணர்வில்லாமலே கங்கையின் கர்ப்பத்தில் அமிழ்ந்து கிடக்கும் பாறையைப்போல, முதலாளிக்கு விசுவாசமாக இருக்கவேண்டுமென்ற ஒரு பொதுவான, மசமசப்பான, பிண்டமான எண்ணத்தின்படி வாழ்க்கையை ஓட்டி வந்திருந் தேனே தவிர, விசுவாசம் என்பது என்ன, அதற்கு எப்படிப் பட்ட சோதனைகள் என்னென்ன உருவத்தில் வரும், அப் போது எந்தெந்த வழிகளில் அதை எதிர்த்துப் போராடுவது என்றெல்லாம் நான் நினைத்தும் பார்க்கவில்லை.



நம்பீசன் மிக நம்பிக்கையும் பிரியமும் வைத்துள்ள மகன் தப்பான வழியிலே போகிறான் என்பது தெரிந்ததும் நான் செய்யக்கூடியது என்ன? அந்த ரகசியத்தை என் மனத் துக்குள் வைத்துப் புதைக்கக்கூடாது. அவரிடம் சொல்லி விடவேண்டும். அவர் திருத்துகிற வழியில் திருத்திக்கொள் ளட்டும். சொல்லாமல் மறைப்பதுதான் துரோகம்...

என் அறைக்குள் நுழைந்தேன். நம்பீசன் என்னைக் கூப்பிட்டதாகப் பையன் சொன்னான். நல்லதாயிற்று என்று உடனே விரைந்தேன் அவர் அறைக்கு.

'சேது!' என்று வழக்கமான ஓர் உள்குரல் என்னைக் கூப்பிட்டது. 'சுலபமான வழியைத் தேர்ந்தெடுத்துவிட் டாய்! உன்னால் ஒரு பிரசினைக்கு வழி காணத் தெரிய வில்லை. காணுவதே துரோகம் என்று ஒரு பொய்த் தத்துவத்தைச் சொல்லிக்கொண்டு சாமர்த்தியமாய் முதலாளியின் பக்கம் தள்ளிவிட்டாய்...'

''கூப்பிட்டீர்களாமே?''

நம்பீசன் சப்பணமிட்டாற்போல் சோபாவில் அமர்ந்[illegible] மடியில் ஓர் ஆல்பத்தை வைத்துக்கொண்டிருந்தார். ''ஒன்[illegible] மில்லை... நான்தான் கைத்தவறுதலாக எங்காவது வை[illegible] திருப்பேன். பார்த்துக்கொள்கிறேன், போ'' என்றார்.

''பரவாயில்லை. சொல்லுங்களேன்.''

குழந்தைத்தனமான லஜ்ஜை நம்பீசனின் முகத்தில் பரவியது. ''வந்து கௌதமன் கடிதம் எழுதுகிறபோதெல் லாம் அந்த ஃபாரின் ஸ்டாம்புகளைப் பத்திரப்படுத்திக் கொள்வது... வழக்கம்... போன வாரம் வந்த கடிதம் எங்கே போயிற்றோ தெரியவில்லை...''

நான்தானே அதைப் பிரித்து அவருக்கு வாசித்துக் காட்டியவன்? உறையை, புக்ஷெல்பின் நடுவே வைத்த நினைவு வந்தது. ''இதோ'' என்று உடனே எடுத்துத் தந்தேன்.

''பலே பலே! பத்திரமாய் வைத்திருக்கிறாயே...'' என்று பாராட்டிவிட்டு, வெகு ஜாக்கிரதையாக அந்தத் தபால் தலைகளை உறையிலிருந்து பிரித்து எடுக்கலானார் நம்பீசன்.

நான் மௌனமாகக் கதவைச் சாத்திக்கொண்டு வெளியேறினேன். கௌதமனைப்பற்றி மூச்சும் விடவில்லை. விடும் தைரியம் எனக்கு வரவில்லை. தெரிந்ததை மறைப்பது துரோகமானால், உண்மையைச் சொல்லி அவரை நரகத்தில் தள்ளுவது கொலைக்கே சமானமாகும். வைத்தியன் தன் குழந்தைக்குச் சிகிச்சை செய்ய முடியாது. பற்றில்லாத, ஆகவே பதற்றமில்லாத, வேறொரு வைத்தியனின் கரங்கள் தான் அதற்குத் தேவை. அந்த நியதிப்படி கௌதமனை நல்வழிப்படுத்த அவனுடைய பாசமிக்க தந்தையைக் காட்டிலும், வெறும் கடமையுணர்ச்சி மட்டுமே கொண்ட நான்தான் லாயக்கு.

ஒரு முழுச் சுற்றுச் சுற்றி என்னிடமே நான் திரும்பிவிட்டேன். கிருத்திகாவிடம்தான் இருக்கிறது என் குழப்பத்துக்கு அடைப்பான் என்று மீண்டும் எண்ணத் தொடங்கினேன். 'முன்போல அவசரப்பட்டுக் கெடுக்காமல் பொறுமையாக இரேன். என்ன குடி முழுகிவிட்டது இப்போது? ஏன் பறக்கிறாய்? என்று என்னை நானே திட்டிக் கொண்டேன். அதற்கப்புறம் புத்தியை வேறு பல விஷயங்களில் அமைதியாகச் செலுத்த முடிந்தது. பெங்களூரில் நடைபெறவிருக்கும் ஓட்டல்காரர்கள் மாநாட்டுக்கு, நம்பீசன் வர இயலாதிருப்பதற்கு வருத்தம் தெரிவித்து, அவருடைய வாழ்த்தையும், மாநாட்டுச் செலவுக்காக நன்கொடை ரூபாய் ஆயிரத்தையும் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தேன்.



கொத்தவால் சாவடியில் கறிகாய் காண்டிராக்டை மாற்ற வேண்டியிருந்தது. பழைய காண்டிராக்டர் கெஞ்சிக் கேட்டதால், கடுமையான நிபந்தனைகளின் பேரில் அவரிடமே ஒப்பந்தத்தைப் புதுப்பித்தேன். ஏ பிளாக்கில் முதல் ஃப்ளோரில் இரண்டு அறைகளை நீண்டகாலமாக வாடகைக்கு எடுத்து, காலியாகவே வைத்திருந்தது ஒரு திரைப்படக் கம்பெனி. ஆனால் வாடகை சரிவர வருவதில்லை. எப்போது அவர்கள் அறை கேட்டாலும் அறை கொடுக்கிறோமென்று சொல்லி, நயமாக அந்த அறைகளைக் காலி செய்ய வைத்தேன்.

அன்றும் மறுநாளும் இப்படி என்னை நானே அலுவல்களில் மூழ்கடித்துக் கொண்டிருந்தபோது, டெலிபோன் மணி அடித்தது.

''நான்தான் ரஜனி பேசுகிறேன். ஒரு நிமிடம் வருகிறீர்களா இங்கே?'' என்றாள். அது உத்தரவாகவும் இல்லை. வேண்டுகோளாகவும் இல்லை.

''ஒரு பத்து நிமிடம் கழித்து வருகிறேன்'' என்று கூறிவிட்டு, மண்டியும் இட்டுவிடாமல், மறுத்தும் எதிர்த்துவிடாமல் பதிலளித்த என் சாமர்த்தியத்தை நானே மெச்சிக் கொண்டேன்.

சொல்லிவிட்டேனேயொழிய, பத்து நிமிடம் எப்போது முடியப்போகிறது என்று தவிப்பாகிவிட்டது. எதற்காகக் கூப்பிடுகிறாள்? என்ன நடந்திருக்கும்? ஏதாவது அற்பமான புகாரோ ஒருவேளை?

அப்படித்தான் இருந்தது கடைசியில்.

நான் சென்றபோது, கூடை நாற்காலியில் கால்மீது கால் போட்டுக்கொண்டு சாய்ந்திருந்தாள் ரஜனி. அவளுடைய ரோஜாச் சிவப்பான முகம் கோபத்தினால் இன்னும் ஜிவுஜிவு வென்றிருந்தது. எட்டத்தில் தலையைக் குனிந்து கொண்டு, ஸாரி தலைப்பை நெருடியபடி நின்றிருந்தாள் கிருத்திகா.

நான் 'விஷ்' பண்ணிய கையை இறக்குமுன் ரஜனி, ''என்ன மானேஜர் சார், நேற்று சாயந்தரம் டெலிபோன் சரியில்லாமலா இருந்தது இங்கே? இவள் சொல்கிறாளே?'' என்றாள்.

ஆபரேட்டர் அது சம்பந்தமாக ஏதோ சொன்னது நினைவிருந்தது. ''கார் ஃபால்ட்டாகியிருக்கிறது. சார் டெலிபோன் ஆபீசில் சொல்லியிருக்கிறேன். ஸ்பிரிங் மாற்றணுமாம். மெக்கானிக் வந்திருக்கிறார். ரூம் எக்ஸ் டென்ஷன்கள் கொஞ்ச நேரத்துக்குக் கிடைக்காது'' என்று அவன் சொன்னதும், ''சரி கூடுமான வரை ரூம்காரர் களுக்குப் பையன்கள் மூலம் சொல்லியனுப்பிவிடு'' என்று நான் கூறியதும் ஞாபகத்துக்கு வந்தன.

''ஆமாம், கொஞ்சநேரம் டிஸ்ரப்ட் ஆகியிருந்தது உண்மைதான்'' என்றேன்.

கிருத்திகா என்னை நன்றியுடன் பார்த்துவிட்டு, ''அது தானம்மா சொன்னேன்...'' என்று ஏதோ ஆரம்பித்தாள்.

''பேசாதே நீ! நான் அவரைக் கேட்கிறேன். அவர் எனக்குப் பதில் சொல்கிறார்!'' என்று உறுமினாள் ரஜனி. ''இன்னொருதரம் குறுக்கே பேசினாயோ, அடிப்பேன்! எதாலே தெரிகிறதா? இதாலே!'' குதிகால் உயர்ந்த செருப்பு அவள் கையிலே ஆடிக்கொண்டிருந்தது.

நான் வெளியேற முயன்றேன்.

''அதற்குத்தான் கூப்பிட்டேன். நீங்கள் போங்கள்!'' என்று விடை கொடுத்தாள் ரஜனி. ''விடிந்தால் பர்ஃபா மென்ஸ் இருக்கிறது. கெட்டது இவளாலே! ஒரு கழுதைக்கு உடம்பு சரியில்லையென்றால் இன்னொரு கழுதை கிடைக் காமலா போயிற்று?''



ஒரு வினாடி நேரமும் அங்கே இருக்க எனக்குப் பிடிக்க வில்லை. அபலையொருத்தி அகப்பட்டுக் கொண்டால் பிறர் எதிரில் அவளைப் பிழிந்தெடுக்க வேண்டும் என்று எண்ணும் அற்பமான பிறவி இந்த ரஜனி என்று தெரிந்துவிட்டது. அந்தச் சந்தோஷத்துக்கு வசதி பண்ணித் தரக்கூடாது என்று புறப்பட்டுவிட்டேன்.

எனினும் கிருத்திகாவின் பரிதாபமான முகம் என் கண்ணிலேயே தங்கிவிட்டது. என்ன பிழை செய்துவிட்டாள் அப்படி வாங்கிக் கட்டிக்கொள்ளும்படி? அது என்னால் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்குமா? இருந்தால், கிருத்திகாவின் நல்லெண்ணத்தைப் பெற இன்னொரு முயற்சி செய்யலாமே?

பதினொரு மணி சுமாருக்கு, காஷியரிடம் நான் பேசிக் கொண்டிருந்தபோது, ரஜனியின் வேலைக்காரனான பிஜு அங்கே வந்தான் ஒரு பத்து ரூபாய் நோட்டுக்குச் சில்லறை மாற்றுவதற்காக. சில்லறை கொடுத்ததோடு அவனை அனுப்பிவிடாமல், ''என்னப்பா தகராறு உன் எஜமா னிக்கும் செகரட்டரிக்கும்?'' என்று எனக்குத் தெரிந்த அரைகுறை இந்தியில் கேட்டேன்.

அவன் சொன்னதிலிருந்து நான் புரிந்துகொண்ட தாவது:

ராதாகிருஷ்ண நடனம் மணிபுரியில் ஒரு முக்கியமான பகுதியாம். அதிலே ராதையாக நடிக்க ரஜனியும், கிருஷ்ண னாகவும் ராதையின் தோழியாகவும் நடிப்பதற்கு வேறு இரண்டுபேரும் வந்திருக்கிறார்கள். மற்றச் சில்லறைப் பாத்திரங்களை உள்ளூரிலே ஏற்பாடு செய்துகொள்ளலா மென்பது அவர்கள் எண்ணம். அதற்கே கஷ்டப்பட்டு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால், ராதையின் தோழி யான பெண்ணுக்குத் திடீரெனக் காய்ச்சல் கண்டிருக்கிறது. மயிலாப்பூரில் ஓர் ஓட்டலில் தங்கியிருந்தவள், ராயப்

பேட்டை ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகிவிட்டாள். அவ ளுடைய பாகத்தை ஏற்று நடனமாட ஒரு பெண் கட்டாய மாய் உடனடியாய்த் தேவை,

"சரி, அதற்கும் டெலிபோன் சரியில்லாமற் போன தற்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டேன்.

"ரஜனி அம்மாள் யார் யாரையோ பிடித்து ஒரு பெண்ணைப் பேசி வைத்திருந்தார்கள். ஐந்து மணிக்கு அவளுக்கு டெலிபோன் பண்ணி, நிச்சயம் செய்துவிடும்படி செகரட்டரியிடம் சொல்லிவிட்டுப் போனார்கள். டெலி போன் சரியில்லையென்று செகரட்டரி பேசாமலிருந்து விட்டார்கள். இன்று காலையில் விசாரித்தால் அந்தப் பெண் நேற்றே காத்துப் பார்த்துவிட்டு, வெளியூர் போய்விட்ட தாம்... நான் வருகிறேன் சார், தேடுவார்கள்..."

வேலைக்கார பிஜூ போனதும் எனக்கொரு யோசனை தோன்றியது. டெலிபோனைச் சுழற்றினேன்.

"தில்லைநாயகமா சார்? நான்தான் சேது. நீங்கள் கேட் டீர்களே, மிஸ் ரஜனி..."

அவர் குறுக்கிட்டு, "என்னம்மா சேது, ஆடி கழிந்த ஆறாம் மாதம் எதையோ எடுத்துக்கொண்டு வருகிறாயே! ரஜனி வந்திருப்பது தெரிந்து, பார்த்துப் பேசி எல்லாம் ஆகி விட்டதம்மா!" என்றார்.

"அப்படியா சார்? இப்போது ஒரு நெருக்கடி அந்த ரஜனிக்கு" என்று சொல்லி விஷயத்தைத் தெரிவித்தேன்.

"ரஜனி என்னிடம் சொல்லவில்லையே?" என்று வியப் புற்றவர், "சரிம்மா கவலைப்படாதே. நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று உறுதி கூறினார்.

கூறியபடி செய்தும்விட்டார் என்று சற்றைக்கெல்லாம் தெரிந்துகொண்டேன்.



என் பிரத்தியேக மேஜையடியில் சாப்பாட்டுக்கு உட் கார்ந்தேன்.

"ரொம்ப லேட் சார்" என்று அன்புடன் என்னைக் கடிந்து கொண்டுவிட்டுப் பரிமாற ஆரம்பித்தார் வெயிட்டர் சபரிநாதன்.

"உங்கள் பகல் தூக்கத்தைக் கெடுத்துவிட்டேன் என்று கோபமா?" என்றேன்.

"சே, சே! என்ன சார்!"

"பின்னே ஏன் எனக்குப் பிடிக்காத பீன்ஸ் கறியைக் கரண்டி கரண்டியாய்த் தள்ளுகிறீர்கள்?" என்று சொல்லிக் கொண்டிருந்தபோது, இங்குமங்கும் பார்த்துக்கொண்டே வெளி வெராந்தாவில் பிஜூ செல்வதைக் கண்டேன். இவ்வளவு தூரம் சமையலறைப் பகுதி வரையில் அவன் வேறு யாரைத் தேடப்போகிறான்—என்னைத் தவிர?

"பிஜூ!"

"இங்கேதான் இருக்கிறீர்களா?" என்றபடி என்னருகில் வந்தான். "கிருத்திகா உங்களிடம் கொடுக்கச் சொன் னார்கள்." மேஜையின் ஓரத்தில், நாலாக மடிந்த ஒரு காகிதத்தை வைத்தான். போய்விட்டான்.

என்னையும் மீறி ஒரு நிமிடம் என் உள்ளம் பட படத்தது. அந்தக் காகிதத்தை உடனே எடுக்கவோ படிக்கவோ இல்லை. அதன் மடிப்பினுள்ளே என்ன செய்தி காத்திருக்கும்? அதை ஊகிப்பதே ஓர் இன்பமான அனுபவ மாக இருந்தது. தனியே வந்து சந்திக்கும்படி சொல்லி யிருப்பாளோ? நேரத்தையும் இடத்தையும் குறிப்பிட்டிருப் பாளோ? உள்ளத்தின் துருதுருப்பு வினாடிக்கு வினாடி அதிகரித்தது. இடது கையால் அதைப் பிரித்து, மேஜைப் பரப்பின் கீழே என் மடியில் வைத்துக்கொண்டு படித்தேன்:

தாங்கள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு, தில்லைநாயகத்தின் மூலம் ஏற்பாடு செய்ததற்கு ரொம்ப நன்றி. அவரும் ஒரு பெண்ணை அமர்த்தித் தந்துவிட்டார். மிக்க வந்தனம். இருந்தாலும் என் சொந்தப் பிரசினைகளில் குறுக்கிடுவதைத் தயவு செய்து இனியேனும் நிறுத்திக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால், நானும் உங்களுடைய சொந்த விஷயங்களில் தலையிட வேண்டியிருக்கும். உதாரணமாக, உங்கள் முதலாளியின் மகளைப் பற்றிச் சில விஷயங்கள். உங்கள் முதலாளிக்குத் தெரிய வேண்டாமென்று நீங்கள் முயலுகிறீர்கள் அல்லவா? (அப்படித்தான் நான் ஊகிக்கிறேன்.) அதைப் பற்றி நான் திரு. நம்பீசனிடம் பகிரங்கமாகப் பேச நேரிடலாம்.

கிருத்திகா.

"சீ!" என்று வாய்விட்டே சொல்லிவிட்டேன்.

"சார்?" என்றார் மோருடன் நின்றிருந்த வெயிட்டர்.

"உமக்கில்லை." வெறுப்புடன் சோற்றைப் பிசைந்து கொண்டேன். ஆத்திரத்துடன் ஊறுகாயைக் கடித்தேன். உப்புடன் தண்ணீரை விழுங்கினேன்.

நன்றி கெட்டவள். நன்றி கெட்டவளாயிருந்தாலும் பரவாயில்லை. மட்டமான முறையில் மிரட்டுகிறவள் கஷ்டப்படுகிறவர்களில் இரண்டு வகை மனிதர்கள் உண்டு. என்று இப்போதுதான் எனக்குப் புரிந்தது. கஷ்டப்படுவதைப் பார்த்து உதவி செய்கிறார்களே என்று மகிழ்ச்சியடைபவர்கள் ஒரு வகை. நாம் கஷ்டப்படுவதை இவர்கள் பார்த்துவிட்டார்களே என்று கோபமும் ஆங்காரமும் கொள்கிறவர்கள் இன்னொரு வகை. கிருத்திகா இந்த இரண்டாம் ரகம் போலிருக்கிறது. என்னவானாலும் இவள் வழிக்கு இனிப் போகக்கூடாது. எதை



நான் பேராபத்தான ரகசியமென்று காப்பாற்றி வருகிறேனோ அதையல்லவா உடைத்துவிடுகிறேன் என்கிறாள்! நம்பீசனின் காதுக்கு அது எட்டினால்...! வேண்டாம்! வேண்டாம்!...

"சேது! யாருக்கு வஞ்சனை செய்தாலும் வயிற்றுக்கு மட்டும் வஞ்சனை செய்யாதே" என்று சொன்னவாறு என் எதிரில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார் ராமப் பிரம்மம். "என்ன சபரிநாதன், மானேஜரை இப்படித்தான் கவனிக்கிறதா?"

வெயிட்டர் சிரித்துக்கொண்டே, "என் பேரில் தப்பில்லை, சுவாமி! நான் வேணுமென்கிற அளவு உபசாரம் பண்ணித்தான் போடுகிறேன். இழுட்டுக்கையாலும் முரட்டுக் கையாலும் சாப்பாடு போட்டால் இறங்குமா? போட வேண்டிய கை போடணும். அதற்கு உங்களைப்போலப் பெரியவர்கள் ஏற்பாடு பண்ணணும்..." என்று சொல்லிக்கொண்டே போனார்.

"சபரி! நீங்கள் போய் வேலையைக் கவனியுங்கள்" என்று அனுப்பிவிட்டு, "ராமப்பிரம்மம் உங்களிடம் நான் ஒரு சமாசாரம் மனம் விட்டுப் பேச வேண்டும்."

"சொல்லேன்."

அவர் முகத்தையே பார்த்தேன் சில வினாடி நேரம். கனிவும் குளுமையும் அங்கே கண்டேன். எனக்கொரு மூத்த தமையனார் இருந்தால் எப்படித் தன்னிச்சையாக ஓர் ஈடு பாடு சுரக்குமோ, எப்படி நானாக ஒரு குழந்தைபோல் அவர் மார்பில் முகம் புதைத்துக் கொள்வேனோ, அதுபோல் ராமப்பிரம்மத்தின் அண்மை எனக்குத் தெம்பு தந்தது.

"சொல்லு." என்று மீண்டும் ஊக்கினார் ராமப் பிரம்மம்.

குரலை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்குத் தாழ்த்திக்கொண்டேன். ரஜனியைப் பற்றியும், கெளதமனுக்கும் அவளுக்குமுள்ள தொடர்பைப் பற்றியும் விவரமாகச் சொன்னேன். இருத்திகாவின் உதவியை நாடியது, அவளிடம் குட்டுப்பட்டது—எதையும் மறைக்கவில்லை.

ராமப்பிரம்மம் கொஞ்சநேரம் பேசாதிருந்தார். மளுக் மளுக்கென்று ஒவ்வொரு விரலாக அவர் சொடுக்கு எடுத்துக் கொள்ளும் சத்தம் மட்டுமே கேட்டது. கடைசியில், ''இந்த ரஜனி ஐரோப்பா அமெரிக்காவெல்லாம் போய் நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தியவள். போன வருஷம்கூடப் போயிருந்தாளாம். அப்போது கெளதமன் அவளைப் பார்த்திருக்க வேண்டும். மோகம் தலைக்கேறி, அப்பாவுக்குக்கூடத் தெரியாமல் பம்பாய்க்கு வந்து அவளுடன் தங்கிவிட்டுப் போகும் அளவுக்கு முற்றியிருக்கிறது இல்லையா?'' என்றார்.

''ஆமாம்.''

''இது கெளதமனுக்குப் புதுக் காதல். முதற் காதல். மனம் எப்படியிருக்கும் தெரியுமா?''

''அனுபவமில்லை.''

''அது ஓர் அலாதி வெறி. காதலியின் உள்ளம், உடம்பு, அழகு, இளமை எல்லாம் தன் ஒருவனுக்கே முழுக்க முழுக்கச் சொந்தமாக இருக்க வேண்டுமென்று ரொம்பப் பைத்தியமாக இருக்கும். தன்னைத் தவிர இன்னொருவனை அவள் இரண்டு வினாடி அதிகப்படியாய்ப் பார்த்தாலும் போதும்—மனம் வெதும்பி, வெடித்து, புழுங்கிச் சாவான். தன்னால் மாற்ற முடியாத அளவுக்கு அவள் நோக்கம் வேறு பக்கம் போய்விட்டதாகத் தெரிந்ததோ—சே என்று உலகமே வெறுத்துப் போய்விடும்.''

''சரி.''

''கெளதமன் ஓர் அறியாப்பிள்ளை. இவளிடம் மோகம் கொண்டிருக்கிறான். இவள் கைகாரி. அந்தத் தொழிலில் கைதேர்ந்தவள். கெளதமன் ஒரு பணக்காரப் புள்ளி என்பது



தெரிந்திருப்பதால் அவனிடம் மையல் கொண்டிருக்கிற மாதிரி பாசாங்கு செய்துகொண்டிருக்கிறாள். கெளத மனைக் காட்டிலும் பெரிய இடம் கிடைக்கட்டும்—இவனை அம்போ என்று விட்டுவிடுவாள்.''

''கிடைக்க வேண்டுமே?''

''அப்படி அவள் விட்டுவிட்டால், கெளதமன் நாலு நாட் களுக்கு வெதும்புவான், புழுங்குவான், வெடிப்பான். பிறகு தன்னால் மனம் தேறித் திரும்புவான்.''

''கட்டுவதுதான் கட்டுகிறீர்கள் மணல் மாளிகை. அதில் ஒவ்வொரு மாடியையும் நின்று நிதானித்துக் கட்டக் கூடாதா?'' என்று நிராசையாய்ச் சிரித்தேன் நான். ''முதலில் கெளதமனை விட்டுவிட்டு வேறோர் ஆளை அவள் பிடிக்க வேண்டும். பிறகல்லவா கெளதமனுக்கு அதைத் தெரியப்படுத்தி, இவள்மேலுள்ள ஆசையை ஒழிக்கும்படி செய்யமுடியும்?''

''சேது! எல்லாவற்றுக்கும் முதலில் உன் மானேஜர் பதவியை ராஜினாமா பண்ணு!'' என்றார் ராமப்பிரம்மம் ''ஓட்டல் உமாவுக்கு யார் வருகிறார்கள், யார் போகி றார்கள் என்பதுகூடத் தெரியாதவனாக இருக்கிறாயே! காட்டேஜ் நம்பர் நாலில் ரஜனி தங்கியிருக்கிறாள். காட் டேஜ் நம்பர் ஐந்தில் வந்து தங்கியிருக்கும் வடக்கத்தி காரனைப்பற்றி உனக்குத் தெரியுமா?''

கை கழுவுவதற்காக எழுந்து கொள்ளவிருந்தவன் சரே லெனத் திரும்ப அமர்ந்தேன். ''என்ன சொல்கிறீர்கள்?''

''போய்ப் பார் என்கிறேன்.'' ராமப்பிரம்மம் சுற்று முற்றும் பார்த்துவிட்டுக் கிசுகிசுத்தார். ''பட்டவர்த்தன் என்று பெயர். கெளஹாத்தியிலிருந்து வந்திருக்கிறான். சின்ன வயசு. பெரும் பணம். அறுபது நாழிகையும் ரஜனி யின் பெட்ரூமில்தான் ஜாகை. ஒரே சிரிப்பு, கும்மாளம், அட்டகாசம். இதை மட்டும் ஆதாரத்தோடு கெளத மனுக்குத் தெரிவித்துவிட்டோமானால்...''

நான் எழுந்துகொண்டேன். அவசர அவசரமாகக் கையைக் கழுவிக்கொண்டு, ''இதோ வருகிறேன்.'' என்று ராமப்பிரம்மத்திடம் சொல்லிவிட்டு வெளியே வந்தேன்.

காட்டேஜ்களின் வரிசைக்குப் பின்னே, குழந்தைகளுக்காக விளையாட்டுப் பூங்காவொன்று சிறிய அளவில் கட்டிக்கொண்டிருந்தோம். அதற்கான வேலை நடந்துகொண்டிருந்தது. அதை மேற்பார்வை செய்கிற சாக்கில் சென்றேன்.

ரஜனியின் காட்டேஜிலிருந்து ஹாஹாவென்ற அட்டகாசமான சிரிப்புச் சத்தம் என் காதில் மோதியது.

மெல்ல அவர்கள் காட்டேஜ் பக்கம் நகர்ந்தேன். தற்செயலாகப் பார்க்கிற மாதிரி பார்த்தேன்.

பட்டவர்த்தன் என்ற அந்த வடக்கத்திக்காரன் கட்டிலருகே நின்றிருந்தான். அவனுடைய நாட்டியக் குழுவில் ஒருவனோ என்றெண்ணும்படி இருந்தன அவனுடைய கண்ணைக் கவரும் வண்ணமயமான ஆடை. அவள் முழந்தாளை மடித்துக் கட்டிக்கொண்டு கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

அவன் தோல் பையை அவள் தலைக்குமேல் உயர்த்திப் பிடித்திருந்தான். பையின் திறந்த வாயிலிருந்து, மழை போல ரூபாய் நோட்டுக்கள் அவள்மீது விழுந்துகொண்டிருந்தன.

அவள் குலுங்கக் குலுங்கச் சிரிக்கும்போதெல்லாம், மேலே விழுந்திருக்கும் நோட்டுக்கள் துள்ளித் தெறித்து அறையெங்கும் பறந்தன.

பை முழுதும் காலியானதும் அதை விசிறியெறிந்துவிட்டு அவள் கழுத்தை இறுக்கிக் கட்டிக்கொண்டு, முகத்தைத் தன் முகம் நோக்கி உயர்த்தினான்.

# 6

அந்த வடக்கத்திப் பணக்காரனின் செருக்கு, கண்ணில் ஒற்றிக்கொள்ள வேண்டிய தனலட்சுமியை அறையெங்கும் வாரியிறைத்த திமிர் எனக்கு அருவருப்பூட்டியது. அத்துடன், ஒரு பக்கம் கௌதமனுக்கு வலை விரித்தபடியே, இன்னொரு பக்கம் அவனுக்குத் துரோகம் செய்துகொண்டிருக்கும் இந்த ரஜனி எவ்வளவு ஈனப் பிறவியாக இருக்க வேண்டும் என்பதையும் எண்ணி ஆத்திரப்பட்டேன். அதே சமயம் என் மனத்தில் ஓர் ஆறுதலும் ஏற்பட்டது. இவளுடைய பூராக் குறியும் நல்லவேளையாகக் கௌதமனின் மீதே விழவில்லை என்பதால்...

வந்த சுவடு தெரியாமல் பின்வாங்கி ஓட்டமாய் ஓடினேன் எனது அறைக்கு. ராமப்பிரம்மம் காத்திருந்தார். ''எப்படி சினிமா?'' என்றார்.

''வயிற்றைக் குமட்டுகிறது. அவன் படா மோசக்கார தான். சந்தேகமில்லை. ஆமாம், இதை எப்படிப் பயன் படுத்துவது என்கிறீர்கள்?''

''ஓர் ஆள் இருக்கிறான்'' என்ற ராமப்பிரம்மம், ரிஸப்ஷனிஸ்டு தாசரதியை வரச்சொல்லும்படி டெலிபோன் ஆபரேட்டரிடம் சொன்னார். தாசரதி வந்ததும், ''பார்ட்டி, கான்ஃபரென்ஸ் இதற்கெல்லாம் இங்கே போட்டோ எடுக்க வாடிக்கையாய் ஒரு பையன் வருவானே. அவன் பேர் என்ன?'' என்று கேட்டார்.

''முத்துகிருஷ்ணனா சார்?''

''என்ன கிருஷ்ணனோ, எனி மாதிரி இருப்பான்.''

"ஆமாம் சார்."

"அவன் வீடு எங்கே?"

"வீடு தெரியாது. ஆனால் இரண்டு நாளைக்கு ஒரு தரம் இங்கே வந்து ஓட்டலில் என்னென்ன பார்ட்டிகள் இருக்கிறது என்று கேட்டு, விலாசம் விசாரித்துக் கொண்டு போவான். இப்போது இரண்டு மூன்று நாளாய்க் காணோம். அனேகமாய் இன்றைக்கு வருவான்."

"வந்தால் என்னிடம் அனுப்பு" என்று ராமப்பிரம்மம் சொன்னதும் தாசரதி போய்விட்டான்.

"அடுத்தது?"

"ஒரு மணி வரையில் பார்ப்போம்" என்றார் ராமப்பிரம்மம் கைக்கடியாரத்தை நோக்கியபடி. "இந்த முத்துக்கிருஷ்ணன் கொஞ்சம் நாம் சொல்கிறபடி கேட்கக்கூடியவன் என்பதால் பார்க்கிறேன். இவன் வராவிட்டால் வேறு ஏற்பாடு செய்யலாம்."

என்ன ஏற்பாடு என்று புரியவில்லை எனக்கு.

ஆனால், பன்னிரண்டு மணிக்குள்ளேயே அந்தக் காமிராக்கார இளைஞன் வந்துவிட்டான். மூன்றாவது கை, நாலாவது கைகள் முளைத்தாற்போல் அவன் உடம்பெங்கும் காமிராவும், மீட்டரும், ப்ளாஷ் லைட்டும் தொங்கிக் கொண்டிருந்தன.

பணிவுள்ளவன். "உட்காரப்பா" என்று ராமப்பிரம்மம் சொன்னதை ஏற்காமல், "பரவாயில்லை சார்" என்று நின்றபடியே பேசினான்.

"வட இந்தியாவிலிருந்து மணிப்புரி டான்ஸர் ரஜனி வந்திருக்கிறாளே, தெரியுமில்லையா?" என்றார் ராமப்பிரம்மம்.

"ஆமாம் சார். பர்ஃபாமென்ஸ்களைப் போட்டோ எடுக்கும்படி சில சபாக்களில் சொல்லியிருக்கிறார்கள்" என்றான் முத்துக்கிருஷ்ணன்.



"ஆடுகிறபோது எடுப்பதுதான் இருக்கவே இருக்கிறதே? சும்மா வீட்டிலே படிப்பது, சாப்பிடுவது அலங்காரம் செய்துகொள்வது இதையெல்லாம் எடுத்துத் தந்தால் பத்திரிகைகளில் இரண்டு கை நீட்டி வாங்கிக்கொள்வார்கள்" என்றார் ராமப்பிரம்மம். "எங்களுக்குக்கூட அந்த மாதிரி படங்கள் வேண்டியிருக்கிறது."

"ஓ, எடுத்துத் தருகிறேனே?"

ராமப்பிரம்மம் அவன் முதுகில் தட்டிக் கொடுத்து, கண்ணையும் சிமிட்டினார். "முக்கியமாய் அவளுடன் இப்போதெல்லாம் முல்தானி போல ஓர் ஆள்—பக்கத்துக் காட்டேஜில் தங்கியிருக்கிறவன்—பெரும் பணக்காரன்—ரொம்ப நெருங்கிப் பழகிக் கொண்டிருக்கிறான். ரஜனிக்குத் தெரிந்தோ தெரியாமலோ அதையும் ஒரு படம் எடுத்துவிட வேண்டும். என்ன, புரிகிறதா?"

"இப்போதே போகிறேன்" என்று புறப்பட்டுச் சென்றான் முத்துகிருஷ்ணன்.

எனக்கு நடப்பதெல்லாம் ஒரே ஆச்சரியமாயிருந்தது. "ராமப்பிரம்மம், நீங்கள் நிச்சயம் ஒரு மந்திரவாதிதான்" என்றேன்.

"கொஞ்ச நேரம் பொறுத்து அதைச் சொல்லு" என்று கூறிவிட்டு ராமப்பிரம்மம் தன் அலுவலைக் கவனிக்கச் சென்றார்."

அவர் ஏன் முழுமனதாக நம்பிக்கை கொள்ளவில்லை என்பது எனக்கு ஐந்து நிமிடங்களில் தெரிந்தது.

போட்டோகிராபர் முத்துகிருஷ்ணன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு திரும்பி வந்தான். பின்னே கிருத்திகாவும் வந்தாள்.

முத்துகிருஷ்ணன் விளக்குவதற்குமுன் கிருத்திகாவே கூறினாள்: "இனிமேல் தயவுசெய்து இந்த மாதிரி புகைப் படக்காரர்களை அனுப்பி வைக்காதீர்கள். மிஸ் ரஜனிக்குப் பிடிக்காது."

''என்ன பிடிக்காது?'' என்றேன் கோபத்துடன்.

"அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றிப் புகைப்படமோ, கட்டுரையோ வெளியிடுவதைத்தான் சொல்கிறேன். மிஸ் ரஜனி ஒரு சிறந்த நாட்டியக்காரி. அதைக் காட்டும் புகைப்படம் தவிர வேறெதுவும் எடுக்கத் தேவையில்லை.''

''அடடே! அப்படியா!'' என்றேன் கிண்டலாக குரலில். ''இதை மிஸ் ரஜனியே சொல்லலாமே?''

ருத்திகாவின் முகம் சிவந்தது.

''நான் மிஸ் ரஜனியின் காரியதரிசி. அவள் சொன்னாலென்ன, நான் சொன்னாலென்ன?''

மூன்றாம் மனிதனான முத்துகிருஷ்ணன் இருப்பதையும் மறந்தேன் நான். "ஆகாகா! என்ன காரியதரிசி, என்ன எஜமானி! காரியதரிசிமீது எஜமானி எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறாள்! எத்தனைப் பிரியம்!''

"மிஸ்டர் சேது! எனக்கும் மிஸ் ரஜனிக்கும் இருக்கும் உறவு எங்கள் சொந்த விஷயம் என்று பல தடவை உங்களுக்குச் சொல்லிவிட்டேன். மிஸ் ரஜனிக்கு எது பிடிக்காது, எது பிடிக்கும், எது நல்லது, எது கெடுதல் என்று எனக்குத் தெரியும். ஆகவே, இந்தப் போட்டோகிராபரை அனுமதிப்பதற்கில்லை'' என்று படபடப்புடன் சொல்லிவிட்டுத் திரும்பினாள் ருத்திகா. நாலடி வைத்தவள் நின்று என்னைப் பார்த்தாள். ''அத்தோடு நீங்கள் என்ன படம் எடுக்க விரும்புகிறீர்கள், ஏன் எடுக்க விரும்புகிறீர்கள் என்பதும் எனக்கு நன்றாகப் புரிகிறது'' என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்.

புகைப்படக்கார முத்துகிருஷ்ணனும், ''நான் வருகிறேன் சார்'' என்று ஏமாற்றத்துடன் சொல்லிவிட்டுத் திரும்பிச் சென்றான்.



என் மனத்திலோடும் எண்ணங்களையும் நான் போடும் திட்டங்களையும் எப்படித்தான் ருத்திகா அறிந்துகொள்கிறாளோ? நான் வியப்பிலாழ்ந்தேன். சந்திபோல் குறுக்கே நிற்கும் இவள் விலகினாலொழிய எதுவும் நடக்காதே என்று நிராசை வசப்பட்டேன்.

முத்துகிருஷ்ணன் போகும்போது சொல்லிவிட்டுப் போனான் போலிருக்கிறது ராமப்பிரம்மம். ''என்ன, நம் திட்டமெல்லாம் புஸ்ஸென்று போய்விட்டதே!'' என்று துக்கம் விசாரித்துக்கொண்டு வந்தார். ''பயப்படாதே! அவன் இருக்கிறான்.'' என்று உத்தரத்தைக் காட்டினார்.

அங்கிருந்து 'அவன்' பேசுவதுபோல, ''சார்! சார்!'' என்று கூப்பிட்டுக்கொண்டே ஓடிவந்தான் ரிஸப்ஷனிஸ்டு தாசரதி.

''என்னப்பா?'' என்றேன் சலிப்புடன். கடுகை மலையாக்குகிற மாதிரி சில சமயங்களில் அவன் அமர்க்களம் செய்துவிடுவது உண்டு.

''சார்! அந்த மிஸ் ரஜனி ஒரு நாய் வைத்திருந்தாளே—'ஜீ' என்று—பெயர்—அதை அரை மணி நேரமாய்க் காணோமாம். திருட்டுப் போய்விட்டதென்று கத்துகிறாள்'' என்றான் தாசரதி.

எனக்கு எரிச்சல் வந்தது.

''ஓட்டல் உமாவில் எது திருட்டுப் போனாலும் நாய் மட்டும் திருட்டுப் போவது கிடையாது என்று சொல்லு. இங்கேதான் வேறு யாருடைய அறையிலாவது புகுந்து கொண்டிருக்கும்'' என்றேன்.

''வா பார்க்கலாம்'' என்று ராமப்பிரம்மம் புறப்பட்டார்.

காட்டேஜ்கள் வரிசை அமளி துமளிப்பட்டுக்கொண்டிருந்தது. வெயிட்டர்களும் பையன்களும் புடைசூழ, இடுப்பில் இரு கை வைத்தபடி அட்டகாசம் செய்துகொண்டிருந்தாள் ரஜனி. கிருத்திகா கையைப் பிசைந்துகொண்டிருந்தாள். வேலைக்கார பிஜூ ஒவ்வொரு செடியின் பின்னாலும் பார்த்துக்கொண்டிருந்தான். பட்டவர்த்தன் என்ற வடக்கத்திக்காரன் மட்டும் வெளியே தலைகாட்டக் காணோம். ரஜனியின் காட்டேஜூக்குள்ளிருந்து அவனுடைய சிகரெட் புகை மெல்லிய கம்பியாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

என்னைக் கண்டதும் ரஜனி, ''என்ன சார் ஓட்டல் நடத்துகிறீர்கள்? கால் மணி முன்னால்கூட இங்கே விளையாடிக்கொண்டிருந்தது. இப்போது காணோமென்றால் என்ன அர்த்தம்?'' என்று சீறினாள்.

நான் பதில் சொல்லுமுன் ஒரு பையன் ஓடிவந்து ''ஆபரேட்டர் டெலிபோனில் உங்களைக் கூப்பிடுகிறார். நாய் கிடைத்துப் போச்சாம்!'' என்றான்.

''ஜீ கிடைத்துவிட்டதா? எங்கே? எங்கே?'' என்று ரஜனியும், அவளைத் தொடர்ந்து கிருத்திகாவும் என் பின்னே ஓடிவந்தார்கள்.

சோடாராம் பிரதர்ஸிலிருந்து பேசினார்கள்: ''எங்கள் கெஸ்ட் ஒருவரை இறக்குவதற்காகக் கார் அங்கே வந்திருந்தது. டிரைவர் அந்தண்டை போயிருக்கும்போது ஏதோ ஒரு பாமரேனியன் நாய்க்குட்டி டிரைவருக்கே தெரியாமல் பின் ஸீட்டில் ஏறி உட்கார்ந்திருக்கிறது. இங்கே வந்துதான் கவனித்தானாம். பத்திரமாய் வைத்துக்கொண்டிருக்கிறோம். யாரையாவது அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள் ..''

''ரொம்பத் தாங்க்ஸ். இதோ அனுப்புகிறேன்.'' என்று நன்றி கூறிவிட்டு, ரஜனியிடம் தகவலைச் சொன்னேன்.



''பிஜூ! பிஜூவைப் போகச் சொல்கிறேன். ஏய் பிஜூ!'' என்று பறந்தாள் ரஜனி.

சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. ''பிஜூவை மட்டும் அனுப்பினால் போதாது. அவனை நம்புகிறார்களோ இல்லையோ? உங்கள் செகரட்டரியையும்கூட அனுப்புங்கள்...'' என்றேன்.

''நானா... நான் எதற்கு...'' என்று கிருத்திகா தடுமாறினாள். நான் அவளை அப்புறப்படுத்த முயலுவதை ஊகித்துவிட்டாள் என்று தோன்றியது.

''போ என்றால் போ! பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளத்தான் துப்பில்லை, போய் வாங்கிவரக்கூடப் பிடிக்கவில்லையா?'' என்று ரஜனி படபடவென்று வெடிக்கவே கிருத்திகா புறப்பட்டுச் சென்றாள்.

மற்ற அமர்க்களங்களும் இரண்டொரு நிமிடங்களில் ஓய்ந்தன.

''நல்லவேளை, சோடாராம் பிரதர்ஸின் ஆபீஸ் கஸ்டடியில் இருக்கிறது. போய்வர முக்கால் மணி நேரமாவது ஆகும்.'' என்று கூறிக்கொண்டே என் அறைக்குள் நுழைந்தேன்.

''என்ன செய்யப்போகிறாய்?'' என்றார் ராமப்பிரம்மம்.

''நானே போர்க்களத்தில் குதிக்கப்போகிறேன்.'' பரபரவென்று ஸ்டீல் பீரோவைக் குடைந்து, வெகு நாட்களாக அடைந்து கிடக்கும் காமிராவை எடுத்தேன். பையனை அனுப்பி, அடுத்தத் தெருவில் இருக்கும் ஸ்டுடியோவிலிருந்து 120 பிலிம் ரோல் ஒன்று வாங்கிவரச் செய்தேன்.

''காட்டேஜ்களுக்குப் பின்பக்கம் ஒரு வெராந்தா இருக்கிறது. இல்லையா? சத்தம் போடாமல் அந்த வழியே போய் இருவரையும் சேர்த்துப் படம் பிடிக்க முடியுமா பார்க்கிறேன்.''

ராமப்பிரம்மத்துக்கு என் புகைப்படத் திறமையில் என்றைக்குமே நம்பிக்கை கிடையாது. கேலியான புன்ன கையுடன், ''ஊம், ஊம். ட்ரை யுவர் லைக்'' என்றார்.

படுக்கையறைக்குப் பின்புறமிருந்த ஒரு கதவு நல்ல வேளையாக லேசாய்த் திறந்திருந்தது. சிதறியிருந்த நோட்டுக்களைப் பொறுக்கித் திரட்டிவிட்டார்கள். ''ஐந்து நிமிடம் 'ஜீ'யைக் காணோமென்றதும் என்னமாய் வாடி விட்டது உன் ரோஜா முகம்!'' என்று இந்தியில் சொல்லி, அவள் மோவாயை நிமிர்த்திக்கொண்டிருந்தான் அவன்.

காமிராவைச் சரிசெய்து கொள்வதற்காக 'வியூ ஃபைண்ட'ரைத் திறந்தேன்.

ரொம்ப நாளாய் அடைபட்டிருந்ததால் படக்கென்ற ஓசை ஏற்பட்டுவிட்டது. அதே சமயம் குப்பென்ற தூசியும் என் மூக்கில் பட்டதால் நச்சென்று தும்மிவிட்டேன்.

'கெட்டது காரியம்!' என்று நான் நினைத்து முடிக்கு முன், அந்த வடக்கத்தியான் படீரென்று கதவைத் திறந்து கொண்டு வந்துவிட்டான். என்னையும் என் காமிராவையும் கண்டதுமே விஷயத்தைப் புரிந்துகொண்டான் போலும்.

அந்த மாதிரியான ஓர் அடி என் ஆயுளில் நான் பட்டது கிடையாது. மோவாய்க்குக் கீழே விழுந்த குத்து—இரும்புப் பந்தினால் அடித்ததுபோல் பச்சையாய்ப் பயங்கரமாய் இருந்தது. குபுக்கென்று அடிவயிற்றிலிருந்து ரத்தம் பொங்கு கிறாற்போல் உணர்ந்தேன்.

கசக்கிச் சுருட்டியெறியப்பட்ட கந்தல் துணிபோல் தலை குப்புறத் தரையில் விழுகின்றபோதே, என் ரோஷ உணர்வு கள் சிலிர்த்தெழுந்தன. இப்படித் தோற்றுச் சுருங்குவது கோழைத்தனம் என்று என் உள்குரல் சொல்லியது. ஒன்றிக்



கொன்றியான சண்டையில் நான் என்றைக்குமே தோற்றது கிடையாது என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டேன். பள்ளிக்கூடப் பருவத்தில், நான் நோஞ்சானாக இருந்த நாளிலேயே, ''சேது சோனியாயிருக்கிறானே என்று நினைக் காதே. அவ்வளவும் எலும்பு. அந்த எலும்புக் கையால் குத்து விட்டானானால் ஆள் குளோஸ்!'' என்று என்னைப் பற்றி என் தோழர்கள் வர்ணிப்பதைக் கேட்டிருக்கிறேன். எனக்குப் பலம் கொடுப்பது எலும்பல்ல என்று எனக்குத் தெரியும். அனாவசியமாய்ச் சண்டைக்குப் போகமாட்டேன். போனால் தோற்றிருப்பேன். ஆனால் வலுவில் ஒரு சண்டை வரும்போது, வருகிறவனின் அநியாயமும் என்னுடைய நியாயமும்தான் என் கண்முன்னால் நிற்கும். நான் ரோஷத் தாலானவன்.

பற்கள் நொறுங்கியதால் பொங்கிய ரத்தப் பிரவா கத்தைக் கொப்புளித்துவிட்டு ஒரு சுற்றுச் சுற்றிக்கொண்டு எழுந்து நின்ற தருணத்திலேயே இவ்வளவையும் இதற் மேலும் எனக்கு நானே நினைவூட்டிக் கொண்டேன்.

அவ்வளவுதான்.

காலினால் அவன் அடிவயிற்றில் விட்டேன் ஒன் அவன் ஒற்றைக்காலில் நின்றபடி ஒரு தட்டாமாலை சுற்றி னான். இரண்டு காலிலும் ஊன்றி நின்று கொள்வதற்குள், முகத்தில் முஷ்டியினால் மோதினேன். அதற்குள் அவன் கை, மீண்டுமொரு இரும்புத் தடியாக, என் நடு மண்டையில் இறங்கியது. என் உடம்பே ஒடிந்துவிடுகிற மாதிரி நிலை தடுமாறிச் சாய்ந்தேன். அவனுடைய எருமை மாட்டுத் தலை என் வயிற்றில் மோதியது. ஆனால் மறுபடி அதே போல் மோதுவதற்கு அவன் வந்தபோது நான் விலகிக் கொண்டேன். வார்னிஷ் அடித்திருந்த சுவரில் அவன் தலை வெகு வேகமாக இடித்துக்கொண்டது. மலைப்பாம்பு மாதிரி மூச்சு வாங்க அவன் சமாளிப்பதற்குள், அவன் முதுகில் நடு எலும்பு இருக்கவேண்டிய இடத்தில், முழங்கை

யால் வெட்டுகிற மாதிரி குத்தினேன். தண்ணீரிலிருந்து வெளியே போட்ட மீன்மாதிரி ஒரு துள்ளுத் துள்ளிவிட்டு அவன் விழுந்தான். பிறகு அசையவேயில்லை. மூர்ச்சையாகிவிட்டான் என்பதைக் கண்டுகொண்டேன்.

அந்த ஐந்து நிமிட மோதலில் இரண்டு மூன்று ஆச்சரியம் இருப்பதைப பிறகுதான் கவனித்தேன். அவ்வளவு பெரிய ஓட்டலாக இருந்தும், கூட்டமேதும் கூடவில்லை நாங்கள் சண்டையடித்த இடத்தில். காட்டேஜின் பின்பக்கமாயிருந்ததால் நாங்கள் எவர் கண்ணிலும் பட்டிருக்க முடியாது. அது மட்டுமல்ல, நானோ அந்த வடக்கத்தியானோ என்ன அடி பெற்றுக்கொண்ட போதிலும் வாயைத் திறந்து அலறவில்லை. எவ்வளவு முடியுமோ அவ்வளவு நிசப்தமாக எங்கள் தகராறை முடித்துக்கொள்ள இருவருமே விரும்பியிருக்கிறோம்.

ரஜனி ஏன் கத்தவில்லை? ஏன் சத்தம் போட்டு ஆட்களைக் கூட்டவில்லை? அதுதான் எனக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது.

இப்போது எல்லாம் ஒய்ந்த பின்னர், கைக்குட்டையிலிருந்து என் மோவாயிலிருந்த ரத்தத்தைத் துடைத்துக்கொண்டே அவனைப் பார்த்தேன். அவனுடைய வதனத்தில் கலவரமோ பயமோ காணோம். இதழ்க்கடையில் ஒரு புன்சிப்புத் தோற்றிக்கொண்டிருந்தது.

“சரி, பிடி. உள்ளே கட்டிலில் கொண்டுபோய்க் கிடத்தலாம்” என்றான் அமைதியாக, சரிந்திருந்த வடக்கத்தியானின் தலையை ஒரு கையால் பிடித்தபடி. அந்தக் கட்டளைக்கு என்னையறியாமலே கீழ்ப்படிந்தவனாக, நான் கால்மாட்டில் பிடித்தேன்.

கட்டிலில் கொண்டுபோய்க் கிடத்தினோம். ரஜனி, கட்டிலில் அவன் பக்கத்தில் அமர்ந்துகொண்டு அவனுடைய உடைகளைத் தளர்த்திவிடுவதில் ஈடுபட்டான்.



வெராந்தாவின் மூலையில் விழுந்து கிடந்த காமிராவை எடுத்துக்கொண்டு நான் திரும்பினேன். லென்ஸ் உடைந்திருந்தது.

“படம் எடுத்துவிட்டாயா? அல்லது எடுப்பதற்கு முன்பே சண்டை வந்துவிட்டதா?” அவனுடைய வெயிஸ்ட் கட்டைக் கழற்றிக்கொண்டே ரஜனி கேட்டான்.

“எடுக்கவில்லை.” சண்டையில் ஜெயித்தாலும், நோக்கத்தில் தோற்ற கசப்பு என் பதிலில் இருந்தது.

ரஜனி, மெல்லச் சிரித்துக்கொண்டே அவனுடைய கால் செருப்புக்களைக் கழற்றிவிட்டு ஃபுல் ஷர்ட்டின் பொத்தான்களைப் பிரித்துவிட்டான். “நானும் இவரும் சேர்ந்தாற்போலிருக்கிற புகைப்படம் உனக்கு ஒன்று தேவை அவ்வளவுதானே?”

“ஆமாம்.”

“இப்படி வேண்டுமானால் அணைத்துக் கொண்டாற் போல் போஸ் தருகிறேன். ஸ்னாப் எடுத்துக் கொள்கிறயா?” அவனுடைய தலைப்பாகையை அகற்றிவிட்டு, அவன் முகத்தில் தன் கழுத்துப் படுகிறமாதிரி குனிந்துகொண்டான்.

அவனுடைய திமிர் எனக்குக் கோபத்தை மூட்டியது. “எதற்காகப் புகைப்படம் எடுக்க நினைத்தேன் என்று உனக்குத் தெரிந்தால் இவ்வளவு தாராளம் காட்டமாட்டாய்” என்றேன்.

“எதற்காக எடுக்கப் போகிறாய்?” என்றான் ரஜனி.

கண நேரம் நான் தயங்கினேன். எனக்கு அவனைப் பற்றியும், கௌதமனைப் பற்றியும் தெரியும் என்று காட்டிக்கொள்வதா வேண்டாமா? இறுதியில் அவனுக்குத் தெரிவிப்பதே மேல் என்று தீர்மானித்தேன். எப்படியும் என் காரியங்களுக்கு ஒரு காரணம் சொல்லித் தானாக வேண்டும். உண்மையையே சொல்லலாம்.

''நீ எப்படிப்பட்டவள், எவ்வளவுபேருடன் காதல் விவகாரங்கள் வைத்துக்கொண்டிருக்கிறாய் என்பதெல்லாம் ஐரோப்பாவில் இருக்கும் கௌதமனுக்குத் தெரிய வேண்டாமா? தெரிந்தால்தானே அவன் மயக்கம் தெளியும்? அதற்காகத்தான் ஒரு போட்டோ தேவை.'' என்றேன்.

அவள் திகைப்போ மிரட்சியோ அடையவில்லை. ''உன் தகவல் கௌதமனுக்குப் புதிதாக இராது'' என்றாள்.

''என்ன?''

''நான் இந்த நபருடன் பழகுவதும் தொடர்பு வைத்திருப்பதும், ஆடுவதும் ஓடுவதும் விளையாடுவதும்—எல்லாம் தெரியும் கௌதமனுக்கு. தெரிந்துதான் இடம் கொடுத்திருக்கிறார்'' என்றாள் ரஜனி. அவ்வளவு கைகலப்பின் போதும் எப்படியோ விழாமல் அவன் முகத்திலேயே தொற்றிக்கொண்டிருந்த கறுப்புக் கண்ணாடியையும் இப்போது கழற்றினாள்.

நான் அதிர்ச்சியினால் வாயடைத்துப் போனேன். அவளுடைய பதிலினால் குழப்பமடைந்தவனாக, அவள் முகத்தையும், கட்டிலில் கிடந்தவனையும் மாறி மாறிப் பார்த்தேன். கண்மண் தெரியாமல் அவ்வளவு அடி பட்டபோதுகூட வராத மயக்கமும் தலைச் சுற்றலும் இப்போது என்னை ஆரத் தழுவின.

நஞ்சு கலந்த சிரிப்பை என்மீது வீசினாள் ரஜனி. ''என் சேது. உன்னால் நம்பமுடியவில்லையா நான் சொன்னதை? உண்மை. கௌதமனுக்கு இவரைப்பற்றி எல்லாம் தெரியும்.''

அந்த வடக்கத்தியானின் குறுந்தாடியை வெடுக்கெனப் பறித்து இழுத்தான் அவன்.

சென்ற சில நிமிடங்களாக நான் பட்டுக்கொண்டிருந்த சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது.

கட்டிலில் யாரோ ஒரு வடக்கத்தியான் கிடக்கவில்லை. கௌதமன்தான் கிடந்தான்.

# 7

**கௌ**தமன்தான். இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்தபோது அவனைக் கடைசியாய்ப் பார்த்தேன். இப்போது, என்னிடமே செம்மையாய் வாங்கிக்கொண்டு மயக்கமுற்றுக் கிடக்கும் நிலையில் மறுபடி பார்க்கிறேன். ஆப்காளிய மூக்கு. அடர்த்தியான புருவம். வளர்த்தியான உடம்பு.

என் பதைப்பை எப்படி வர்ணிப்பது? எவனை இந்த ரஜனியிடமிருந்து பிரிக்க வேண்டுமென்று நான் நினைத்திருக்கிறேனோ, அவன் பிரிக்க முடியாதபடி மையல் கொண்டு, தந்தைக்கே துரோகமாக இங்கே வந்து அடிமைப் பட்டுக் கிடக்கிறான் என்பதை உணர்ந்த அதிர்ச்சி ஒரு பக்கம். ஆனால் அது பரவாயில்லை. எவனுடைய நலனை நான் பிரதானமாகக் கருத வேண்டுமோ அவனை நானே தாக்கி வீழ்த்திவிட்டேனே என்ற வேதனை பெரிதாயிருந்தது.

தலைச்சுற்றலைச் சமாளிப்பதற்காகச் சுவரைப் பிடித்துக்கொண்டு, உதட்டில் இன்னும் கசிந்துகொண்டிருந்த ரத்தத்தைத் துடைத்துக்கொண்டேன். ரஜனியின் வெற்றித் திமிர் பிடித்த பார்வையைச் சந்திக்க என் கண்களுக்கு வலு இருக்கவில்லை. வெளியே ஓடி வந்தேன்.

''சேது! சேது!'' என்று என்னை நோக்கி ஓடிவந்தார் ராமப்பிரம்மம். என் அலங்கோலமான தோற்றம்தான் அவர் பதைப்புக்குக் காரணம் என்று முதலில் நினைத்தேன். பிறகு தான் வேறு விஷயம் என்று தெரிந்தது.

''சேது! முதலாளிக்கு மறுபடி உடம்பு சரியில்லையாம். போன் வந்தது. உனக்கு எப்படித் தெரிவிப்பது என்று தவித்துக்கொண்டிருந்தேன்...'' என்றார்.

''என்னது!'' என்று திடுக்கிட்ட நேரத்தில், தூரத்தில் காத்திருந்த டிரைவரும் காரைக் கிளப்பி வந்து என்னருகில் நிறுத்தினான். கலைந்த தலையையும், புடைத்த நெற்றியையும், கையிலிருந்த காமிராவையும் யார் பார்த்து என்ன கேட்பார்களோ என்ற யோசனைகூட இல்லாமல் காரில் தாவினேன்.

நம்பீசனின் பங்களாவை அடைந்தபோது, டாக்டர் புறப்பட்டுக்கொண்டிருந்தார். ''ஹி இஸ் ஆல் ரைட். ஸெடெடிவ் கொடுத்திருக்கிறேன். நன்றாய்த் தூங்கட்டும்.'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

ஓசைப்படுத்தாமல் படுக்கையறைக்குச் சென்று நம்பீசனின் தலைமாட்டில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தேன். அவர் நெற்றியில் பொடிப் பொடியாய் வியர்த்திருந்தது. கைக்குட்டையினால் ஒற்றினேன்.

''கௌதமா...கௌதமா...'' என்று அவர் வாய் முணுமுணுத்தது.

நான் பெருமூச்சு விட்டேன், என் இதயம் கனத்தது. நா வறண்டு போயிற்று. வேலைக்காரனிடம் ஒரு கூல் ட்ரிங்க் கொண்டுவரச் சொன்னேன். குடித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டேன். இடத்தை விட்டு எழுந்திராமல் நம்பீசனின் அருகிலேயே தவமிருந்தேன்.

வெகு நேரம் கழித்து அவர் துயில் கலைந்தார். கலங்கிச் சிவந்திருந்த கண்களால் என்னைப் பார்த்து, ''வெகு நேரமாய் இருக்கிறாயா, என்ன? எனக்கு ஒன்றுமில்லை, போ, போ'' என்றார்.



''இதோ போகிறேன் சார்'' என்று எழுந்து கொண்டேன். ''அடிக்கடி கௌதமனை நினைத்துக்கொள்கிறீர்களே? ஒரு கேபிள் வேண்டுமானால்...''

''நோ, நோ!'' என்றார் நம்பீசன். ''அந்த மாதிரி அசட்டுக் காரியம் எதுவும் செய்துவைக்காதே. எந்தக் காரணத்துக்காகவும் அவனுடைய ஸ்டேடஸ் கெடக்கூடாது.''

நான் மிடறு விழுங்கினேன். பொய்யான முகத்தால் அவரைப் பார்க்கும் துணிவின்றி, மௌனமாய் வெளிவந்து காரில் ஏறிக்கொண்டேன்.

நம்பீசன்! உங்களுக்குத் தெரியாமல் உங்கள் மகன் நடத்திக்கொண்டிருக்கிற மோசடிக்கு நானும் உடந்தையாக இருக்கிறேனே, அது தெரிந்தால் என்ன நினைப்பீர்கள்! நம்பீசன்! உங்களுக்கு நான் துரோகம் செய்யலாமா? உங்களுக்கா...

இன்றைக்குக்கூட, உயர்நீதி மன்றத்தில் முத்துசாமி ஐயர் சிலைக்கு எதிரிலுள்ள நாலாவது கோர்ட்டைப் பார்க்க நேர்ந்தால், சில நிமிடங்கள் என்னை மறந்து நின்று விடுவேன்.

அன்றும் இதே கட்டிடம். பிரம்மாண்டமான அறை. பத்து வயது வளர்த்தியும் அறிவும் கொண்டவனாக, உயரமான விதானத்தை ஆவென்று அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். அம்மாவின் பக்கத்தில் உட்கார்ந்தவாறு, சுவரின் சிவப்புச் சாயம் கையில் ஒட்டுகிறதா என்று விரலால் தீற்றித் தீற்றிப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். பிறகு அது அலுத்துப்போய், அம்மாவின் மடியில் தலை சாய்த்துப் படுத்திருக்கிறேன். மடியிலிருந்து என்னை நகர்த்துகிறாள் அம்மா. ஏன்? வெறுப்பா? இல்லை. புடவைத் தலைப்பு அவளுக்குத் தேவைப்படுகிறது—கண்ணைத் துடைத்துக்கொள்ள, துடைத்துக்கொண்டதும் பழையபடி என்னை மடியில் சாய்த்துக்கொள்கிறாள்.

கறுப்புக்கோட்டும் டக்டக் பூட்ஸுமாக யார் யாரோ போகிறார்கள். "ஸைலன்ஸ்! ஸைலன்ஸ்!" என்று டவாலி பியூன்கள் கத்துகிறார்கள். காகிதங்கள் சளசளக்கின்றன. கூண்டிலே என் அப்பா தலையைக் குனிந்துகொண்டு, கையில் விலங்குடன் நிற்கிறார்.

அம்மாவின் தளர்ந்த உடம்பில் ஒரு விறைப்பு ஏற்படுவதை உணர்கிறேன். என்ன விசேடம் என்று எழுந்து உட்கார்ந்து பார்க்கிறேன்.

ஜட்ஜ், மூக்குக்கண்ணாடியைக் கழற்றிக் கைக்குட்டையில் துடைத்துக்கொண்டே, தனக்கு வலப்புறம் வரிசையாகப் பெஞ்சில் அமர்ந்திருக்கும் ஒன்பது பேர்களிடம் இங்கிலீஷில் ஏதோ சொல்கிறார். அவர்களில் ஆண்கள் ஏழு பேர். பெண்கள் இரண்டுபேர். இந்த ஒன்பது பேர்தான் ஜூரர்கள்.

எனக்கு இவற்றின் முக்கியத்துவமெல்லாம் பல காலம் கழித்துத்தான் புரியலாயிற்று. ஆனால் அந்தக் கோர்ட், நீதிபதி, சுவர், ஜூரர்களின் முகம், அம்மாவின் கண்ணீர், க்கத்தில் நின்றிருந்த கோர்ட் சேவகனின் சிவப்பு டவாலிப் ட்டை, ஜட்ஜ் பேசிக்கொண்டிருந்தபோது கோர்ட் மாஸ்தா அடக்கி அடக்கி இருமிக்கொண்டிருந்தது—இவை யெல்லாம் மனத்தில் என்ன ஆழமாகப் பதிந்துவிட்டன! என் கையை வெட்டலாம், காலைத் தனியே பிய்த்தெடுக்கலாம். அந்தக் காட்சிகளை, எண்ணங்களை, உணர்வுகளை என்னிடமிருந்து செதுக்கித் தள்ளமுடியும்?

ஜூரர்கள் எழுந்து போகிறார்கள்.

அம்மா என் கையில் ஓரணா தந்து, "வெளியே போய் ஏதாவது வாங்கிச் சாப்பிடு," என்கிறாள்.

வெளியே சைனா பஜாருக்கு வருகிறேன். கைவண்டிக்காரனிடம் போய் மடி நிறையப் பட்டாணி வாங்கிக் கட்டிக



கொண்டிருக்கும்போது, பக்கத்தில் பீடி பிடித்துக்கொண்டிருந்த ஓர் ஆள், "என்ன ஆச்சு உன் அப்பாருக்கு?" என்று கேட்கிறான்.

"தெரியாது." என்கிறேன்.

"ஜூரர்கள் போயிருக்கிறாங்க யோசனை செய்யறதுக்காக. திட்டிப்பிடுவாங்க" என்று இன்னோர் ஆள் அவனுக்குப் பதிலளிப்பதோடு, தன் கழுத்திலும் கையை வைத்து ஏதோ சாடை காட்டுகிறான்.

பட்டாணியில் ஒன்றைக்கூட வாயில் போடாமல், மனம் குழம்பியவனாக நான் அம்மாவிடம் திரும்புகிறேன். ஏனோ அவளிடம் ஒண்டிக்கொண்டு பதுங்கிக்கொண்டு இருக்கவே மனம் ஏங்குகிறது. அம்மாவுக்கும் அப்படித்தான் இருக்கிறதோ? என்னைத் தன் பக்கமாய் அணைத்துக்கொண்டு என் தலையை வருடிக் கொடுத்தபடியே மௌனமாக இருக்கிறாள். புயல்காற்றில் கூடு சரிந்து, வெளியே தள்ளப்பட்ட இரண்டு குருவிக் குஞ்சுகளைப்போல, ஒருவருக்கு மற்றவர் தான் பாதுகாப்பு என்று உணர்கிறோம்.

எழுந்துபோயிருந்த ஒன்பதுபேர்களும் திரும்பி வருகிறார்கள். அவர்களில் சிலர் என்னையும் அம்மாவையும் பரிதாபத்துடன் பார்க்கிறார்கள்.

ஜூரர்களில் ஒருவர் எழுந்திருந்து ஜட்ஜிடம் ஏதோ சொல்கிறார். அம்மா, விம்மிக்கொண்டே என்னை இறுக்கிக் கட்டிக்கொள்கிறாள். ஜட்ஜ் ஏதோ சொல்லிவிட்டு எழுந்து போகிறார். எல்லோரும் கலைகிறார்கள். 'வருகிற திங்கட்கிழமை தீர்ப்பு' என்று பேசிக்கொள்கிறார்கள்.

போலீஸ்காரர்கள் அப்பாவைக் கொண்டுபோய் விடுகிறார்கள்.

ஒரு வக்கீல் அம்மாவிடம், "பயப்படாதீர்கள். ஜூரர்களின் தீர்ப்பை ஜட்ஜ் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கிற

கட்டாயம் கிடையாது.'' என்கிறார். இன்னொரு வக்கீலும் பக்கத்தில் வந்து, ''யுனானிமஸ் அபிப்பிராயம் இல்லை. உங்கள் கணவர் குற்றவாளியல்ல என்று ஒரு ஜூரர் சொல்லியிருக்கிறார்.'' என்கிறார்.

''அப்படியும் ஒரு நல்ல மனிதர் இருக்கிறாரா?'' என்று அம்மா குரல் தழுதழுக்கக் கேட்கிறாள்.

''இதோ போகிறாரே, இவர்தான்.''

நம்பீசனை அப்போதுதான் முதலில் பார்க்கிறேன்.

எழும்பூரில் 'ஒட்டல் உமா'வை ஒரு சாதாரணச் சிற்றுண்டிக் கிளப்பாக நடத்திக்கொண்டிருக்கிறார் அப்போது. கௌரவமான பிரஜை என்ற முறையில் அவரை ஜூரர்களில் ஒருவராக நியமித்திருக்கிறார்கள்.

''உங்கள் கணவர் குற்றம் செய்திருப்பாரென்று எனக்குத் தோன்றவில்லை. அதனால் சொன்னேன். கடைசிவரை சொல்லிக்கொண்டும் இருப்பேன். கவலைப்படாதீர்கள். அவருக்கு விடுதலை கிடைக்கும்'' என்கிறார் நம்பீசன்.

அவர் வாக்குப் பலிக்கவில்லை.

என் அப்பாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, நிறைவேற்றியும் விட்டார்கள்.

அவர்மீது சாட்டப்பட்டிருந்த குற்றம்: ஒரு பெண்ணிடம் நட்பு வைத்திருந்தார். ஆனால் அவள் தன் ஒருத்தருடன் மட்டும் நட்புக் கொண்டவளல்ல என்பது பிறகுதான் அவருக்குத் தெரிந்தது. தெரிந்தபோது, ஒருநாள் இரவு பலமாகச் சண்டை போட்டுவிட்டுச் சென்றார். அதைப் பலபேர் பார்த்திருந்தார்கள். மறுநாள் காலை அவள் ரத்தவெள்ளத்தில் சவமாகக் கிடந்தாள், கழுத்தில் வெட்டுக்காயத்துடன்.

சட்டத்தின் கரத்திலிருந்து அவரால் தப்ப முடியவில்லை.



தப்புவதற்கு அவர் தகுதி படைத்தவருமல்ல. இளம் வயது முதல் என் அம்மாவை வறுமையிலும் தனிமையிலும் வாடவிட்டுச் செல்வதே அவருக்கு வாடிக்கையாக இருந்தது. ஊராரின் முன் தலை குனிந்தே வாழ்க்கை நடத்தப் பழக்கப்பட்டுவிட்டாள் அம்மா. கொலைக் குற்றத்துக்காக அவர் கைது செய்யப்பட்ட பிறகு எங்கள் நிலைமை மேலும் மோசமாகிவிட்டது. வழக்கு நடந்துகொண்டிருந்தபோதே, ஜாகையைக் காலி செய்யச் சொல்லிவிட்டார்கள் வீட்டுக்காரர்கள். கண்ணியமானவர்களின் மத்தியில் வாழ முடியாமல், ஊருக்கு வெளியே குடிசையில் ஒண்டினோம்.

ஏச்சுக்கும் பேச்சுக்கும் அவமானத்துக்கும் அவமதிப்புக்கும் நடுவே, என் தந்தை நிரபராதி என்று சொன்னவர் நம்பீசன். என் தந்தை தூக்கிலேற்றப்பட்ட பிறகும், ''கவலைப்படாதீர்கள். நான் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறேன்'' என்று எங்களுக்குக் கை கொடுத்தவரும் அவரே.

அவருடைய 'ஒட்டல் உமா' ஒரு பக்கம் வளர்ந்துகொண்டிருந்தது. என் கல்விக்கான உதவிகளைச் செய்து என்னையும் வளர்த்துக்கொண்டிருந்தார். என்னைப் பட்டதாரியாக்கினார். 'ஒட்டல் உமா'வின் மானேஜராக்கினார். நிலம் நோக்கித் தாழ்ந்திருந்த என் தலையை வானோக்கி நிமிர்த்தி வைத்தார்.

ஊரெல்லாம் தேரோட்டியின் மகன் என்று கர்ணனைப் பரிகசித்தபோது, துரியோதனன் மட்டும் 'நீ என் தோழன்' என்று தோள்மீது கை வைத்து ஆதரவு கொடுத்தானாமே, அப்போது கர்ணனுக்கு எப்படிப்பட்ட நிமிர்வு ஏற்பட்டது என்று படித்திருக்கிறேன், கேட்டிருக்கிறேன்.

நம்பீசன் என்னை மனிதனாக்கிய வரலாற்றை நினைத்துக்கொள்ளும்போது எல்லாம், அதே உணர்ச்சியை அனுபவபூர்வமாக உணர்கிறேன்.

டிங்ச்சரைத் தடவி, பஞ்சை மெத்தென வைத்துத் துணியைச் சுற்றியபடியே, ''கௌதமன், உன் அப்பாவுக்கு உடம்பு சரியில்லை'' என்றேன்.

''பழைய வலிப்புத்தானே?'' என்றான் அலட்சியமாக.

''சற்று முன்னால்தான் பார்த்துவிட்டு வருகிறேன். உன் பெயரைச் சொல்லிச் சொல்லிப் புலம்பிக்கொண்டிருந்தார் வாய் ஓயாமல்.'

''வாயில் இரண்டு சாக்லேட் போடு. நிறுத்தி விடுவார்.''

நான் பொறுமையைக் கை விடவில்லை. ''கௌதமன், நீ தற்செயலாக வந்தது மாதிரி இருக்கட்டும். திடீரென்று அப்பாவைப் பார்க்க வேண்டும்போல் தோன்றியதாகச் சொல்லிக்கொள்ளலாம். இப்போதே காரெடுத்துக் கொண்டு...''

''எடுத்துக்கொண்டு?'' காலை வெடுக்கென உதறிக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான் கௌதமன்.

''ஒரு நடை அப்பாவைப் பார்த்துவிட்டு வரலாம், வா.''

''நான்ஸென்ஸ்!'' அவன் எழுந்துகொண்டான். ''உண்மையைச் சொல்லு! நான் வந்திருக்கிறேன் என்று அவரிடம் சொல்லிவிட்டாயா?''

''இல்லை கௌதமன்! ஆனால்...''

''மூச்சு விடாதே! சுத்த நியூஸென்ஸ் உன் முதலாளி! பச்சைக் குழந்தையைத் தடவிக்கொடுக்கிற மாதிரி, 'என் பக்கத்திலேயே பத்துநாள் இரேன்' என்பார்...''

''கௌதமன்! அவர் உடம்பு நிலையை முன்னிட்டு நீ ஒரு வாரம் இங்கே இருக்கக்கூடாதா?'' என்று மன்றா டினேன்.



''கெட்டது குடி! வருகிற ஞாயிறு நான் ரிவைராவில் இருந்தாக வேண்டும். ஃப்ரெ[illegible]களுக்கு வாக்களித்திருக்கிறேன் தெரியுமா? நாளை பிளேன் ஏறியாக வேண்டும். என் ரஜனியின் நாட்டிய நிகழ்ச்சிக்கே நான் இருக்க முடியவில்லை என்கிறேன். கிழவனின் வலிப்புக்காக இருப்பதாம்! நான்ஸென்ஸ்!''

''கௌதமன்!''

''ஐ ஸே, கெட் அவுட்!'' என்று கத்தினான் கௌதமன். கிண்டலான குரல் மாறி, அவனுடைய மிருகத்தனமான இயல்பு வெளிப்பட்டது. ''வாயை மூடிக்கொண்டு மரியாதையாக வெளியேறு. இல்லாவிட்டால், எதெல்லாம் அந்தக் கிழவரிடம் சொல்ல வேண்டாமென்று ரொம்ப ஜாக்கிரதையாய் நீ மறைத்து வைத்திருக்கிறாயோ அதையெல்லாம் நானே இப்போதே போய் உடைத்துவிடுவேன்!''

நான் தலைகுனிந்தபடி வெளியேறினேன். தலைகுனிந்தபடியே நடந்தேன், என் அறையை நோக்கி.

ஓட்டலின் மூலைக்கு மூலை ஒளி வெள்ளம் பிரவகித்தது. வானத்தில் நட்சத்திரங்கள் பூத்துக் குலுங்கின. நீச்சல் குளத்தருகே, குறைந்த ஆடைகளும், நிறைந்த சிரிப்புக்களும், ஜிலீரென்ற நீர்த் திவலைகளும், ஈரமான அடிச்சுவடுகளும் என் கவனத்தைக் கவரவில்லை. கரையின் ஓரத்தில், சிமெட்டிப் பெஞ்சில், பாமரேனியன் நாய்க்குட்டியுடன் உட்கார்ந்திருந்த கிருத்திகாவைத்தான் என் கண்கள் கண்டன. தலையை மேலும் தாழ்த்திக்கொண்டு அவனைக் கடந்தேன்.

''மிஸ்டர் சேது!'' என்று மெதுவே அழைத்தாள்.

நின்றேன்.

''ரொம்ப அடியா?'' என்றாள் கிருத்திகா.

சிமெட்டிப் பெஞ்சியின் ஓரத்தில் உட்கார்ந்தேன். இத்தனை நாட்களாகத் தென்படாத ஒரு பரிவை இன்று அவன் குரலில் கேட்டேன். "உள்ளத்தில் விழுந்ததைச் சொல்கிறாயா, உடலில் பட்டதைச் சொல்கிறாயா?"

"இரண்டும் நீங்களாக வரவழைத்துக் கொண்டதுதான். நான் சொன்னேன், நீங்கள் கேட்கவில்லை. கௌதமன்—"

"அவன் யாரென்று உனக்குத் தெரியுமா, கிருத்திகா?"

"நன்றாய்த் தெரியும். அதெல்லாம் வெகுதூரம் வளர்ந்துவிட்டது. நீங்கள் தடுக்க நினைப்பது முட்டாள் தனம். அதனால்தான் கடுமையாக உங்களிடம் எச்சரித் தேன். உங்களைப்பற்றி அவர்களிருவரும் பரிகாசமாகப் பேசிக்கொண்டார்கள் சாயந்தரம். மனசுக்குக் கஷ்டமாயிருந்தது." என்றாள் கிருத்திகா.

அப்போது அவன் மடியிலிருந்து 'ஜீ' என்னிடம் தாவியது. "ஊஹூம்" என்று செல்லமாய் அதட்டிய கிருத்திகா, அதைத் தன்னிடம் எடுத்துக்கொள்ளக் கை நீட்டினாள். "இருக்கட்டும்" என்று நான் தடுத்தேன்.

'ஜீ'யைப் பிடித்திருக்கும் சாக்கில் எங்கள் கைகள் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டிருந்தன. என் அவமானம், என் பிரச்னை, என் தோல்வி, என் கவலை அனைத்தையும் நான் மறக்குமளவுக்கு அவன் கரத்தின் வெல்வெட்டான ஸ்பரிசத்தில் நான் நினைவிழந்து போனேன். காலம் என்கிற இரக்கமற்ற அரக்கன், அந்த உணர்ச்சி மயமான வினாடியை அப்புறப்படுத்திவிடாமல் அப்படியே விட்டு வைக்கமாட்டானா என்று என் உள்ளம் கெஞ்சியது.

# 8

கிருத்திகாவின் விரல்களை ஒவ்வொன்றாய்த் தொட்டு வருடிக்கொண்டிருந்தன என் விரல்கள்.

தென்றலில் மிதப்பதுபோலவும், பூம்புனலில் அமிழ்வது போலவும் என் தேகம் பரவசப்பட்டுக்கொண்டிருந்த அந்த வேளையிலும் நான் ஜாக்கிரதையை இழக்கவில்லை. அன்றொரு நாள் மாடித் தோட்டத்தில் இதேபோல் மனம் நெகிழ்வுற்றிருந்த சந்தர்ப்பம் எனக்கு நினைவு வந்தது. அவசரப்பட்டு, கௌதமனையும் ரஜனியையும் பற்றிப் பேச்செடுத்ததால் அந்த வாய்ப்பைக் கெடுத்துக்கொண்டோம் என்பதை எனக்கு நானே ஞாபகப்படுத்திக் கொண்டேன்.

நீச்சல் குளத்திலிருந்த கூட்டம் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டிருந்தது. ஏழு மணிக்கு மேல் அந்தப் பகுதியிலுள்ள விளக்குகளைக் குறைத்துவிடலாமென்று நான் கட்டளை போட்டிருந்தேன். ஒவ்வொன்றாக அணைந்துகொண்டிருந்தன. குளிர்ந்த காற்று மெல்லிய சிலுசிலுப்பைத் தெளித்துக்கொண்டே போயிற்று.

கிருத்திகா மெதுவாய்த் தன் கரங்களை விடுவித்துக் கொண்டாள். அது நான் எதிர்பார்த்ததுதான். ஆனால் அடுத்தாற்போல் அவள் கேட்ட கேள்வியை நான் எதிர் பார்க்கவில்லை.

"பைரனின் கவிதைகளைப் படித்திருக்கிறீர்களா நீங்கள்?" என்றாள் கிருத்திகா.

தூக்கிவாரிப் போட்டது. ''நான் ஒரு இட்டிலி சாம்பார்,'' என்றேன் சிரித்துக்கொண்டே.

''நானும் ஒன்றும் சரோஜினிதேவி இல்லை.'' என்றாள் கிருத்திகா. ''ஜெனிவா ஏரியின் தெற்குக் கரையில் ஷில்லான் கோட்டை என்ற புராதனமான மாளிகை இருக்கிறது. பைரன் அந்தக் கோட்டையைப் பற்றி அருமையான கவிதை எழுதியிருக்கிறார். அங்கேதான் அவர்கள் சந்தித்தார்கள்...''

''எவர்கள்?''

''கௌதமனைச் சொல்கிறேன்—கௌதமனும் ரஜனியும் சந்தித்தது அந்த ரொமான்டிக் சூழ்நிலையில்தான்—ஷில்லான் கோட்டையில்'' என்று கிருத்திகா சொல்லிக்கொண்டே போனாள். நான் மறந்திருந்த விஷயத்தைத்தான் அவள் இந்நேரம் வரை நினைவு வைத்துக்கொண்டிருக்கிறாள் என்று கண்டுகொண்டேன். ஏமாற்றமாயிருந்தது. சோகத்தின் சூடேறிய கண்ணீர்த்துளிகள் என் நெஞ்சுக்குள் விழுந்துகொண்டிருந்தன. கிருத்திகா! என்னை ராமப்பிரம்மம் பரிகாசம் பண்ணுவார்—மரக்கட்டை என்று. நான் மாறி வருகிறேன் உன்னைப் பார்த்த நாள் முதல். ஆனால் நீ என்னைக்காட்டிலும் மோசமான மரக்கட்டையா, என்ன?

இல்லை. கிருத்திகாவின் உள்ளம் வேறோர் நிகழ்ச்சியில் மூழ்கியிருந்தது; வேறோர் இடத்தை, வேறோர் சூழ்நிலையை நினைவுக்குக் கொண்டுவர அவள் முயன்றுகொண்டிருந்தாள். அவளுடைய அழகிய நீண்ட நயனங்கள் அரை மூடியிருந்தன. சிவந்த அதரங்களைக் கொஞ்சம் கொஞ்சமே திறந்து மூடிக்கொண்டிருந்தாள்:

''இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு ஜூன் மாதம். கான்டிநென்டில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்தோம். பாரிஸில் ஒரு கலை நிகழ்ச்சி முடிந்திருந்தது. ஸ்விட்ஜர்லந்



திலிருந்து வந்திருந்த சிலர் ரஜனியைத் தங்கள் தேசத்துக்கு அழைத்தார்கள். அதற்குப் புரோகிராமில் இடம் போட்டு கொள்ளவில்லை. பரவாயில்லை என்று அவசரமாக ஒரு நாள் அங்கே செல்ல ஒப்புக்கொண்டோம். ரொமான்டிக் சூழ்நிலையாக இருக்கட்டும் என்று நினைத்தார்கள் போலிருக்கிறது. பர்னிலோ ஜெனிவாவிலோ நடன நிகழ்ச்சியை அமைக்காமல், அந்த ஷில்லான் கோட்டையில் வைத்திருந்தார்கள். இதேபோல் திறந்த வெளி...''

நான் அவளுடைய தந்தச் சிற்பமான முகத்திலே கணத்துக்குக் கணம் நிகழும் மோகனமான மாறுதல்களையும், பாவங்களையும் பார்த்துப் பிரமித்துப் போனவனாக அசைவற்று இருந்தேன். கிருத்திகாவுக்குள்ளே இப்படியொரு கவியுள்ளமும் இருக்கக்கூடுமா? என்னால் நம்பமுடியாத அதிசயமாக இருந்தது.

திடீரென என் எதிரில் யாரோ வந்து நின்றார்கள். நுரைப் பூக்களாலான என் கனவு மண்டபம் கலைந்தது. ஸேவரிமாஸ்டர்தான் தலையைச் சொறிந்துகொண்டு நின்றார். ''சார்கிட்டே ஒரு சமாசாரம் பேசணுமென்று.''

''என்ன?''

''அந்த மேஸ்திரி இருக்கிறானே அவன் வர வர...''

''சரி சரி. விசாரிக்கிறேன்'' என்று நான் பொறுமையில்லாதவனாகச் சொன்னதும், அவர் திகைப்புடன் என்னையும் கிருத்திகாவையும் பார்த்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

நீச்சல் குளத்திலிருந்து டொமாலென்று சத்தம் வந்தது. 'டைவிங்' தெரியாத யாரோ ஒரு கற்றுக்குட்டி, கை கால்களை மடக்கிக்கொண்டு பிள்ளையார்போல் குதித்ததே காரணம்.

தூக்கிவாரிப் போட்டது. ''நான் ஒரு இட்லி சாம்பார்,'' என்றேன் சிரித்துக்கொண்டே.

''நானும் ஒன்றும் சரோஜினிதேவி இல்லை.'' என்றாள் கிருத்திகா. ''ஜெனிவா ஏரியின் தெற்குக் கரையில் ஷில்லான் கோட்டை என்ற புராதனமான மாளிகை இருக்கிறது. பைரன் அந்தக் கோட்டையைப் பற்றி அருமையான கவிதை எழுதியிருக்கிறார். அங்கேதான் அவர்கள் சந்தித்தார்கள்...''

''எவர்கள்?''

''கௌதமனைச் சொல்கிறேன்—கௌதமனும் ரஜனியும் சந்தித்தது அந்த ரொமான்டிக் சூழ்நிலையில்தான்—ஷில்லான் கோட்டையில்'' என்று கிருத்திகா சொல்லிக்கொண்டே போனாள். நான் மறந்திருந்த விஷயத்தைத்தான் அவள் இந்நேரம் வரை நினைவு வைத்துக்கொண்டிருக்கிறாள் என்று கண்டுகொண்டேன். ஏமாற்றமாயிருந்தது. சோகத்தின் சூடேறிய கண்ணீர்த்துளிகள் என் நெஞ்சுக்குள் விழுந்துகொண்டிருந்தன. கிருத்திகா! என்னை ராமப்பிரம்மம் பரிகாசம் பண்ணுவார்—மரக்கட்டை என்று. நான் மாறி வருகிறேன் உன்னைப் பார்த்த நாள் முதல். ஆனால் நீ என்னைக்காட்டிலும் மோசமான மரக்கட்டையா, என்ன?

இல்லை. கிருத்திகாவின் உள்ளம் வேறோர் நிகழ்ச்சியில் மூழ்கியிருந்தது; வேறோர் இடத்தை, வேறோர் சூழ்நிலையை நினைவுக்குக் கொண்டுவர அவள் முயன்றுகொண்டிருந்தாள். அவளுடைய அழகிய நீண்ட நயனங்கள் அரை மூடியிருந்தன. சிவந்த அதரங்களைக் கொஞ்சம் கொஞ்சமே திறந்து மூடிக்கொண்டிருந்தாள்:

''இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு ஜூன் மாதம். காண்டினென்டில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்தோம். பாரிஸில் ஒரு கலை நிகழ்ச்சி முடிந்திருந்தது. ஸ்விட்ஜர்லந்



திலிருந்து வந்திருந்த சிலர் ரஜனியைத் தங்கள் தேசத்துக்கு அழைத்தார்கள். அதற்குப் புரோகிராமில் இடம் போட்டுக் கொள்ளவில்லை. பரவாயில்லை என்று அவசரமாக ஒரு நாள் அங்கே செல்ல ஒப்புக்கொண்டோம். ரொமான்டிக் சூழ்நிலையாக இருக்கட்டும் என்று நினைத்தார்கள் போலிருக்கிறது. பர்னிலோ ஜெனிவாவிலோ நடன நிகழ்ச்சியை அமைக்காமல், அந்த ஷில்லான் கோட்டையில் வைத்திருந்தார்கள். இதேபோல் திறந்த வெளி...''

நான் அவளுடைய தந்தச் சிற்பமான முகத்திலே கணத்துக்குக் கணம் நிகழும் மோகனமான மாறுதல்களையும், பாவங்களையும் பார்த்துப் பிரமித்துப் போனவனாக அசைவற்று இருந்தேன். கிருத்திகாவுக்குள்ளே இப்படியொரு கவியுள்ளமும் இருக்கக்கூடுமா? என்னால் நம்பமுடியாத அதிசயமாக இருந்தது.

திடீரென என் எதிரில் யாரோ வந்து நின்றார்கள். நுரைப் பூக்களாலான என் கனவு மண்டபம் கலைந்தது. ஸேவரிமாஸ்டர்தான் தலையைச் சொறிந்துகொண்டு நின்றார். ''சார்கிட்டே ஒரு சமாசாரம் பேசணுமென்று.''

''என்ன?''

''அந்த மேஸ்திரி இருக்கிறானே அவன் வர வர...''

''சரி சரி. விசாரிக்கிறேன்'' என்று நான் பொறுமையில்லாதவனாகச் சொன்னதும், அவர் திகைப்புடன் என்னையும் கிருத்திகாவையும் பார்த்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

நீச்சல் குளத்திலிருந்து டொமாலென்று சத்தம் வந்தது. 'டைவிங்' தெரியாத யாரோ ஒரு கற்றுக்குட்டி, கை கால்களை மடக்கிக்கொண்டு பிள்ளையார்போல் குதித்ததே காரணம்.

நீர்த்திவலைகள் கிருத்திகாவின் வதனத்தில் தெறித்தன. லஜ்ஜையுடன் அவள் தடுத்தபோதிலும் நான் கைக்குட்டையினால் அவள் முகத்தைத் துடைத்தேன். ''அப்புறம்?'' என்று கேட்டேன்.

என் மடியிலிருந்த 'ஜீ' கிருத்திகாவிடம் தாவியது. அதன் புதருடம்பை மெல்லக் கைகளால் துழாவியபடி கிருத்திகா சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். பிறகு: ''அதற்கப்புறம் சொல்வதற்கு அதிகமில்லை. ஷில்லான் கோட்டையில் அன்று இரவு நடைபெற்ற ரஜனியின் நடனத்துக்கு, ஸெலெக்டாக ஐம்பது அறுபது பேர்கள்தான் வந்திருந்தார்கள். அவர்களிலும் பதினைந்து பேர்கள்தான் இந்தியர்கள். கௌதமனும் ஒருவர். எல்லோரும் ரஜனியின் நாட்டியத்தைப் பாராட்டிவிட்டுப் புறப்பட்டுப்போனார்கள். கௌதமன் போகவில்லை. மற்ற ஐரோப்பிய நகரங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குக்கூடத் தவறாமல் வந்துகொண்டிருந்தார். இந்தியாவுக்கு நாங்கள் திரும்பிய பிறகுகூட நாலு மாதம் ஆறு மாதத்துக்கொருமுறை பம்பாய்க்கு வந்துபோக ஆரம்பித்தார்...''

''ஆனால் பத்து நாட்களுக்கொரு கடிதம் அவனுடைய ஃபாரின் அட்ரஸிலிருந்து வந்துகொண்டிருக்கிறதே?'' என்று குறுக்கிட்டேன்.

கிருத்திகா புன்னகை செய்தாள். ''அந்த மாதிரி சில்லறைக் குறும்புகளில் மிகவும் தேர்ந்தவர் அவர்! இங்கிருந்து கடிதம் எழுதிப் போட்டு, அதை வெளிநாட்டிலிருந்து வரும்படி செய்வார். நண்பர்கள் இருக்கிறார்கள் அவைகளைப் போஸ்ட் செய்ய!''

நம்பீசனை நினைத்துப் பெருமூச்சு விட்டேன் நான். கைப்பட மகன் எடுத்து ஒட்டினான் என்று நினைத்து, அந்தத் தபால் தலைகளைக்கூட ஆசையுடன் எடுத்து வைத்துக்கொள்கிறார் அந்தப் பரிதாபகரமான தந்தை! எனக்கு வாயில் கசந்தது.



கிருத்திகா சொன்னாள்: ''நான் ஒரு கேள்வி கேட்கிறேன். கோபப்படாமல் பதில் சொல்லுங்கள்.''

''என்ன?''

''கௌதமனின் காதல் ஆழமானது, வலுவானது. அசைக்க முடியாதது. அதைக் குலைக்க வேண்டுமென்று நீங்கள் ஏன் இத்தனை பாடுபடுகிறீர்கள்?''

திடுக்கிட்டுப் போனேன் நான். எப்படி இதற்குப் பதிலளிப்பது? ஒன்று, இதற்குப் பதிலே கிடையாது. அல்லது பக்கம் பக்கமாகப் பதில் உண்டு.

என் தடுமாற்றத்தைப் புரிந்துகொண்ட கிருத்திகா மேலும் சொன்னாள்: ''ரஜனியிடம் என்ன குறை கண்டீர்கள்?''

''எஜமானியல்லவா? விசுவாசம் உன் கண்ணை மறைக்கிறது'' என்றேன்.

''இல்லை, உண்மையாகத்தான் கேட்கிறேன். இன்று இந்தியாவின் தலைசிறந்த ஆறேழு நாட்டியக்காரிகளில் ஒருத்தியாக ரஜனி இருக்கிறாள். அதை நீங்கள் மறுக்க முடியாது. மணிப்புரியில் அவளுக்கு மிஞ்சிய ஒருத்தி கிடையவும் கிடையாது. மணிபுரி நடனத்தின் உண்மையான ஆன்மா எது என்று அறிந்துகொள்வதற்காக, கிராமம் கிராமமாகப் போய்க் கற்றுக்கொண்டவளாக்கும் அவள்! ரகசியங்களை அறிந்துகொள்வதற்காக அன்னியர்கள் வந்தால் குழி தோண்டிப் புதைத்து விடுவார்கள் அந்த மலைஜாதி மக்கள். அவர்களுக்கு நடுவே போய், படாதபாடு பட்டுக் கற்றுக்கொண்டாள்...''

நான் கிருத்திகாவின் கண்களையே பார்த்தவாறிருந்தேன். அவள் பேச்சு அவளுடைய இருதய அந்தரங்கத்திலிருந்து வருகிறதென்பதில் எனக்குச் சந்தேகமிருக்கவில்லை.

எஜமான விசுவாசத்துக்கும் மேம்பட்டதான ஒரு மன நிலை அவளுடையது. அது ஒரு பக்தி. அது ஒரு மோகம். அது ஒரு காதல்.

அவளுடைய முகத்தில் குழந்தைத்தனமான பெருமை பளபளத்ததைப் பார்த்தபோது என்ன பதில் பேசுவது என்று எனக்குப் புரியவில்லை. ''இவ்வளவையும் நீ எதற்காகச் சொல்கிறாய்?'' என்று கேட்டேன்.

''உங்கள் முதலாளியின் மகன் ஏதோ ரொம்ப இழிவான இடத்தில் தொடர்பு வைத்துக்கொண்டுவிட்டதாக ண்ண வேண்டாம் என்பதற்காகத்தான் சொல்கிறேன். ரஜனியைப் போன்ற ஒரு கலையரசியின் காதல் அவ்வளவு சுலபமாகக் கிடைத்துவிடக் கூடியதல்ல.''

என்னையறியாமலே புன்னகை செய்துவிட்டேன். ''கிருத்திகா'' என்று மெல்லச் சொல்லி, அவளுடைய பூங்கரங்களிலொன்றைப் பிடித்தேன். ''இதோ இந்த வளையலை அழகில்லாதது என்று எந்த முட்டாளாவது சொல்வானா? ஆனால் அதை நான் என் கையில் போட்டுக்கொண்டேனானால் நன்றாயிருக்கிறது என்று எந்தப் புத்திசாலியாவது சொல்வானா? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் இடம் இருக்கிறது. அங்கே இருந்தால்தான் பொருத்தம், அழகு எல்லாம். ரஜனிக்காக அவள் பெற்றோர் ஏற்படுத்தி வைத்திருக்கிற வாழ்க்கை ஒரு வகை; கௌதமனுக்கு அவன் பெற்றோர் ஏற்படுத்தியுள்ள வாழ்க்கை வேறோர் முறை. இரண்டும் சம்பந்தமில்லாதவை. அது கலை. இது காசு. அங்கே இருதயத்துக்கு வேலை, இங்கே அறிவுக்கு வேலை. உள்ளத்துக்கு நிறைவு தர அது. வயிற்றுக்கு நிறைவு தர இது. உலகத்தில் இரண்டிற்குமே தேவை இருக்கிறது. இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து இரண்டும் உருப்படி இல்லாமற் போவானேன்? இந்தக் காதல் கௌதமனுக்கும் கெடுதல், ரஜனிக்கும் கெடுதல். கௌதமனைப்பற்றி அவன் அப்பா



பெரும் பெரும் கனவுகள் கண்டுகொண்டிருக்கிறார். அது கலையக்கூடாது. கிருத்திகா, நீ அந்த விஷயத்தில் எனக்குத் துணை செய்ய வேண்டும்'' என்றேன்.

''எனக்கு நேரமாகிறது.'' ஜீயை அள்ளியெடுத்துத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு புறப்பட்டாள் கிருத்திகா. ''கௌதமன் ஒன்றும் கெட்டுவிடமாட்டார். கவலைப்படாதீர்கள்.''

''இரு கிருத்திகா'' என்று அவளை வழிமறித்தேன். ''கௌதமன் கெடுவானோ, மாட்டானோ, இந்த ஸ்தாபனம் கெடும். 'ஓட்டல் உமா' என்ற முதல்தரமான நிறுவனம் நம்பீசனுக்குப் பிறகு இல்லாது போய்விடும். மணிப்புரியைக் கற்க உன் எஜமானி படாத பாடுபட்டாள் என்று நீ சொன்னாய். இந்த 'ஓட்டல் உமா'வைக் கட்டி வளர்க்க என் எஜமானர் என்ன பாடுபட்டார் என்று உனக்குத் தெரியுமா? இந்தக் கட்டிடத்தின் ஒவ்வொரு கல்லும் அவருடைய உழைப்பைச் சொல்லும். தரையின் ஒவ்வொரு மணலும் அவருடைய மன உறுதியைக் கூறும். அந்த நீச்சல் குளத்தின் ஒவ்வொரு நீர்த்துளியும், நம்பீசன் சிந்திய வியர்வை வெள்ளத்தைப் பறைசாற்றும்.''

''ஆமாம் நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றாள் கிருத்திகா.

''மூன்று வருடத்துக்கு முன்னால் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். அதை மட்டும் கேட்டுவிட்டுப் போய்விடு. ஒரு ஸர்வர், சற்று அதிகப்பிரசங்கித்தனமாக வாயாடிவிட்டான். நான் பதிலுக்கு வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டேன். அவ்வளவுதான். மொத்தம் முன்னூற்றெழுபத்தைந்து சிப்பந்திகளும் மறுநாள் காலையிலிருந்து வேலைக்கு வரப்போவதில்லை என்று சொல்லிவிட்டார்கள். நம்பீசன் பதறினார். நான், 'தகுந்தபடி நோட்டீஸ் கொடுக்காமல் அவர்கள்பாட்டுக்கு வேலை நிறுத்தம் செய்ய

முடியாது. அது செல்லாது; கவலைப்படாதீர்கள்' என்று சட்டம் பேசினேன். 'போடா முட்டாள்' என்று என்னை ஒதுக்கிவிட்டு அன்றிரவே அந்த முன்னூற்றெழுபத்தைந்து தொழிலாளிகளையும் தனித்தனியே ஒவ்வொருவர் வீட்டுக்கும் நேரில் போய்ப் பார்த்து, மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். ஒரு கிளீனர் பையன், ஒரு ஆபீஸ் பாயைக்கூட விடவில்லை. சந்து பொந்து, குடிசை, குப்பம் என்று பார்க்காமல் விடிய விடிய அலைந்து, மறுநாள் காலை 'ஓட்டல் உமா' வழக்கம்போல் நடைபெறும்படி பண்ணிவிட்டார். 'கண்ணீராலும் செந்நீராலும்' என்று அலங்காரமாகச் சொல்வார்களே, அப்படி நிஜமாகவே கட்டி வளர்த்த ஸ்தாபனம் இது, கிருத்திகா. தன் பிள்ளை தன்னைக் காட்டிலும் மேன்மையாக இதை வளர்க்கப்போவதாகத்தான் அவர் நம்பிக்கொண்டிருக்கிறாரே தவிர, ஒரு மணிப்புரி நாட்டியக்காரிக்குப் பின்னணிப் பாடகனாக அவன் போய்விடுவான் என்று சொப்பனத்திலும் எதிர்பார்க்கவில்லை. அப்படி நேரிட இந்த உடம்பிலே உயிருள்ள வரையில் நானும் விடமாட்டேன்.'' என்று சொல்லிவிட்டு லிஃப்டை நோக்கி நடந்தேன்.

இரவு குளிர்ச்சியாக இருந்தது. என் உள்ளத்தினுள்தான் வெப்பம். கிருத்திகாவிடம் எப்படியெப்படியோ நெருக்கம் ஏற்படப்போகிறது என்று சில நிமிடங்களுக்கு முன்பு எண்ணியிருந்த ஆவலான எதிர்பார்ப்பு, இப்போது ஜீவன் ஒடுங்கிக்கொண்டிருந்தது.

அவ்வளவு நேரத்துக்குமேல் சாப்பாடு பிடிக்கவில்லை. பையனிடம் சொல்லி மோர் வரவழைத்து அருந்திவிட்டு, மாலைப் பேப்பரைப் பிரித்துக்கொண்டு கட்டிலில் சாய்ந்தேன். முழுப் பக்க சினிமா விளம்பரத்தில் எவளோ ஒருத்தியின் சிரித்த முகத்தைத்தான் வெளியிட்டிருந்தார்கள். என்றாலும் அங்கு கிருத்திகாவின் சிரித்த முகத்தைத்தான் நான் கண்டேன். அவள் குரல், பேசும்போது அவள் உதடுகள்



அசையும் அழகு. அவள் கண்கள் உருண்டுகொண்டேயிருக்கும் வனப்பு—ஆகியவை திரும்பத் திரும்ப என் மனத்தில் வட்டமிட்டன.

ஆனாலும் கௌதமனின் வாழ்க்கை கெடாது என்று அவள் வாதாடியது எனக்குப் பிடிக்கவில்லை. நம்பீசனின் ஆசைகளை அவள் வெகு சாதாரணமாகக் கருதுகிறாள். அதை என்னால் மன்னிக்க முடியவில்லை. கிருத்திகா... உனக்கும் எனக்குமிடையே இந்த இரும்புத் திரையொன்று மட்டும் இல்லாதிருந்தால்...!

அரைத்தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டவன் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன் கட்டிலில்.

மேஸ்திரியைப்பற்றி ஸேவரி மாஸ்டர் ஏதோ புகார் கூற வந்ததும் 'சரி சரி.' என்று நான் அவரை விரட்டிவிட்டதும் ஞாபகம் வந்தது. என்னையே நான் அறைந்துகொள்ள வேண்டும்போல் கோபம் ஏற்பட்டது.

பிரமாதமாய்க் கிருத்திகாவிடம் அளந்தேனே—நம்பீசன் எப்படி இந்த 'ஓட்டல் உமா'வைக் கட்டி வளர்த்தார் என்று! அதைக் காப்பாற்ற வேண்டுமென்று வாய்ச்சவடால் அடித்தேனே நான் என்ன ஒழுங்கு! எந்தவகையில் நம்பீசனின் நம்பிக்கையைக் காப்பாற்றி வருகிறேன்! ஒரு சிப்பந்தி தன் குறையைச் சொல்ல வந்தபோது, ஒரு பெண்ணின் பேச்சல்லவா எனக்கு முக்கியமாக இருந்தது!

காலை எழுந்ததும் முதலில் அதைத்தான் விசாரித்தேன்.

ஸ்டோர்ஸ் அறையிலிருந்து அன்றாடம் தேவையான பண்டங்களைப் பெற்றுக்கொண்டு, சமையலறைக்கு சப்ளை செய்வதுதான் மேஸ்திரியின் வேலை. பொறுப்பானதுதான் என்றாலும், அழுக்குத் துண்டை மேலே போட்டுக்கொண்டு

சுற்றிக்கொண்டேயிருப்
அவன்பாட்டுக்கு எங்கேயாவது
பான். மேஸ்திரி கண்ணனைப்பற்றி எல்லோருக்குமே ஒரு
புகார்—சிறுபிள்ளைத்தனமாய்ச் சண்டை பிடிக்கிறான்
என்று.

சேவரி மாஸ்டரிடம் என்ன விஷயமென்று விசாரிப்
பதைக் காட்டிலும் கண்ணனையே மடக்கலாமென்று புறப்
பட்டேன். கட்டிடத்தின் பின்புறமிருந்த வாட்டர் டாங்கின்
இரும்பு ஏணியில், கீழ்ப்படியில் உட்கார்ந்து சிகரெட் புகைத்
துக்கொண்டிருந்தவன் என்னைக் கண்டதும் அதை எறிந்து
விட்டு எழுந்து நின்றான்.

"என்னப்பா கண்ணன், உன்னைப் பற்றி தினம் புகார்
வந்துகொண்டே இருக்கிறது?" என்று ஆரம்பித்து ஆங்கிலத்
தில் சொல்வதுபோல் என் 'மனத்தின் ஒரு விள்ள'லை
வழங்கினேன்.

மேஸ்திரி கண்ணனின் கண்களில் நீர் தளும்பியது. "மானேஜர் சார் ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி. ஓட்டல் உமாவுக்கு இளைத்தவன் இந்த மேஸ்திரி கண்ணன். ஆளுக்கு ஆள் மிரட்டினால் நான் என்னதான் பண்ணட்டும்? 'ஏண்டா கேட்டதையெல்லாம் கொண்டுவந்து தரலை' என்று பாண்ட்ரியிலே கத்தறாங்க. ஸ்டோர் கிளார்க்கிட்டே போனால் 'ஏண்டா ஸ்டாக் இல்லாததையெல்லாம் கேட்டு உயிரை எடுக்கறே'ன்னு சத்தம் போடறார். நான் யாருக்கென்று பயப்படட்டும்?"

"சரி, நீ போ. விசாரிக்கிறேன்.' என்று அவனை அனுப்பிவிட்டு, சற்று நேரம் நின்று சிந்தித்தேன்.

கண்ணனுக்குத் தாழ்வு மனப்பான்மை இருக்கிறது. அதனால்தான் எல்லாரிடமும் வார்த்தையாடுகிறான் என்று புரிந்தது.

"ராமப்பிரம்மத்தை வரச்சொல்லு" என்று ஒரு பையனிடம் சொல்லியனுப்பினேன்.



ஸ்டோர் அறையிலிருந்து பாண்ட்ரி என்ற சமைய கூடத்துக்குச் செல்லும் வழியில் எட்டுக்குப் பத்துப் பரப்பி ஒரு சிறு அறை இருந்தது. ஒரு காலி டிரம்மும் இரண்டு மூன்று துடைப்பங்களும் தவிர வேறு ஒன்றும் அங்கு இல்லை. அவைகளை அப்புறப்படுத்தச் சொன்னேன்.

ராமப்பிரம்மம் வரும்போதே, "என்ன ஆயிற்று நேற்று? அந்தப் பட்டவர்த்தன்..." என்று ஆரம்பித்தார்.

"அப்புறம் சொல்கிறேன். முதலில் இதைக் கவனியுங்கள். கார்ப்பெண்டரை வரவழைத்து இந்த அறையைச் சீர்படுத்தி, பெயிண்ட்டும் வெள்ளையும் அடிக்கச் சொல்லுங்கள். ஒரு நாற்காலியும் மேஜையும் கொண்டுவந்து போடச் சொல்லுங்கள். 'சரக்கு மேற்பார்வையாளர்' என்று பிளாஸ்டிக்கில் எழுத்துத் தயார் செய்து, நிலைப் படியின்மீது பொருத்தச் சொல்லுங்கள்" என்றேன்.

ராமப்பிரம்மம் திகைப்புடன், "யாருக்கு? மேஸ்திரிக்கா?" என்றார். "எந்த ஓட்டலிலும் மேஸ்திரிக்கு அந்தயாதிரி தனி அறை, மேஜை நாற்காலி என்றெல்லாம் கிடையாது சேது."

"நம் ஓட்டலில் இருக்கட்டும். அப்போதுதான் அவன் பதவிக்கு ஒரு முக்கியத்துவம் இருக்கும்—இருப்பதாகத் தெரியும். பிறகுதான் அவன் தன்னைத்தானே மதித்துக் கொள்வான். மற்றவர்களும் அவனை மதிப்பார்கள்.'

"உன் வைத்தியமே அலாதி" என்று சிரித்த ராமப் பிரம்மம், "போய்த் தங்கப்பதக்கம் வாங்கிக்கொள். நம்பீசன்கூட வந்திருக்கிறார்" என்றார்.

முதலாளியா!

எனக்குக் கோபம்தான் வந்தது. நேற்று மாலைகூட உடல்நிலை சரியில்லாதிருந்தவர், இன்று காலை ஓட்டலுக்கு வராவிட்டால் என்ன குடி முழுகிவிடும்?

சீக்கிரமாக அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட வேண்டும் என்ற உறுதியுடன் ஆபீஸ் அறைக்கு விரைந்தேன்.

அங்கே என் கால்கள் மரமாகி நின்றன.

ரிஸப்ஷனிஸ்டு தாசரதியின் அரைவட்டத்துக்குள் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார் நம்பீசன். முக்கியமான அலுவல் எதுவுமில்லாமல் உடனே வீடு திரும்புவதாக இருந்தால் அங்கேதான் அவர் உட்கார்ந்திருப்பது வழக்கம்.

வடக்கத்தி உடையும் குறுந்தாடியும் கொண்ட 'பட்டவர்த்தன்' அவருக்கு மிக அருகே நின்றிருந்தான்!

“செக்கிங் அவுட்” என்று சொல்லி, சாவியை விசிறிப் போட்டான் தாசரதியின் மேஜைமீது. ரூமைக் காலி செய்து கொண்டு புறப்படுகிறான் போலும். நோட்டுக் கற்றைகள் அவன் பர்ஸிலிருந்து வெளிப்பட்டன. ரெஜிஸ்டரில் கையெழுத்திட்டான்.

இவ்வளவையும் அவன் ஒரு கையாலேயே செய்தான். மறு கை மிஸ் ரஜனியின் இடையைச் சுற்றிக்கொண்டு இருந்தது. வெளியே ஒரு டாக்ஸியில் அவனுடைய லக்கேஜ்களை ஓட்டல் பையன் ஏற்றிக் கொண்டிருந்தான்.

“ரஜனி! மிஸ்டர் நம்பீசனுக்கு இன்விடேஷன் கொடுத்தாயா?” என்றான். 'பட்டவர்த்தன்—குரலை நல்லவேளையாகச் சிறிது மாற்றிக்கொண்டு.

“இதோ வைத்திருக்கிறேன்” என்ற ரஜனி, கைப்பையிலிருந்து ஓர் அழைப்பிதழை எடுத்து நம்பீசனிடம் தந்து, “மிஸ்டர் சேது உங்களுக்கு” என்று என்னிடமும் கொடுத்தாள்.

மறுநாள் மாலை, ரஜனியின் நாட்டிய நிகழ்ச்சி இருந்தது. அதற்குத்தான் அழைப்பு.

அவன் டாக்ஸியில் புறப்பட்டுவிட்டான். அப்போதுதான் கவனித்தேன்—தொலைவில் நிற்கும் கிருத்திகாவை.

அவள் முகத்தைச் சோகம் கப்பியிருந்தது. ஏன்? ஏன்!

# 9

கிருத்திகா சோகத்தில் ஆழ்ந்திருப்பது ஏன் என்று அதிக நேரம் நான் சிந்தித்துக்கொண்டிருக்கவில்லை.

“அந்த ஆள் யார், புதிதாயிருக்கிறான்?” என்று வினவினார் நம்பீசன், பார்வையிலிருந்து மறைந்துகொண்டிருக்கும் டாக்ஸியை 'பட்டவர்த்தனை' நோக்கியபடி.

துணுக்கென்றது. தெரிந்துகொண்டு ஆழம் பார்க்கிறாரா என்ன? “அந்த நாட்டியக்காரிக்குப் பழக்கமானவன் போலிருக்கிறது” என்று மழுப்பிவிட்டு, “மணிபுரி நடனம் நான் பார்த்ததேயில்லை” என்றேன் ரஜனியின் அழைப்பிதழை ஆராய்கிற பாவனையுடன்.

“நானும்தான். நாம் இருவருமாய்ப் போகலாம்” என்றார் நம்பீசன்.

ரிஸெப்ஷன் அறையில் பழக்கமான முகமொன்று தென்பட்டது. புலால் மறுப்போர் கழகத்தின் சென்னைக்கிளைத் தலைவரான ஜி.டி.எஸ். என்று கண்டுகொண்டேன். அவர்களுடைய மாநாடொன்று அடுத்த வாரம் நடைபெறவிருந்தது.

நான் அங்கே போனதும், கூடவிருந்த ஓர் ஐரோப்பியரை எனக்கு அறிமுகப்படுத்தினார் ஜி.டி.எஸ். “மீட் மிஸ்டர் டக்ளஸ், எங்கள் அமெரிக்க டெலிகேட்” என்றார்.

கை குலுக்கினேன்.

"பக்கா வெஜிடேரியன். ஆகவேதான் இங்கே அழைத்து வந்தேன். ஏர்கண்டிஷன் அறை வேண்டாம். உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது" என்றார் ஜி.டி.எஸ்.

"நல்லதாக வசதி செய்து தருகிறேன், வாருங்கள்" என்று அழைத்துச் சென்றேன்.

புலாலை மறுத்தவரானாலும் மதுவை விட்டவரல்ல மிஸ்டர் டக்ளஸ். தமது ட்ரிங்க் தேவைகளை என்னிடம் சொன்னார். தக்க அனுமதிகளை அதிகாரிகளிடம் பெற்று, விரும்பும் மதுவகைளை வாங்கித் தருவதாக வாக்களித்தேன்.

அது சம்பந்தமாக அன்றும் மறுநாளும் அலைந்துகொண்டிருந்ததால் ரஜனியின் நாட்டிய நிகழ்ச்சியைப்பற்றி மறந்தே போனேன். "என்ன, புறப்படலாமா?" என்று காரிலிருந்தவாறு நம்பீசன் கூப்பிட்டபோதுதான் ஞாபகம் வந்தது.

அலை ஓய்ந்த சமுத்திரத்தின் கரையில் நிற்பதுபோலிருந்தது, கைதட்டலின் ஒலி முடிவடைந்தபோது.

ராதையும் கண்ணனும் மேடையில் தோன்றினார்கள். ஜல் ஜல் என்று கரதாளத்தின் நாதம் இனிமையாகச் சப்தித்தது. பின்னணியில் ஒருத்தி பாடலைப் பாடத் தொடங்கினாள். அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு நிகழ்ச்சி நிரலில் தரப்பட்டிருந்தது. அதை ரசித்துக்கொண்டிருந்தேன்.

"ஆடுபவள் யார் தெரிகிறதா?" நம்பீசன் என் பக்கமாய்த் தலையைச் சாய்த்துக் கேட்டார்.

"ஏன்? ராதையாக ஆடுகிறவள்தான் ரஜனி—நம் ஓட்டலில் தங்கியிருப்பவள்," என்றேன்.

"ராதையின் தோழியைத் தெரிகிறதா என்று கேட்டேன்!" நம்பீசனின் உதட்டில் ஒரு சிரிப்பு விளையாடு



வதைக் கண்டு திகைத்தவனாக மீண்டும் மேடையைக் கவனித்தேன். தோழியாக ஆடுபவளைக் கூர்ந்து ஆராய்ந்தேன்.

"ஆ! அவள்..."

சிரித்தார் நம்பீசன். "ரூமைக் காலி செய் என்று விரட்டியடித்தாயே, அதே நூற்றெழாம் அறைக்காரி."

எனக்கு நன்றாய் அடையாளம் புரிந்தது. சம்பந்தமில்லாத ஏகப்பட்ட ஆடையணிகள் அவளை இப்போது மூடியிருந்தாலும், அன்று அரைகுறை உடையுடன் என்னோடு வாதாடிய அதே பெண்தான் என்று கண்டுகொண்டேன். ஒழுக்கக் குறைவான நடத்தையுள்ளவள் என்பதற்காக அறையைக் காலி செய்யச் சொன்னபோது எனக்கு லஞ்சம் கொடுத்துச் சரிக்கட்ட முயன்றாளே, அதே கேட்டிக்காரிதான்.

தோழி பாகத்துக்கு யாரையோ அனுப்புவதாகத் தில்லைநாயகம் சொன்னாரே, கடைசியில் இவளைத்தானா! கிருத்திகாவுக்கு உதவி செய்வதாக எண்ணிக்கொண்டு, இவளைப் போயா வரவழைத்தேன்!

எனக்கு இடது பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் சங்கீத நாடக அகாடமியின் நிர்வாகிகளில் ஒருவர். லேசாய் அறிமுகம் உண்டு. "ஹௌ ! இந்தப்பெண் ரஜனியாவது மணிபுரியைச் சாஸ்திரீயமாய் வைத்துக்கொள்ளக் கூடாதா?" என்றார் என்னிடம்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்றேன்.

"காலில் பாருங்கள், சலங்கை கட்டிக்கொண்டிருக்கிறாள்!" என்றார் அவர் தொடர்ந்து.

சலங்கை கட்டிக்கொள்வதில் என்ன தப்பு? சலங்கை இல்லாமல்கூட ஓர் இந்திய நாட்டியம் உண்டா? நான் குழப்பத்துடன் அவரைப் பார்த்தேன்.

மணிபுரிக்காரர்களும் இப்படித்தான். ''எல்லா மாடர்ன் மணிபுரிக்குச் சலங்கை கூடாது. ஆனால், சாஸ்திரீயமான மணிபுரிக்குச் சலங்கை கூடாது. வயலின் மாதிரி இசைக்கிறார்களே, அதன் பெயர் கொம்பா பேணா. அதன் இனிமையைக் கால் சலங்கை கெடுத்து விடும் என்று மணிபுரியை அப்படியொரு தூய்மையாய் வைத்துக் கொண்டிருந்தார்கள். தாகூர்தான் சாந்தி நிகேதனத்தில் மணிபுரியைப் பரப்புகிறேனென்று சொல்லி, ஜனரஞ்சகமாகப் பண்ணிக் கெடுத்துத் தொலைத்தார்...''

அவரது கலையறிவை அள்ளியெடுத்து வைத்துக் கொள்ள எனக்கு ஆர்வமும் இல்லை. பொறுமையும் இல்லை. மேடையிலே தோழியாகத் தோன்றிய என் பழைய எதிரியிடமே என பார்வை திரும்பத் திரும்பச் சென்றுகொண்டிருந்தது.

ஆரம்பத்திலேயே அவள் என்னைக் கவனித்திருப்பாள் போலும். என் பக்கம் திரும்பும்போதெல்லாம் திமிரான தொரு நகைப்பை வீசிக்கொண்டிருந்தாள். ''உன் ஓட்டலி லிருந்து விரட்டிவிட்டதால் என் வாழ்க்கை அஸ்தமித்து விடவில்லை. நன்றாய்தான் இருக்கிறேன், பார்த்துக் கொள்'' என்று கண்ணால் சேதி விட்டுக்கொண்டேயிருந் தாள் எனக்கு.

'பெண்ணே! உன் கலைவாழ்வு பற்றி எனக்கு அன்று தெரியவும் தெரியாது; அதை நான் எதிர்க்கவுமில்லை. 'ஓட்டல் உமா'வின் பெயரைக் கெடுக்காமல் நீ எங்கே எவ்வளவு சிறப்புப் பெற்றாலும் எனக்கு மகிழ்ச்சிதான்' என்றெல்லாம் பதில் சொல்லியனுப்ப வேண்டும்போல் எனக்கு ஆங்காரமாய் வந்தது. அதெப்படி முடியும்!

"கொஞ்சம் வெளியே போய் இருக்கிறேன்'' என்று நம்பீசனிடம் சொல்லிக்கொண்டு எழுந்தேன்.



"உனக்கு அலுப்பாயிருந்தால் ரூமுக்கு வேண்டு மானாலும் போய் இறங்கிக்கொண்டு காரை அனுப்பிவிடு. எனக்குப் பிடித்திருக்கிறது'' என்றார்.

சபா காம்பவுண்டுக்குள்ளேயே ஒரு கான்டீனும் வெற்றிலை பாக்குக் கடையும் உண்டு. அந்தக் கடையில் கொப்பறைத் துண்டுகள் விற்கப்படுவது வழக்கம். தேனில் தோய்த்தவை. வாய்க்கு மிக ருசியாக இருக்கும். 'ஓட்டல் உமா'வில் பங்க் கான்டிராக்ட் எடுத்திருக்கும் நாயரிடம் பல தடவை சொல்லியிருக்கிறேன். அதுபோல் தயாரித்து வைத்தால் பலபேர் வாங்குவார்களென்று. ''ஒருவாட்டி யாவது அதைக் கொண்டுவந்து காட்டுங்களேன்'' என்று நாயர் திருப்பிச் சொல்வார். இம்முறை ஞாபகமாக அதைச் செய்துவிட வேண்டியதுதான்.

அரை ரூபாய்க்குக் கொப்பறை வாங்கிக் கொண்டிருந்த போது, ரஜனியின் நாட்டிய நிகழ்ச்சிக்குத் துணை செய்யும் எடுபிடி ஆட்களில் இரண்டுபேர் பேசிக்கொண்டிருப்பது என் காதில் விழுந்தது.

''பூவுக்காக பைகிராப்ட்ஸ் ரோடு போய் வந்தேன். டாக்ஸிக்கு ரெண்டே ரூபாய்தான் கொடுத்தாங்க அந்த செகரட்டரி அம்மா. இரண்டே முக்கால் ஆகிவிட்டது'' என்றான் ஒருவன்.

''அது பெரிய பிசுனாறியாச்சே! ஒவ்வொரு பைசா வுக்கும் சண்டை போட்டுத்தான் பறிக்கணும். போய்க் கேளப்பா. உன் வீட்டு வேலையா செய்தே?'' என்றான் மற்றவன்.

''முக்கால் ரூபாயை வசூல் செய்யறதுக்காக ஓட்டலுக்கு அல்லவா போய் வரணும்? பஸ் செலவுதான் தண்டமாகும். தரமாட்டாங்க.''

''ஏன் டான்ஸுக்கு வரலையா அவங்க?''

''அந்தம்மா கிளம்பத்தான் கிளம்பினாங்க. 'உன் மூஞ்சியை அங்கே காட்ட வேணாம். இங்கேயே கிட'ன்னு இவங்க சொல்லிட்டு வந்திட்டாங்க...''

நான் கார் பார்க்கை நோக்கி நடந்தேன். சர்பத் தோய்த்த கொப்பறைத் துண்டங்கள், வேப்பங் கொட்டை களாக ருசித்தன. கிருத்திகாவைக் கருமியென்று யார் வேண்டுமானாலும் ஏசட்டும். எனக்கு உண்மை தெரியும். ஆகவே வருத்தமில்லை. ஆனால் ரஜனியின் இந்த நாட்டிய நிகழ்ச்சிக்காக மெய் வருந்தப் பாடுபட்டவளுக்கு அதைப் பார்த்துக் களிக்கும் உரிமைகூடக் கிடையாதா? ஆசையுடன் புறப்பட்டவளை அடைத்துவிட்டு வர எப்படித்தான் மனம் வந்ததோ ரஜனிக்கு!

என்னைப் பார்த்ததும் டிரைவர் காரை எடுத்து வந்தான். ஓட்டலில் இறங்கிக்கொண்டு நம்பீசனுக்காகக் காரைத் திருப்பியனுப்பினேன்.

காட்டேஜ் வரிசைகளை நோக்கியவாறு சிறிது நேரம் நின்றேன். ரஜனியின் காட்டேஜில் ஒரே ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. என்ன செய்துகொண்டிருப்பாள் கிருத்திகா? ஏமாற்றம் துணையிருக்க, படுக்கையில் புரண்டு கொண்டிருப்பாளா? அல்லது ரஜனியின் வரவை எதிர் நோக்கி, அவளுடைய குற்றேவல்களுக்காகக் கைகட்டிக் காத்துக் கொண்டிருப்பாளா?

என் கால்கள் அங்கேதான் சென்றன.

கனவில் நடக்கிறேனா என்ன? இல்லை நிஜமாகத்தான் என் காதில் விழுகிறதா?

ஆம். கிருத்திகாவின் குரல்தான் அது. தனக்குள் முணுமுணுக்கிற மாதிரி பாடிக்கொண்டிருந்தாள். அதன் மெட்டிலிருந்து, அதுவும் ஒரு மணிபுரி நாட்டியப் பாடல் தான் என்று தெரிந்துகொண்டேன்.



ஓசைப்படாமல் கதவைத் திறந்துகொண்டு எட்டிப் பார்த்தபோது என் ஆச்சரியம் மேலும் அதிகரித்தது.

பாடுவதோடு மட்டுமல்ல, ஆடிக்கொண்டும் இருந்தாள் கிருத்திகா!

ரஜனி விட்டுவிட்டுப் போயிருந்த மணிபுரி உடைகளில் ஒன்றை மேலோடு சுற்றிக்கொண்டும் இருந்தாள்!

ஒரு நிமிடம்தான் இருக்கும் நான் அவள் ஆடியதைப் பார்த்தது. ஆனால் அதற்குள்ளாகவே புரிந்துகொண்டு விட்டேன். இதுதான் மணிபுரியின் உண்மையான ஆன்மா என்பதை.

மணிபுரி என்ற நடன வகையில் எது தெய்விகமானதோ, எது மேன்மையானதோ அதைக் கிருத்திகாவின் பாவ பூர்வ மான அசைவுகளில் கண்டேன். சற்றுமுன் ரஜனியைக் குறை கூறிய சங்கீத நாடக அகாடமிக்காரர் இவளைப் பார்த்தால் ஒப்புக்கொள்வார்...

இவ்வளவு எண்ணியதும் ஒரு நிமிடத்துக்குள்ளாகத் தான். நிலைக்கண்ணாடியில் என் பிரதிபிம்பத்தைக் கண்டு விட்டாள் கிருத்திகா. சட்டென நிறுத்திவிட்டாள்.

''கிருத்திகா! நிறுத்தாதே! தயவுபண்ணி நிறுத்தாதே! ஆடு ஆடு!'' என்றேன்.

''சே, சே! நான் விளையாட்டுக்கு ஆடிக்கொண் டிருந்தேன்'' என்றவள், ''நீங்கள் கச்சேரிக்குப் போக வில்லை?'' என்று பேச்சை மாற்றினாள்.

''அங்கிருந்துதான் நேரே வருகிறேன்'' என்றேன். ''கிருத்திகா, குருவுக்கு மிஞ்சின சிஷ்யன் என்றுதான் சொல் வார்கள். ஆனால் எஜமானிக்கு மிஞ்சிய செகரட்டரிகளும் உண்டு என்று இன்றுதான் தெரிகிறது. எனக்காக, தயவு பண்ணி ஆடு.'' என்றேன்.

''ஊஹூம்.'' என்று திடமாக மறுத்துவிட்டாள் அவள்.

''சரி, நீ மானசீகமான திருப்திக்காக, உன் உள்ளமே கெஞ்சிக் கேட்டுக்கொண்டதற்காக ஆடிக்கொண்டிருந்தாய். ஆடியன்ஸுக்காக அல்ல. உன் மகிழ்ச்சியையும் மனநிறைவையும் கெடுப்பது பாவம். நான் போய்விடுகிறேன். நீ ஆடிக்கொண்டிரு.'' என்று தெரிவித்துவிட்டு வெளியேறினேன்.

வாசலை அடைந்த சமயம், ரஜனி காரிலிருந்து இறங்குவது தெரிந்தது. நடன நிகழ்ச்சி முடிந்துவிட்டது போலும். மேக்கப்பை ஓரளவு கலைத்துக்கொண்டு, சாதா உடையில் இருந்தாள். மற்றப் பொருள்களை எடுத்துக்கொண்டு வேலையாள் பிஜு பின்னால் வருகிறான் போலிருக்கிறது.

அவளை நோக்கிச் செல்லவிருந்தவன் சட்டெனக் கட்டுப்படுத்திக்கொண்டேன். இரவு வேளையில், ரஜனி இல்லாத சமயத்தில், கிருத்திகாவை நான் எதற்காகச் சந்தித்துவிட்டுச் செல்ல வேண்டும் என்று அவள் எண்ணக்கூடும். எனக்கு அதனால் ஒன்றுமில்லை. ஆனால் கிருத்திகாவை இவள் படுத்தும் கொடுமை அதிகரிக்கலாம்.

எனவே, காட்டேஜின் முன் வெராந்தாவில், இருளுக்கும் ஸ்கிரீனுக்கும் பின்னால் மறைந்துகொண்டேன். ரஜனி இந்த நிலையில் என்னைப் பார்ப்பாளானால், நான் எதை அஞ்சுகிறேனோ அது இன்னும் ஊர்ஜிதமல்லவா ஆகும் என்ற எண்ணமும் உதித்தது. இருந்தாலும் நான் வெளியேறவில்லை. ரஜனி உள்ளே போகட்டும் என்று காத்திருந்தேன்.

ரஜனி உள்ளே போனாள். ஒரு பூகம்பமும் வெடித்தது.

''கிருத்திகா! என்ன துணிச்சல் உனக்கு!''

''இல்லை... வந்து... சும்மாதான் இதை எடுத்து வைத்தேன்...'' என்று கிருத்திகா குழறுவது தெளிவாகக் கேட்டது.



''எடுத்து வைக்கிறவளா நீ? எடுத்து வைக்க வேண்டிய டிரஸ்ஸை இடுப்பில் சுற்றிக்கொள்வானேன்? நான் வரும்போது நீ ஆடிக்கொண்டிருக்கவில்லை?''

''ஆமாம்.'' கிருத்திகாவின் குரல் மேலும் இறங்கிவிட்டது.

''எவ்வளவு ஆயிரம் தரம் சொல்லியிருக்கிறேன் உனக்கு ஆடக்கூடாது என்று? இரு. உனக்கு—''

''வேண்டாம், வேண்டாம்! இனிமேல் ஆடமாட்டேன்!'' என்று அலறினாள் கிருத்திகா.

ரஜனி எதைக் காட்டி அப்படிப் பயமுறுத்துகிறாள் என்று எனக்குப் புரியவில்லை. கிருத்திகாவின் குரலில் அப்படியொரு பீதி ஒலிப்பானேன் என்றும் தெரியவில்லை. ஜன்னல்கள் மூடியிருந்ததால் பார்க்கவும் முடியவில்லை.

எதுவானாலும் ஓட்டலில் தங்கும் விருந்தாளியின் சொந்தச் சச்சரவு இது. எஜமானி தண்டிக்கிறாள். செகரட்டரி அதை வாங்கிக்கொள்கிறாள். நான் எப்படித் தலையிட முடியும்? தலையிட்டால், கிருத்திகாதான் என்னை ஆதரிக்கப் போகிறாளா? ஒருநாளும் இல்லை.

''எஜமானியோடு சண்டையாவது!'' என்று வாய்விட்டுச் சிரித்து நாலுபேர் எதிரில் என்னை முட்டாளடிக்கப் போகிறாள்.

இடிக்கும் மனச்சாட்சியை ஒடுக்கிக்கொண்டு நான் ஆபீஸ் அறையை நோக்கி நடந்தேன்.

ராமப்பிரம்மம், அமெரிக்க விருந்தாளி கேட்டிருந்த மது வகையை வாங்கி வைத்திருந்தார். மூடியைத் திறந்து முகர்ந்து பார்த்தேன். குடித்துப் பழக்கமில்லையென்றாலும், வாசனையைக் கொண்டு ஓரளவு தரத்தை அறியத் தெரிந்து வைத்திருந்தேன்.

அமெரிக்க விருந்தாளி கேட்டிருந்தது, 'லண்டன் ட்ரை' என்ற ஜின் என்று கண்டுகொண்டேன். அதையும் அவற்றுக்குரிய கிளாஸ் டம்ளர்களையும் தட்டில் எடுத்துவைத்தேன். அப்போதுதான், நேரம் அதிகமாகிவிட்டதென்பதையும் அங்கொரு பையன் இங்கொரு பையன்தான் தட்டுப்படுகிறான் என்பதையும் உணர்ந்தேன். நானே எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

நீச்சல் குளத்தினருகே யாரோ நின்றிருந்தார்கள். அண்மையில் போய்ப் பார்த்தேன்.

ரஜனி.

''ஹலோ!'' என்றாள் உற்சாகத்துடன். ''டான்ஸ் முடியும்வரை இருக்காமல் போய்விட்டாயே? ஹௌ டிட் யூ லைக் இட்?''

அவளுடைய குரலின் குளிர்ச்சி—கொலையைச் செய்த பின்னர்கூட, ரத்தக் கையைச் சாவகாசமாகக் கழுவிக் கொள்ளும் நிதானம்—எனக்கு ஆத்திரமூட்டியது. இந்த நிதானத்துடன், அங்கே காட்டேஜில் முடங்கிக் கிடக்கக் கூடிய கிருத்திகாவின் உருவத்தையும் கற்பனை செய்து கொண்டேன். என் ரத்தம் கொதித்தது.

''அருமையாயிருந்தது'' என்றேன் பல்லைக் கடித்துக் கொண்டு.

''தாங்க் யூ'' என்றாள் மேலும் தேனான குரலில். ''உடம்பின் களைப்புக்கு, ஜில்லென்ற இந்த நீரில் குளித்தால் சுறுசுறுவென்றிருக்கும். அதுதான் பார்க்கிறேன்.

''குளியுங்களேன்.''

''எனக்கு நீச்சல் தெரியாதே? ஆழம் எப்படியோ என்னவோ?''

''ஏன் ரப்பர் பெல்ட் இருக்கிறது. இடுப்பில் கட்டிக் கொண்டு குளிக்கலாமே? ஓர் ஆபத்தும் ஏற்படாது.''



''ஒரு பெல்ட் எடுத்துக் கொடுங்கள்.''

அந்த இரவு வேளையில், எங்கள் இருவரைத் தவிர வேறு யாரும் இருக்கவில்லை. காவல்காரனைக் காணோம். மதுவகைகளைக் கீழே வைத்துவிட்டு நீச்சல் குளத்தின் மறு கரையிலிருந்த சிறிய தகர ஷெட்டுக்குப் போய், பல பெல்ட்டுகளை எடுத்து ஆராய்ந்தேன். எனக்கு அவை களைப்பற்றி ஒன்றும் தெரியாது. பஞ்சரான பழுதான பெல்ட்கூட இருப்பதுண்டு. ஏதோவொன்றை எடுத்து வந்தேன்.

''இதைக் கட்டிக்கொண்டு இறங்குங்கள்'' என்று நானே அதை அவள் இடுப்பில் அணிவித்தேன்.

தயங்கியவாறு அவள் இறங்கினாள்.

''ரொம்ப சுகமாயிருக்கிறது.''

'இருக்கும்' என்று சொல்லிவிட்டு அமெரிக்க விருந்தாளி அறையை நோக்கி நடந்தேன்.

கிருத்திகாவுக்கு என்ன கொடூர தண்டனையையோ வழங்கிவிட்டு நீச்சல் குளத்தில் திளைத்து மகிழ்கிறாள் இந்த இரக்கமற்றவள்! என்ன அரக்கத்தனம்!

# 10

ரஜனியை நினைத்து ஒருகணம் குமுறினேன். ஆனால் கொள்ளியாய்க் காயும் வெய்யில் வேளையில் கொள்ளிடத்து மணற்பரப்பில் ஒரு பொட்டுக் கண்ணீரைச் சிந்துவதும் சரி; கிருத்திகாவின் பொருட்டு ரஜனியின் மனப் பாலையில் துளியேனும் ஈரம் சுரக்காதா என்று எதிர்பார்ப்பதும் சரி.

கிருத்திகாவின் விதிப்படியும் விருப்பப்படியும் என்னவோ ஆகட்டும் என்று விரக்தியுற்ற மனத்தினனாக மிஸ்டர் டக்ளஸின் அறையை அடைந்து, அவர் விரும்பிக் கேட்டிருந்த மது வகைகளைக் கொடுத்தேன்.

நீச்சல் குளத்திலிருந்து ரஜனி எழுந்துவிட்டாளா என்பதை, அந்த அரைகுறை வெளிச்சத்தில் அறிய முயன்ற போது, தூக்கி வாரிப் போட்டது எனக்கு.

என்னை நோக்கி ஓடிவந்துகொண்டிருந்தாள் கிருத்திகா

"சேது!" பின்புறம் திரும்பிப் பார்த்துக்கொண்டாள் என்னை நெருங்கியதும். "ரஜனி—குளத்தில்—சீக்கிரம் வாருங்கள்!"

"குளித்துக்கொண்டிருந்தாள். நான்தான் இருந்தேனே..."

"இல்லை... அவள் முழுகிக்கொண்டிருக்கிறாள்!"

"என்ன!" ஓடினேன் கிருத்திகாவின் கையையும் பிடித்து இழுத்துக்கொண்டே. "நான்தானே ஸ்விம்மிங் பெல்ட் எடுத்துத் தந்தேன்!"

"அதில்தான் ஏதோ கோளாறாக இருந்திருக்க வேண்டும். அவளுக்கு நீச்சல் தெரியாதே!"

இருவரும் குளக்கரையை அடைந்தோம். டைவ் செய்யும் இடத்தில்தான் ஆழம் அதிகம் இருக்கும். அந்த இடத்துக்கு நேர் எதிரில்தான் ரஜனி இறங்கியது. ஆனால் இப்போது ஆழமான பக்கத்தில் அவளுடைய தலை தெரிந்தது.

நாலே எட்டில் அவளை அடைந்து 'ரஜனி...' என்று கூவினேன்.

பலவீனமான பதில் வந்தது.



வெளிச்சம் போதாது அந்தப் பகுதியில். எனினும், அவளுடைய தலை ஒருபுறமாகச் சாய்ந்து இருப்பதையும் தண்ணீர் மட்டத்துக்குமேல் முழுவதும் தெரியவேண்டிய ரப்பர் பெல்ட்டில் ஒரு பகுதியே வெளித் தெரிவதையும் கண்டேன்.

கண்ணிமைக்கும் நேரம் என் உள்ளத்தில் ஓர் அசுரத் திருப்தி மொட்டிட்டது. தொலையட்டும் இந்த ரஜனி! ஒழியட்டும் இந்தக் கொடுமைக்காரி!

என் மனத்தை எப்போதும் அப்படியே படித்துவிடும் கிருத்திகா, இந்தச் சந்தர்ப்பத்திலும் கண்டுவிட்டாள். கழற்றிய சட்டையை உதறுகிறமாதிரி, உள்ளும் புறமுமா[illegible] என் நினைப்பை அறிந்து உரித்துவிட்டாள்.

"அந்த பெல்ட்டில் பஞ்சர் இருக்கிறது. சின்ன[illegible] சின்ன குமிழ்கள் வருவதைப் பாருங்கள்! சேது! நீங்கள் ஒரு கொலைகாரர்! வேண்டுமென்றே சதி செய்து அவளை முழுகச் செய்திருக்கிறீர்கள்!"

"சே என்ன மட்டமான கற்பனை கிருத்திகா உனக்கு!"

"பின்னே ஏன் ரஜனியைக் காப்பாற்ற முனையாமல் யோசிக்கிறீர்கள்! மாட்டீர்கள்! ரஜனியைக் காப்பாற்றும் பெரிய உள்ளம் உங்களிடம் கிடையாது! நானே அதைச் செய்கிறேன்! ரஜனி... பயப்படாதே! இதோ வருகிறேன்!"

குதிக்கவிருந்த கிருத்திகாவைச் சரேலெனக் கரையின் மீது தள்ளிவிட்டு, ஸ்வெட்டரைக் கழற்றி எறிந்தபின் குளத்தில் இறங்கினேன். நாலு கை போட்டு, ரஜனியை நெருங்கினேன்.

அந்தச் சில நிமிட நேரத்துக்குள் எனக்கு ஓர் உண்மை புலப்பட்டது. இவ்வளவு ஆபத்தான நிலைமை இருந்தும் கிருத்திகா சத்தம் போட்டுக் கூவவேயில்லை. உணர்ச்சி

வசப்பட்டுப் பேசினாலும், ஏறத்தாழக் கிசுகிசுப்பு மாதிரி தான் இருந்தது அவள் குரல். ஏன் அது? சமாளித்துவிடக் கூடிய ஒரு நெருக்கடியை, சத்தம் போட்டுப் பெரிது பண்ணி விடக்கூடாது, அதன்மூலம் ஓட்டலைப்பற்றிப் பரபரப்பான கெடுதலான பேச்சைக் கிளப்பிவிடக்கூடாது. கிருத்திகா! ஓட்டல் உமாவின் மானேஜர் என்ற முறையில் எது எனக்கு எடுத்த எடுப்பிலேயே உறைத்திருக்க வேண்டுமோ அது உனக்கல்லவா தோன்றியிருக்கிறது! எதனால் அப்படி? என் மீதுள்ள அபிமானமா? அல்லது பொதுவாகவே உன்னிட முள்ள நல்லியல்பினாலா?

ரஜனியை அடைந்தேன். அவள் அமிழ்ந்துகொண்டுதா னிருந்தாள். இன்னும் சில நிமிடங்களில் நீச்சல் குளத்தின் தரையைத் தொட்டிருப்பாள். 'ஆபத்து! உதவி! உதவி!' என்று கத்தவும் இயலாது, கண்கள் செருகி, உதட்டில் ஒரு விகாரமான மடிப்புடன் இருந்தாள். நீச்சல் பெல்ட் ஓட்டை யாகியிருந்தது உண்மைதான்.

ரஜனியை அணைத்தாற்போல் பிடித்துக்கொண்டு கரையை வந்தடைந்தேன்.

ரஜனியின் தலையைத் துவட்டிவிடுவதற்காகக் குனிந்த கிருத்திகா வெறுப்புடன் பேசினாள். "சேது! உங்கள் மனத்தில் இத்தனை கொடிய திட்டம் உதிக்குமென்று நான் நினைக்கவேயில்லை. நீங்கள் கொடுத்த பழுதான பெல்ட் டுடன் அவள் குளத்தில் இறங்கியதால்தானே தன் ஆபத்தை உணராமலே இருந்திருக்கிறாள்!"

அவசர அவசரமாய் எனக்குத் தெரிந்த முதல் சிகிச்சை களைச் செய்தேன்.

ரஜனி கண்ணைத் திறந்து மூடினாள். இனி அபாய மில்லை என்று தோன்றியது. அத்துடன், குளிர் மாதத்தின் நள்ளிரவு நேரத்தில், சொட்டச் சொட்ட ஈரமான உடை களுடன் திறந்த வெளியில் நிற்கும் வலிமை எனக்கில்லை.



"நகர்." ரஜனியை என் தோளில் சாய்த்துக்கொண்டு, காட்டேஜை அடைந்தேன். யாரோ செய்த புண்ணியம் என்னைக் கவசம்போல் காத்திருக்க வேண்டும். இல்லாவிட் டால் ஒருவர்கூடவா என் எதிரில் வராமலே இருந்திருப்பார் கள்? அந்தக் காட்சியைக் காணாதிருப்பார்கள்?

படுக்கை ஈரமாகிவிடக்கூடாதென்று ரஜனியைத் தரை யிலேயே கிடத்தினேன். "தாங்க்யூ" என்று கூறிவிட்டுப் புரண்டு படுத்தாள். அவளுடைய உடைகளை மாற்றத் தொடங்கினாள் கிருத்திகா. நானும் என் அறைக்கு விரைந்து, உலர்ந்த ஆடைகளைத் தரித்துக்கொண்டு மீண்டும் திரும்பினேன், ரஜனியின் காட்டேஜுக்கு.

கிருத்திகா, இப்போது ரஜனியைக் கட்டிலில் கிடத்தி யிருந்தாள், என்னைக் கண்டதும் வெளியே வந்தாள், கதவைச் சாத்திக்கொண்டு. "படபடப்பாகப் பேசி விட்டேன். நான் உங்களைப்பற்றி அப்படி நினைக்கிறவளே அல்ல" என்றாள்.

"ரொம்ப நன்றி" என்றேன். "ஓட்டலின் நல்ல பெயரைக் காப்பாற்ற வேண்டுமென்று, நீயும் மனசைக் கட்டுப்படுத்திக்கொண்டு, சத்தம் போட்டு ஆட்களைக் கூட்டாமல் இருந்தாயே, அதற்காக நன்றி சொல்லத்தான் வந்தேன்."

"எப்படி உங்களிடம் மன்னிப்புக் கேட்பதென்றே எனக்குத் தெரியவில்லை... இருங்கள் சூடாக ஏதாவது பானம் கொண்டுவருகிறேன்..." என்று உட்புறம் சென்றாள் கிருத்திகா.

மறுக்கத் தோன்றாமல் அவளையே பார்த்துக்கொண் டிருந்தேன். ஹீட்டரை அவள் போடுவதையும், பாலையும் மாவையும் எடுப்பதற்காகக் குறுக்கும் நெடுக்கும் அவள் செல்வதையும் என் கண்கள் கண்டவாறிருந்தன.

திடுக்கிட்டேன்.

வேகத்துடன் எழுந்து அவளை அடைந்தேன். "கிருத்திகா! உன் காலில் என்ன? ஏன் விந்தி விந்தி நடக்கிறாய்?"

அவள் பதில் தரவில்லை. என்னை மறந்த நிலையில் அவளுடைய புடவையின் ஓரத்தை விலக்கி, பாதத்தைப் பார்த்தேன்.

செக்கச் சிவந்த புண் தெரிந்தது! அந்த முன்னிரவு நிகழ்ச்சி!

'இரு, உன்னை' என்று ரஜனி சீறியதும், கிருத்திகா அலறியதும் என் செவியில் ஒலித்தன. நாட்டிய நிகழ்ச்சி முடிந்து வரவிருந்த ரஜனிக்காக, கிருத்திகா அப்போது ஹீட்டரைப் போட்டு வைத்திருந்தது நினைவு வந்தது. பக்கத்திலேயே ஒரு பெரிய ஸ்பூன் இருந்ததையும் நினைவு படுத்திக் கொண்டேன்.

அடி பாவி! அடி மிருகமே! அடி பிசாசே!

"கிருத்திகா! உன் காலில் அவள்... ரஜனி..."

கிருத்திகா தலை குனிந்துகொண்டிருந்தாள்.

"கிருத்திகா! இவ்வளவு கொடிய தண்டனையைப் பெற்ற பிறகுமா ரஜனியின்மீது உனக்குப் பிரியம் இருந்தது? இப்படிப்பட்ட விலங்குப் பிறவியைக் காப்பாற்றவா தண்ணீரில் குதித்தாய்? இந்த எஜமானி செத்து ஒழியட்டும் என்ற எண்ணம், காலிலே சூடு கண்டபிறகு கூடவா உனக்குத் தோன்றவில்லை?" நான் அவளை உலுக்கு உலுக் கென்று உலுக்கிக்கொண்டே கேள்விகளை வீசினேன்.

அவள் மெல்ல என் கையை விலக்கினாள். பூகம்பத்தின் சர்வ நாசத்துக்குப் பிறகும் நம்பிக்கையின் ஒளிக்கீற்றாக ஒற்றைப் புல் காற்றிலாடிச் சிரிக்கிறாற்போல் அவள் இதழ் களில் மென்னகையொன்று தவழ்ந்தது.



"சேது! ரஜனி என் எஜமானியாக மட்டுமிருந்திருந்தால் காப்பாற்றத் தயங்கியிருப்பேனோ என்னவோ..."

"பின்னே?"

"ரஜனி என் சகோதரி, சேது! என் உடன்பிறந்த தமக்கை! ஒரே அம்மாவின் வயிற்றில் பிறந்த அக்கா!" என்றாள் கிருத்திகா அமைதியாக.

யுகக் கணக்காயிற்று என் பிரமிப்பும் மௌனமும் நீங்கு வதற்கு. எப்படி, ஏன் என்று கேட்டுக்கொள்ளாமலே அவள் சொல்வது உண்மைதான் என்று என் அறிவும் இதயமும் ஏற்றுக்கொண்டுவிட்டன.

எனினும், "நீ சொல்வதெல்லாம் உண்மைதானா, கிருத்திகா?" என்று கேட்டு அவளை உற்று நோக்கினேன். என்றையும்விட அவள் இன்று உயர்ந்தவளாகத் தெரிந்தாள். உடன்பிறந்தவளாக இருந்தும், ஆடல் கலையில் அதிகம் அறிந்தவளாக இருந்தும், ரஜனியை எஜமானியாக்கி, தன்னை வேலைக்காரியாகத் தாழ்த்திக்கொண்ட கிருத்திகா ஒரு மகாராணியைக் காட்டிலும் மேம்பட்டவளாக என் கண்களுக்குப் பட்டாள்.

கிருத்திகா எழுந்து உள்ளே சென்று, ரஜனி என்ன செய்கிறாளென்று பார்த்துவிட்டு வந்தாள். அயர்ந்த துயிலில் ஆழ்ந்திருப்பவளாக ரஜனி காட்சியளித்ததால், திரும்பி வந்தவளின் முகத்தில் நிம்மதி நிலவியது.

அவள் தன் மனக்கிடக்கையைச் சொல்ல நினைக்கிறா ளென்று கண்டுகொண்டேன். அவளது ரகசியங்களைப் பகிர்ந்துகொள்ளும் அளவுக்கு அவளுடைய மனமாளிகை யிலே நான் கொலுவிருக்கப் போகிறேன். அந்த நிலை எனக்குப் பரவசமும், பயமும் தந்தது. "சொல்லு." என்று தூண்டப்போய், அவளது எண்ணத்தைக் கலைத்து

விடக்கூடாது என்று அஞ்சினேன். புயலின் நடுவே அகல் விளக்கை எடுத்துச் செல்பவன்போல, கிருத்திகாவின் மன நிலையைப் போற்றி மூடிப் பாதுகாக்க விரும்பினேன். மறந்தும் என் வாயைத் திறந்துவிடாமல் அனுதாபத்துடன் அவளையே பார்த்தவாறு பேசாதிருந்தேன்.

''என் அம்மாவுக்குக் கொடுத்த வாக்குறுதி அது.'' என்று தரையைப் பார்த்துக்கொண்டே சொன்னாள் கிருத்திகா.

''ஊம்,'' என்றேன்.

''நான் அஸ்ஸாமில் இருந்தவள், ரஜனி வங்காளத்தில் வசித்தவள் என்றெல்லாம் உங்களிடம் சொன்னதை மறந்துவிடுங்கள். நாங்கள் தமிழர்கள் என்பதைத் தவிர மற்றதெல்லாம் என் கற்பனை.'' என்று கிருத்திகா தொடர்ந்தாள். ''எங்கள் அப்பா மணிபுரி சமஸ்தானத்தில் குடியேறியவர். இளம் வயதில் இறந்துவிட்டார். எங்கள் அம்மாவுக்கு நாட்டியக்கலையில் ஆசையும் அனுபவமும் உண்டு. தெரிந்ததை வைத்துக்கொண்டு, இம்பாலில் ஒரு நாட்டிய ஸ்கூல் ஆரம்பித்து நடத்தினாள். எங்களைப் பள்ளிக்கூடத்துக்கும் அனுப்பி, நாட்டியமும் கற்றுத் தந்தாள்.''

ஆறிக்கொண்டிருந்த பானத்தில் சிறிதளவு கிருத்திகாவுக்கு ஊற்றித் தந்து, நானும் அருந்தினேன்.

கிருத்திகா தொடர்ந்தாள்: ''மணிபுரி நடனம் எங்கள் இரண்டுபேருக்குமே நன்றாய் வந்தது. ஆனால், என்னைக் காட்டிலும் ரஜனிக்கு முன்னடைவு அதிகம். நாலுபேர் பாராட்டுகிற மாதிரி பிரகாசிக்க வேண்டுமென்ற ஆசை அவளுக்கு நிறைய உண்டு. அவளைக் காட்டிலும் நான் நன்றாய் ஆடுவதாக யாராவது சொல்லிவிட்டால் அன்று பூரா அழுதுகொண்டேயிருப்பாள். மூத்தது பெண் என்பதாலோ, அல்லது பிறந்த ஒரு வருடத்துக்குள் நூறு நோய்



களில் செத்துச் செத்துப் பிழைத்தவள் என்பதாலோ அவளிடம் என் அம்மாவுக்கு ஒரு தனியான பிரியம். அந்தப் பிரியம்தான் என்னிடம் வாக்குறுதி வாங்கும்படி அவளைச் செய்தது.''

''நீ ஆடுவதில்லை என்ற வாக்குறுதியா?'' என்று கேட்டேன்.

''ஆமாம்'' என்றாள் கிருத்திகா, குரலில் எவ்வித வெறுப்போ கசப்போ காட்டாமல். ''நானும் ரஜனியும் பத்தாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தோம். பள்ளிக்கூட விழாவில் ஒரு நாட்டிய நிகழ்ச்சி இருந்தது. இரண்டு பேரும் ஆடினோம். தலைமை தாங்கியவர், நான்தான் நன்றாக ஆடினேன் என்று சொல்லி, ஒரு பொம்மையைத் தூக்கிப் பரிசாகத் தந்துவிட்டார்கள். பொம்மையை எடுத்துக்கொண்டு நான்தான் வீட்டுக்கு வந்தேன். ரஜனி வரவேயில்லை. அம்மாவுக்குப் பாதி உயிர் போய்விட்டது. இரவு முழுதும் தேடியலைந்து, விடிகாலையில் அழைத்து வந்தாள் ரஜனியை. அவள் அடிக்கடி போய் விளையாடுகிற ஒரு குன்றின் உச்சியில் உட்கார்ந்திருந்தாளாம். குதித்துத் தற்கொலை செய்துகொள்ளப் போவதாகச் சொன்னாளாம். அம்மா அவளுக்கு வாக்களித்து—''

''என்ன வாக்களித்து?''

''இனி என்னை ஆடச் சொல்வதில்லை என்றுதான்.'' இதையும் கிருத்திகா புன்சிரிப்புடனேயே சொன்னாள். ''வீட்டுக்கு வந்ததும், என்னிடம் கை மேலடித்துச் சத்தியம் வாங்கிக்கொண்டாள் அம்மா. நான் ஒரு நாட்டியக்காரி என்ற உணர்வை அன்றோடு அழித்துக் கொண்டுவிட்டேன். அப்படியும் என்றாவது ஒருநாள் எனக்குள்ளிருக்கும் பிசாசு கூத்தாட ஆரம்பித்துவிடுகிறது...''

''அது பிசாசு அல்ல கிருத்திகா. தெய்வத்தின் பிரதிநிதி'' என்று பொருமினேன். ''சரி. ஆட வேண்டாம்.

ரஜனியின் தங்கை என்ற உறவைக்கூட அழித்துக்கொண்டு, கூலிக்காரியாக, அடிமையாகத் தொண்டூழியம் செய்ய வேண்டுமா?''

''சேது! ஒன்று நாமே மகத்தானவர்களாக இருக்க வேண்டும். அல்லது மகத்தானவர்களுக்குப் பணிவிடை செய்யும் பாக்கியமாவது கிடைக்க வேண்டும். முன்னதற்கு நான் பிறந்தவளல்ல. பின்னதாவது கிடைக்கட்டும். ரஜனி, நான் முன்பே சொல்லியிருக்கிறேன் தலைசிறந்த மணிபுரி மேதை, அவளுடைய புகழ் சிறக்க என்னாலானதைச் செய்கிறேன்.''

''ரஜனி ஒரு மகத்தான கலையரசி என்று நீ வேண்டுமானால் சொல்லிக்கொண்டிரு. உடன்பிறந்த பாசம் என்று விட்டுவிடுகிறேன்'' என்றேன். ''ஆனால் மகத்தானவர்கள், பள்ளிக்கூடத்தில் இன்னொருவருக்குப் பரிசு கிடைத்துவிட்டது என்பதற்காகத் தற்கொலை செய்துகொள்ளமாட்டார்கள். மகத்தானவர்கள் சொந்தத் தங்கையைச் சித்திரவதை செய்து சந்தோஷப்படமாட்டார்கள்.

மெல்லப் புன்னகைத்து, என் கோபத்தைத் தணிக்க முற்பட்டாள் கிருத்திகா. ஆனால் என் கோபம் குறையவில்லை. ''மகத்தானவர்கள், பணக்காரப் பையன் எங்கே அகப்படுகிறான் என்று வலை போட்டுப் பிடிக்கவும் மாட்டார்கள்!'' என்றேன் காரமாக.

''கௌதமனுக்கும் ரஜனிக்கும் உள்ளது மெய்யான காதல்'' என்று நிலத்தைப் பார்த்தவாறு ஆழமான குரலில் சொன்னாள் கிருத்திகா.

''மெய்யான காதல் இவ்வளவு நீண்ட நாட்களுக்குத் திருட்டுத்தனமாகக் காலத்தை ஓட்டாது'' என்று நான் பதில் கொடுத்தேன்.



''ரஜனி அவசரப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறாள். அப்பாவிடம் உண்மையைச் சொல்லி, சீக்கிரமாகவே கல்யாணத்தை முடியுங்கள் என்று கௌதமனிடம் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறாள். அவர்... கௌதமன்தான் கொஞ்சநாள் பொறுத்திருக்கும்படி சொல்கிறார்.''

''ஏன்?''

''வந்து...தன் அப்பாவிடம் அவருக்குள்ள மதிப்புதான் காரணம். திடுதிப்பென்று சொல்லி அவரை அதிர்ச்சியடைய...''

சிரிப்பு வந்துவிட்டது எனக்கு. ''கிருத்திகா, உன் கண்கள் அழகானவை மட்டுமல்ல. நல்லவையும்கூட. அதனால்தான் எதிலும் நல்லதையே பார்க்கிறாய். கௌதமனும் ரஜனியும் தங்கள் காதலைப்பற்றி நம்பீசனிடம் சொல்லாதிருப்பதற்குக் காரணம் பணத்தாசை. நம்பீசனின் சொத்து முழுவதும் சுயார்ஜிதம். அவருடைய விருப்பத்துக்கு விரோதமாக நடந்தால் பைசாகூடக் கிடைக்காது. இதுதான் உண்மை. இந்த உண்மை உனக்கும் நன்றாகத் தெரியும். உன் வாயால் அதைச் சொல்ல வேண்டாமென்று பார்க்கிறாய். உண்டா இல்லையா?''

கிருத்திகாவினால் அதை மறுக்க முடியவில்லை. சுவர் கடியாரத்தை அப்போதுதான் கவனித்த மாதிரி: ''அடடா! மணி பன்னிரண்டாகிறதே!'' என்று சரேலென எழுந்து கொண்டாள்.

ரஜனியிடம் இன்னொரு முறை சென்று பார்த்தேன். தூங்கிக்கொண்டிருந்தாள். கவலைப்பட ஒன்றுமில்லை. ''ஏதாவது வேண்டியிருந்தால் எனக்குச் சொல்லியனுப்பு'' என்று கிருத்திகாவிடம் கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

அடுத்த இரண்டு நாளும் எனக்கு வேறு அலுவல்கள் சரியாயிருந்தன. நம்பீசனைச் சந்திக்கச் சந்தர்ப்பப்படவில்லை.

ரஜனியின் நாட்டிய நிகழ்ச்சியைக் கடைசிவரை இருந்து பார்த்தாரென்றும், நிகழ்ச்சி முடிந்த பிறகும் ரஜனியையும் அவளுடன் ஆடியவர்களையும் பார்த்துப் பாராட்டிவிட்டுப் புறப்பட்டதாகவும் டிரைவர் சொன்னான். அந்தமாதிரியான சிறிய சந்திப்புக்களையும் சம்பவங்களையும் என்னிடம் தவறாமல் டெலிபோனிலோ நேரிலோ வர்ணிப்பார் நம்பீசன். இதைப்பற்றி ஒன்றும் சொல்லாதது ஏன் என்று எனக்கு ஆச்சரியமாகக்கூட இருந்தது.

நான் அவரைப் பார்க்க முடியாதிருந்ததற்குக் காரணம், டெல்லியிலிருந்து ஓ.பி. லால் வந்திருந்ததுதான். இந்தியாவின் எல்லா முக்கிய நகரங்களிலும் ஓட்டல் நடத்தும் 'லால் க்ரூப் ஆஃப் ஓட்டல்'ஸின் மானேஜிங் டைரக்டர் அவர். அனைத்திந்திய ஓட்டல் அதிபர்கள் மாநாட்டை அடுத்த ஆண்டு பம்பாயில் நடத்துவது சம்பந்தமாகப் பல பேரைச் சந்தித்துப் பேச வந்திருந்தார், வழியனுப்புவதற்காக மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு அவருடன் போய்க் கொண்டிருந்தபோது, அவரது சென்னை விஜயத்துக்கு வேறொரு நோக்கமும் உண்டு என்று தெரிய வந்தது.

லால் ஓட்டல் 'சங்கிலி'யில் இன்னோர் மணியாகச் சென்னையிலும் ஓர் ஓட்டல் ஆரம்பிக்கவிருக்கிறார்களாம்.

''சேது! உன்னைத்தான் மிகவும் நம்பியிருக்கிறேன். உன் திறமை கட்டாயம் எனக்கு வேண்டும். டபிள் த ஸாலரி. ஃப்ரீ பங்களா அண்ட் எ கார். வேறு நீ எது கேட்டாலும் சரிதான். என்ன?'' என்றார் ஓ.பி. லால்.

இப்படிப் பல அழைப்புக்கள் மறைமுகமாகவும் நேரடியாகவும் எனக்கு வருவதுண்டு. ஆனால் எல்லாவற்றிலும் பெரியது ஓ.பி. லாலின் அழைப்பு. எல்லோருக்கும் சொல்வதுபோல், ''ரொம்ப நன்றி. யோசிக்கிறேன். இப்போதைக்கு ஓட்டல் உமாவை விடுவதாக உத்தேசமில்லை'' என்று அவருக்கும் பதிலளித்தேன்.



அவர் டெல்லி திரும்பிவிட்டார். லால் குருப்பின் சென்னைத் திட்டம் பற்றி நம்பீசனிடம் தெரிவிக்க நினைத்தேன். அவருடைய இல்லத்துக்குப் புறப்படுவதற்காக என் அறையில் உடை மாற்றிக்கொண்டிருந்தபோது, முதலாளி வந்திருக்கிறாரென்று டெலிபோன் ஆபரேட்டர் தெரிவித்தார். ரொம்ப நல்லதாயிற்று என்று எண்ணிக்கொண்டு கதவைப் பூட்டினேன்.

என் பிளாக்குக்குக் கொஞ்சம் தள்ளித்தான் கார் பார்க் இருந்தது. அங்கிருந்து ஒரு காரின் ஹாரன் விட்டு விட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது.

மாடியிலிருந்து எட்டிப் பார்த்தேன். நிறுத்தியிருந்த காரை வெளியே எடுக்க ஒருவர் முயன்றுகொண்டிருந்தார். யாரோ அதன் பாதையை அடைத்தாற்போல் ஒரு ஸ்கூட்டரை நிறுத்திவிட்டுப் போயிருந்தார்கள். அதை நகர்த்தினால்தான் காரை எடுக்கலாம்.

கார் பார்க்குக்கு ஒரு காவலாளி உண்டு. அவனை அப்போது காணோம். மற்றவர்களுக்கு வேலை இருந்ததோ அல்லது காதில் விழவில்லையோ, பேசாமலே இருந்தார்கள்.

கிடுகிடுவென்று கீழே இறங்கினேன். ஸ்கூட்டரைத் தூக்கினாற்போல் நகர்த்திவிட்டு, ''இப்போது வரலாம்'' என்றேன் காரில் இருந்தவரிடம்.

''லட்சாதிபதிகளெல்லாம் இந்த வேலை செய்யலாமா?'' என்றார் காரில் இருந்தவர்.

யாரது என்று எட்டிப் பார்த்தேன்.

அட்வகேட் சர்வோத்தமன்தான். ஓட்டல் உமாவின் லீகல் அட்வைஸர்; நம்பீசனின் அந்தரங்க நண்பர்.

''உங்கள் ஆசீர்வாதத்தில் லட்சாதிபதியானால் சரி'' என்றேன்.

''ஆகிவிட்டாய் என்கிறேன். கங்கிராசுலேஷன்ஸ். காரிலிருந்தபடியே என் கையைக் குலுக்கிவிட்டுக் காரைக் கிளப்பினார். கேலியோ வேடிக்கையோ அவர் பேச்சில் புலப்படவில்லை; ஸீரியஸாக இருந்தார்.

''வக்கீல் சார் என்ன சொல்கிறீர்கள்?'' என்றேன் குழப்பத்துடன்.

''ஓட்டல் உமாவின் எதிர்கால அதிபர் நீதான் என்கிறேன். கௌதமனல்ல. ரகசியமாக வைத்திரு விஷயத்தை என்கிறேன்.''

அட்வகேட்டின் கார், போய்விட்டது. மரம்போல் அசையாது நின்றவிடத்திலேயே நின்றேன்.

சர்ரென்று இன்னொரு காரும் சீறிக்கொண்டு புறப்பட்டது பக்கத்திலிருந்து. உணர்வு வந்தவனாகத் திரும்பிப் பார்த்தேன்.

அதில் இருந்தவள் ரஜனி.

அவளுடைய சுட்டெரிக்கும் பார்வையே சொல்லிற்று— 'ரகசியமாக வைத்திரு' என்று அட்வகேட் கூறிய தகவலை அவளும் கேட்டுவிட்டாள்.

## 11

அது நன்றாய்த் தெரிந்தது, வெகு வேகமாக ரஜனி காரைச் செலுத்தியதிலிருந்து.

எனக்குத் தலை இன்னும் சுழன்றுகொண்டிருந்தது. நம்பீசனுக்கு ஏதாவது பைத்தியம் பிடித்திருக்கிறதா என்ன? கௌதமனிடம் அவருக்கு அன்பு குறைந்துவிட்டது என்று சொன்னாலே நம்ப முடியாது. அது வெறுப்பாக உருவெடுத்து, இவ்வளவு பிரம்மாண்டமாக விசுவரூபம்கூட எடுக்க முடியுமா? அல்லது சும்மா விளையாடுகிறாரா?



எல்லாம் கிடக்க, ரஜனி எங்கே தலைதெறிக்க ஓடுகிறாள் என்பதை முதலில் கண்டறிந்தாக வேண்டும்.

''என் காரைப் பார்த்தேன். வண்டி இருந்தது. டிரைவரைக் காணோம். டிங் என்ற ஓசையொன்று அருகிலே கேட்டது. யாரோ பாசஞ்சரை இறக்கிவிட்ட ஒரு டாக்ஸியோட்டி, கொடியை மேலே தள்ளிய ஓசைதான் அது.

சட்டென்று ஏறிக் கதவைச் சாத்திக்கொண்டு, ''அதோ போகிறது பார், க்ரீம் கலர் வண்டி. அதைப் பின்தொடர்ந்து ஓட்டு.'' என்றேன்.

டாக்ஸியோட்டி வாலிபனாக இருந்ததால் வேகப் போட்டியை விரும்பினான் போலும். வெகு உற்சாகமாக ரஜனியின் காரைப் பிடிக்க முயன்றான். இந்த க்ரீம் கலர் கார், அவளுடைய சென்னை விசிறிகளில் ஒருவர் இரவல் தந்திருக்க வேண்டும். நம்பர் பிளேட்டைப் படிக்குமளவுக்குக் கிட்ட நெருங்கியதும் இலக்கங்களைக் கவனித்தேன். எனக்குத் தெரிந்தவர் யாருடையதுமல்ல அது.

''ஓவர்டேக் பண்ணணுமா சார்?'' என்று டிரைவர் கேட்டான்.

''வேண்டாம்'' என்று நான் சொல்லிக்கொண்டிருக்கும்போது, ஒரு சிவப்புக் கட்டிடத்தின் வாசலில் ரஜனி காரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தாள். அது தபாலாபீஸ்.

நானு கட்டிடம் தள்ளி டாக்ஸியிலிருந்து இறங்கிக் கொண்டு நானும் தபாலாபீசுக்குள் நுழைந்தேன்.

''பாரிசுக்கு ஒரு கேபிள் கொடுக்க வேண்டும்,'' என்று ரஜனி சொல்லிக்கொண்டிருப்பது தந்திக் குமாஸ்தாவிடம் செய்தியை அறிவிக்க முயலுவது கேட்டது.

கௌதமனுக்குத்தான் ...கிறாள்.

உறுதியாக நாலெட்டு வைத்து அவளை அணுகினேன். ''போஸ்டாபீசில் விவாதம் வேண்டாம்,'' என்றேன் அவளுக்கு மட்டும் கேட்கக்கூடிய குரலில். அழுத்தமாகவும் படபடப்பாகவும் பேசினாலும், ஏதோ சாதாரணமாகப் பேசுகிறவன்போல முகத்தைப் புன்னகையாக வைத்துக் கொண்டேன், கவனிக்கக்கூடியவர்களை ஏமாற்றுவதற்காக. ''நீங்கள் செய்வது மடத்தனம் ரஜனி வாருங்கள், வெளியே போய்ப் பேசலாம்' என்றேன்.

''நான் உன்னுடன் பேசத் தயாராயில்லை,'' என்றவள் குமாஸ்தா ந்த பாரத்தில் எழுதத் தொடங்கினாள்.

''சொல்வதைக் கேளுங்கள். எதுவும் குடி முழுகிவிட வில்லை இப்போது. வக்கீல் நிஜமாகச் சொன்னாரோ, விளையாட்டுக்குச் சொன்னாரோ...'' என்று நான் வாதாடு கையில், குமாஸ்தா ''மிஸ்டர், என்ன இது! பொது இடத்தில் வந்தா உங்கள் குடும்பத் தகராறுகளை வைத்துக் கொள்ள வேண்டும்?'' என்று என்னைப் பார்த்து அதட்டினார்.

டாக்ஸிக்குத் திரும்பினேன்.

நம்பீசனிடமே ''என்ன இதெல்லாம் கலாட்டா?' ன்று கேட்பதுதான் யாருக்கும் தோன்றக்கூடிய முதல் யோசனை. அதுதான் எனக்கும் தோன்றியது. ஆனால் அவரைச் சந்திக்கப் பயப்பட்டேன். ஏதோவொரு வேடிக்கை அல்லது நாடகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று என்னை நானே ஏமாற்றிக்கொள்வதில் ஓர் ஆறுதல் இருக் கிறது. நம்பீசன் அதைத் தகர்த்துவிட்டால்? ''ஆமாம் சேது, எல்லாம் நான் திட்டமிட்டுத்தான் செய்கிறேன். இதுதான் என் தீர்மானமான முடிவு,'' என்று அவர் சொல்லிவிட்டால்? அந்த நிலைமையை எண்ணும்போதே எனக்குக் கை கால்கள் மரத்துப்போன மாதிரி ஆகிவிட்டது.



இருந்தாலும், இனி வேறு வழியில்லை. நேரில் அவரைச் சந்தித்தே விடுவது என்று, தபாலாபீசுக்குப் பக்கத்திலிருந்த பொது டெலிபோனிலிருந்து ஓட்டலுக்குக் கூப்பிட்டு விசாரித்தேன்.

''வீட்டில்தான் இருக்கிறார்'' என்றான் தாசரதி.

நம்பீசன் பங்காளவை அதே டாக்ஸியில் அடைந்தேன். அவருடன் வெகுநேரம் பேச நேரிடலாம் என்று டாக்ஸியைக் கட்டணம் தீர்த்து அனுப்பிவிட்டேன். ஆனால் எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

வேலைக்காரன் என்னைக் கண்டதும், ''ஐயா இங்கே இல்லையே? வெளியே போயிருக்கிறார்,'' என்றான்.

''எங்கே?'' என்று கேட்டேன்.

''தெரியாது சார்'' என்று அவன் தெரிவித்துக்கொண் டிருந்த சமயம், மாடியிலிருந்து சமையற்காரர் இறங்கி வந்து கொண்டிருந்தார். வெள்ளிக் கூஜாவும், வெள்ளி டபரா டம்ளரும் அவர் கையில் இருந்தன. நம்பீசன் காப்பி அருந்துகிற சமயங்களில்தான் அந்தப் பாத்திரங்கள் வெளி வருவது வழக்கம்.

வேலைக்காரனை ஒரு முறைப்பு முறைத்துவிட்டு, சமையற்காரர் ஆட்சேபிக்க வருவதையும் ஒதுக்கிவிட்டு, மாடிப்படியில் ஏறினேன். வேலைக்காரன் ''என்னைக் கோபிக்காதீர்கள் சார். ஐயாதான் சொல்லியிருந்தார், நீங்கள் வந்தால் இல்லைன்னு சொல்லச் சொல்லி'' என்றான்.

திகைப்பும் குழப்பமுமாய் மாடியறையை அடைந்தேன். வாசல் பக்கம் பார்த்தாற்போல் சுழல் நாற்காலியில் அமர்ந்து புத்தகம் படித்துக்கொண்டிருந்தார் நம்பீசன். ஆனால் என்னைக் கண்டதும்! நாற்காலியை மறுபுறம் திருப்பிக் கொண்டு, ''உன்மீது ரொம்பக் கோபமாக இருக்கிறேன். உன்னுடன் பேசப்போவதில்லை,'' என்றார்.

துளியும் புரியவில்லை எனக்கு. அதேசமயம் நிம்மதியும் ஏற்பட்டது. ''வேறெந்தச் சமயத்தில் நீங்கள் என்மீது கோபமாய் இருந்தாலும் வருத்தப்படுவேன். தவித்துப் போவேன். இப்போது சந்தோஷம்தான். தயவு பண்ணி இந்தக் கோபத்தை இப்படியே வைத்துக்கொண்டிருங்கள். என்னவோ பைத்தியக்கார ஏற்பாடுகள் பண்ணியிருப்பதாகக் காதில் விழுகிறதே அவைகளை மாற்றிவிடுங்கள்'' என்றேன்.

நாற்காலியை மெல்லச் சுழற்றி என்னைப் பார்த்தார் ஏறிட்டு.

அதிர்ந்துபோனேன், அவருடைய முகத்தில் ஏற்பட்டிருந்த மாறுதலைக் கண்டு. திடீரெனப் படுகிழட்டுத்தனத்தை அவர் அடைந்துவிட்டாற்போல் இருந்தது. எண்ணற்ற கவலைக்கோடுகள் அவர் முகத்தைக் குறுக்கும் நெடுக்கும் கிழித்திருந்தன. இடித்துத் தள்ளிய புதுக் கட்டிடம்போல அவர் இடிந்து குலைந்துபோயிருந்தார். கௌதமனிடம் வைத்திருந்த நம்பற்கரிய பாசத்தையும் பிணைப்பையும் என்ன பெரும்பாடுபட்டு நெட்டித் தள்ளியிருக்கிறார் என்பதை அந்த விகாரமான தோற்றம் எடுத்துக்காட்டியது. அந்த வினாடியே, நான் பயந்திருந்ததெல்லாம் உண்மைதானென்பதும் புலப்பட்டுவிட்டது.

''சேது'' என்றார் நம்பீசன் கம்மிய குரலில். ''கௌதமனைப் பற்றி அத்தனை விஷயங்களை எனக்குத் தெரியாமல் மறைத்து வைத்திருந்தாயே, நியாயமா? இது தான் உன் விசுவாசமா?''

என்னவென்று பதில் சொல்வேன்? மிடறு விழுங்கினேன். எவ்வளவு தூரம் தெரிந்து வைத்திருக்கிறார், என்னென்ன அவருக்குத் தெரியாது என்று புரியாத நிலையில் நானாகவே ஒன்றுகிடக்க ஒன்று சொல்லிச் சிக்கிக்கொள்ளவும் விரும்பவில்லை. ''வந்து... நீங்கள்...'' என்று தடுமாறினேன்.



''எனக்கு எல்லாம் தெரியும் சேது. உண்மையை மறைப்பதுதான் நீ எனக்குச் செய்கிற பெரிய உபகாரம் என்று எண்ணியிருக்கிறாய்'' என்று நம்பீசன் கூறியபோது, அதில் அளவற்ற வருத்தமும் ஏமாற்றமும் தொனித்தன. ''நீ சொல்லாவிட்டாலும் வேறு பலபேர் இருக்கிறார்கள். நாட்டியத்தில் நடிக்க வந்திருந்தாளே, அந்த நூற்றேழாம் நம்பர் அறைக்காரி—அவள் சொல்லிவிட்டாள்...''

''சார்! அவள் பெரிய—'' என்று ஆரம்பித்தேன். என்னைக் கையமர்த்தி அடக்கிவிட்டார் நம்பீசன். ''அவள் நியாயமானதைக் கேட்டுவிட்டாள். அவள் கேள்விக்குப் பதிலும் கிடையாது. அவளைத் திட்டாதே'' என்றார்.

கொஞ்சம் கொஞ்சமாகவும் முன்பின்னாகவும் அவர் சொன்னதிலிருந்து, அன்றைய நிகழ்ச்சியை நான் ஊகித்துக் கொண்டேன்.

நாட்டியங்கள் முடிந்த பிறகு, ஒப்பனை அறைக்குச் சென்று ரஜனியைப் பாராட்டியிருக்கிறார் நம்பீசன். அங்கிருந்த நூற்றேழாம் நம்பர் பெண்—அவள் பெயர் வசந்தி—''என்னை நினைவிருக்கிறதா?'' என்று கேட்டாள்.

''நன்றாய்'' என்று புன்சிரிப்புடன் பதிலளித்துவிட்டுக் காரை அடைந்தார் நம்பீசன். காரில் ஏறும்போதுதான் பின்னாலேயே அவளும் வந்திருப்பது தெரிந்தது. ''என்னம்மா வேண்டும்?'' என்று கேட்டார்.

''ஒன்றும் வேண்டாம். இந்த ரஜனி உங்கள் ஓட்டலில் தானே தங்கியிருக்கிறாள்? அவளுடைய காட்டேஜுக்குப் பக்கத்துக் காட்டேஜில் பட்டவர்த்தன் என்ற ஆள் தங்கியிருந்தானே. அவனுக்கும் அவளுக்கும் என்ன உறவு?'' என்று கேட்டாள் வசந்தி.

''எனக்குத் தெரியாது'' என்றார் நம்பீசன்.

''ஓர் உறவுமில்லை. அவன் பெயர் கௌதமன். எதற்காகவோ வேறு பெயர் வைத்துக்கொண்டு, அங்கே வந்து தங்கியிருந்திருக்கிறான். அவனும் ரஜனியும் கணவன் மனைவி மாதிரி கூத்தடித்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள். நான் நாட்டிய ரிஹர்சலுக்காக அடிக்கடி போய்வந்து கொண்டிருந்ததால் இதைக் கண்டுபிடித்தேன். அதை மட்டும் நீங்களோ உங்கள் மானேஜரோ கண்டித்தீர்களா? ரஜனி பெரிய புள்ளி என்பதால் கண்ணை மூடிக்கொண்டீர்கள்...'' இந்தமாதிரி அவள் பேசிக்கொண்டே போனாள். ஆனால் கௌதமன் என்கிற பெயர் நம்பீசனைக் கலக்கிவிட்டது. ''விசாரிக்கிறேன்'' என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு வந்துவிட்டார். கௌதமன் என்பது அப்படியொன்றும் பொதுவான, சாதாரண பெயரல்ல. ஓட்டலை விட்டுப் புறப்படும்போது அந்த வடக்கத்தியான் இரண்டு வார்த்தைதான் பேசினான் என்றாலும், அந்தக் குரலை நினைவுபடுத்திக்கொண்டு பார்த்தார். சந்தேகம் வந்தது.

நான் ஏதோ மறைத்திருக்கிறேன் என்று தோன்றிவிட்டதால் என்னைக் கூப்பிட்டு விசாரிக்கவில்லை.

ஓட்டல் ரிஜிஸ்டரில், 'பட்டவர்த்தன்' என்பவன் எங்கேயிருந்து வந்தவன் என்ற விலாசம் தரப்பட்டிருந்தது. கல்கத்தா விலாசம் அது. இரவோடிரவாக அந்த இடத்துக்குத் தந்தி கொடுத்து விசாரித்திருக்கிறார். அப்படி யாரும் அங்கே முன்பும் இருந்தது கிடையாது, இப்போதும் இல்லை என்று பதில் வந்துவிட்டது.

அதன்பிறகு ராமப்பிரம்மத்தைக் கூப்பிட்டுக் கேட்டிருக்கிறார். அவர், நம்பீசனின் அசல் மகன் கௌதமன் வந்து தங்கியிருந்து புறப்பட்டுச் சென்றதாகத் தெரிவித்திருக்கிறார். எனக்கு அது தெரியுமென்பதையும் கூறியிருக்கிறார்.



இதை நம்பீசன் என்னிடம் சொன்னபோது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. மிகச் சாமர்த்தியமாக ராமப்பிரம்மத்துக்குக்கூட விஷயத்தைத் தெரிவிக்காமல் இருப்பதாக நான் எண்ணி வந்திருக்கிறேன். அவரோ உண்மையைத் தெரிந்து வைத்திருக்கிறார்.

இவ்வளவையும் கூறி முடித்துவிட்டு நம்பீசன் குரல் தழுதழுக்கச் சொன்னார்: ''சேது! நான் எவ்வளவோ பாவங்களும் தவறுகளும் குற்றங்களும் செய்தவன்தான். ஆனால் எனக்கெதிராக இவ்வளவுபேர் சேர்ந்துகொண்டு சதி செய்வீர்களென்று நான் நினைக்கவேயில்லை...''

அப்படி அவர் கண்கலங்கி நான் பார்த்ததும் கிடையாது. பொறுத்துக் கொண்டதும் இல்லை.

''கௌதமன் விளையாட்டுப் பிள்ளை. குறும்புத்தனமாக ஏதோ செய்திருக்கிறான்...'' என்று சமாதானம் கூற முயன்ற என்னை நம்பீசன் தடுத்துவிட்டார்.

''சேது! நீ எனக்குச் செய்யக்கூடிய பெரிய உதவி, அவனைப்பற்றிப் பேச்செடுக்காமல் இருப்பதுதான்.'' வெப்பம் மிகுந்த பெருமூச்சு அவரிடமிருந்து வெளிப்பட்டது. ''எத்தனை நம்பிக்கை வைத்திருந்தேன்! எவ்வளவு திட்டமிட்டிருந்தேன்! சே! இந்த ஒரு விஷயம்தான் தெய்வாதீனமாய் எனக்குத் தெரிய வந்தது. இன்னும் இதுபோல எவ்வளவு மோசடிகள் எங்கெல்லாம் செய்து வைத்திருக்கிறானோ!''

அவர் கன்னாபின்னாவென்று கத்தவில்லை. ஏன் குரலைக்கூட வழக்கத்தை விட உயர்த்தவில்லை. உணர்ச்சி வசப்பட்டுத் திட்டவில்லை. ஆனாலும் அவருக்குள்ளே ஓர் எரிமலை பொங்கித் தீக்குழம்பு கக்கி ஆறாகப் பெருகியோடுவதை என்னால் காண முடிந்தது. அவருடைய இதய அரண்மனை பொடிப் பொடியாய் நொறுங்கிச் சரிந்து, வெறும்

பாழாக, கல்குவியலான இடிபாடாகக் கிடப்பதை நான் கண்டேன். ஆறுதலாலும் தேறுதலாலும் நீக்கமுடியாத வேதனையை அவர் அனுபவித்துக் கொண்டிருந்தார்.

''சரி, சரி. அவனுக்குத் தண்டனை கொடுத்துவிட்டேன். இனி என் பேச்சு?'' என்றார் அவர் தன்னைத் தானே சுதாரித்துக் கொண்டு.

''கௌதமனுக்குக் கொடுக்கவில்லை சார். எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள்'' என்றேன் தைரியத்தையெல்லாம் வரவழைத்துக் கொண்டு. ''என் சகோதரனாக நினைத்து வந்திருக்கிறேன் கௌதமனை. அவனுக்குத் துரோகம் செய்து நான் சுகப்பட ஒருநாளும் ஒப்புக்கொள்ள மாட்டேன்.''

"அப்படியா? ரொம்ப சந்தோஷம், ரொம்ப சந்தோஷம். ஒரு மகன் போனாலும் இன்னொருவன் இருக்கிறானென்று நினைத்திருந்தேன். அதுவும் கிடையாது என்கிறாயா? சரி. என்னிடம் விசுவாசம், அன்பு, மரியாதை என்னென்னவோ இருப்பதாக அடிக்கடி சொல்வாயே, அதை மேலும் மேலும் நிரூபித்துக் கொண்டிருக்கிறாய். பிரமாதம் சேது, ரொம்பப் பிரமாதம் போ!''

இப்படி மனம் நொந்து அவர் பேசும்போது நான் என்ன சொல்ல முடியும்? ரஜனிக்கும் விஷயம் தெரிந்துவிட்டது என்பதையும், கௌதமனுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறான் என்பதையும் கூற நினைத்தேன். அதனால் அவர் உள்ளத்தில் மாற்றமேதும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. மாறாக, மேலும் ஆத்திரம் கொள்வார்.

''போய் வருகிறேன்'' என்று சொல்லிக்கொள்ளக்கூடத் தோன்றாமல் தலையைக் குனிந்துகொண்டு வெளியேறினேன்.



''சேது!'' என்று அழைத்து நிறுத்தினார் நம்பீசன். ''நீ பாட்டுக்கு ஓட்டலுக்குப் போய் உன் வேலைகளைப் பார். எனக்கு எது நல்லது, உனக்கு எது நல்லது என்றெல்லாம் நானே தீர்மானித்துக் கொள்கிறேன். என்னிடம் இத்தனை வருஷம் நீ வைத்திருந்த அதே நம்பிக்கையை இனியும் காட்டு. அதுபோதும்.''

''சரி சார்'' என்று கூறிவிட்டு ஓட்டலுக்குத் திரும்பினேன்.

ஆரம்ப முதல் இந்த விஷயத்தைத் தப்பாகக் கையாண்டு விட்டோம் என்று தோன்றியது. நம்பீசன் எதைத் தாங்கிக் கொள்ளமாட்டார் என்று நான் அஞ்சினேனோ அதை அவர் திடமாகத் தாங்கிக்கொண்டு விட்டார். பலவீனமானவர் என்று நினைத்தேன். இல்லையென்று ருசுப்பித்துவிட்டார். தொடக்கத்திலேயே பக்குவமாகக் கௌதமனைப் பற்றிச் சொல்லியிருக்கலாமோ?

ஓட்டல் வழக்கம்போல்தான் காட்சியளித்தது. இருந்தும் ஓட்டல் வாட்ச்மன் எனக்குப் போட்ட சல்யூட்டின் விறைப்பு, ரிஸப்ஷன் ஹாலைத் தாண்டிச் செல்கையில் தாசரதி தன் நாற்காலியைப் பின்னுக்கு நகர்த்திக்கொண்டு எழுந்து நின்ற பணிவு, என் அறையின் 'ஸ்விங்' கதவைத் திறந்து பிடித்துக்கொண்டு ஆபீஸ் பையன் நின்ற மரியாதை, குமாஸ்தா கடிதங்களை என் மேஜைமீது வைத்துவிட்டு, நான் கையெழுத்துப் போடுவதற்காகத் தன் பேனாவைத் திறந்து நீட்டிய சுறுசுறுப்பு—எல்லாவற்றிலும் ஒரு புதிய பரபரப்பு ஏற்பட்டிருப்பதுபோல் நான் கற்பனை செய்து கொண்டேன்.

இடைவேளையின்போது, எல்லோரும் சென்றிருந்த சமயம் ராமப்பிரம்மம் தயங்கி என்னிடம் வந்தார். ''சேது, என்மேல் கோபமாயிருக்கிறாயா?'' என்றார்.

"தெய்வத்தைத் தவிர வேறு யாரிடமும் நான் கோபிக்க முடியாது" என்றேன்.

"சேது, நீ அந்த வடக்கத்தியானைப் போட்டோ எடுக்கப்போய்ச் சண்டையில் முடிந்ததே, அன்றைக்கே நானும் பார்த்துவிட்டேன் அவன்தான் கௌதமன் என்று. நீயே சொல்ல விரும்பாதபோது நான் தெரிந்துகொண்டதாகக் காட்டிக்கொள்ளக் கூடாதென்று, தெரியாதவன் மாதிரி நடித்தேன். ஆனால்... நீயே சொல் சேது... நம் முதலாளியின் முன்னிலையில் அவர் குடைந்து குடைந்து கேட்கிறபோது, மனமறிந்து பொய் சொல்ல முடியுமா? நீ சொல்வாயா சேது?"

"ஏன் வருத்தப்படுகிறீர்கள்? உங்களை நான் குற்றம் சொல்லவில்லை," என்று பதில் கூறிவிட்டு, வேலைகளில் முழுகப் பார்த்தேன். ஆனால் கணுக்காலளவுத் தண்ணீருக்குள் தலை நனையக் குளிக்க முயல்கிற மாதிரி, என் வேதனையின் உயரம் மிகப் பெரிதாயும், வேலையின் ஆழம் மிகச் சிறிதாயும் இருந்தது.

சாயந்தரம் வேறொரு யோசனை தோன்றியது. நங்கநல்லூருக்குப் புறப்பட்டேன்.

அம்மா ஊரில் இல்லை. திருவண்ணாமலை போயிருப்பதாயும் காலையில் வருவாளென்றும் பக்கத்து வீட்டில் சொன்னார்கள். சாவியை என்னிடம் கொடுத்தார்கள்.

அன்றிரவை நங்கநல்லூர் வீட்டின் தரையில் தூக்கமின்றிக் கழித்தேன்.

காலையில் வந்த அம்மா, எனக்கு எவ்விதத்திலும் உதவவில்லை. அவளிடம் நம்பீசனுக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் உண்டு. அவருடைய கோபத்தைத் தணிக்கிற மாதிரி அம்மா இரண்டு வார்த்தை சொன்னால் நன்றாயிருக்கும் என்று நினைத்துத்தான் வந்தேன்.



ஆனால், விஷயத்தையெல்லாம் சொன்னதும் அம்மா பேசாமலே இருந்தாள். பிறகு, "சேது, உன் எஜமானரிடம் இரண்டு மூன்று தடவைதான் நான் பேசியிருக்கிறேன். பயமாயிருக்கிறது" என்றாள்.

"கூட நான் இருப்பேன்."

"அது சரி... ஆனால்... நான் என்ன சொல்கிறேனென்றால்... தலைமுறை தலைமுறையாய்ச் சாப்பாட்டுக்கு லாட்டரி அடிக்கிற வம்சமாகத்தான் நாம் இருந்து வந்திருக்கிறோம். ஏதோ கடவுள் கண்ணைத் திறக்கிறார், நீ சீரும் சிறப்புமாய் நன்றாய் இரேன், சேது. அதிர்ஷ்ட லக்ஷ்மியை ஏன் உதைக்க வேண்டும்..."

"சே! உலகத்திலே எல்லா அம்மாவையும் போலத்தான் நீயும் இருக்கிறாய்!" என்று திட்டிவிட்டேன் கோபத்துடன். "பிள்ளை சௌக்கியமாயிருந்தால் சரி. தர்மம், நியாயம், மனச்சாட்சி எல்லாவற்றையும் குப்பைத்தொட்டியில் வீசி எறிந்துவிடலாம்!"

புறப்பட்டபோது இருந்ததைக் காட்டிலும் அதிக மனக் கசப்புடன் 'ஓட்டல் உமா'வுக்குத் திரும்பினேன்.

ஒரே அமைதியாயிருந்தது உலகம். ஏதோவொன்று நிகழப்போகிறதென்று என் மனம் திக்திக்கென்று அடித்துக் கொண்டேயிருந்தது.

அடுத்த நாளைக்கு அடுத்த நாள். பிற்பகல் மூன்று மணி இருக்கும்.

டெலிபோன் மணி அடித்தது.

நம்பீசன்தான் தன் பங்களாவிலிருந்து கூப்பிட்டார். "சேது! கொஞ்சம் இங்கே வருகிறாயா?" என்றார்.

"எஸ் ஸார். உடம்பு ஒன்றுமில்லையே" என்றேன் கவலையுடன்.

''அதெல்லாம் எதுவுமில்லை. இங்கே ஓர் ஆள் வந்து கத்திக் கலாட்டா செய்துகொண்டிருக்கிறான்.''

''யார் சார்? யாரவன்?''

''கௌதமன் என்று பெயர் சொல்கிறான்,'' என்றார் நம்பீசன்.

# 12

பதறியது என் உடம்பு. கௌதமன் இவ்வளவு சீக்கிரம் புறப்பட்டு வருவான் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை.

ரிஸீவர் தன் ஆசனத்தில் அமருமுன் நான் வெளியே ஓடிக் காரில் அமர்ந்தேன். ''டிரைவர்! டிரைவர்!'' என்று கூவினேன்.

அவனைக் காணோம். ஹாரனை இரண்டு மூன்று டவை விட்டுவிட்டு அழுத்தினேன்.

காட்டேஜ் வரிசையிலிருந்து ஓடிவந்தான் டிரைவர். ழுத்தை ஒரு மஃப்ளர் சுற்றியிருந்தது. மூக்கு வீங்கி, கன்னம் புடைத்து, கண்கள் சிவந்திருந்தன. கடும் ஜலதோஷம் என்று அவன் குரலிலேயே தெரிந்து கொண்டேன்.

''காலையிலே படீர் படீர்னு நிற்காமல் தும்மிக்கொண்டேயிருந்தேன், சார். அந்தக் காட்டேஜிலேயிருக்கிற அம்மாள், 'வாப்பா, ஒரு கஷாயம் போட்டுத் தர்ரேன்'னு சொல்லிக் கூப்பிட்டாங்க. போய்க் குடிச்சிட்டு வந்தேன்'' என்றவன் வாயைக் கைக்குட்டையினால் துடைத்துக் கொண்டு காரைக் கிளப்பினான்.



காட்டேஜில் எந்த 'அம்மா'ளாக இருக்கும் என்று நான் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கவில்லை. என் நினைவு நம்பீசனின் பங்களாவிலே இருந்தது. அதற்குள் ஒருத்தி காவே தன் காட்டேஜ் வாசலுக்கு வந்து நின்றாள்.

''அவங்கதாங்க.'' என்று டிரைவரும் சுட்டிக் காட்டிக் கொண்டே காரை ஓட்டிச் சென்றான்.

அதிலெதிலும் புத்தி செல்லவில்லை எனக்கு. இதே நேரத்தில் அங்கே நம்பீசனின் இல்லத்தில் என்னென்ன நிகழ்ந்துகொண்டிருக்குமோ என்ற பதற்றத்தில், ஒவ்வொரு சிறு தாமதமும் பெரும் எரிச்சலை மூட்டியது. கையைக் காட்டி நிறுத்தும் போலீஸ்காரர், குறுக்கே ஓடும் குழந்தை, முன்னே போகும் கை வண்டிக்காரன், மூடியிருந்த ரெயில்வே லெவல் கிராஸிங்—ஒவ்வொன்றும் என் ரத்தத்தைக் கொதி நிலைக்கு ஏற்றிக்கொண்டிருந்தது.

பங்களாவுக்குள் நுழைந்தவுடனேயே, கேட்டுக்குச் சமீபமாகக் கார் மெல்ல நிற்கத் தொடங்கு முன்பே இறங்கிக் கொண்டேன். பங்களாவின் முன்புற வெராந்தாவை அடையும்போதுதான் போர்டிகோவில் இன்னொரு கார் நின்றிருப்பதைக் கண்டேன். க்ரீம் கலர் கார். அதன் பின் சீட்டில் இருப்புக்கொள்ளாமல் மாடியையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் ரஜனி.

மாடிப்படியின் உச்சியை அடைந்ததும் என் மூச்சைச் சீராக்கிக் கொண்டேன். கோட்டையும் டையையும் தலையையும் நீவிக்கொண்டேன்.

வெராந்தாவின் மறுகோடியில் நம்பீசனின் அறை இருந்தது. பாதிதூரம் போகும்போதே அவரது உரத்த குரலும், கௌதமனின் இரைந்த பதில்களும் என் செவியைத் துளைக்குமென்று எதிர்பார்த்தேன்.

தப்பு.

நிதானமாக, அமைதியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள் இருவரும். காலடியோசை கேட்காமலே நான் சென்றதால் அறைக்கு வெளியிலேயே நின்றுகொண்டேன். தந்தையும் மகனும் சமாதானமாக உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். என் பிரவேசம் அந்த நெருக்கத்தைக் கெடுக்கக்கூடும். அவர்கள் பேச்சு இனிமையாகவே முன்னேறி, சமரசமாகவே முடியட்டும். என்னைக்காட்டிலும் மகிழ்ச்சி அடைபவர் இருக்க முடியாது.

''சண்டை போடுகிறான்'' என்று வர்ணிக்கப்பட்ட கௌதமன் எந்தக் கட்டத்தில், ஏன் தணிந்து போகத் தொடங்கினான் என்று எனக்குப் புரியவில்லை. அவனுடைய நிதானமான பேச்சை செவிமடுத்தபடி வெளியே நின்றேன்.

''தேவையில்லாமல் மீனம்பாக்கத்தருகே ஓட்டல் கட்டுகிறீர்கள்? எந்த ஃபாரினர் இங்கே வந்து பார்க்கப் போகிறான்? இருபத்தைந்து வருடமானாலும் போட்ட முதலை எடுக்கப் போவதில்லை...''

''ஸிடி எப்படி வளர்ந்துகொண்டிருக்கிறது என்று உனக்குத் தெரியாதாகையால் இப்படிப் பேசுகிறாய். நீ அயல் நாட்டிலேயே இருந்து பழகிவிட்டாய்.''

''என்ன வளர்ந்தாலும் மெட்றாஸ் பம்பாய் ஆக முடியாது. அங்கேதான் கல்லைப் போட்டால் தங்கமாக எடுக்கலாம்.''

''அதனால்?''

''அங்கேதான் வெள்ளைக்காரர்கள் பார்த்துப் பிரமிக்கிறமாதிரி ஓட்டல் கட்டவேண்டும் என்கிறேன். ஸ்விட்ஜர்லந்திலும் பாரிசிலும் நான் பயிற்சி பெற்றதெல்லாம் இங்கே சிந்தாதிரிப்பேட்டையில் இட்டிலி தோசை சுடுவதற்கா?''



''தாராளமாய்ப் பம்பாயில் கட்டி நடத்து. இவ்வளவு தூரம் உனக்குத் தொழிலில் ஆர்வம் இருப்பதைப் பார்த்து எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.''

வெளியே கேட்டுக்கொண்டிருந்த எனக்குக்கூடத்தான் ஆச்சரியமாக இருந்தது. 'ஓட்டல் உமா' எப்படி நடைபெறுகிறது என்பதை அறிந்துகொள்ள ஒருமுறைகூடக் கௌதமன் ஆர்வம் காட்டியதில்லை. ஏன், எந்தெந்த இடத்தில் புது பிளாக்குகள் கட்டப்பட்டிருக்கின்றன என்கிற விவரம்கூட அவனுக்குத் தெரிந்திருக்காது.

கௌதமன் தொடர்ந்தான்: ''சும்மா ஓட்டல் கட்டு. நடத்து என்று வாயால் சொல்லிவிட்டால் தீர்ந்ததா? இருபத்தைந்து ரூபாய் வேண்டும்.''

''இருபத்தைந்து ஆயிரமா?''

''லட்சம்.''

''ஓ! என் சொத்து முழுவதையும் கேட்கிறாய்? தருகிறேன் என்றுதான் ஆரம்பத்திலிருந்தே சொல்லி வருகிறேன். இந்தக் காதல் கண்ணராவி என்று என்னென்னவோ ஆரம்பித்திருக்கிறாயே அதற்குத் தலைமுழுகு. தலை முழுகி விடுகிறேன் என்று வாக்குக் கொடு''

''அது என் சொந்த விஷயம் என்று நானும் ஆரம்பத்திலிருந்தே சொல்லி வருகிறேனே?'' கௌதமனின் குரல் சற்று உயரத் தொடங்கியது. என்னைக் கவலை பிடித்துக் கொண்டது.

ஆனால் நல்ல காலமாக நம்பீசன் தன் நிதானத்தை இழக்கவில்லை. ''கௌதமா, நீ என் பிள்ளை என்பதை மறந்துவிட்டு, மூன்றாவது வீட்டுப் பிள்ளை என்று வைத்துக் கொண்டு சொல்கிறேன். நீயும் அப்பா என்பதை மறந்து விட்டு எவரோ ஒரு வயதான கிழவர், நல்ல மனிதர், நல்லெண்ணத்துடன் சொல்கிறார் என்று நினைத்துக்கொண்டு கொஞ்சம் கேள்.''

''உபதேசம் ஒன்றுதானே உங்களிடமிருந்து கூடை கூடையாகக் கிடைக்கிறது? செக்கைக் காட்டிலும் வேகமாகப் பொன்மொழிகள் கிழித்துத் தள்ளுகிறீர்கள்! சொல்லுங்கள்!'' என்றான் கௌதமன்.

''இந்த வயதிலே கண்மூடித்தனமான காதல் கூடவே கூடாது. உணர்ச்சிவசப்பட்டு எதையும் பேசத் தோன்றும். எதையும் செய்யத் தோன்றும். புத்தி உன் சுவாதீனத்தில் இருக்காது. உன் அதிர்ஷ்டம் உனக்குப் புத்தி சொல்லவும் திருத்தவும் நான் ஒருவன் இருக்கிறேன்.''

''கடவுளுக்கு நன்றி'' என்றான் கௌதமன் கிண்டலாக.

''உனக்கு இன்று இருக்கிற மாதிரி எனக்கு ஒருவர் இருந்திருந்தால் கண்டிப்புக் காட்டவும் புத்தி சொல்லவும் பெற்றோர் இருந்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருப்பேன்.

''இப்போது ஒன்றும் கெட்டுவிடவில்லையே?''

''நீ நினைத்திருப்பது அது. பெண் மோகம் என்னென்ன பயங்கரங்களில் கொண்டுபோய் விடும் என்பது எனக்குத் தெரியும். எவ்வளவு விபரீதங்களை ஏற்படுத்தும் என்பதை என் வாழ்க்கையில் கண்ணாரக் கண்டிருக்கிறேன்...''

அன்றுகூட என்னிடம் இப்படித்தான் சொன்னார். எவ்வளவோ பாவங்களைத் தான் செய்திருப்பதாக. இன்றும் இப்படிச் சொல்கிறார். நம்பீசனின் வாழ்க்கையில் எனக்குத் தெரியாத மர்மமான இன்னொரு பகுதி இருக்கும் என்று எனக்கு இதுவரை தோன்றியதில்லை. ஆனால் அவரே அடிக்கடி சொல்கிறாரே...

நான் வந்தபோது நிலவிய இணக்கம், அமைதி, இப்போது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டிருந்தது. தண்ணீரில் போட்ட உப்புத்தான் கண்ணெதிரிலேயே கரைவதைப் பார்ப்பதுபோல, சில நிமிடங்களுக்கு முன்பு



தந்தைக்கும் மகனுக்கும் இடையே ஏற்பட்டிருந்த நெருக்கம்
நான் கவனித்துக் கொண்டிருக்கும்போதே ஆவியாகிக்
கொண்டிருந்தது.

''முடிவாக என்னதான் சொல்கிறீர்கள்? நான் பம்பா
யிலே ஓட்டல் பிஸினஸ் ஆரம்பிக்க நீங்கள் ஏற்பாடு செய்
வீர்களா, மாட்டீர்களா?''

''அப்படிக் கேட்காதே. அந்த நாட்டியக்காரியின் பின்
னால் சுற்றுவதை அனுமதிக்கப் போகிறீர்களா இல்லையா
என்று கேள்.''

''அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்களேன்.''

''அனுமதிக்கப் போவதில்லை. நீ கெட்டுக் குட்டிச்
சுவராக நான் இடம் கொடுக்கப்போவதில்லை.''

''ஆகாகா! மகன்மீது என்ன பாசம். என்ன பாசம்!''

''கௌதமா! அந்த வார்த்தை மட்டும் சொல்லாதே!
பிரம்மாண்டமான ஓர் ஓட்டலை ஏற்று நடத்துகிற
பொறுப்பு உனக்கு வராது என்று நினைத்துத்தான் அதைச்
சேதுவிடம் ஒப்படைத்திருக்கிறேன். மற்றபடி நீ சௌக்கிய
மாக, சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதில் எனக்கு
அக்கறை இல்லாமல் போய்விடவில்லை. பெற்ற பாசம்
இருப்பதால்தான் இன்றைக்கும் உன் பெயரில் ஒரு லட்ச
ரூபாய் ரொக்கமாகப் பாங்கில் போட்டு வைத்திருக்கிறேன்.
கொடைக்கானல் பங்களாவையும் உனக்குத்தான் தந்திருக்
கிறேன்...''

எனக்கு ஆச்சரியமாயிருந்தது இந்தத் தகவல்.

ஆனால் அது கௌதமனின் சீற்றத்தைத்தான் கிளப்பி
விட்டது. ''கூவத்தில் தூக்கி எறியுங்கள் உங்கள் கொடைக்
கானல் பங்களாவையும் லட்ச ரூபாய் ரொக்கத்தையும்!''
என்று வெடித்தான் அவன். ''இந்தக் கை இருக்கிறது.
மூளை இருக்கிறது. படித்துப் பெற்ற பட்டம் இருக்கிறது.

இரண்டே வருஷத்தில் எந்த இடத்தில் வேலைக்குப் போனாலும் அந்தக் காசைச் ச பாதித்துவிடுவேன். மனித னுக்கு—உப்புப் போட்டுக்கொண்டு சோறு தின்கிற மனித னுக்கு—மானம் முக்கியம். கௌரவம் முக்கியம். பெற்ற பிள்ளை நானிருக்க, என்னைத் தள்ளிவிட்டு எங்கிருந்தோ வந்த வழிபோக்கனை வாரிசாகத் தேர்ந்தெடுத்திருக்கிறீர் களே அந்த அநியாயத்தைத் தடுத்து என் மானத்தைக் காப் பாற்றிக் கொள்ளத்தான் நான் போராடுகிறேன்!''

''சபாஷ் மகனே, சபாஷ்!'' என்றார் நம்பீசன். ''மானாவமானங்கள் பற்றி உனக்கு இவ்வளவு உயர்வான கருத்துக்கள் இருப்பதைப்பற்றி ரொம்ப சந்தோஷப்படு கிறேன். ஆனால் உன்னைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக் கிறாளே நாட்டியக்காரி. அவளுக்கும் இவ்வளவு உன்னத மான லட்சியங்கள் இருக்கிறதாக எண்ணாதே. பிடித்தாலும் பிடித்தோம், பெரிய புளியங் கொம்பாய்ப் பிடித்திருக் கிறோம் என்ற ஆனந்தத்தில் மிதந்துகொண்டிருக்கிறாள் அவள். இவ்வளவு பிரம்மாண்டமான சொத்துக்கு எஜமானி யாகும் சந்தர்ப்பம் அவள் பரம்பரையில் யாருக்குமே என்றைக்குமே ஏற்படப்போவதில்லை!'' விடுவாளா இந்தச் சந்தர்ப்பத்தை!''

''யார், ரஜனியையா சொல்கிறீர்கள்! வாயைக் கழுவிக் கொண்டு வந்து அந்த வார்த்தை பேசுங்கள்! உலகப் புகழ் பெற்ற நாட்டியக்காரி அவள். பத்து வருஷத்தில் சம்பாதித்து விடுவாள் இந்தப் பிச்சைக் காசை!''

''அப்படியா!''

''ஆமாம்! பிறர் பொருளை அபகரிக்க வேண்டுமென்கிற அற்ப புத்தி அவளுக்குக் கிடையாது. அவள் முகத்தைப் போய்ப் பாருங்கள்—பெருந்தன்மையைத் தவிர வேறெது லாவது தெரிகிறதா என்று! மகாராணி மாதிரி அவள் உட்



கார்ந்திருக்கிற தோற்றத்தை ஆராயுங்கள், சின்னத்தனம் கடுகத்தனையாவது தென்படுகிறதா என்று பாருங்களேன் போய்! கீழே காரிலேதான் உட்கார்ந்திருக்கிறாள்!''

''என்னது!''

ரஜனி வந்திருப்பதும், காரிலே காத்திருப்பதும் நம்பீச னுக்குத் தெரியும் என்றுதான் நான் நினைத்திருந்தேன். அவருடைய ஆச்சரியமான குரல்தான் அப்படியல்ல என்று புலப்படுத்தியது.

''அந்த நாய் இங்கே ஏன் நுழைய வேண்டும்? யாரைக் கேட்டுக்கொண்டு இங்கே அழைத்து வந்தாய்?'' என்று இரைந்த வண்ணம் அறையை விட்டு வெளியே வந்தார் நம்பீசன். பின்னாலேயே கௌதமனும் வந்தான்.

இருவரும் அப்போதுதான் என்னைக் கவனித்தார்கள். ஆனால் என்னுடன் பேசும் நிலையில் இல்லை.

வெராந்தாவிலிருந்து கீழே பார்த்தார் நம்பீசன். ரஜனி காரை விட்டிறங்கி, தோட்டத்துப் பூச்செடியில் இலைகளைக் கிள்ளி : கொண்டிருந்தாள் ஒயிலாக. நம்பீசனின் முகம் ரத்தமாய்ச் சிவந்தது. என்னைப் பார்த்துக் கட்டளையிட் டார். ''சேது! கீழே வாட்ச்மேனைக் கேள்—கண்ட கண்ட கழுதைகளையெல்லாம் ஏன் உள்ளே விடுகிறான் என்று!''

அவர் குரல் கீழே கேட்டிருக்கும் போலும். ரஜனி நிமிர்ந்து நோக்கினாள் எங்களை.

''அப்பா!'' என்று பல்லைக் கடித்தான் கௌதமன். ''கழுதை உங்கள் ஓட்டலில் இத்தனை நாள் தங்கியிருந்ததே அதை மறக்க வேண்டாம்!''

''அது ஓட்டல். கழுதையானாலும் பணம் கொடுத் தால் இடம் கொடுக்கிறேன். அதுகூடக் கூறுகெட்ட கழுதை என்று தெரிந்தால் மறு நிமிடம் கல்தாதான்.

இன்றைக்கே அதையும் செய்துவிடுகிறேன்!'' என்ற
நம்பீசன், ''சேது! நீ கீழே போய்ச் சொல்கிறாயா
இல்லையா?'' என்று என்னை அதட்டிவிட்டுத் தன்
அறைக்குள் கோபமாகத் திரும்பிவிட்டார்.

அரை விநாடிதான் நான் சங்கடப்பட்டிருப்பேன். அதற்குள் ரஜனியே பிரசினையைத் தீர்த்துவிட்டாள். நம்பீசன் அவளைச் சுட்டிக்காட்டிக் கோபத்துடன் பேசுவது அவளுக்குப் புரிந்துவிட்டது. வேகத்துடன் காருக்குத் திரும்பியவள், விருட்டென்று அதைக் கிளப்பிக்கொண்டு புறப்பட்டுவிட்டாள்.

கௌதமனின் முகத்தைப் பார்க்கக்கூடப் பயமாயிருந்தது எனக்கு. ''அப்பா!'' என்று உறுமியவன் என்னைத் தடுத்துவிட்டு அவர் அறைக்குள் புகுந்தான். ''ரஜனியை மிகவும் இன்ஸல்ட் பண்ணிவிட்டீர்கள். அவள் கோபித்துக்கொண்டு போகிறாள். உடனே வந்து மன்னிப்புக் கேளுங்கள் அவளிடம்...''

''சீ! எந்தத் தெருநாயிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது!''

''அப்பா!'' தொண்டை கிழிய அதட்டியவன், ஆங்காரத்துடன் மேஜையை முஷ்டியினால் ஒரு குத்து
விட்டான்.

மறுகணம்.

சிலீரென்று ஓசை கேட்பதையும், கௌதமனின் கையில் ரத்தம் பெருக்கெடுப்பதையும்தான் நான் கண்டேன்.

அவன் குத்திய வேகத்தில் மேஜைக்குப் போட்டிருந்த கண்ணாடி உடைந்து அவன் கையை நன்றாய்க் கிழித்து விட்டது.



'கௌதமா!' பதைத்துக்கொண்டு அருகில் ஓடிவந்தார் நம்பீசன். தான் போர்த்தியிருந்த தேங்காய்ப்பூத் துவாலை யைச் சட்டென்று அவன் கையில் வைத்துச் சுற்றினார். ''சேது!'' அதோ அந்த பீரோவில் முதலுதவிப் பெட்டி வைத்திருக்கிறேன் பார்! எடு சீக்கிரம்!'' என்றார்.

''எனக்கு ஒரு உதவியும் வேண்டாம்! விடுங்கள் என்னை!'' என்று திமிறினான் கௌதமன்.

நான் பீரோவைத் திறக்க முயன்றேன். பூட்டியிருந்தது. சாவியைக் காணோம். ''அங்கே பார், பக்கத்தில் ஆணியில் இருக்கும். அல்லது மேஜையில் இருக்கலாம்.'' என்றெல் லாம் சொல்லிக் கொண்டேயிருந்தார் நம்பீசன். நான் தேடினேன். கூச்சல் கேட்டு ஓடிவந்து வேலைக்காரர்களும் தேடினார்கள். யார் கையிலும் சாவி அகப்படவில்லை.

''நீ இவனைப் பிடி!'' என்று சொல்லி, விடுபடத் திமிறிக் கொண்டிருந்த மகனை என்னிடம் ஒப்படைத்தார். தானே அந்தச் சிறிய மர பீரோவின் பிடியைப் பிடித்து உலுக்கு உலுக்கென்று உலுக்கினார் தோள்களால். அதன் கதவின் மீது மோதினார்.

வயதானவர், நோயாளி இப்படி அலட்டிக் கொள் கிறாரே என்று வேதனைப்பட்ட அதே சமயத்தில் என் உள்ளத்துக்குள் மகிழ்ச்சியும் பிறந்தது. தாவாடா
விட்டாலும் சதையாடும் என்பது எவ்வளவு உண்மை!
'கடவுளே! இந்தப் பாச உணர்வு இப்படியே நீடிக்கட்டும்
என்று வேண்டிக்கொண்டேன்.

எப்படியோ ஒரு வழியாய்த் திறந்து, முதலுதவிப் பெட்டியை எடுத்தார் நம்பீசன். வேலைக்காரர்களைப் போகச் சொன்னார். என்னை மட்டும் துணைக்கு வைத்துக் கொண்டு, கௌதமனின் கையில் சதை கிழிந்திருந்த

இடத்திலிருந்து கண்ணாடித் தூள்களை ஒவ்வொன்றாய் அப்புறப்படுத்திவிட்டு, மருந்து போட்டுப் பஞ்சு வைத்துக் கட்டினார். ''சேது! இவன்மீது எனக்குப் பாசம் கிடையாதாம், அப்பா! சொல்கிறான்! கேட்டாயல்லவா?'' என்று சொல்லிக்கொண்டே முதலுதவியைச் செய்து முடித்தார்.

தரையில் சிந்தியிருந்த ரத்தத்துளிகளின்மீது அவருடைய கண்ணீர்த் துளிகளும் விழுந்து, அவற்றின் கெட்டிச் சிவப்பை நீர்க்கச் செய்துகொண்டிருப்பதைக் கண்டபோது, உறவு என்கிற பந்தத்தை அழிக்க உலகத்தின் எந்தச் சக்தியினாலும் முடியாது என்று எண்ணிக்கொண்டேன்.

அகங்காரம் என்ற சர்வ வல்லமையான சக்தியொன்று இருப்பதை நான் மறந்துவிட்டேன்.

கட்டுக் கட்டி முடிந்ததும், சங்கிலி அவிழ்க்கப்பட்ட புலிக்குட்டி போலச் சிலிர்த்துக் கொண்டு எழுந்து நின்றான் கௌதமன்.

''முடிவாக என்னதான் சொல்கிறீர்கள்?''

நான் குறுக்கிட்டுச் சமாதானம் செய்ய முயன்றேன். ''கௌதமன், இப்போது என்ன அவசரம் வந்துவிட்டது? கொஞ்சம் பொறுத்தால்...''

''நீ சும்மா இரு'' என்று என்னை அப்பால் தள்ளினான் கௌதமன். உங்களைத்தான் கேட்கிறேன்.''

'பத்து நிமிடம் முன்பு, நீ கையில் இந்தக் காயம் பட்டுக் கொள்ளும் முன்னால், என்ன சொன்னேனோ அதே தான்!'' என்றார் நம்பீசனும்.

''அப்பா! வேண்டாம், வேண்டாம் என்று பார்த்தேன். இனி பொறுக்க மாட்டேன்!'' என்று எச்சரித்தான் கௌதமன். ''மகா பெரிய மனிதர் என்று உலகத்தில்



நடமாடி, இந்தச் சேது உள்பட எல்லோரிடமும் மதிப்பைப் பெற்றிருக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய கௌரவத்துக்கும் பெருமைக்கும் ஒரே நொடியில் வேட்டு வைக்க எனக்குத் தெரியும். இருபத்து நாலு மணி நேரம் அவகாசம் தருகிறேன். வேறு முடிவுக்கு வாருங்கள்!''

கௌதமன் விடுவிடுவென்று படியிறங்கிப் போய் விட்டான்.

நம்பீசனின் கை விரல்களும் தலையும் குளிரில் நடுங்குகிற மாதிரி ஆடிக்கொண்டிருந்தன.

''சார், பதறாதீர்கள்! இருங்கள்! அப்படியே கொஞ்சம் சோபாவில் சாய்ந்துகொள்ளுங்கள்!'' என்று அவரைத் தாங்கிக்கொண்டேன்.

அவர் என் பேச்சைக் கேட்கவில்லை. தள்ளாடித் தள்ளாடி ஸ்டீல் பீரோவை அடைந்தார். தடுமாறிக் கொண்டே அதைத் திறந்து ஒரு தஸ்தாவேஜை எடுத்தார்.

''சேது... இதுதான் என் உயில். நீயே வைத்திரு...'' என்று சொல்லி, நான் தடுப்பதைப் பொருட்படுத்தாமல் மடித்து என் சட்டைப்பையில் திணித்தார். 'இது என்னிடம் இருக்கக்கூடாது... அவன்... கௌதமன் என்னை எது வேண்டுமானாலும் செய்துவிடுவான்... கொலைகூட நடக்கலாம்...''

சோபாவில் தொப்பென்று விழுந்தார் நம்பீசன். ஆதுரத்துடன் அவரைத் தாங்கிக்கொண்டேன்.

# 13

''விடு, விடு. எனக்கு ஒன்றுமில்லை'' என்று நம்பீசன் என் கைகளை விலக்கினார். கௌதமன் சென்ற திசையையே வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவருடைய உடம்பு தடதடவென்று ஆடிக்கொண்டிருந்தது.

கைவிரல்களின் படபடப்பை நான் என் கைப்பிடியில் உணர்ந்தேன். அவருக்கே தெரியாத ஏதோ ஒரு மனோ சக்திதான் அவரை வலிப்புக்குள்ளாக்காமல், முழுப் பிரக்ஞையுடன் இருக்கச் செய்தது.

"மிரட்டுகிறான் ராஸ்கல்! இருபத்துநாலு மணி நேரமாம்! என் பெருமை பறந்துவிடுமாம்!" என்று முணு முணுத்தார். "என்னதான் செய்வான், பார்த்துவிடு கிறேன்!"

நானும் ஊகித்து ஊகித்துப் பார்த்தேன். எதை வைத்துக்கொண்டு கௌதமன் மிரட்டியிருக்க வேண்டும் என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

"சரி, சரி. நீ ஓட்டலுக்குப் போ. வேலைகள் காத் திருக்கும். மதுவிலக்குக் கான்ஃபரென்ஸ் பிரதிநிதிகளுக்கு ஏற்பாடு செய்துவிட்டாயல்லவா?" என்று கூறி, தான் இயல்பாகவே இருப்பதாகக் காட்டிக்கொள்ள முயன்றார் நம்பீசன்.

அதுவே எனக்கு அவரிடம் அளவற்ற பரிதாபத்தை ஏற்படுத்தியது. என் எஜமானர், என்னைச் சோறூட்டி ஆளாக்கிய தர்மவான், அல்லும் பகலும் என் சிந்தையில் குடிகொண்டிருக்கும் தெய்வம்—அவர் இப்படி நடுங்குவ தாவது என்று ஆத்திரம் மேலிடக் குமுறினேன்.

நம்பீசனைச் சிறிது நேரம் படுத்திருக்கச் சொல்லிவிட்டு, சமையற்காரர் மூலம் காப்பி வரவழைத்துத் தந்தேன். அவருடைய தலைமாட்டிலேயே உட்கார்ந்திருந்தேன். மன நிம்மதியிழந்து அவர் கட்டிலில் இப்படியும் அப்படியும் புரண்டுகொண்டிருந்தார். எனக்குள் லேசாக நம்பிக்கை யொன்று இருந்தது. கௌதமனின் மிரட்டலில் கடுகத்தனை உண்மை இருக்கிறது என்பதை அவரே ஒப்புக்கொண்டு, மெல்ல மெல்ல அது என்ன விஷயம் என்று சொல்வாரென



எதிர்பார்த்தேன். ஊகூம். தலையணைகளை மாற்றிப் போட்டுக்கொண்டார். பெட்ஷீட்டின் நுனிப்புறத்து நூல் களைப் பிரித்தார். எனக்குத் தெரியாமல் மறுபக்கம் ஒரு கணித்துக்கொண்டு கண்களைத் துடைத்துக்கொண்டார். படித்துவிட்ட தினசரியில், ஒரே மூலையில் தன் கண்களை பதித்துக்கொண்டு, படிக்கிறமாதிரி பாசாங்கு செய்தார். ஆனால் வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்லவில்லை. நான் கோடி கண்டுகொள்கிற மாதிரி எவ்விதக் குறிப்பும் காட்டவில்லை.

பிறகுதான் வேறோர் எண்ணம் தோன்றியது. இவரைக் கவனிப்பதைக் காட்டிலும் கௌதமனைக் கண்காணிப்பது நல்லதில்லையோ? அவன் என்ன ஆதாரம் வைத்துக் கொண்டு தந்தையை மிரட்டுகிறான், என்னென்ன வழிகளில் இறங்கியிருக்கிறான் என்பதை அவனிடமே கண்டறிய லாமே?

"சரி, நான் ஓட்டலுக்குப் போகிறேன்" என்று எழுந்து கொண்டேன்.

ஓட்டல் வழக்கம்போல் இயங்கியது. அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டுக்காக வந்திருந்த பிரதிநிதிகளில் உத்தரப் பிரதேசத்துக்காரர்கள் 'ஓட்டல் உமா'வில் தங்கி யிருந்தார்கள். மொத்தம் முப்பத்தெட்டுப் பேர். அந்தக் குழுவின் முதல்வராக வந்திருந்தவர், பிரகாஷ் என்ற இளைஞர். நல்ல இந்தி நாடகாசிரியர் என்றும் நடிக ரென்றும் சொன்னார்கள்.

ஓட்டல் உமாவின் உணவு வகைகள் அவர்களுக்குத் திருப்திகரமாக இல்லையாம். ராமப்பிரம்மத்திடம் பிரகாஷ் கூறப்பட்டதாகத் தெரிந்தது. வட இந்திய வகைகளுக் காகவே பிரத்தியேகமாக ஒரு சரக்கு மாஸ்டர் இருந்தார். அவருக்குக் கீழே ஐந்து சிப்பந்திகள் உண்டு. ஆகவே,

பிரகாஷுக்கும் அவருடைய குழுவினருக்கும் என்ன குறை என்பதை அறிந்துகொண்டால் நிவர்த்திப்பது எளிது என்று தோன்றியது.

வீட்டுக் குழந்தைக்கு உடம்பு சரியில்லாதபோது சினிமாவுக்கு வந்திருந்தால் எப்படி மனம் எதிலும் ஒட்டாமல் அலைபாயுமோ அதுபோல, கௌதமனுக்கும் நம்பீசனுக்கும் கடும் பகைமை கொண்டிருக்கும் அந்த பின்னணியில், இன்னொரு உலகத்தின் கவலைகளிலும் கேளிக்கைகளிலும் கலந்துகொள்ள வேண்டியவனாக இருந்தேன். இருந்தாலும், புத்தியை வேறு திசையில் செலுத்த இதுவும் ஒரு சந்தர்ப்பமாயிற்று என்று எண்ணியவனாக, பிரகாஷ் தங்கியிருக்கும் அறையை விசாரித்துக்கொண்டு சென்றேன். அங்கே—

வாசலுக்கு வெளியே வெராந்தாவில் இருந்த பிரம்பு நாற்காலியொன்றில் இந்திரா உட்கார்ந்திருந்தாள். தாமரைப் பூ விரிந்தாற்போல் தனது இரு கை விரல்களையும் அகலப் பிரித்து அதிலே தன் மோவாயைத் தாங்கிக்கொண்டு குனிந்தாற்போல் உட்கார்ந்திருந்தாள் அவள். விரல்கள் அழுந்தப் பிடித்திருந்ததால், வெல்வெட் கன்னத்தின் செழுமை அமுங்கி மடிந்து, இரு புருவங்களின் நுனிகளுக்கு ஏறியிருந்தன. சிந்தனை வசப்பட்டிருந்தவள் என்னைக் கவனிக்கவில்லை.

''பென்னி ஃபார் யுவர் தாட்ஸ் என்பார்கள். நான் லட்ச ரூபாய் தருகிறேன்'' என்றேன்.

திடீரென அவ்வளவு அருகில் குரல் கேட்டதும் திகைத்து நிமிர்ந்தவள் நான்தான் என்று அறிந்ததும் முறுவலித்தாள். ''உங்களுக்கென்ன லட்சாதிபதி! எவ்வளவு வேண்டுமானாலும் தருவீர்கள். நான் சிந்தனையில்கூட ஏழை!'' என்றாள்.



நாக்கைக் கடித்துக்கொண்டேன், நல்லவேளையாக லட்சாதிபதித்தனமாகப் பேசிவிட்டேனே என்று. ''எங்கே இவ்வளவு தூரம்?''

''மிஸ் ரஜனி உள்ளே போயிருக்கிறாள்'' என்று பிரகாஷ் தங்கியிருந்த அறையைக் காட்டினாள்.

''மிஸ்டர் பிரகாஷ்?''

''ரஜனிக்குத் தெரியாத கலைஞரோ, ரஜனியைத் தெரியாத கலைஞரோ கிடையாது'' என்றாள் இந்திரா.

உள்ளே நுழைவதா வேண்டாமா என்று அறை வாசலில் சில நிமிடங்கள் தயங்கினேன்.

பிரகாஷின் குரல் கேட்டது: இருவரும் ஆங்கிலத்தில் உரையாடிக் கொண்டிருந்தார்கள். ''நேற்றே ரோமில் நிகழ்ச்சிகள் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? சீக்கிரம் பம்பாய் வந்துவிடுங்கள்'' என்றார் பிரகாஷ்.

''எல்லா புரோக்ராமும் முடிந்துவிட்டன'' என்று ரஜனி கூறிக்கொண்டிருந்த சமயம் நான் உள்ளே நுழைந்தேன். 'ஒரு முக்கியமான விஷயத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். அது உண்டு இல்லையென்று நாளைக்குத் தெரிந்துவிடும். தெரிந்த மறு நிமிடமே கிளம்பிவிட வேண்டியதுதான்.'' என்று என்னைப் பார்த்தவாறு சொல்லிக்கொண்டு எழுந்தாள் ரஜனி.

''ஒரு நிமிஷம்'' என்று என் அனுமதியைப் பெற்றுக் கொண்டு, வாசல் வரை அவளுக்குத் துணை சென்றார் பிரகாஷ். 'முக்கியமான விஷயமோ இல்லையோ, எப்படியும் இந்த வாரம் பம்பாய்க்கு வந்துவிட முயற்சி செய்யுங்கள். டி. வி.யிலும் ராஜ்பவனிலும் ஒரு விசேஷமான புரோக்ராம் ஏற்பாடு பண்ணப் போகிறேன்.' என்று அவர் கூற, ''கட்டாயம் அதற்கு வந்துவிடுவேன்'' என்று ரஜனி பதிலளிக்க, பிரகாஷ் உள்ளே திரும்பி வந்தார்.

சாப்பாட்டைப் பற்றிய அவருடைய குறைபாடு சாதாரணமானது. என்னதான் வடக்கத்திச் சமையல்காரர்களென்றாலும் தமிழருக்கும் ஆந்திரருக்கும் பண்ணிப் போட்டுப் போட்டு, தங்களையறியாமலே காரத்தைக் கூட்டி வந்திருக்கிறார்கள். வெளியிலிருந்து ரொம்பப் புதிதாக வரும் வட இந்தியருக்குத்தான் தெரியும் போலும் அந்தக் காரத்தின் தாராளம்.

பருப்பும் இனிப்பும் அதிகமாய்ச் சேர்க்கச் சொல்கிறேன் என்று வாக்களித்துவிட்டு என் அறைக்குத் திரும்பினேன்.

காலை கரைந்து பகல் ஏறியது. காற்றிலே வெப்பம் கண்டது.

இன்னதென்றறியாத ஒரு வேதனையினால் என் நெஞ்சு அடித்துக்கொண்டிருந்த வேளையில் கிருத்திகா என் அறை வாசலில் வந்து நின்று, "ஒரு சின்னத் தொந்தரவு" என்றாள்.

"நீ இருக்குமிடத்தில் தொந்தரவு இருக்காது. தொந்தரவு உள்ள இடத்தில் நீ இருக்கமாட்டாய்" என்று கூறிவிட்டு, "என்ன வேண்டும்?" என்றேன்.

"ஏர்—கண்டிஷன் சரியாய் வேலை செய்யவில்லை. மிஸ் ரஜனி வெளியே போயிருக்கிறாள். திரும்பி வருவதற்குள் சரிபண்ணிவிட்டால் தேவலை." என்றாள் கிருத்திகா.

"பார், பார்! என்னை எவ்வளவு விலக்கினாலும் என்னிடம்தான் நீ திரும்பத் திரும்ப வர வேண்டியிருக்கிறது!" என்று கேலி செய்துவிட்டு ஓட்டல் எலக்ட்ரீஷியனை அழைத்துவர ஆளனுப்பினான், மனைவிக்கு உடம்பு சரியில்லை என்று ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறான் என்று தெரிய வந்தது.

"நானே ஓர் அமெச்சூர் எலக்ட்ரீஷியன்தான், வா" என்று கிருத்திகாவுடன் அவள் காட்டேஜை அடைந்தேன்.



என் கண்ணில் பட்ட முதல் மாறுதல், ரஜனியின் லக்கேஜ்கள் கச்சிதமாகக் கட்டி வைக்கப்பட்டிருந்த காட்சிதான். எந்த நிமிடத்திலும் ஊருக்குப் புறப்படச் சித்தமாயிருக்கிறாள் என்று ஊகித்துக்கொண்டேன்.

எனினும் அதுபற்றிக் கேட்காமல், ஏர்கண்டிஷன் பாக்ஸைத் திறந்து பரிசீலனை செய்யத் தொடங்கினேன். கிருத்திகா என்னை உரசினாற்போல் மிக அருகில் நின்றிருந்தாள். ஒவ்வொரு மேனிக்கு ஒவ்வொரு மணம் உண்டு என்பது உண்மையானால், கிருத்திகாவின் மேனியிலிருந்து பாரி ஜாதப் பூவின் மெல்லிய நறுமணம் வந்துகொண்டிருந்தது என்றே சொல்வேன்.

கைத்தவறுதலாக ஒரு சிறு ஸ்க்ரூடிரைவரைக் கீழே போட்டுவிட்டேன். அதை எடுக்கத் திரும்பியபோது கிருத்திகாவின் பாதத்தில் என் கால் பட்டுவிட்டது. அந்தச் சாதாரண விஷயத்துக்கு அவள் ஏன் அவ்வளவு உரக்க 'ஆ'வென்று கத்தினாளென்று முதலில் எனக்குப் புரியவில்லை. அவள் தன் காலைத் தடவிக்கொள்ளும் இடத்தைப் பார்த்த பிறகுதான், ஏற்கெனவே புண்பட்டிருந்த இடத்தில் என் கால் பட்டுவிட்டது என்று புரிந்துகொண்டேன்.

"டெரிப்ளி ஸாரி கிருத்திகா" என்றவன், அவள் கை வைத்திருந்த இடத்திலேயே என் கையையும் வைத்தேன்.

"ஊஹூம்." என்னை விலக்கிவிடக் குனிந்தாள் கிருத்திகா.

என் ஆயுளில் மறக்க முடியாத வினாடி அது. செம்பவள உதடுகள் துடிக்கின்ற அழகையும், எடுப்பான நாசியின் கம்பீரத்தையும் தான் சோகத்திலே ஆழ்ந்திருந்தபோதிலும் உலகத்தை மகிழ்ச்சியிலே ஆழ்த்த விரும்புகின்ற கண்களையும், ரோஜாவில்தான் செய்யப்பட்டதோ என்று சந்தேகிக்க

வைக்கும் கன்னத்தின் மென்மையையும் குடிகாரனைப்போல மாத்தி என் அறிவிழந்தேன்; வசமிழந்தேன்; நினைவிழந்தேன்.

''கிருத்திகா, நாளைக்கு நீயும் ரஜனியுடன் போய்த்தான் ஆகவேண்டுமா?'' என்றேன். என் குரலை நானே வெகு எட்டத்திலிருந்து கேட்கிற மாதிரி இருந்தது.

கிருத்திகா புன்னகை செய்து, ''நீயும் என்றால்? ரஜனி புறப்படுவது நிச்சயம் என்கிறீர்களா?'' என்றவள், கட்டி வைக்கப்பட்டுள்ள லக்கேஜ்களின் மீது என் பார்வை செல்வதைக் கண்டாள். ''எல்லாம் நல்லபடியாய்த்தான் முடியப்போகிறது. மிஸ் ரஜனி உங்கள் முதலாளியின் மருமகளாகத்தான் வரப்போகிறாள்—நீங்கள் என்ன தடுத்தாலும்!'' என்றாள்.

''நான் தடுப்பதையோ ஆதரிப்பதையோ பொறுத்த தில்லை விஷயம். அதற்குமேல் போயாகிவிட்டது.'' என்று பதிலளித்தேன். ''நம்பீசன் ரொம்ப ரொம்பத் தீவிரமாய் இருக்கிறார். உயிர் போனாலும் உன் அக்காவுக்கு இடம் கொடுக்கப் போவதில்லை''

தலையைச் சாய்த்து ஊம் கொட்டினாள் அவள், ''அப்படியா?'' என்கிற பாவனையில்.

''கிருத்திகா, ரஜனி எங்கு வேண்டுமானாலும் போகட்டும். நீ இங்கேயே தங்கிவிட மாட்டாயா? கூடாதா?''

''எனக்கு ரஜனியை விட்டுவிட்டுத் தனி வாழ்க்கை கிடையாது'' என்று கிருத்திகா புன்னகை செய்தாள்.

''தனி வாழ்க்கை ஏன்? நான் இருக்கிறேன்'' என்று எப்படியோ துணிச்சலுடன் சொல்லிவிட்டேன். 'கிருத்திகா, இன்றைக்கு வேண்டாம், நாளைக்கு வேண்டாம், அடுத்த மாதமோ அடுத்த வருஷமோகூட வேண்



டாம். என்றைக்காவது ஒருநாள், உன் சகோதரியிடம் உனக்குக் கசப்பு ஏற்படுமானால், எப்போதாவது ஒருமுறை அவளுடன் வாழ்க்கை நடத்துவது பொறுக்க முடியாமத் போகுமானால், என்னிடம் வருவாயா? சேது என்ற ஹைதர் காலத்துப் பெயருடன் சகிக்க முடியாத ஒரு கோட்டையும், டையையும் மாட்டிக்கொண்டு நிற்கும் ஒரு அசடு, கொடுப்பதற்கு இருதயத்தைத் தவிர வேறு சொத்து இல்லாத ஒரு ஏழை, யாசிப்பதற்கு உன் அன்பைத் தவிர வேறெதையும் அறியாத ஓர் அரைப்பைத்தியம் இங்கே உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள் வாயா?''

''வேலையைக் கவனியுங்கள்'' என்றாள் கிருத்திகா.

இரவு முழுவதும் கெட்ட கனாக் கண்டு திடுக்கிட்டுத் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தேன் கட்டிலில். உலகத்துக்கெல்லாம் உற்சாகமாக விடிந்த பொழுது, எனக்கு பளு சேர்ப்பதாகப் பிறந்தது கண்ணில் ஏற்பட்டிருப்பதா, மனத்தில் ஏற்பட்டிருப்பதா, எந்த எரிச்சல் அதிகம் என்று தெரியாதவனாக வாடிக்கையான வாழ்க்கையில் ஈடுபட நினைத்தேன்.

நம்பீசனின் வீட்டுக்குப் போன் செய்து விசாரித்ததில், கௌதமன் பிறகு விரவில்லையென்றும், எஜமானர் தற் சமயம் காலையுணவு அருந்திவிட்டு பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறார் என்றும் அறிந்துகொண்டேன்.

பத்துமணி சுமாருக்கு, காட்டேஜின் பக்கம் பார்த்த போது கிருத்திகா இருப்புக்கொள்ளாமல் கையைப் பிசைந்து கொண்டு வாசலில் நிற்பதைக் கவனித்தேன். ஏதோ விபரீதம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்று நினைத்தவனாக, என் வேலையைப் போட்டது போட்டபடி விட்டுவிட்டு, அங்கே நகர்ந்தேன், கிருத்திகாவிடம் விசாரிக்கலாமென்று.

அதற்குள் இருத்திகா உட்பக்கம் சென்றுவிட்டாள்.

ரஜனி, நான் சற்றும் எதிர்பாராத விதத்தில் வாசற் புறம் வந்தாள். "ஓ! மானேஜர் சாரா! உங்களைத்தான் நினைத்தேன் வந்துவிட்டீர்கள். துபாய்க்குப் பிளேன் எப்போது புறப்படுகிறது என்று கொஞ்சம் விசாரித்துச் சொல்கிறீர்களா?" என்றாள்.

பின்னாலேயே வேகமாக வந்த கௌதமன், "ரஜனி! அம்மா இருக்கமாட்டாய் நீ? அந்தக் கிழம் இல்லையென்றால் இல்லையாகிவிடுமா? என்னை அவ்வளவு கையாலாகாதவன் என்று நினைக்கிறாயா?" என்று இரைந்தான்.

"சே, சே! அப்படியெல்லாம் நினைப்பேனா? நீங்கள் பாட்டுக்குச் சண்டை போட்டுக்கொண்டிருங்கள். நான் பாட்டுக்கு என் தொழிலைக் கவனித்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொன்னபோது ரஜனியின் குரலில் தொனித்த கேலியை நான் மட்டும் கண்டுகொண்டேன்.

"பிஜு! நீ போய் ஒரு டாக்ஸி அழைத்து வா. இருத்திகா! உள்ளே தூங்குகிறாயா? மிஸ்டர் சேது இனி மேல் சில்லறை வேலைகளெல்லாம் செய்யமாட்டார். அவர் இப்போது முதலாளி. நீ போய் ரிஸெப்ஷனில் விசாரி, பிளேன் விஷயம்" என்று கட்டளைகளை அடுக்கடுக்காகப் பிறப்பித்தான்.

கௌதமனின் பார்வைக்கு எரிக்கும் சக்தி இருந்திருந்தால் நான் சாம்பல் குவியலாகியிருப்பேன். முகம் சிவக்க, பல்லைக் கடித்துக்கொண்டு அவன் வெளியேறினான்.

நான் அந்தச் சில நிமிடங்களைப் பிரமை பிடித்தவனாகவே கழித்தேன்.

கணக்கைத் தீர்ப்பதற்காக ரஜனி ஆபீஸ் அறையை நோக்கிப் போனபோதுதான் எனக்குச் சுயநிலை வந்தது. கௌதமன் ஒருகால் நம்பீசனிடம் சென்றிருக்கக்கூடுமோ எனச் சந்தேகம் உண்டாயிற்று.



நம்பீசனின் பங்களாவை நோக்கி என் கார் பறந்துகொண்டிருந்தபோது, மீனம்பாக்கத்தின் திசையில் ரஜனியின் டாக்ஸி விரைந்து கொண்டிருந்தது.

தந்தைக்கும் மகனுக்கும் நடுவே புகக்கூடாதென்றுதான் நினைத்தேன். அதனால்தான் உச்சக் குரலில் கூச்சல் கேட்டபோதிலும் உள்ளே நுழையாமல் வெளியிலேயே நின்றேன்.

ஆனால், "அந்தச் சேதுவே உமது முகத்தில் காறித் துப்பும்படி பண்ணுகிறேனா இல்லையா பாருங்கள்! அவனுக்காகத்தான் காத்திருக்கிறேன்!" என்று கௌதமன் உறுமியதைக் கேட்ட பிறகு எனக்குத் தாளவில்லை.

"கௌதமா! நீ இன்னும் ஆயிரம் பிறவி எடுத்தாலும், அப்படிப்பட்ட ஒரு காரியத்தை மனத்தாலும் நினைக்கும்படி என்னைப் பண்ண முடியாது!" என்றவாறு உள்ளே நுழைந்தேன்.

"வாருங்கள் மிஸ்டர் புது லட்சாதிபதி! இந்த மனிதரிடம் உங்களுக்கு அவ்வளவு விசுவாசமா? ஓகோ! ஏன் சார்? அந்த விசுவாசத்துக்கு என்ன காரணம் என்று தயவுபண்ணிச் சொல்ல முடியுமா!" என்றான் கௌதமன்.

முகம் வெளுத்து, கைகால்கள் அசைவற்று நாற்காலியில் சாய்ந்து கிடக்கும் என் எஜமானரைப் பார்த்தேன். "சேது! நீ இங்கே இருக்காதே. போய்விடு" என்று கெஞ்சினார் அவர்.

"பயப்படாதீர்கள். இவன் என்ன செய்துவிட முடியும்? என்ன சொல்லிவிடுவான் அப்படி?" என்று அவருக்குத் தைரியம் கூறிவிட்டு, "கௌதமா! என்ன அப்படி விசுவாசம் என்றா கேட்டாய்? இதோ உன் முன்னே நாகரிகமாய் உடையணிந்து, வாட்டசாட்டமான இருபத்தேழு வயதுக் காளையாக நிற்கிற உருவத்தைப் பார். விளங்கும். எந்தச் சேரி

யிலோ உருத்தெரியாமல் நசித்துப் போயிருக்க வேண்டிய பிறவி இது. கொலைகாரனின் மகன் என்று சமூகத்தால் ஓட ஓட அடித்துத் துரத்தப்பட்டிருக்க வேண்டிய துரதிருஷ்டக் கட்டை இது. நீதிமன்றத்தில், ஜூரர்களின் பெஞ்சில் வரிசையாக உட்கார்ந்திருந்த அத்தனைபேரும் என் தந்தையைக் 'குற்றவாளி' என்று தீர்ப்பளித்தபோது, அவரை 'நிரபராதி' என்று கடைசிவரை சொன்ன உத்தமர் உன் தந்தை. குற்றமற்றவனின் பிள்ளை என்று கூறி என்னை...''

''ஹாஹ்ஹா!'' என்று சிரித்தான் கௌதமன். ''டேய் முட்டாள்! அடிமடையா! உன் அப்பாவை நிரபராதி என்று அவ்வளவு நிச்சயமாக ஏன் இவர் சொன்னாரென்று ஒரு நிமிஷமாவது யோசித்துப் பார்த்திருக்கிறாயா?''

''ஏன்... ஏன்?'' என் மார்பை அடைத்தது.

''ஏனென்றால் குற்றவாளி யார் என்று இவருக்கு நிச்சயமாய்த் தெரியும். ஏனென்றால், கொலைகாரன் எவனென்று இவருக்கு மிக நன்றாய்த் தெரியும். ஏனென்றால் கொலைகாரன்... கொலைகாரன்... உயர்திரு நம்பீசனே தான்...''

இடுப்பைப் பிடித்துக்கொண்டு இடி இடியென்று சிரிக்கலானான் கௌதமன்.

# 14

உயர்திரு நம்பீசன்தான் குற்றவாளி! உயர்திரு நம்பீசன்தான் குற்றவாளி!

சேது, உன்னைப் பார்த்து நான் பரிதாபப்படுகிறேன். இடிந்து சரிந்து வெளுத்து நடுங்கி, சவம்போல் விழுந்து கிடக்கிறாரே, இந்த மனிதரிடம் எனக்கு பாசம் உண்டு.



ஆனால் உன்னுடையதைப் போன்ற கண்மூடித்தனமானதல்ல என் பாசம். இந்த மனிதரின் குறை—இவர் செய்த பிரம்மாண்டமான குற்றம்—என்னவென்று எனக்குத் தெரியும். ஆகவே என் மதிப்பையும் மரியாதையையும் நாலு பக்கமும் சட்டமடித்துக்கொண்டு, இவ்வளவுதான் என்று வரையறுத்து வைத்துக் கொண்டுவிட்டேன். அதனால்தான் என்னால் சுதந்திரமாக, இவரை எதிர்த்து நிற்க முடிந்தது.

உட்கார், சேது. விருப்பம் இருக்கிறதோ இல்லையோ கேட்டுத்தானே ஆகவேண்டும் கதை மொத்தத்தையும்? உன் முதலாளிக்கென்ன அதிர்ச்சி தாங்காதவர்போல அரை மயக்கத்தில் சாய்ந்துவிட்டார். நீ பாவம், நம்புவதா வேண்டாமா என்று தவிக்கிறாய்.

என் அம்மா, என் ஐந்தாவது வயதிலேயே போய் விட்டார். 'ஆகா! பையனைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று இரண்டாம் கல்யாணம் கூடச் செய்து கொள்ளாமல் இருக்கிறாரே! எப்படிப்பட்ட தியாகம்!' என்று ஊரெல்லாம் இவரை வியந்து பாராட்டியது.

ஆனால், எனக்குத்தான் தாய் இல்லையே தவிர, தனக்கொரு ஆசைநாயகியைத் தேடி வைத்துத்தான் இருந்தார்—ரகசியமாக.

அவள் யாரோ, எப்படிப்பட்டவளோ, என்ன மாதிரி இருந்தாளோ எனக்குத் தெரியாது. திடீர் திடீரென்று இவர் இரவு வேளைகளில் காணாமல் போய்விடுவார். அந்த ரகசியமாகக் கதவைத் திறந்துகொண்டு திரும்புவார். அந்த இரண்டுங்கெட்டான் வயதில் நான் என்னென்னவோ கற்பனைகள் செய்துகொண்டேன். ஓரளவு எனக்குப் புரிந்தது.

அப்போது 'ஒட்டல் உமா'வைச் சின்ன அளவில் நடத்திக்கொண்டிருந்தார். மூன்று சமையல்காரர்கள், ஏழு சர்வர்கள், இரண்டு க்ளீனர் பையன்கள்—அவ்வளவு

தான். தினம் காலையில் அங்கே இட்டிலி காப்பி சாப்பிட்டு விட்டு, கைச் செலவுக்கும் கால் ரூபாய் வாங்கிக்கொண்டு பள்ளிக்கூடம் போவேன். பகல் சாப்பாடு ஓட்டலிலிருந்து ஒரு சர்வர் பையன் கொண்டு வருவான். சாயந்தரம் திரும்புகிறபோது ஓட்டலிலேயே டிபன் சாப்பிட்டுவிட்டு, அங்கேயே வேடிக்கை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப் பேன். இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு, பத்தரை மணிக்குக் கல்லாவைப் பூட்டிக்கொண்டு அப்பா கிளம்பும்போது நானும் அவர் கையைப் பிடித்துக்கொண்டு வீடு திரும்புவேன்.

போகும்போதும் சரி, திரும்பும்போது சரி வழியில் பார்க்கிறவரெல்லாம் அவரைக் கும்பிடுவார்கள். சில பேர் மேல்வேட்டியை இடுப்பில் கட்டிக்கொள்வார்கள். சிலர் புன்சிரிப்புடன் தலையசைப்பார்கள். எவ்வளவு கௌரவ மான நபர், என்ன பெரிய மனிதர் என்றெல்லாம் அவர்கள் மனத்துக்குள் நினைத்துக்கொள்வது எனக்குத் தெரியும்.

இதே பேர்வழி இரவு பதினொரு மணியானதும் நான் தூங்கியாயிற்றா என்று என்னைத் தொட்டுப் பார்த்துவிட்டு என்மீது போர்வையை நன்றாய்ப் பிரித்துப் போர்த்துவிட்டு ஓசைப்படாமல் எழுந்து, அடிமேலடி வைத்து நடந்து, கதவை அடைந்ததும் சில வினாடிகள் நின்று, நான் தூங்கிக் கொண்டுதான் இருக்கிறேனா என்பதை மறுபடியும் ஒருமுறை நிச்சயப்படுத்திக் கொண்டபின், கதவைச் சாத்திக்கொண்டு, வெளிப்புறம் பூட்டிக்கொண்டு திருடன் போல நழுவிப் போகிறார் என்பது யாருக்கும் தெரியாது. எனக்குத் தெரியும்.

அப்படியிருந்த சமயத்தில் எனக்குத் திடீரென்று ஜுரம் வந்தது. ஸ்கூலுக்குப் போக முடியாமல் லீவு போட்டேன்.

பத்து நாட்கள் கழித்து, டைபாயிடு என்று டாக்டர் மருந்து கொடுத்தார். ஊசிகள் போட்டார். உன் முதலாளி என் பக்கத்திலேயே இருந்து பணிவிடைகள் செய்தார். நான்



தூங்குகிற வரையிலும்—அதாவது நான் தூங்கிவிட்டதாகத் தோன்றுகிற வரையிலும், பிறகு வழக்கம்போல நழுவி விடுவார்.

நாங்கள் அப்போது இருந்தது சிந்தாதிரிப்பேட்டையில், ஒரு சின்ன வீடு. தெருக் கோடியில் தனியாக இருந்தது. அவர் போவதையோ வருவதையோ யாரும் கவனிக்க மாட்டார்கள்.

அன்று இரவு எனக்கு அனேகமாக நினைவேயில்லை. கடுமையாய்க் காய்ச்சல் அடிக்கிறது என்று எனக்கே தெரிந்தது. மூச்சு வெளிவிடும்போது நெருப்புக் காற்று போல் சுவாசம் என் உதடுகளைச் சுட்டது. இப்படியும் அப்படியும் புரண்டுகொண்டிருந்தேன்.

அன்றைக்குக்கூடத் திருவாளர் தந்தை இதனால் என் பக்கத்திலேயே இருக்க முடியவில்லை. கொஞ்சநேரம் இருந்தார். பிறகு ஸில்க் ஜிப்பாவும் மைனர் செயினுமாக, கிளம்பிவிட்டார்!

எனக்குத் தூக்கம் வரவில்லை என்பதோடு மட்டுமல்ல; அவர் திரும்பி வந்ததும் ஹோவென்று அழுது ரகளை செய்ய வேண்டுமென்று, வீம்புடன் கண்ணை மூடாமல் காத் திருந்தேன்.

இரவு இரண்டுமணி இருக்கும். அவர் வருகிற சப்தம் கேட்டது. ''நீங்களா அப்பா?'' என்று குரல் கொடுத்தேன்.

''ஊம், ஊம்,'' என்றாரே தவிர, உடனே என்னிடம் வரவில்லை. ''இங்கே வாருங்களேன்'' என்று கூப்பிட்டேன். ''இதோ,'' என்றார். ஆனால் வரவில்லை.

அடுத்த அரைமணி நேரம் அவர் குழாயடியில் மெதுவே வேலை செய்யும் ஓசைகள் என் காதில் கேட்டுக்கொண்டே யிருந்தன. துணிகளை அலசுகிறார். சோப்புத் தேய்க்கிறார், உடம்பைச் சுத்தம் செய்துகொள்கிறார்.

தான். தினம் காலையில் அங்கே இட்டிலி காப்பி சாப்பிட்டு விட்டு, கைச் செலவுக்கும் கால் ரூபாய் வாங்கிக்கொண்டு பள்ளிக்கூடம் போவேன். பகல் சாப்பாடு ஓட்டலிலிருந்து ஒரு சர்வர் பையன் கொண்டு வருவான். சாயந்தரம் திரும்புகிறபோது ஓட்டலிலேயே டிபன் சாப்பிட்டுவிட்டு, அங்கேயே வேடிக்கை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப் பேன். இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு, பத்தரை மணிக்குக் கல்லாவைப் பூட்டிக்கொண்டு அப்பா கிளம்பும்போது நானும் அவர் கையைப் பிடித்துக்கொண்டு வீடு திரும்புவேன்.

போகும்போதும் சரி, திரும்பும்போது சரி வழியில் பார்க்கிறவரெல்லாம் அவரைக் கும்பிடுவார்கள். சில பேர் மேல்வேட்டியை இடுப்பில் கட்டிக்கொள்வார்கள். சில பேர் புன்சிரிப்புடன் தலையசைப்பார்கள். சிலர் எவ்வளவு கௌரவமான நபர், என்ன பெரிய மனிதர் என்றெல்லாம் அவர்கள் மனத்துக்குள் நினைத்துக்கொள்வது எனக்குத் தெரியும்.

இதே பேர்வழி இரவு பதினொரு மணியானதும் நான் தூங்கிவிட்டேனா என்று என்னைத் தொட்டுப் பார்த்துவிட்டு என்மீது போர்வையை நன்றாய்ப் பிரித்துப் போர்த்துவிட்டு ஓசைப்படாமல் எழுந்து, அடிமேலடி வைத்து நடந்து, கதவை அடைந்ததும் சில விநாடிகள் நின்று, நான் தூங்கிக் கொண்டுதான் இருக்கிறேனா என்பதை மறுபடியும் ஒருமுறை நிச்சயப்படுத்திக் கொண்டபின், கதவைச் சாத்திக்கொண்டு, வெளிப்புறம் பூட்டிக்கொண்டு திருடன் போல நழுவிப் போகிறார் என்பது யாருக்கும் தெரியாது. எனக்குத் தெரியும்.

அப்படியிருந்த சமயத்தில் எனக்குத் திடீரென்று ஜுரம் வந்தது. ஸ்கூலுக்குப் போக முடியாமல் லீவு போட்டேன்.

பத்து நாட்கள் கழித்து, டைபாயிடு என்று டாக்டர் மருந்து கொடுத்தார். ஊசிகள் போட்டார். உன் முதலாளி என் பக்கத்திலேயே இருந்து பணிவிடைகள் செய்தார். நான்



தூங்குகிற வரையிலும்—அதாவது நான் தூங்கிவிட்டதாகத் தோன்றுகிற வரையிலும், பிறகு வழக்கம்போல நழுவி விடுவார்.

நாங்கள் அப்போது இருந்தது சிந்தாதிரிப்பேட்டையில், ஒரு சின்ன வீடு. தெருக் கோடியில் தனியாக இருந்தது. அவர் போவதையோ வருவதையோ யாரும் கவனிக்க மாட்டார்கள்.

அன்று இரவு எனக்கு அனேகமாக நினைவேயில்லை. கடுமையாய்க் காய்ச்சல் அடிக்கிறது என்று எனக்கே தெரிந்தது. மூச்சு வெளிவிடும்போது நெருப்புக் காற்று போல் சுவாசம் என் உதடுகளைச் சுட்டது. இப்படியும் அப்படியும் புரண்டுகொண்டிருந்தேன்.

அன்றைக்குக்கூடத் திருவாளர் தந்தை இதனால் என் பக்கத்திலேயே இருக்க முடியவில்லை. கொஞ்சநேரம் இருந்தார். பிறகு ஸில்க் ஜிப்பாவும் மைனர் செயினுமாக, கிளம்பிவிட்டார்!

எனக்குத் தூக்கம் வரவில்லை என்பதோடு மட்டுமல்ல; அவர் திரும்பி வந்ததும் ஹோவென்று அழுது ரகளை செய்ய வேண்டுமென்று, வீம்புடன் கண்ணை மூடாமல் காத்திருந்தேன்.

இரவு இரண்டுமணி இருக்கும். அவர் வருகிற சப்தம் கேட்டது. ''நீங்களா அப்பா?'' என்று குரல் கொடுத்தேன்.

''ஊம், ஊம்,'' என்றாரே தவிர, உடனே என்னிடம் வரவில்லை. ''இங்கே வாருங்களேன்'' என்று கூப்பிட்டேன். ''இதோ,'' என்றார். ஆனால் வரவில்லை.

அடுத்த அரைமணி நேரம் அவர் குழாயடியில் மெதுவே வேலை செய்யும் ஓசைகள் என் காதில் கேட்டுக்கொண்டே யிருந்தன. துணிகளை அலசுகிறார். சோப்புத் தேய்க்கிறார். உடம்பைச் சுத்தம் செய்துகொள்கிறார்.

ஏன் அப்பா என்னிடம் உடனே வரவில்லை என்பதை எண்ணிக் குழம்பிக்கொண்டே நான் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டேன்.

மறுநாள் காலை பொத்தென்று ஏதோ சத்தம் கேட்ட போது லேசாய்க் கண் விழித்தேன். பேப்பர் பையன்தான் காலைத் தினசரியை ஜன்னல் வழியே விட்டெறிந்துவிட்டுச் சென்றான். அதுவரை வீட்டுக்குள் எங்கேயோ இருந்த அப்பா, சட்டென்று வந்தார். பேப்பரை எடுத்தார். முதல் பக்கத்தைப் பார்த்தார். முகம் பேயறைந்த மாதிரி ஆயிற்று. என்னைப் பார்த்தார். நான் தூங்குகிற மாதிரி பாசாங்கு செய்துகொண்டிருந்தேன். அவசரமாக, திகிலுடன் பேப்பரைப் பீரோவின் பின்புறம் மறைவாகச் செருகினார்.

என் முகத்தில் விழிக்கப் பயப்பட்ட மாதிரி, ஒதுங்கிய படியே இருந்து, ஒட்டலுக்குப் போய்விட்டார். நான் அந்தத் தினசரியைப் பிரித்துப் பார்த்தேன்.

முதல் பக்கத்தில் ஒரு கொலைச் செய்தி இருந்தது.

ஒரு பெண் கொலை செய்யப்பட்டதாயும், கோவிந்தசாமி என்ற ஒருவர் அது சம்பந்தமாய்ப் பிடிபட்டிருப்பதாயும் அந்தச் செய்தியில் இருந்தது.

திக் திக்கென்று என் இதயம் அடித்துக்கொண்டது. பயத்தினால் இன்னும் உடம்பைக் கெடுத்துக் கொண்டேன். பாதி மயக்கத்தில் கிடந்தேன்.

அன்று இரவு என்னை வந்து பார்த்த டாக்டர், இருபத்து நாலு மணி நேரம் தாண்ட வேண்டும் என்று கெடு வைத்துவிட்டுப் போனார்.

என் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார் அப்பா. நடுவிலே ஒருமுறை நான் கண் விழித்தபோது அவரைக் காணவில்லை.



உள்ளே சரக்கென்று ஒரு தீக்குச்சியைக் கிழிக்கும் சத்தம் கேட்டது. சிகரெட்டோ சுருட்டோ பிடிக்கும் பழக்கம் கிடையாது அவரிடம். பின் என்னதான் செய்கிறார் அடுத்த அறையில்? மெல்லக் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டு உடம்பை வளைத்துப் பார்த்தேன்.

சுவாமி படத்தின் முன்னால் விளக்கை ஏற்றிவைத்து, ஊதுவத்தி கொளுத்தி, விழுந்து விழுந்து எழுந்து கன்னத்தில் போட்டுக் கொண்டிருந்தார். அவர் ஏதோ முணுமுணுப்பதும் கேட்டது. அந்த முணுமுணுப்பில்தான் அவர் செய்துவிட்டு வந்துள்ள காரியத்தின் விவரம் இருக்கிறது என்று ஊகித்தேன். மூச்சு விடும் ஓசைகூடக் கேட்டுவிடாதபடி வெகு எச்சரிக்கையாகக் கட்டிலை விட்டு இறங்கி, அறையின் வாசலுக்குச் சென்று சுவரோடு சுவராக ஒட்டிக்கொண்டு நின்று கேட்டேன் அந்த வார்த்தைகளை.

சேது! உன் முதலாளி என்ன சொல்லிக் கொண்டிருந்தார் தெரியுமா?

'ஆண்டவனே! என்னை மன்னித்துவிடு. நான் செய்த பாவத்துக்காக என் மகனைப் பலி வாங்கிவிடாதே. எவ்வளவு பெரிய பாதகத்தை என்னை அறியாமலே செய்துவிட்டேன்! அவள்மீது நான் வைத்திருந்த மட்டற்ற காதல் தான் காரணம். அவள் எனக்குத் துரோகம் இழைப்பாளென்று நான் நினைக்கவேயில்லை. அவள் தொழிலே அதுதான் என்று தெரிந்துகொள்ள எனக்கு இத்தனை நாளாகியிருக்கிறது. தெய்வமே! இனிமேல் இந்தப் பழக்கங்களுக்கு அடிமையாகமாட்டேன். என் மகனை வளர்ப்பதைத் தவிர, என் ஓட்டலை அபிவிருத்தி செய்வதைத் தவிர, வேறு எதிலும் என் புத்தியைச் செலுத்தமாட்டேன். என்னை மன்னித்துவிடு. என் பிள்ளையை என்னிடமிருந்து பறித்துவிடாதே... தண்டனை கொடுத்துவிடாதே!''

இப்படியே திரும்பத் திரும்ப முனகிக் கொண்டிருந்தார் இவர். நான் படுக்கைக்குத் திரும்பினேன். அச்சம் என் வாயையும் கண்ணையும் அடைத்துவிட்டது. தூங்குகிற மாதிரி பாசாங்கு செய்வது மிக மிகக் கஷ்டமாயிருந்தது. ஜுரத்தில் பிதற்றுகிறவன் போல், 'அப்பா...அப்பா...'' என்று முனகினேன். 'அப்பா' என்று அந்த வார்த்தையைச் சொல்லும்போதே எனக்கு வாயில் கசப்பாய்க் கசந்தது.

என்னருகே வந்து உட்கார்ந்து கொண்டார். நெற்றியில் கை வைத்துப் பார்த்தார். அலமாரியிலிருந்து தர்மா மீட்டரை எடுத்து வந்தார், ஜுரம் எவ்வளவு என்று பார்ப்பதற்காக.

அவருடைய கை பதறிக்கொண்டேயிருந்தது. தர்மா மீட்டர் நார்மலில்தான் இருக்கிறதா என்று பார்ப்பதற்காக விளக்கு வெளிச்சத்தில் உயர்த்திப் பார்த்தார். கை நடுங்கியது. தர்மாமீட்டர் கீழே விழுந்து இரண்டாக உடைந்தது. குப்பைக்கூடையில் எடுத்துப் போட்டார். மறுநாள் நான் அந்தத் துண்டுகளை எடுத்து வைத்துக் கொண்டேன். ரொம்ப நாள் வரையில் என் பெட்டியில் அந்தத் துண்டுகள் கிடந்தன. எதற்காக என்று தெரியவில்லை. நானும் அதைப்போல் ஒடிந்துவிட்டேன் என்ற அனுதாபத்தினால் ஏற்பட்ட தோழமையோ என்னவோ!

அடுத்த சில நாட்கள், பத்திரிகைகளைப் படித்துப் புரிந்துகொண்டேன். என்ன நடந்திருக்குமென்று.

அந்தக் கோவிந்தசாமி—உன் அப்பாவைத்தான் சொல்கிறேன்—கொலையுண்ட பெண்ணின் காதலனென்றும், அவள் வேறு பலருடன் தகாத நட்பு வைத்திருப்பதாகக்கூறி, முந்தின நாள் மாலையில் கடும் சண்டையிட்டுவிட்டுச் சென்றானென்றும் செய்தியில் இருந்தது. இன்னும் பல சந்தர்ப்ப சாட்சியங்களை வைத்துக்கொண்டு அவனைப் போலீசில் பிடித்திருக்கிறார்களென்று தெரிந்துகொண்டேன்.



அந்தக் கோவிந்தசாமியின் துரதிருஷ்டம் நாலுபேர் அறிய அந்தப் பெண்ணிடம் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தவர் அவர் ஒருவர்தான். நம்பீசன் என்று ஒருவர் அங்கே வந்து போய்க்கொண்டிருந்ததைப் பற்றி செத்துப் போனவளே வந்து தெரிவித்தாலொழிய வேறு யாருக்கும் கடுகத்தனைகூடத் தெரியாது.

என் அப்பா கொலையைச் செய்துவிட்டு ஓசைப்படாமல் திரும்பிய சில நிமிடங்களுக்கெல்லாம், உன் அப்பா உள்ளே வந்திருக்கிறார். மேலும் சண்டை போட வந்தாரோ, அல்லது சமரசம் செய்துகொள்ள வந்தாரோ தெரியவில்லை. இருட்டில் துழாவி அவளைப் பிடித்துப் புரட்டிப் பார்த்த பிறகுதான், அவள் கொலை செய்யப்பட்டிருப்பதைக் கண்டிருக்கிறார்.

ஆனால் டு-லேட்! என் அப்பா நழுவியபோது பா காதவர்கள், உன் அப்பா பயத்துடன் ஓடும்போது மட் பார்த்துவிட்டார்கள்! பிடித்துவிட்டார்கள்! தூக்கிலேற் விட்டார்கள்!

எப்படித்தான் அன்றைக்கு இவ்வளவு ரகசியங்களையும் தாங்கிக்கொண்டு, பையனாய் லட்சணமாய்ப் பள்ளிக்கூடம் போய் வந்துகொண்டிருந்தேனோ! இன்றைக்கு நினைத்தால் திகீரென்றிருக்கிறது. உன் அப்பாவின் வழக்கில் இவர் ஒரு ஜுரராகவும் நியமிக்கப்பட்டதை அறிந்தபோது...

சேது, நீ பட்டது ஒரு துன்பம்தான்; பார்த்தது ஒரு கொடுமைதான். உன் தந்தை ஒரு பெண்ணைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் ஒரு பரிதாபத்தைத்தான் நீ கண்டாய். அதைவிட என் துன்பம் பெரிது. கூண்டிலே நிற்பவன் குற்றவாளி அல்ல என்பதும், ஜுரர்களில் ஒருவராக வந்திருப்பவர்தான்

குற்றவாளி என்பதும் எனக்குத் தெரிந்திருந்தும் நெருப்புத் துண்டங்களை விழுங்குபவன்போல், நான் உண்மைகளை விழுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

நீ தினம் தவறாமல் உன் அம்மாவுடன் கோர்ட்டுக்கு வந்தாய். எனக்கு இந்தத் திசையைப் பார்க்கக்கூடப் பயமாக இருந்தது. பள்ளிக்கூடச் சிநேகிதர்கள் பலபேர் கட்டாயப்படுத்தியதால் ஒரே ஒரு நாள் வந்தேன். உன் பரிதாபமான முகம், உன் அம்மாவின் மெலிந்த உடம்பு, உன் அப்பாவின் பிரமை பிடித்த பார்வை—இன்னும் ஆயிரம் பிறவிகளுக்கு அந்தமாதிரி இன்னொரு காட்சி வேண்டாம் என்று தீர்மானித்துக் கொண்டுவிட்டேன்.

அதன் பின்னர் எனக்கும் இவருக்குமிடையே ஒரு பெரிய அகழி ஏற்பட்டுவிட்டது. அவர் கையைப் பிடித்துக் கொண்டு வெளியே போக அருவருப்படைந்தேன். அவர் பக்கத்தில் அமர்ந்து உணவு அருந்தினால் குமட்டல் வந்தது. எவராவது அவரைக் கையெடுத்துக் கும்பிட்டால், 'ஐயையோ! இந்தக் கொலைகாரரைக் கும்பிடாதீர்கள்!' என்று கத்த வேண்டும்போல் இருந்தது.

கொஞ்ச நாள் கழித்து, நான் பள்ளிக்கூட ஹாஸ்டலில் பிடிவாதமாகச் சேர்ந்துவிட்டேன். கல்லூரிக்குப் போன பின்னரும் விடுதிகளிலேயே தங்க ஆரம்பித்தேன். யாரிடமும் வெளிப்படுத்த முடியாத ஒரு பயங்கர ரகசியம் அல்லும் பகலும் என் கட்டிலருகே, மேஜைமீது, புத்தகத்துக்குள், காப்பி டம்ளரில், வெள்ளித் திரையில், கார் ஸ்டியரிங்கில், காதலிகளின் விழிகளில், கடல் நீரில், சிகரெட் நெருப்பில், ஷாம்பூ திரவத்தில்—எங்கெங்கும் எப்போதும் என்னுடனேயே குடி இருக்கலாயிற்று.

உன் முதலாளியிடமிருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு வெட்டிப் பிரிந்துகொண்டேன். தந்தையுடன் சேர்ந்திருக்கும் நாட்களைக் காட்டிலும் பிரிவு நாட்கள் அமைதியும் இன்பமும் தந்தன.



அதன்பிறகு அதிக காலம் நான் இவருடன் சேர்ந்து ஒரே வீட்டில் தங்கியிருக்க விரும்பவில்லை. ஹாஸ்டல்கள், விடுதிகள், ஓட்டல்கள் என்று வெட்டிக்கொண்டே போய் விட்டேன். உன்னை அவர் ஆதரித்து வளர்ப்பதையும் படிக்க வைப்பதையும் பார்க்கும்போதெல்லாம் ஆத்திரம் வரும்; நீ இந்த மனிதரிடம் விசுவாசம் காட்டி இவருடைய குற்றேவல்களையெல்லாம் கைகட்டி நிறைவேற்றும் போது சிரிப்பு வரும். 'ஓட்டல் உமா'வில் உனக்கு அவர் பொறுப்பான பதவி தந்தார். நான் பொறாமைப்படவில்லை. செய்த பாவத்துக்குக் கழுவாய் தேடட்டும் என்று பேசாமல் தான் இருந்து வந்தேன்.

இவ்வளவையும் உன்னிடம் சொல்ல வேண்டாமென்று தான் இருந்தேன். அதற்கு அவசியமும் ஏற்படவில்லை.

இன்று இவர் என்னை ஓட்டாண்டியாக்குவதில் முனைந்திருக்கிறார்; நான் உயிருக்குயிராய்க் காதலித்த ரஜனியை என்னிடமிருந்து பிரித்துவிட்டார். இதெல்லாம் அக்கிரமம் என்று நான் குற்றம் சாட்டுகிறபோது நீ பரிந்துகொண்டு வருகிறாய், இந்த உத்தமமான முதலாளிக்காக!

நான் சொன்னதெல்லாம் மெய்யா பொய்யா என்று அவரையே கேள். பயத்தினால் பாதி மூர்ச்சை போட்டுவிட்டு இப்போது நினைவில்லாமல் கிடக்கிறார். விழித்துக் கொண்டதும் கேள்.

அவர் வாயாலேயே ஒப்புக்கொண்ட பிறகு உன் இஷ்டம் போல் செய். சரிதானே?

கௌதமன் இவ்வளவு கோவையாகவோ நிதானமாகவோ இதையெல்லாம் சொல்லவில்லை. முன்னும் பின்னுமாகப் பேசியதையெல்லாம் இங்கே வரிசைப்படுத்தி ஒழுங்காகத் தந்திருக்கிறேன்.

"என்ன சேது?" என்று அவன் மீண்டும் கேட்டபிறகு தான் எனக்குப் பிரமை தெளிந்தது.

நான் தலையை ஆட்டவில்லை; ஆட்டுவதற்கு ஒரு தலையோ, பார்ப்பதற்கு ஒரு கண்ணோ, கேட்பதற்கு ஒரு செவியோ, எண்ணுவதற்கு ஓர் அறிவோ, உணர்வதற்கு ஓர் இதயமோ என்னிடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. சேது மரம் என்று ஒன்று உண்டானால் அது நான் தான்.

நம்பீசனைப் பார்த்தேன். துர்மரணத்தில் செத்த சவத்தின் விழிகளைப்போல் அவர் கண்கள் என்னைக் கொட்டக் கொட்டப் பார்த்துக்கொண்டிருந்தன.

அஞ்சறைப் பெட்டி கவிழ்ந்தாற்போல் என் சிந்தனைகள் குழம்பித் தடுமாறின. அறை வாசலை நோக்கி என் கால்கள் நகர்ந்தன.

அத்தனை நேரமும் பித்து பிடித்தவர்போல, சோபாவில் எறியப்பட்ட பொம்மைபோல, ஆடாது அசையாது கிடந்த நம்பீசன் திடீரென உணர்வு வந்தவராக, "நில் சேது! நில்!" என்று கத்தினார். "நான் கொலைகாரன்தான். கௌதமன் சொன்னதெல்லாம் உண்மைதான். ஆனால் நான் வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யவில்லை. அவளை—அந்தத் துரோகியை—மனப்பூர்வமாக நம்பியிருந்தேன். நான் சேர்த்திருந்த கொஞ்ச நஞ்சக் காசை அவளை நம்பிக் கொடுத்திருந்தேன். எனக்குத் துரோகம் பண்ணுகிறாள் என்று தெரிந்ததும் என் பணத்தைத் திருப்பிக் கேட்டேன். அவள் தரமாட்டேனென்றாள். எனக்கு அந்தப் பணத்தைத் தவிர வேறு காசு கிடையாது. அவளை மிரட்டினேன். வேறு வழியில்லை. கொலை செய்துவிடுவேன் என்று சும்மா கத்தியைக் காட்டினேன். அவள் மிரண்டதில்... அப்படி... அது... நேர்ந்துவிட்டது... சேது, என்னைத் தயவு பண்ணி நம்பு சேது! ஜூரராக இருக்க மறுத்தால் என்மீதே



சந்தேகப்படுவார்களோ என்று நினைக்கிற அளவுக்குக் கோழையாக இருந்தேன்... ஆனால் அந்த ஜூரர் பெஞ்சு நரகம் மாதிரி..."

நான் போய்க்கொண்டேயிருந்தேன். அவர் ஓர் உலகத்திலிருந்து பேசுவதுபோலவும் நான் மற்றோர் உலகத்திலிருந்து கேட்பதுபோலவும் இருந்தது. செவியில் விழுந்த சொற்கள் மூளைக்குப் போகாமல் வெளியிலேயே நின்றுவிட்டன.

நான் போய்க்கொண்டேயிருந்தேன். என்னுடைய எல்லாப் புலன்களும் ஒரே சமயத்தில் மரத்துவிட்டன. என் தகப்பனைக் கொன்றவருடைய உப்பிலே வளர்ந்த என் சரீரம் ஓர் அனாவசியச் சுமையாகக் கனத்தது. என் வெறிச்சிட்ட கண்களின் எதிரே கணக்கற்ற மாந்தர் ஊர்வலமாகச் சென்றனர். கொலைகாரன் என்ற இழிபெயரைத் தாங்கிக் கொண்டு தூக்குமேடையிலே வாழ்வை முடித்துக்கொண்ட தந்தை; கொலைகாரனின் மனைவி என்ற பட்டத்துடன் சமூகத்தின் இடுக்குகளில் ஒளிந்து வாழ முற்பட்ட என் பயந்தாங்கொள்ளி அம்மா; வழக்கைத் தப்பாக ஆராய்ந்த ஜூரர்கள்; தவறாகத் தீர்ப்பளித்த நீதிபதி—இப்படி வரிசை வரிசையாக என்னைப் பார்த்துச் சிரித்த வண்ணமே சென்றார்கள்.

என்னை நானே வெறுத்தேன். வெறும் கோயிலை விழுந்து விழுந்து கும்பிட்ட மடையனாக, காகிதப் பூவை முகர்ந்து முகர்ந்து மூக்கில் ரத்தம் வரச் செய்துகொண்ட முட்டாளாக என்னை உணர்ந்தேன்.

மூவிரண்டு ஏழு என்று ஆரம்பத்திலேயே கணக்கைத் தப்பாகப் போட்டுவிட்டு, அடுத்தடுத்து வரும் கற்பனையான லாபங்களை எண்ணி ஆனந்தத்தில் ஆழ்கின்ற அசட்டு வியாபாரியாக உணர்ந்தேன். மனிதனிடம், உலகத்தினிடம், விசுவாசம், நம்பிக்கை, நீதி முதலிய குணங்களிடம், வினையும் தினையும் விதைப்பவனைப் பற்றிய தத்துவத்தினிடம்,

உலகத்தின் சுழற்சியை எது ஓயாது இயக்கிக்கொண்டிருக்கிறதோ அந்த அறத்தினிடம், நித்தியமானது சத்தியமானது என்று கதைக்கப்படும் தர்மத்தினிடம்—சகலத்திடமும் நான் நம்பிக்கை இழந்தேன்.

எப்படி ஓட்டலை அடைந்தேனோ எப்படி அறைக்குள் நுழைந்தேனோ தெரியாது. டெலிபோன் அடித்துக்கொண்டிருந்தது. யந்திரம்போல் எடுத்துக் கேட்டேன்.

''சேது! நான்தான் கிருத்திகா பேசுகிறேன்—மீனம்பாக்கத்திலிருந்து'' என்ற குரல் என்னை உலுக்கி எழுப்பியது.

கண்ணிலிருந்து நீர் கரகரவென்று வழிய, தொண்டை கமற, இருதயம் அடைக்க ''கிருத்திகா! தயவுபண்ணி உடனே இங்கே வா. எனக்கு உன் கழுத்தைக் கட்டிக்கொண்டு கதற வேண்டும்போல இருக்கிறது. உன் மடியில் தலை புதைத்து என் துன்பங்களை உன்னிடம் தீர்த்துக்கொள்ள வேண்டும்போல் இருக்கிறது. உன் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சுகிறேன். கிருத்திகா. நீ எங்கேயும் போகாதே. என்னை இந்த ஊசிக்காட்டிலே விட்டுவிட்டுச் செல்லாதே!'' என்று அலறிவிட்டேன்.

கிருத்திகாவுக்குத் தூக்கிவாரிப் போட்டிருக்க வேண்டும் என் குரலும், பேச்சும். ஒருகணம் தயங்கியபிறகு பேசினாள். ''சேது! நான் கூப்பிட்டது வேறு காரியமாக. காட்டேஜில் அந்த வாசல் பக்க ஷெல்பிலே உங்கள் கார் டிரைவரின் ஜலதோஷத்துக்காக இன்னும் கொஞ்சம் கஷாயம் வைத்திருந்தேன். அவனிடம் சொல்ல மறந்துவிட்டதால்...''

''கிருத்திகா! டிரைவரைக் காட்டிலும் நான் முக்கியமில்லையா உனக்கு? எனக்கு உயிரூட்டும் ஒளஷதத்தைக் கொடுக்க வேண்டுமென்று உனக்குத் தோன்றவில்லையா...''



''சேது! உங்களுக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்? என் வாழ்க்கை என் அக்காவின் வாழ்க்கையோடு பிணைந்திருக்கிறது. எனக்கென்று தனியான வாழ்க்கை ஏது? அப்படியொன்று என்றைக்கேனும் ஏற்படுமானால், வேறெங்கும் போகாமல் உங்களிடமே வருகிறேன்...'' என்று சொல்லி போனை வைத்துவிட்டாள் கிருத்திகா.

உலர்ந்துவிட்ட நெஞ்சோடு உயிரற்ற ரிஸீவரை அணைத்துக்கொண்டு பைத்தியம்போல் நான் நின்றேன்.

# 15

உயிரற்ற ரிஸீவரை உலர்ந்த நெஞ்சோடு அணைத்துக்கொண்டேன். அப்படியே எவ்வளவு நேரம் இருந்தேனோ எனக்குத் தெரியாது. ஓட்டல் பையனொருவன் பயத்துடன் எட்டிப் பார்த்து, ''பால் ஏதாவது சார்...'' என்று இழுத்தான்.

நாற்காலியில் அசைவற்றுக் கிடந்தேன் கசக்கி எறியப்பட்ட காகிதம்போல. மேஜைமீது தூக்கிப் போட்டுக்கொண்டிருந்த கால்களைக்கூடக் கீழே இறக்கவில்லை. இரவு வேளை தவழ்ந்து வளர்ந்து இளமை எய்தித் தளர்ந்து கிழடாகி, காலையை வாரிசாக்கிவிட்டு மடிந்தது.

நேற்று ஒரு நாளைக்குள் எவ்வளவு நடந்துவிட்டன! ரஜனியும் கிருத்திகாவும் புறப்பட்டுப் போனது—நம்பீசனைப் பற்றிய அதிர்ச்சியான தகவல்—கௌதமனின் சண்டை—எல்லாம் நேற்றுதான். ஆனால் ஒரு வருடம் ஆனாற்போல் இருந்தது!

''சேது! சேது! ராத்திரி முழுதும் கதவைத் திறந்து கொண்டா தூங்கினாய்?'' என்று கேட்டுக்கொண்டே அறைக்குள் வந்தார் ராமப்பிரம்மம். என் தோற்றத்தைக் கண்டு திடுக்கிட்டார்.

என் உதவியாளரைச் சந்திக்கும் போதெல்லாம் என் கடமையுணர்வு விழித்துக்கொள்வது வழக்கமாகையால், இப்போதும் சுதாரித்துக்கொண்டேன், பல மணி நேர இடைவெளிக்குப் பின்னர். இரும்பாகிவிட்ட கால்களை நீவிக்கொண்டு, ''ஒன்றுமில்லை...என்ன விஷயமாய் வந்தீர்கள்?'' என்றேன்.

''அந்த வெள்ளைக்காரன்—பர்மிட்டுக்கு மேலே வைத்திருப்பான் போலிருக்கிறது. அளவுக்கு மேலே போட்டு விட்டான். பக்கத்து ரூம் லேடிஸ்கிட்டே நேற்றே ஏதோ மிஸ்பிஹேவ் பண்ணினானாம். பெரிசாகிவிடாமல் அமுக்கி விட்டேன். இப்போது காலையில் எழுந்தது முதற்கொண்டு லவுஞ்ஜில் போய் உட்கார்ந்துகொண்டு யாரும் ஹெர்கட்டுக்கு வரக்கூடாதென்று கலாட்டா பண்ணிக்கொண்டிருக்கிறான்.'' என்று ராமப்பிரம்மம் தெரிவித்தார்.

''சே, சே! ஏன் அவ்வளவு தூரத்துக்கு இடம் கொடுத்தீர்கள்?'' என்று கேட்டவண்ணம் செருப்பை மாட்டிக்கொண்டு, ''வாருங்கள் பார்க்கலாம்.'' என்று அவருடன் புறப்பட்டேன்.

வெராந்தாவில் நடந்து, லிஃப்டில் புகுந்து, கீழே இறங்கும் வரையில் என் பைத்தியக்காரத்தனத்தைப் பற்றி நான் சில வினாடிகளுக்கு நினைக்கவில்லை. செக்கு மாடு போல் பழக்கப்பட்டுவிட்ட மூளையும் கை கால்களும், ஓட்டலில் ஒரு சீர்கேடு என்று காதில் விழுந்தவுடனேயே அதைச் சரிப்படுத்தும் பணியில் இறங்கிவிட்டன. லிஃப்ட் பையன் மடக்குக் கதவுகளை ஒதுக்கிவிட்டதும்தான் என் நிலைமையை உணர்ந்தேன்.



பதினெட்டு மணி நேரத்துக்கு முன் இருந்த சேதுவா நான்! இல்லையே! 'ஓட்டல் உமா'வின் பிரசினை ஒவ்வொன்றையும் தன் தலையிலே இழுத்துப் போட்டுக் கொண்டிருந்த மானேஜர் சேதுவா நான்? அல்லவே? எது எக்கேடு கெட்டால் எனக்கென்ன ஆயிற்று?

''நான் வரவில்லை. நீங்களே போங்கள்'' என்றேன் லிஃப்டுக்குள்ளேயே இருந்துகொண்டு.

''என்ன சேது, அந்த வெள்ளைக்காரனை...'' என்று வியப்புக் காட்டினார் ராமப்பிரம்மம்.

''வெள்ளைக்காரன், கறுப்புக்காரன் எல்லாரையும் நீ சமாளியும்.''

லிஃப்ட் பையனை நான் முறைத்த முறைப்பில் அவ மடக் மடக்கென்று கதவுகளைச் சாத்தி, படக் படக்கென்று பித்தான்களைத் தட்டி, மேலே என் தளத்தில் கொண்டு போய் விட்டு, கதவைத் திறந்து வெளியே அனுப்பியபின்னர் தான் மூச்சு விட்டான்.

அறைக்குள் நுழைந்தேன். சலிப்புடன் கோட்டைக் கழற்றித் தோள்மீது வீசிக்கொண்டபோது, எதுவோ கீழே விழுந்தது. எடுத்தேன்.

நாலு ஃபுல்ஸ்காப் பேப்பர்கள். சுத்தமாய் டைப் அடிக்கப்பட்டவை. திருவாளர் நம்பீசன், வலுக்கட்டாயமாக என் பையில் திணித்தவை. இன்னாருடைய குமாரரான இன்னார், இன்னார் மகளான இன்னாருக்கு ஓட்டல் உமாவை, அதைச் சேர்ந்த ஜங்கம தாவர சொத்துக்களை, அதன் பெயரிலுள்ள பற்று வரவுகளை—அனைத்தையும் கொடுத்திருப்பதாக உறுதி கூறும் காகிதங்கள், முறைப்படி சாட்சி வைத்து, முத்திரையிட்டு, சவித்தாரமாக எல்லாச் சடங்குகளும் நிறைவேற்றப்பட்டவை. ஆகா! நான் என்ன அதிர்ஷ்டக்காரன்! என்ன அதிர்ஷ்டக்காரன்!

அடிவயிற்றில் நெருப்புப் பந்துபோல உருண்டு திரண்ட வெறுப்பு, மேலெழுந்து என் தொண்டையில் அடைத்துக் கொண்டது. என்னைத் தொலையாத சொத்து! அதை எனக்கு வழங்கியிருப்பதாக உயில்! சபாஷ், சபாஷ். நான் பிரியத்துடன் போற்றி வளர்த்த தென்னை மரத்தை என் கண்ணெதிரிலேயே வெட்டிச் சாய்த்த பிற்பாடு, அதிலிருந்தே ஓர் அழகிய விசிறி செய்து என் மயக்கம் தெளிவிக்க வீசுகிறது விதி!

சுவாமி படத்தருகே ஊதுவத்தி கொளுத்துவதற்காக வைத்திருந்த நெருப்புப் பெட்டியை எடுத்தேன். சரக்கென்று கிழித்தேன். நம்பீசனின் உயிலை அதன் நாவுகளுக்குச் சமர்ப்பித்தேன்.

கிளுகிளுவென்று அது எரிகையில் யாரோ வேகமாக உள்ளே நுழைந்தார்கள். ஒரு வினாடி திடுக்கிட்டாற்போல் நின்றார்கள்.

"என்ன கொளுத்துகிறாய்?" என்று கேட்ட குரல் கௌதமனுடையது.

அவனுடைய கண்களில் சந்தேகமும், கோபமும் கொந்தளித்து எழுந்தன. எரிகின்ற காகிதங்கள் ஓர் உயில் சம்பந்தப்பட்டவை என்று கண்டுகொண்டான். அவனுடைய கற்பனை வேகமாக வளர்ந்தது போலும்.

"ஓகோ! கடைசியில் இப்படித்தானா விஷயம்!" என்று இரைந்தபடி, எரியும் காகிதத்தை என் கையிலிருந்து பறித்தான். காலாலும் கையாலும் பரபரவென்று நெருப்பின் கொழுந்துகளை அவித்தான். 'நான் அப்போதே நினைத்தேன். சும்மா மிரட்டுகிறாரே தவிர, நிஜமாக என் பேருக்குத்தான் எழுதி வைத்திருப்பார் என்று சந்தேகப் பட்டேன். கடைசியில் அப்படித்தான் விஷயமா? அதனால் தான் உயிலை இவ்வளவு அவசரமாக அழிக்கிறாயா?"



கௌதமன் பேசப் பேச நான் மௌனமாகவே இருந்தேன்.

அணைந்துவிட்ட காகிதங்களைக் கையிலெடுத்துப் பார்த்தான்.

கடைசி ஓரங்களில் கன்னங்கரேலென்று கருகலாயும், பிறகு பழுப்பு நிறத்தில் முடமுடப்பாயும், பிறகு வெள்ளைப் பரப்பாயும் இருந்த காகிதங்களில் கண்களை ஓட்டிவிட்டு என்னை வியப்புடன் நோக்கியபோதும் நான் பேசாமலே யிருந்தேன்.

சொத்தை எனக்குத் தருவதாகக் கூறுகின்ற வாசகங்கள் மட்டும் தீக்கிரையாகாமல் இருந்தன போலும். இரண்டொரு நிமிடங்களுக்குள் அவன் அடைந்துவிட்ட தேவையற்ற சந்தேகம், வெளியிட்டுவிட்ட அனாவசிய வார்த்தை, அவனை வெட்கங்கொள்ளச் செய்தன.

"சேது, நான் உன்னைப்பற்றி தவறாக நினைத்து விட்டேன். என்னை மன்னித்துவிடு," என்றான் குரல் தழுதழுக்க.

"அப்படியா! ரொம்ப மகிழ்ச்சி!" என்று நான் கூற வில்லை. "கௌதமா! நீயும் நானும் தோழர்கள்!" என்று அவனைக் கட்டிக்கொள்ளவில்லை.

தோள்மீது போட்டிருந்த கோட்டை ஒருமுறை உதறினேன். மீண்டும் தோள்மீதே போட்டுக் கொண்டேன். லிஃப்டின் பக்கம் செல்லாமல் மாடிப்படி வழியே இறங்கி னேன். ஒவ்வொரு படியாக அடி வைத்துக் கீழே வந்து, வாசலை அடைந்தேன். வெள்ளைக்காரனொருவனைப் பிடித்து அழைத்துக்கொண்டு ராமப்பிரம்மமும் மற்ற வேலை யாட்களும் செல்வது கண்ணில் பட்டபோதிலும், தயங்கி நிற்காமல் நடந்துகொண்டேயிருந்தேன்.

மவுண்ட்ரோடு என்று புரிந்தது. எல். ஐ. ஸீ. வட்டாரத் இன் பரபரப்புக்களில் நீந்தி, ஆயிரம் விளக்கின் கூளங்களை மிதித்து, தேனாம்பேட்டையின் அகலத்திலே மிதந்து, சைதாப்பேட்டை சந்தடிகளில் ஊடுருவி, கிண்டியின் தூசி களை விழுங்கி, பல்லாவரத்தின் அமைதியைச் சுவாசிக்கத் தொடங்கியபோதுதான் என்னை அறியாமலே நங்கநல் தொடங்கியிருப்பதை உணர்ந்தேன். ஊர் நோக்கி நடக்கத் தொடங்கியிருப்பதை உணர்ந்தேன்.

போடுவதற்காக வாசல்புறம் வந்த

குப்பையைப் போடுவதற்காக வாசல்புறம் வந்த சின்னப்பாட்டி என்னைக் கண்டதும், "அடியே கண்ணம்மா! உன் பிள்ளை வருகிறானடி!" என்று உற்சாகமாய்க் கூவிக் கொண்டே வீட்டுக்குள் ஓடினாள். (கண்ணம்மா என்பது என் அம்மாவுக்கு அவர்கள் குடும்பத்தினர் வைத்திருந்த செல்லப் பெயர்.)

"யார் சேதுவா?" என்று கேட்ட வண்ணம் உள்ளிருந்து வந்த அம்மா நடையிலேயே என்மீது மோதிக்கொண்டாள். "ஏண்டா, மோட்டாரிலே வந்தாயா? ஏன் இப்படித் தலை ...ம் கோலமுமாய் இருக்கிறாய்?" என்று என்னை ஏற இறங்க மிரட்சியுடன் பார்த்தாள்.

"ஆமாம், அவனைப் போய்க் கேள். உன் அழகான ...ருக்கு, நிமிஷத்துக்கு நாலு பஸ் விடுகிறானில்லையா? தெய்வமேயென்று பாவம், நடந்து வந்திருக்கிறானோ ...ன்னவோ" என்று என் சார்பில் பதில் கொடுத்தாள் அம்மாவின் சின்னம்மா. "நல்லவேளை! இப்பத்தான் மிஞ்சின சாம்பாரை அடுத்த வீட்டுப் பங்கஜத்துக்குக் கொடுக்கலாமா என்று நினைத்துக்கொண்டேயிருந்தேன். கால் கழுவிக்கொண்டு வா. இலை போடுகிறேன்" என்றாள்.

சின்னப் பாட்டி நாலு வாக்கியம் கடகடவென்று பேசி, அது காதில் விழுந்த பிறகுதான் அம்மாவுக்குத் தைரியம் வருவது வழக்கம். "ஆமாமடா சேது, சாப்பிட உட்கார்" என்று தானும் அழைத்தாள்.



"உபத்திரவம் செய்யாதே. எனக்கு எதுவும் வேண் டாம்." முன்னறையின் தரையிலே குப்புறப் படுத்துக் கொண்டேன். சுத்தமாய்க் கூட்டி முறமுறப்பாய் வைக்கப் பட்டிருந்த பூமி, சிமெட்டிக் குளிர்ச்சியுடன் என் துன்பங் களை வாங்கிக்கொண்டது.

சின்னப்பாட்டி ஏதோ ஜாடை காட்டி அம்மாவை அந்தண்டை இழுத்துக்கொண்டாள். "இப்போ அவன் கிட்டே போய் வாய் கொடுக்காதே. அவன் முதலாளி ஏதாவது சொன்னாரோ என்னவோ வருத்தமாயிருக் கிறான். நீ பேசாமலிரு" என்று அம்மாவை அவள் கெகிச வென்று கண்டிப்பது காதில் விழுந்தது.

"அவன் முதலாளியா? சீ சீ! ஒரு வார்த்தை தப்பாய்ச் சொல்லமாட்டாரே! தங்கமாச்சே!" என்றாள் அம்மா பயந்த குரலில். "ஆனால் நீ சொல்கிறமாதிரி அவன் முகத்தையும் பேச்சையும் பார்த்தால் எனக்குப் பயமாயிருக் கிறது."

மெதுவாய்த் திரும்பி வந்து அறை நிலைப்படியருகே அம்மா உட்கார்வது தெரிந்தது. அவள் அசையும் போதெல் லாம் மசமசப்பான நிழல் கீற்றுக்கள் என்னருகே தரையில் அசைந்தன.

"அம்மா" என்று மெதுவே கூப்பிட்டேன். தலையை நிமிர்த்தாமலே.

"என்னடா சேது?" என்றாள் ஆர்வமாக.

"வந்து..." என்று ஆரம்பித்தவன் நிறுத்திக்கொண் டேன். உனக்கு அப்பாவின் துயரச் சாவைப் பற்றித் தெரியுமா அம்மா? எவனோ செய்த கொலைக்காக அவர் தூக்குமேடை ஏறினார் என்ற உண்மையை நீ அறிவாயா அம்மா? தன்னலமிக்க இந்த உலகத்தில் எவனும் ஆதாயமில் லாமல் எதையும் செய்வதில்லை என்பதையும், மனச்சாட்சி யின் அரிப்புத் தாளாதவர்கள் சில்லறைகளை விட்டெறிந்து

சொறிந்துகொள்கிறார்கள் என்பதையும் நீ உணர்ந்ததுண்டா அம்மா?—இன்னோரன்ன கேள்விகள் நூற்றுக்கணக்காக என் நாவின் நுனிக்கு வந்துவிட்டுத் திரும்பின.

நான் ஏதும் பேசாமலிருந்துவிட்டதைக் கண்ட அம்மா, "என்ன சேது?" என்றாள்.

நான் அப்போதும் பதில் தரவில்லை.

"பார்த்துவிட்டாயா சேது?" என்றாள்.

எதை? அதையும் நான் கேட்கவில்லை.

"உனக்குத் தெரியாமல்தான் வாங்கினோம். கிழவிகள் இரண்டுபேரும் பொழுது போகாமல் தவிக்கிறோம். அதனால்தான்..."

என்ன சொல்கிறாய்? அதையும் நான் வினவவில்லை.

சின்னப் பாட்டிதான் அதட்டினாள்: "கண்ணம்மா! நீ அவனை ஐந்து நிமிஷம் தூங்கவிட மாட்டாய்?"

"இதோ வந்தேன், இதோ வந்தேன்" என்று எழுந்து சென்றாள் அம்மா.

சமையலறையில் அவர்களது தாழ்ந்த உரையாடல் தொடர்ந்தது.

"எனக்குத் தெரியாமல் ஏன் வாங்கினாயென்று கோபிப்பானோ என்னவோ. எனக்கு ஒரே பயமாயிருக்கிறது சின்னம்மா."

"கொல்லைக் கிணற்றிலே போட்டுவிடு! பயமாம் பயம்! சேது எதுவும் சொல்லமாட்டான். அவனும் இந்தக் காலத்துப் பிள்ளைதானே?"

எதைப்பற்றிப் பேசிக்கொள்கிறார்கள்? எனக்குப் புரியவில்லை. இளகிய பூமியில் கிணறு வெட்டப் புகுந்தவன் மாதிரி. என்னுள்ளேயிருந்து தோண்டியெடுத்த வினாக்கள் என்மீதே சரிந்து விழுந்து என்னை மூடின.



நேரம் செல்வது தெரியாமல் படுத்திருந்தவனை, மெல்லிய இசையொன்று எழுப்பியது. என்ன அது பாட்டு? யார் பாடுவது?

வானொலி கீதம்.

"வேண்டாம் சின்னம்மா, அவனுக்குத் தெரிந்தால் கோபிப்பான்," என்று என் அம்மா கூறுவதும், "ஒன்றும் சொல்லமாட்டான்." என்று சின்னப் பாட்டி பதிலளிப்பதும் கேட்டன.

நான் புரளுவதைக் கவனித்தாள் அம்மா. தயங்கித் தயங்கி அறை வாசலுக்கு வந்து, "வாங்கினேண்டா, சேது. மாசம் இருபது ரூபாய் கட்டுகிறேன்" என்றாள்.

அவள் இடுப்பில் ஒரு புத்தம் புதிய டிரான்ஸிஸ்டர் இருந்தது!

அழுவதா, சிரிப்பதா அந்த நிலைக்கு! பிள்ளை, வேதனைத் தீயிலே கருகுகிறான்! பெற்றவள் வானொலி கீதத்திலே மகிழ்கிறாள்!

என் கசப்பைச் சினமென்று புரிந்துகொண்ட அம்மா, "நல்ல கச்சேரி, கதாகாலட்சேபம் எல்லாம் வைக்கிறார்கள். மகாராஜன் நீதான் மாதம் நூற்றைம்பது ரூபாய் அனுப்புகிறாயே? எனக்கென்ன செலவு? இன்னும் பதினேழு மாசம் கட்டினால் போதும்," என்றாள்.

சின்னப்பாட்டி, 'உசத்தியான பெட்டிதானே, சேது?' என்று என்னை இணக்கமான மனநிலைக்குக் கொண்டுவர முயன்றாள்.

"ஊம் ஊம்" என்று கூறிவிட்டுப் புரண்டு படுத்தேன்.

அந்த 'ஊம் ஊமே' இரு கிழவிகளுக்கும் தெம்பு கொடுத்ததுபோலும். டிரான்ஸிஸ்டருடன் சமையலறைக்குச்

சென்று, பிற்பகலுக்கான சிற்றுண்டியைத் தயாரிக்கலானார்கள். சின்னப்பாட்டி எனக்காகக் காப்பி போட்டு எடுத்து வந்து தந்தாள். குடித்து வைத்தேன்.

வானொலியிலிருந்து வாய்ப்பாட்டுக் கேட்டது; சொற்பொழிவு கேட்டது; அறிவிப்பு கேட்டது; வாத்திய இசை கேட்டது; செய்தியறிக்கை கேட்டது; திரைகானம் கேட்டது.

நான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவை என் காதினருகே ஓலமிட்டுக் கொண்டேயிருந்தன.

ஒரு வெப்பமான ஆவியும், மணமும் என் முகத்தில் உரசுவதுபோல் தோன்றவே, கண் விழித்தவன், உப்புமாவைத் தட்டில் வைத்து அம்மா நீட்டிக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

''என்னவோப்பா, வரவர ரயில் பிரயாணமே தேவலை என்று ஆகிவிட்டது. நீ பாட்டுக்கு ஏரோப்ளேனிலே போவதும் வருவதுமாயிருக்கிறாய். நான் படுகிற பயம் எனக்கல்லவா தெரியும்? ஊம், சாப்பிடு'' என்று சம்பந்தமில்லாமல் பேசினாள் அம்மா.

''நானே அரைப் பைத்தியம் மாதிரி இருக்கிறேன், ஏனமா, கண்டதையெல்லாம் சொல்லி இன்னும் என் மூளையைக் குழப்புகிறாய்?'' என்று முனகினேன்.

''தப்பாக என்னடா சேது சொல்லிவிட்டேன்? ஏரோப்ளேனிலே அதிகமாய்ப் போகாதேடா குழந்தை என்றேன். அது ஒரு குற்றமா? மன்னித்துக்கொள்ளடாப்பா. என்னவோ பம்பாய்க்கு நேற்று ராத்திரி போன ஏரோப்ளேன் அப்படியே விழுந்து நொறுங்கிட்டதாமே? ரேடியோவிலே சொன்னான்...''

கண்ணைக் கசக்கிக்கொண்டு ''என்ன சொன்னான்?'' என்றேன். மிகமிக லேசாக என் இதயம் இயங்கத் தொடங்கியிருந்தது.



''கண்ணம்மா! நீ அவனுக்கு டிபனைக் கொடுத்துவிட்டு இந்தண்டை வரப்போகிறாயா இல்லையா?'' என்ற சமையலறையிலிருந்து சின்னப் பாட்டியின் கட்டளை கேட்டது. அம்மா எழுந்துகொண்டாள்.

''சொல்வதைச் சரியாய்ச் சொல்லேன்' என்று கடுகடுத்தேன்.

''இரு இரு. அந்தப் பெட்டியை இங்கேயே கொண்டு வந்து வைத்துவிடுகிறேன். ஏழேகாலுக்குத் தமிழ் நியூஸ் சொல்வான். நீயே நன்றாய்க் கேட்டுக் கொள்ளுடாப்பா", என்று சொல்லி டிரான்ஸிஸ்டரைத் தலைமாட்டில் வைத்துவிட்டுப் போய்விட்டாள் அம்மா.

பம்பாய்—நேற்று ராத்திரி—விமானம்—பம்பாய்—நேற்று ராத்திரி விமானம்—பம்பாய்.

உப்புமாவையே பார்த்தபடி ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தேன்.

கிருத்திகா.

உப்புமாவை ஈக்கள் மொய்க்கின்றன. அம்மாவின் நிழல் தென்படுகிறது. கிணற்றில் யாரோ தண்ணீர் இழுக்கும் கடகட. பொழுது சாய்வதால் விளக்கேற்றுகிறார்கள். டிரான்ஸிஸ்டர் பாடுகிறது. உப்புமாவை எறும்புகளும் மொய்க்க வந்திருக்கின்றன. ''இரண்டும் ஒரே மெட்டல் தானே? இது வேறு அது வேறா?'' என்று தெருவிலே இரண்டு பேர் பேசிக்கொண்டு போகிறார்கள்.

என் கண்கள் பாதி மூடுவதும் பாதி திறப்பதுமாயிருந்த போது 'ஆகாசவாணி—செய்திகள்—வாசிப்பது—'கேட்டது.

முதல் செய்தியாக அதைத்தான் அறிவித்தார்கள். சென்னையிலிருந்து பம்பாய்க்குச் சென்ற விமானம்தான்—முறிவுதான்—மொத்தப் பிரயாணிகளும் மரணம்தான்—யாரும் உயிர் தப்பவில்லைதான்—

''சென்னையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த ஒரு மணிபுரி நாட்டியக் குழு உள்பட...''

டிரான்ஸிஸ்டரை நிறுத்தினேன்.

கிருத்திகா போய்விட்டாள். சேது காதில் விழுந்ததா? கிருத்திகா போய்விட்டாளப்பா. உன் கிருத்திகா போய்விட்டாளப்பா. செத்துப் போய்விட்டாள். கிருத்திகா இல்லை, கிருத்திகா? அக்காவிடம் ஒரு நாள் காலிலே சூடு வாங்கிக்கொண்டாளே அவள். உன் டிரைவரின் ஜலதோஷத்துக்குக் கஷாயம் போட்டுத் தந்தாளே அவள். நினைவில்லை? போய்விட்டாளப்பா சேது. பூ மாதிரி இருப்பாளே அவள். பால்பாயிண்ட் பேனா மாதிரி இருப்பாளே அவள். 'என்றைக்காவது எனக்கென்று ஒரு தனி வாழ்வு ஏற்படுமானால் உங்களிடம் வருகிறேன்' என்று சொன்னாளே அவள். ஓகோ! அப்படியா? இனி அவள் கொடியுடலைப் பார்க்கவே முடியாதா? முடியாதடா சேது. யாருடைய துன்பத்துக்காகவோ, தான் சிலுவையைத் தாங்கிச் சென்றாளே அவளுடைய குளிர்ச்சியான பேச்சு இனிமேல் காதில் விழாதா? விழாதடா முட்டாள்.

எழுந்தால் விழுந்துவிடுவேன்போல் கை கால்கள் நடுங்கின. தத்தித் தத்தி, அறை வாசல் வரை சென்றேன். நிலைப்படியின்மீது குறுக்காக உட்கார்ந்துகொண்டேன். கதவிலே நெற்றியைச் சாய்த்துக் கொண்டேன். என் துயரங்கள் மொத்தமும் உருண்டு ஒற்றை முத்தாக வடிவெடுத்தாற்போல, சூடான கண்ணீர் தளும்பி வந்து இமையை உறுத்தியது.

எதனாலோ அப்போது என் கையிலே ஒரு சாவிக் கொத்தும் அதிலே ஒரு பேனாக் கத்தியும் இருந்தன. கத்தியைப் பிரித்தேன்.

பச்சைப் பெயிண்ட் அடித்த கதவில் அழுத்திச் செதுக்கினேன், ஒவ்வோர் எழுத்தாக.



''என்னடா சேது, பைத்தியம் பிடித்திருக்கிறதா உனக்கு?''

அம்மாதான்.

செதுக்கினேன். கே. ஆர். ஐ. டி. எச்...

''ஏண்டா சேது நல்ல கதவை நாசம் பண்ணுகிறாய்? உன் முதலாளி—நம்பீசன்—எவ்வளவு பிரியமாய்க் கட்டித் தந்தார் இந்த வீட்டை? ஒவ்வொரு செங்கல்லையும் மேற்பார்வை செய்து—''

கதவில் செதுக்குவதை நிறுத்தினேன். நம்பீசன் கட்டித் தந்த வீடு! எழுத்துச் செதுக்கப்பட்ட இடத்தில் ரத்தம் வடிவது போலிருந்தது.

சரேலென எழுந்துகொண்டேன். ''அம்மா! புறப்படு இந்த வீட்டை விட்டு. வேண்டாம் இந்த இடம். சின்னப் பாட்டி! நீயும்தான் கட்டு மூட்டையை!'' என்றேன் வெறி பிடித்தாற்போல.

''எங்கே... என்னடா, எங்கே போகலாம் என்கிறாய்?''

''எந்தச் சுடுகாட்டுக்குப் போனாலும் சரிதான். இங்கே ஒரு நிமிஷமும் தங்கக்கூடாது'' என்றேன். அடுத்த வினாடியே வாசலுக்கு வந்து நின்றுகொண்டேன்.

# 16

சில நிமிடங்களுக்கு வீட்டிற்குள்ளிருந்து எவ்வித ஓசையும் இல்லை. திடீரென வீட்டைக் காலி செய்து கொண்டு கிளம்பும்படி நான் சொல்லியதில் அம்மாதான் பயந்து நடுங்கிவிட்டாளென்றால், சற்றுத் துணிச்சல்காரியான சின்னப் பாட்டிக்குக்கூட அதிர்ச்சியில் வாயடைத்துவிட்டது.

எட்டிப் பார்த்தாள்.
அம்மா மெதுவாக வாசல்புறம் எட்டிப் பார்த்தாள்.
வெறுப்பினால் சிவந்திருந்த என் முகத்தையும், இடுப்பில்
கையூன்றி நான் நின்றிருந்த தோரணையையும் கண்டு
அச்சம் அதிகரித்தவளாக, ''என்னடா வந்துவிட்டது சேது
உனக்கு?'' என்று மென்று விழுங்கினாள்.

சின்னப்பாட்டி இங்கிதம் தெரிந்தவள். விட்டுப் பிடிக்க
லாம் என்ற எண்ணத்துடன், ''நீ சும்மா இரு, கண்ணம்மா''
என்று அதட்டிவிட்டு, ''சேது சொல்கிறானென்றால் காரண
மில்லாமல் இருக்குமா? சரிடா சேது. நீயும் கொஞ்சம்
உள்ளே வந்து எதெதை எப்படியெப்படிக் கட்டலாம் என்று
பார். இந்த நங்கநல்லூர்தான் நம் ஆயுள் பூராவுக்கும்
என்று பட்டயம் கட்டி வைத்திருக்கிறார்களா என்ன?
தொம்பன் கூத்தாடிக்கு ஊரெல்லாம் வீடு. கிளம்பு சொல்
கிறேன்'' என்று கடகடவென்று என்னை ஆதரித்துவிட்டு,
மடமடவென்று பாத்திரம் பண்டங்களை எடுத்து வைக்கவும்
முனைந்தாள்.

அப்படியொன்றும் சாமான்கள் அதிகமில்லை. இரண்டு
பெட்டிகளுக்குள் அடங்கின. ஆனால் கட்டளையிட்ட
எனக்குத்தான் பிரசினை முளைத்தது. எங்கே அழைத்துக்
கொண்டுபோய் இவர்களுக்குப் புதுக் குடித்தனம் வைப்பது
என்று. அதைக் காட்டிக்கொள்ளாமல் மெயின் ரோடுக்கு
வந்து டாக்ஸி தேடினேன்.

கிருத்திகா.

பார்க்கும் முகமெல்லாம் அவளாகத்தான் இருந்தது.
அவள் இல்லாத உலகத்தில் நான் இருக்கிறேன் என்ற நிலை
மையை இன்னும் என்னால் ஜீரணித்துக்கொள்ள முடிய
வில்லை.

''சேது!'' என்று ஒரு குரல் என்னை அழைத்தது.
திரும்பிப் பார்த்தேன்.



என் தூரத்து உறவினர் அந்தப் பெரியவர். அவரை
அடையாளம் கண்டுகொள்ளச் சிறிதுநேரம் பிடித்தது.
''நல்ல ஊரப்பா இது! சுற்றிச் சுற்றி வருகிறேன் அரைமணி
நேரமாய். உன் வீட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை''
என்றார்.

''என்னுடன் வாருங்கள், மாமா'' என்று அழைத்துச்
சென்றேன்.

போகும்போதே ஓரளவு தீர்ந்துவிட்டது என் பிரசினை
—அம்மாவையும் சின்னப் பாட்டியையும் எங்கே கொண்டு
போய்க் குடித்தனம் வைப்பது என்ற பிரசினை.

திருவல்லிக்கேணியில் அனுமந்தராயன் கோவில் தெரு
வில் இருந்தது அவர் வீடு. ஒரே மகள்—தாயில்லாதவள்.
இரண்டு வருடம் முன்புதான் கல்யாணமாகியிருந்தது.
பிரசவத்துக்கு வந்திருக்கிறாளாம் இப்போது.

மூன்றாம் மாதம் வளைகாப்பு நடந்தபோது அம்மா
போயிருந்தாளாம். பிரசவ சமயத்தில் வந்திருந்து கவனித்
துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தாராம்.
அம்மாவும் சம்மதித்திருந்தாளாம். இதுதான் மாதமாகை
யால் அம்மாவை அழைத்துப்போக வந்திருக்கிறேன்
என்றார்.

''ரொம்ப சந்தோஷம், மாமா. எனக்குக்கூட வேறு
சில ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது. அம்மாவும்
சின்னப்பாட்டியும் இரண்டு மாதம் திருவல்லிக்கேணி
யிலேயே இருக்கட்டும்'' என்றேன்.

இரவு கடைசிப் பஸ் புறப்படுமுன்னால் மாமாவுடன்
அம்மாவும் சின்னப்பாட்டியும் புறப்பட்டுவிட்டார்கள்.
சின்னப்பாட்டி மெதுவே என்னிடம் பேச்சுக் கொடுத்து, என்
திடீர் ஆத்திரத்துக்குக் காரணம் என்ன என்பதைக்
கண்டறிய முயன்றாள்.

மனிதரல்ல. ''நம்பீசன் நாம் நினைத்த மாதிரியான கிழே வேலை பார்க்க மேற்கொண்டு கேட்காதே. அவர் அலுமினியக் குவளை எனக்கு இஷ்டமில்லை. அவருடைய சொல்லி அவர் கூட நமக்கு வேண்டாம்'' என்று மட்டுமே களை அனுப்பி வைத்தேன்.

வீட்டைப் பூட்டினேன். வாசலுக்கு வந்தேன்.

பாசத்தால் செங்கல் அடுக்கி, அன்பினால் சாந்து பூசியது என்று எந்த வீட்டை இதுவரை நினைத்து வந்தேனோ, அது இதயமற்ற இரும்புக் கோட்டையாகக் காட்சியளித்தது. நாய்க்கு எறியப்பட்ட பிச்சைச் சோறாக, கேவலத்திலும் கேவலமாகத் தோன்றியது.

பாண்ட்க்குள் இருந்த சாவியை இறுகப் பிடித்திருந்தது என் கை.

எப்போதும்போல் சுத்தத்துக்கு எடுத்துக்காட்டாக, பனிச்சென்றபொம்மை வீடுபோல் புத்தம் புதிதாகத்தான் அன்றைக்கும் இருந்தது 'ஒட்டல் உமா.' ஆனாலும், சேறும் சகதியுமான இடத்தில் நுழைந்தவனைப்போல், கால்களை அழுந்த ஊன்றாமலே, புகக்கூடாத இடத்தில் புகுந்த சங்கடத்துடன் வெராந்தாவை நோக்கி நடந்தேன்.

நீச்சல் குளத்தில் தண்ணீரை இறைத்துக்கொண்டிருந் தார்கள். போன வாரமே நான் சொல்லியிருந்த வேலை. குழந்தைகளுக்காகக் கட்டப்பட்டு வந்த விளையாட்டு மைதானத்தில் ஓரங்குலம் கூட வளர்ச்சி காணப்பட வில்லை. கண் கொத்திப் பாம்பு போல் பக்கத்திலேயே ஒருவர் நின்று பார்த்துக்கொண்டிருந்தாலொழிய, தூக்கிச் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுவார்கள் என்பது உண்மை. ரஜனி தங்கியிருந்த காட்டேஜின் வாசலில், புறப்பட்டுப் போகுமுன் அவர்கள் கிழித்து எறிந்திருந்த தேவையற்ற காகிதங்கள், ஜன்னல் ஓரமாகக் கிடந்தன. குப்பை அள்ளுவாரைக் காணோம்.



சே! எனக்கு ஏன் இந்த எண்ணங்கள்.

''குட்மார்னிங் சார்!'' என்று என்னெதிரே விளித்த குரல்கள், ஆச்சரியத்துடன் என்னைப் பார்ப்பதை உணர்ந் தேன். ஆச்சரியத்துக்குக் காரணமும் புரிந்தது. இந்த மாதிரியான கசங்கலான தோற்றத்தில், கோட்டும் டையும் இல்லாமல் என்னை அவர்கள் பார்ப்பது இத்தனை வருடங் களில் இதுவே முதல் தடவையாயிற்றே! இரண்டொரு சிப்பந்திகள் மறைவாக என்னைச் சுட்டிக்காட்டிப் பேசு வதையும் கண்டேன். நம்பீசன் வீட்டு வேலைக்காரர்கள் மூலமாக, செய்திகள் கை கால் கண் மூக்கு எல்லாம் முளைத்து, சிறகடித்துப் பறந்து வந்திருக்கும்.

வெராந்தா வழியே நடந்து முதலாளியின் அறைக்குள் நுழைந்தேன்.

உள்ளே கௌதமன் இருப்பான், வீட்டுச் சாவியை அவன் முன்னால் விட்டெறிந்துவிட்டுத் திரும்பிவிட வேண்டும் என்பதுதான் என் எண்ணம்.

ஆனால் திகைத்துநிற்க நேரிட்டது. தடுமாற்றத்துடன் சில வினாடிகள் நின்றேன்.

நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர் நம்பீசன்தான். அவருடைய சிறிய விழிகள், அகலத் திறந்து, வாசல் கதவையே பார்த்தவாறிருந்தன.

என்ன சொல்வது, எப்படிப் பேசுவது என்று எனக்குத் தெரியவில்லை. ஒரே ஒரு நிமிடம்தான் என்றாலும் தாள முடியாத நெருப்புக்குண்டத்தின் நடுவே நிற்பது போலாகி விட்டது. சரேலென வெளிப்பட்டு வாசலை அடைந்தேன். பிறகுதான் நினைவு வந்தது—அவரும் என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை என்பது. ஏன்?

ஓட்டல் பையனொருவனிடம் சாவியைக் கொடுத்து, ரிஸப்ஷனிஸ்டு தாசரதியிடம் தரும்படியும், ஒரு ரசீது வாங்கி வரும்படியும் கூறினேன். அவ்வளவு காலை வேளையில் ராமப்பிரம்மம் வந்திருக்கமாட்டாரென்று தோன்றியது.

அங்குமிங்கும் செல்வோரின் கேள்விப் பார்வையிலிருந்து தப்புவதற்காக, சிறிய வெளியீடான நாவலொன்றில் மூழ்குவதுபோல் நடித்துக் கொண்டிருந்த தருணம், தாசரதியே வந்துவிட்டான். ''என்ன சார், நீங்கள்? மற்றவர்கள்மீது கோபம் இருந்தால் ஆபீஸ்ரூமுக்குக்கூட வரக்கூடாதா? வாருங்கள் சார்'' என்றான்.

''யார்மீதும் கோபமில்லையப்பா'' என்றேன் புன்னகையை வரவழைத்துக் கொண்டு. ''பையனிடம் கொடுத்ததால் ரசீது வாங்கிவரச் சொன்னேன். நீ முதலாளியிடம் சேர்ப்பித்துவிடு. போதும். நங்கநல்லூர் வீட்டுச் சாவி.''

''அவரை—முதலாளியைப் பார்த்தீர்களா?'' என்றான் தாசரதி.

''ஊம்—உட்கார்ந்திருந்தார்.'' என்றேன்.

''இரண்டு நாளாக.''

''என்னது!''

''இரண்டு நாளாக இப்படியேதான் உட்கார்ந்திருக்கிறார் சார். அது ஒருவிதமான 'ஸ்ட்ரோக்' காம். இப்படியே இரண்டு வருடம் உயிருடன் இருந்தாலும் இருக்கலாம், இரண்டே நாளில் போனாலும் போய்விடும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்.''

பழக்கத்தின் குற்றத்தால் என தொண்டையில் எதுவோ அடைத்துக்கொண்டது. 'சேது! தேவையில்லாமல் ஏன் வேதனை கொள்கிறாய்! தெய்வம் நின்று கொல்லும் என்பதை நினைவு படுத்திக்கொள்!' என் எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்.



''நர்ஸிங்ஹோமில் சேர்ப்பதற்கென்ன?'' என்று கேட்டேன்.

''இங்கேதான்—ஓட்டலில், தன் அறையில்தான்—இருப்பேனென்று சொல்லிவிட்டாராம்.''

''கௌதமன்?''

''பம்பாய் போயிருக்கிறார். அந்த விமான விபத்து—உங்களுக்குத் தெரிந்திருக்குமே? அதற்காகப் போயிருக்கிறார்.''

''வருகிறேன், ராமப்பிரம்மம் வந்தால் சொல்லு,'' என்று கூறிவிட்டு நடந்தேன்.

உள்ளே வந்துகொண்டிருந்த ஒரு கார் என்னருகில் நின்றது.

''உன்னைத் தேடிக்கொண்டுதான் நான் வருகிறேன். நீ பாட்டுக்குக் கிளம்புகிறாயே?'' என்றார் காருக்குள்ளிருந்த வைர வியாபாரியான அருணாசலம்.

''வணக்கம் சார்'' என்றேன் தர்மசங்கடத்துடன்.

''உன்னிடம் சொல்லியிருந்தேனே, வருடாந்தர டின்னர்? அதற்குத் தேதி நிச்சயமாகிவிட்டது. ஞாயிற்றுக்கிழமை ராத்திரி. ஐந்நூறு பேருக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.''

''ஓ, செய்துவிடலாம்'' என்றேன் என் நிலைமையைக் காட்டிக்கொள்ளாமல். ''கொஞ்சம் அவசரமாய் வெளியே போகிறேன். காஷியர் இருக்கிறார். நீங்கள் போங்கள்.''

அருணாசலம் ஏதும் புரியாதவராக என்னைப் பார்த்து விட்டு, காரை மேலே ஓட்டினார். என் பேச்சில் வழக்கமான உற்சாகத்தைக் காணாததால் அவருக்குத் திகைப்பு ஏற்பட்டிருக்கும். இந்த வருடாந்தர டின்னரைப் பற்றி அவர் வெகு காலமாகச் சொல்லி வருகிறார். இந்தியாவெங்கிலுமிருந்து பல பெரிய வைர வியாபாரிகளும், வர்த்தகர்களும் வரப்

போகிறார்களாம். டின்னர் அவர்கள் ஆயுளிலேயே மறக்க முடியாதபடி இருக்க வேண்டுமாம். அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். நானும்கூட, இவ்வளவு பெரிய வர்த்தகர்களை மனத்தில் பதியும் வண்ணம் உபசரிப்பதால், பிற்பாடு பல விதங்களில் லாபம் ஏற்படும் என்பதைக் கருதி, வழக்கமாகப் போடக்கூடிய சார்ஜில் பத்து சதவிகிதம் குறைத்துக்கொள்வதாக வாக்களித்திருந்தேன்.

வருகிற ஞாயிற்றுக்கிழமை!

நான் எங்கே இருப்பேனோ! இவர்கள் எப்படி அருணாசலத்தின் டின்னரை நிறைவேற்றப் போகிறார்களோ! ஃபர்னிச்சர்கள் ஒரு பெரிய பிரச்னை, வர்ணம் சிறிது போயிருந்தாலும் சரி, கால்கள் கொஞ்சம் ஆடினாலும் சரி, மேஜைகளில் ஒரு கீறல் இருந்தாலும் சரி, அந்தப் பக்கம் தலைகாட்டாதபடி அப்புறப்படுத்தியாக வேண்டும். டின்னர் முடிந்தவுடனேயே அந்த இடத்தில் பாராட்டுரை, நன்றியுரை முதலியன வழங்கப்படுவது உண்டு. அதற்குத் தோதாக, சாப்பாட்டுத் தட்டுக்கள் அகற்றப்பட வேண்டும். பீடாக்களை ரொம்ப முன்னதாகத் தயாரித்து வைத்தால், எறும்பு வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

உருப்படியாக இவ்வளவையும் செய்வார்களா? மாட்டார்கள். செய்யாமலே போகட்டும்.

எனக்குள் ஒரு சந்தோஷம் ஏற்பட்டது. அப்படிச் சந்தோஷப்படுவது தப்பென்றும் தெரிந்தது.

படபடவென்று தூறல் போடலாயிற்று நான் சாலையில் சென்றுகொண்டிருக்கையில். எங்கே செல்கிறோம், இனி என்ன செய்யப்போகிறோம் என்று புரியவில்லை. அலாவுதீனின் பூதம்போல எனக்கொரு வேலை! எனக்கொரு வேலை! என்று ஆன்மா புலம்பியது.

தூறல் பலக்கவே, ஒண்டிக்கொண்டேன் ஒரு கடை வாசலில். மழை சோவென்று கொட்டலாயிற்று சில நிமிடங்களில். கடைக்குள் இருந்த ஜனங்களும் வெளியே செல்ல



முடியாமல் என் பின்னே இடித்தாற்போல் நின்றுகொண்டிருந்தார்கள். முன்புறத்திலோ, பாதி நனைந்த கோலத்தில் ஒண்டிக்கொண்டவர்கள்.

நொடித்தவனின் வாழ்க்கையை மேலும் மேலும் இருள் நெருங்குவதுபோல, மழையின் சாரல்கள் கொஞ்சம் கொஞ்சமாக என் சுற்றுப்புறத்தையும் ஈரம் செய்தவாறிருந்தது.

“என்னமோம்மா, எனக்குப் பயமாய்த்தான் இருக்கிறது.”

அந்தக் குரல்! அந்த வாக்கியம்!

அம்மாவா? வியப்புடன் திரும்பிப் பார்த்தால்—

ஆம். அம்மாவும் சின்னப் பாட்டியும்தான் என் முதுகுக்குப் பின்னே நின்றிருந்தார்கள். என்னைப் பார்த்ததால் அவர்கள் முகத்தில் ஏற்பட்ட கலவரம்!

அம்மாவை மேலும் பயமுறுத்த வேண்டாமென்று, சற்று இளகிய குரலில், “ஏனம்மா, இதுதான் நீயும் சின்னப் பாட்டியும் மாமா பெண்ணைக் கவனித்துக்கொள்கிற லட்சணமா?” என்று கேட்டேன்.

அம்மாடி என்று பெருமூச்சுவிட்ட அம்மா, “இல்லைடா சேது. இப்பத்தான் வந்தோம். இதோ மழை நின்றதும் போய்விடுகிறோம்” என்றாள்.

“அப்படி என்ன அவசர வேலை?” என்று நான் கேட்டேன். அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

என் பின்புறத்தில் அவர்கள் நின்றிருந்ததால் கடைக்குள் இருந்துதான் வந்திருக்க வேண்டும். அது என்ன கடை என்று கழுத்தை வளைத்து, தலைக்குமேலிருந்த போர்டைப் பார்த்தேன்.

ரேடியோ, டிரான்ஸிஸ்டர்களைத் தவணை முறையில் விற்பனை செய்கிறார்கள் என்று தெரிந்தது.

''பணம் கட்ட வந்தாயா?'' என்றேன்.

அம்மா பதில் சொல்லாமல் தலையை அசைத்தாள், அப்படியல்ல என்கிற மாதிரி.

இல்லையென்றால்?

''திருப்பிக் கொடுத்துவிட்டோம்'' என்றாள் சின்னப் பாட்டி.

''ஆமாமடா. நாங்கள் கிழவிகள். எங்களுக்கு எதற்கு அந்தக் கண்றாவியெல்லாம்! ஏதோ பைத்தியக்கார ஆசை... அதுவும் தீர்ந்துபோச்சு!'' என்று சிரித்தாள் அம்மா.

அந்தச் சிரிப்பின் பின்னே பொதிந்துள்ள வேதனையைக் கண்டுகொண்டேன். அவளுடைய குழந்தைத்தனமான ஆசையை நிறைவேற்றும் வக்கு இந்தக் கையாலாகாத னுக்குக் கிடையாது என்று தெரிந்துகொண்டுவிட்டாள். இனி இந்தப் பிள்ளையினால் ஒரு பைசாவும் சம்பாதித்துப் போட இயலாது என்று நிர்மானித்துவிட்டாள்...

''இரண்டு மாதம் கட்டியிருந்த பணத்தைத் திருப்பித் தரமுடியாது என்றான். பரவாயில்லை என்று சொல்லிவிட்டோம்...சேது! எங்கே போகிறாய் இந்த மழையில்! சேது! சேது!''

அம்மா கூவக் கூவ, கொட்டும் மழையில் நான் வேகமாய் நடந்தேன். ஒரு டெலிபோன் கூண்டை அடையும் வரையில் நிற்கவில்லை.

நான் டயல் செய்தது, ஓட்டல் சக்கரவர்த்தி ஓ. பி. லாலுக்குத்தான்.



ஓ. பி. லாலின் சென்னை ஓட்டல், கடற்கரை எஸ்டேட்டில் முக்கால்வாசி பூர்த்தியாகியிருந்தது.

ஆனால் ஓ. பி. லால் என்னை முதலில் ஓட்டல் கட்டிடத்துக்கு அழைத்துச் செல்லவில்லை. அதற்குச் சற்றுத் தள்ளிக் கட்டப்பட்டிருந்த அழகிய புது வீட்டுக்குக் கூட்டிப் போனார்.

''என்னுடைய மானேஜருக்கு என்று கட்டியிருக்கிறேன். அனேகமாக அது நீயாகத்தான் இருக்கும் என்று எதிர் பார்த்து, எவ்வளவு நவீன வசதி செய்ய முடியுமோ அவ்வளவும் செய்திருக்கிறேன்'' என்றார் வீட்டுக்குச் செல்கையில்.

பிரமித்துப் போனேன் உள்ளே போனதும். அறைக்கு அறை ரத்தினக் கம்பளங்கள்...புத்தம் புதிய ஸ்டீல் ஃபர்னிச்சர்கள்...நவீனமான சமையலறை...

''உன் அம்மா நங்கநல்லூரில் இருப்பதாகக் கேள்விப் பட்டேன். அந்த அளவு சௌகரியம் இங்கே இருக்குமா என்று தெரியவில்லை. நீதான் சொல்ல வேண்டும்'' என்றார் ஓ.பி. லால், சமையலறையைக் காட்டும்போது.

அந்த அளவு சௌகரியமா! என்னால் சிரிக்காதிருக்க முடியவில்லை. அது பல்லாவரம் குன்று! இது எவரெஸ்டு சிகரம்!

வெளியே வந்தோம். ''அதோ அது, காரேஜ், உனக்குத் தனியான கார் வேண்டுமென்று சொல்லிவிட்டேன். அடுத்த மாதம் வரும். டிரைவரும் தனி. எனக்கே தேவைப்பட்டால் கூட உன் காரையோ டிரைவரையோ உபயோகிக்கக்கூடாது என்று ஆர்டர் போடப்போகிறேன்' என்று கூறிய வண்ணம் லால் ஓட்டல் கட்டிடத்துக்குள் நுழைந்தார்.

''ப்ராபராக ஆரம்பிக்க இன்னும் மூன்று மாதம் ஆகலாம். ஆனால் நீ நாளையிலிருந்தே சார்ஜ் எற்றுக் கொள்!''

''காலையில் வந்துவிடுகிறேன் உங்கள் ஆபீசுக்கு'' என்றேன்.

''சம்பளத்தை மட்டும் இப்போது சொல்லமாட்டேன். காண்டிராக்ட் பாரத்தில் அதைப் பார்த்து நீ அயர வேண்டும்'' என்றார் லால்.

நான் புன்னகை செய்தேன் மரியாதைக்காக. ஏன் என்னுள் மகிழ்ச்சி கொப்பளிக்கவில்லை? உற்சாகம் என்பது எங்கோ எட்டாத் தொலைவில் உள்ள கனவுபோல் இருப்பது ஏன்?

லால் பின் கை கட்டிக்கொண்டு கிரீச் கிரீச்சென்று ஷூஸ் சப்தமிட நடந்தவாறே பேசினார்: ''உனக்குச் சிரமமே இருக்காது. டெல்லி எம்.பி. முதல் கார்ப்பரேஷன் கவுன்ஸிலர் வரை எல்லா இடத்திலும் கம்பிகள் வைத்திருக்கிறேன். புரியவில்லை? ஒயர்—புல்லிங், மைபாய்! ஓ.பி. லாலுக்குத் தெரியாமல் ஒரு பொது நிகழ்ச்சி மூச்சு விடாது இந்த மதறாஸில்!''

நம்பீசன் முன்பொருமுறை சொன்னது எனக்கு நினைவு வந்தது. உலகச் சந்தையின்போது, பெரும்பாலான விருந்தினர்களை 'ஒட்டல் உமா'வுக்கு வரவழைப்பது பற்றிப் பேச்சு வந்தது. செகரட்டேரியட்டுக்குப் போய் மந்திரிகளையாவது, காரியதரிசிகளையாவது பாத்துவிட்டு வரலாம் என்று நான் யோசனை கூறினேன். ''நீ காலேஜில் சேர்ந்தாயே மார்க்கை வைத்தா, சிபாரிசை வைத்தா?'' என்று திருப்பிக் கேட்டார் நம்பீசன். ''நீ போய் மசால் வடையில் ஜம்மென்று வாசனை வரும்படி தயார் செய்யச் சொல்லு. கூட்டம் தன்னாலே வரும்'' என்று சிரித்துக்கொண்டே கூறினார்.



அதையும், இப்போது 'ஒயர்—புல்லிங்' பற்றி ஓ.பி. லால் சொன்னதையும் ஒப்பிட்டுப் பார்த்தேன்.

''வேறெங்கும் இல்லாதபடி ஒரு பெரிய சங்கீத அரங்கமும் சேர்த்திருக்கிறேன் நம் ஒட்டலில். மாடர்ன் அக்கூஸ்டிக்ஸ் பிரகாரம் அமைந்திருக்கிறது. மற்ற ஏற்பாடுகளுக்கு கன்ஸல்ட்டிங்காக, அதோ—''

''ஹலோ! என்னம்மா சௌக்கியமா?'' என்று என் கையைக் குலுக்கியவர் தில்லைநாயகம்தான்.

''ஓகோ! இரண்டுபேரும் முன்பே சிநேகிதமா? பேசிக்கொண்டிருங்கள். இதோ வருகிறேன்'' என்று சொல்லி, வேறொரு காரியத்தைக் கவனிக்கச் சென்றார் ஓ.பி. லால்.

''சேது! நீ செய்தது சரியான காரியம் அம்மா'' என்று என்னைப் பாராட்டினார் தில்லைநாயகம். ''நானும் பல விஷயங்கள் கேள்விப்பட்டேன். ஒட்டல் உமா ஒரு 'ஸிங்க்கிங்' சமாசாரம். நம்பீசனுக்கு இனிமேல் கால மில்லை. அவன் பிள்ளை இருக்கிறானே, பத்துப் பைசா வுக்கு ஒட்டலை விற்றுவிட்டுப் போய்விடுவான். என்னம்மா நான் சொல்வது?''

விலகிய ஸ்தாபனத்தைப் பற்றித் தாழ்வாகப் பேசினால் விலகியவருக்கு மகிழ்ச்சி என்ற சாதாரண மனத்தத்துவப் படி தில்லைநாயகம் பேசினார். ஆனால் எனக்கு அது இனிக்கவில்லை.

''கௌதமன் முன் மாதிரி இருக்கமாட்டான். அவனைக் கெடுத்துக் கொண்டிருந்த ரஜனியும்தான் போய்விட்டாளே!'' என்றேன்.

''அவள் போய்விட்டால் என்ன? அவள் தங்கை வந்து விட்டாளே இப்போது!''

''என்ன...என்ன சொல்கிறீர்கள்?''

''கிருத்திகா அம்மா! அவள் இப்போது 'ஓட்டல் உமா'வில்தான் இருக்கிறாள். இன்று காலை பார்த்தேனே!''

என் தலை சுழன்றது. ''அவள்... கிருத்திகா... விமான விபத்து...

தில்லைநாயகம் சிரித்தார். ''அந்தச் சமாசாரம் தெரியாதாம்மா உனக்கு? ரஜனியின் கொடுமை, ரஜனியின் அற்பத்தனம் என்றெல்லாம் திட்டுவோமே அதுவே கிருத்திகாவைக் காப்பாற்றிவிட்டது. ரஜனி மட்டும்தான் பிளேனில் போனாள். கிருத்திகாவை வழக்கப்படி ரயிலில் வரச்சொல்லிவிட்டாள் அந்தக் கிராதகி! கௌதமனின் அதிர்ஷ்டத்தைச் சொல்லு. அந்தக் கிளி போனால் இன்னொரு கிளி!''

# 17

சாதாரணமாகத்தான் சொல்லிவிட்டுப் போய்விட்டார் தில்லைநாயகம். அவர் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டது எனக்குத் தெரியவில்லை. வெளியே காரின் ஓசை கேட்பதை நான் உணரவில்லை. ஓ.பி. லால் தன் வேலையை முடித்துக்கொண்டு திரும்பி வருவதை நான் கவனிக்கவில்லை. ''என்ன சேது, ஏன் இங்கேயே நின்றுவிட்டாய்?'' என்று அவர் வினவுவதை என் செவிகள் கேட்கவில்லை. மரம் மாதிரி நிற்கும் என்னை அவர் உலுக்குவது எனக்கு உறைக்கவில்லை.

கிருத்திகா—என் கிருத்திகா—உயிரோடு இருக்கிறாள். இதே சென்னையில் இதோ டாக்ஸிக்கு எட்டக்கூடிய சில மைல் தூரத்துக்குள்! மகிழ்ச்சியில் கூத்தாடியிருக்க வேண்டும் நான். ஆனால், கௌதமனுடன் அல்லவா இருக்



கிறாளாம்! ஹூம் சேது! நீ எங்கே போய் முட்டிக்கொண்டாலும் அது தோல்வி என்ற பாறாங்கல்லாக அல்லவா இருக்கிறது.

''என்ன, நாளை என் ஆபீசுக்கு வந்துவிடுகிறாயா, ஒப்பந்தத்தில் கையெழுத்திட?' என்று ஓ. பி. லால் கேட்டுக்கொண்டிருந்தார். நான் மௌனமாக வெளியேறிவிட்டேன். கிருத்திகாவைப் பார்ப்பது ஒன்றுதான் என் ஒரே வேலை... பார்த்து. 'கௌதமனுடன் உன் இல்லறம் சிறக்கட்டும்,' என்று வாழ்த்துவோம்: கண்ணீரைச் சுண்டியெறிந்துவிட்டுத் திரும்புவோம்...

இப்போது நினைத்துப் பார்த்தால் நான் டாக்ஸியில் சென்றேனா, நடந்தா, ஓ. பி. லாலின் காரிலா என்பது எதுவும் ஞாபகம் வரமாட்டேன் என்கிறது. நேரே கௌதமனின் அறையை அடைந்ததுதான் நினைவிருக்கிறது.

அறைக்கு வெளியில், வெயிட்டர்களும், சமையலறை ஆட்களும் நாலைந்துபேர் நின்றிருந்தார்கள். ''இதோ, சேது சாரே வந்துவிட்டார்.'' என்று ஒருவரும், ''இவரிடமே சொல்வோமே?'' என்று இன்னொருவரும் என்னைச் சுட்டிக் காட்டிப் பேசினார்கள்.

''மன்னியுங்கள். உங்களுடன், உங்கள் பிரசினையைப் பற்றிப் பேச வேண்டியவர் உள்ளே இருக்கிறார்'' என்று கூறி, அவர்களை விலக்கிக்கொண்டு கௌதமனின் அறைக்குள் நுழைந்தேன்.

''அப்பாடா! வந்தாயா ஒரு வழியாய்? எங்கெல்லாம் உனக்காக ஆளனுப்புவது? சே! ஓட்டலா இது! நரகம்! பிடியப்பா பொறுப்பையெல்லாம்!'' என்றான் கௌதமன்.

''ஸாரி, கௌதமன். உனக்காக மிகவும் அனுதாபப் படுகிறேன். ஆனால் இத்தனை நேர்ந்த பிறகும் நான் இங்கே என் பழைய வேலைக்கே வருவேனென்று நீ எதிர் பார்க்கிறாயா? நியாயமா?'' என்றேன்.

கௌதமனின் சிவந்த முகம் இன்னும் சிவந்துபோயிற்று கோபத்தினால்.

''பின்னே எதற்காகத்தான் வந்தாய் இங்கே?'' என்றான்.

''கிருத்திகாவைப் பார்த்து, உன்னைத் தேர்ந்தெடுத்தாளே காதலனாக, அதற்கு வாழ்த்துக் கூறத்தான் வந்தேன். அவள் பேதைப் பெண். இளகிய மனமுள்ளவள். இரக்கத்தின் உறைவிடம். உன் பணத்தையும் பகட்டையும் காட்டி, காலைப் பிடித்துக் கெஞ்சி மன்றாடி உன்னைக் காதலனாக ஏற்கும்படி எப்படியோ செய்துவிட்டாய்! கங்கிராசுலேஷன்ஸ்!''

''சீ, நிறுத்து!'' பளீரென அறைகிறமாதிரி சத்தமிட்டான் கௌதமன். ''கிருத்திகாவுடன் அதிகம் பழகியதில்லை நான். ஆகவே அவள் மனம் மாறுவாளா மாட்டாளா என்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்தக் கௌதமன், இனி எந்தப் பெண்ணின் காலடியிலும் போய் நின்று காதல் பிச்சை கேட்கமாட்டான். ரஜனி—என் ரஜனி! அவள் கலையரசி. நாட்டிய ராணி! அவள் காலுக்கு, காலின் விரலுக்கு, விரலின் நகத்துக்கு, நகத்தின் விள்ளலுக்கு நான் அடிமைப்பட்டவன்! இனி இன்னொருத்தி அவள்போல வரப்போவதுமில்லை. இந்தக் கௌதமன் அடிமையாகப் போவதுமில்லை!''

''ரொம்ப மகிழ்ச்சி. பின்னே எங்கே கிருத்திகா?''

''பம்பாயில், நாலைந்து எலும்புகளைக் கொடுத்தார் ..., இந்தா உன் ரஜனி என்று. திரிவேணியில் அவைகளைக் ...ரைத்தோம் நானும் கிருத்திகாவும். படகிலிருந்து கரை ...றியபோது, 'இனி என்ன பண்ணப்போகிறாய்?' என்று ...டேன். 'சேதுவிடம் போகப் போகிறேன்' என்றாள். ... சேர்ப்பிக்கிறேன்' என்று அழைத்து வந்தேன். இந்த ...லில் உனக்கு ஓர் அறை இருந்ததே, அதுவாவது ...விருக்கிறதா? அங்கேதான் தங்கியிருந்தாள். இரு,



போய்ப் பார்த்துவிட்டு வந்து சொல்கிறேன்.'' என்று கூறிவிட்டு வெளியேறினான் அவன். ஆவலை அடக்க மாட்டாமல் தவித்தேன். கால்மணி நேரம் கழித்துத் திரும்பிய கௌதமன், ''இருக்கிறாள், போய்ப் பார்'' என்றான்.

என் அறையை அடைகிற மட்டும் நான் நிற்கவில்லை. எனினும், பல கிசுகிசுப்புக்கள் என் காதில் விழுந்தன. பல பரபரப்புக்கள்—ரகசியமான சந்தடிகள்-என்னால் மோப்பம் பிடிக்க முடிந்தது. ஆனால் எதற்காகவும் நான் நிற்கவில்லை.

''கிருத்திகா!'' என்று கூவிக்கொண்டு என் அறையின் கதவைத் தள்ளினேன் மடாரென்று.

''சேது!''

இரு கரங்களையும் நீட்டிக்கொண்டு ஓடிவந்தாள் என்னிடம்.

அவளைக் கடைசியாகப் பார்த்து எத்தனை காலம் இருக்கும்? பத்து நாளா? ஒரு மாதமா? அல்லது ஒரே வாரமா? கண்டேன். புனிதமான துளசி மாடத்தின்மீது கழுகு வந்து அமர்ந்துகொண்டாற்போல, கனிவும் அன்பும் சிரிப்பும் மட்டுமே இருப்பதற்காகப் பிறப்பெடுத்த அந்தக் கருவிழிகளின் ஓரங்களில் துயரம் கூடு கட்டிக்கொண்டு இடம் பிடித்திருந்தது. செல்லமாய்த் தட்ட நினைக்கும் போதே கன்றிவிடக்கூடிய அந்த ரோஜாக் கன்னங்களில், சோகத்தின் சாம்பல் நிறம் படிந்திருந்தது.

இருந்தாலும், என் கிருத்திகா உயிரோடு இருக்கிறாள்! எனக்காகவே காத்திருக்கிறாள்!

வெறும் எண்ணம் பன்னீராகக் குளிர்விக்குமானால், வெறும் கற்பனை தித்திக்குமானால் அந்த அந்த வினாடியில் நான் சொட்டச் சொட்ட அந்த மழையில் நனைந்தேன்.

கௌதமனின் சிவந்த முகம் இன்னும் சிவந்துபோயிற்று கோபத்தினால்.

"பின்னே எதற்காகத்தான் வந்தாய் இங்கே?" என்றான்.

"கிருத்திகாவைப் பார்த்து, உன்னைத் தேர்ந்தெடுத்தாளே காதலனாக, அதற்கு வாழ்த்துக் கூறத்தான் வந்தேன். அவள் பேதைப் பெண். இளகிய மனமுள்ளவள். இரக்கத்தின் உறைவிடம். உன் பணத்தையும் பகட்டையும் காட்டி, காலைப் பிடித்துக் கெஞ்சி மன்றாடி உன்னைக் காதலனாக ஏற்கும்படி எப்படியோ செய்துவிட்டாய்! கங்கிராசுலேஷன்ஸ்!"

"சீ, நிறுத்து!" பளீரென அறைகிறமாதிரி சத்தமிட்டான் கௌதமன். "கிருத்திகாவுடன் அதிகம் பழகியதில்லை நான். ஆகவே அவள் மனம் மாறுவாளா மாட்டாளா என்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்தக் கௌதமன், இனி எந்தப் பெண்ணின் காலடியிலும் போய் நின்று காதல் பிச்சை கேட்கமாட்டான். ரஜனி—என் ரஜனி! அவள் கலையரசி. நாட்டிய ராணி! அவள் காலுக்கு, காலின் விரலுக்கு, விரலின் நகத்துக்கு, நகத்தின் விள்ளலுக்கு நான் அடிமைப்பட்டவன்! இனி இன்னொருத்தி அவள்போல வரப்போவதுமில்லை. இந்தக் கௌதமன் அடிமையாகப் போவதுமில்லை!"

"ரொம்ப மகிழ்ச்சி. பின்னே எங்கே கிருத்திகா?"

"பம்பாயில், நாலைந்து எலும்புகளைக் கொடுத்தார் ..ள், இந்தா உன் ரஜனி என்று. திரிவேணியில் அவைகளைக் ..ரைத்தோம் நானும் கிருத்திகாவும். படகிலிருந்து கரை ..றியபோது, 'இனி என்ன பண்ணப்போகிறாய்?' என்று ..ட்டேன். 'சேதுவிடம் போகப் போகிறேன்' என்றாள். .., சேர்ப்பிக்கிறேன்' என்று அழைத்து வந்தேன். இந்த ..—லில் உனக்கு ஓர் அறை இருந்ததே, அதுவாவது ..னவிருக்கிறதா? அங்கேதான் தங்கியிருந்தாள். இரு.



போய்ப் பார்த்துவிட்டு வந்து சொல்கிறேன்." என்று கூறிவிட்டு வெளியேறினான் அவன். ஆவலை அடக்க மாட்டாமல் தவித்தேன். கால்மணி நேரம் கழித்துத் திரும்பிய கௌதமன், "இருக்கிறாள், போய்ப் பார்" என்றான்.

என் அறையை அடைகிற மட்டும் நான் நிற்கவில்லை. எனினும், பல கிசுகிசுப்புகள் என் காதில் விழுந்தன. பல பரபரப்புக்கள்—ரகசியமான சந்தடிகள்-என்னால் மோப்பம் பிடிக்க முடிந்தது. ஆனால் எதற்காகவும் நான் நிற்கவில்லை.

"கிருத்திகா!" என்று கூவிக்கொண்டு என் அறையின் கதவைத் தள்ளினேன் படாரென்று.

"சேது!"

இரு கரங்களையும் நீட்டிக்கொண்டு ஓடிவந்தாள் என்னிடம்.

அவளைக் கடைசியாகப் பார்த்து எத்தனை காலம் இருக்கும்? பத்து நாளா? ஒரு மாதமா? அல்லது ஒரே வாரமா? கண்டேன். புனிதமான துளசி மாடத்தின்மீது கழுகு வந்து அமர்ந்துகொண்டாற்போல, கனிவும் அன்பும் சிரிப்பும் மட்டுமே இருப்பதற்காகப் பிறப்பெடுத்த அந்தக் கருவிழிகளின் ஓரங்களில் துயரம் கூடு கட்டிக்கொண்டு இடம் பிடித்திருந்தது. செல்லமாய்த் தட்ட நினைக்கும் போதே கன்றிவிடக்கூடிய அந்த ரோஜாக் கன்னங்களில், சோகத்தின் சாம்பல் நிறம் படிந்திருந்தது.

இருந்தாலும், என் கிருத்திகா உயிரோடு இருக்கிறாள்! எனக்காகவே காத்திருக்கிறாள்!

வெறும் எண்ணம் பன்னீராகக் குளிர்விக்குமானால், அந்த வினாடியில் நான் சொட்டச் சொட்ட அந்த மழையில் நனைந்தேன். வெறும் கற்பனை தித்திக்குமானால் அந்த

வினாடியில் நான் தேன் நிறைந்த தடாகத்திலே மூழ்கினேன். வெறும் ஊகம் பரவசமூட்டுமானால், அந்த வினாடியில் லட்சக்கணக்கான இன்னிசைகளை என் நரம்புகள் எழுப்பின.

''இருத்திகா' என்று கூறி அவள் கரங்களைப் பிடித்துக் கொண்டேன்.

அக்காவின் மரணம் அவளை என்ன பாடுபடுத்தியிருக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் நான் சொற்களால் அவளுக்குத் தேறுதல் சொல்ல முற்படவில்லை. இருதயங்களுக்கென்று ஒரு தனி மொழி உண்டு; ஸ்பரிசங்கள் சில வேளைகளில் மிக உரக்கப் பேசும் சூட்சமமான, வடிவமும் உருவமும் இல்லாத தேறுதல்களை நான் வழங்கினேன். அவைகளை வாங்கிக் கொண்டாள் இருத்திகா.

''புறப்படு'' என்றேன்.

''எங்கே... ஏன்?'' என்று திடுக்கிட்டாள் அவள்.

அந்தத் திகைப்பு என்னை யோசிக்க வைத்தது. ஓட்டல் உமாவிடம் எனக்கு எவ்விதத் தொடர்பும் கிடையாது என்பதை அப்போது வெளிப்படுத்த வேண்டாம் என்று தீர்மானித்தேன்.

''இது ஓட்டல் இருத்திகா. எனக்கு வீடு இருக்கிறது. அம்மா இருக்கிறாள். குடும்பம் இருக்கிறது. நீ தங்கியிருக்க வேண்டியது அங்கேதான்'' என்றேன்.

''உங்களுக்கு இங்கே வேலை இருக்குமே?'' என்றாள் இருத்திகா.

''அதைப்பற்றி என்ன பேச்சு? வா போகலாம். முகம் கழுவிக்கொள் முதலில். இதோ குளியலறை ''

இருத்திகா குழப்பத்துடன் குளியலறைக்குள் வந்தாள்.

குழாயைத் திறக்கவிருந்த சமயம், அடுத்த அறையில் பேச்சுக் குரல்கள் கேட்டன. இன்னொரு குளியலறை அது. இரண்டுக்கும் பொதுவான ஒரு தடுப்புத்தான் இருந்ததால், அங்கே பேசுவது நன்றாய்க் கேட்டது.



''செருப்பால் அடிப்பானாமா, செருப்பால்? யாரை யார் அடிக்கிறார்களென்று பார்த்துவிடுவோம்!'' என்றது ஒரு குரல்.

''அடிக்கக் கிடிக்க வேண்டாம். மின்னல் வேலை நிறுத்தம்தான் ஒரே வழி. எல்லாம் தீர்மானமாகிவிட்டது. டகாரென்று கையிலிருக்கிற வேலையைப் போட்டுவிட வேண்டியது.''

''எப்போது?''

''நாளை சாயந்தரம். அந்த வைர வியாபாரிகள் டின்னர் இருக்கிறதே! அப்போது! அடுப்பில் ஒரு பதார்த்தம் வேகாது. மேஜைக்கு ஒரு ஸர்வரும் இருக்கமாட்டான். தண்ணீர் கொடுக்கக்கூட ஆள் கிடையாது. முழி பிதுங்க வேண்டும். மூக்கை உடைத்து அவமதிக்க அதுதான் நேரம்...''

நான் குழாயைத் திறந்தேன். சர்ரென்று பேஸினில் பீய்ச்சிய தண்ணீர் பக்கத்து அறைப் பேச்சை நிறுத்தியது. அவர்கள் போய்விட்டார்கள்.

பாயும் தண்ணீரைக் கையில் ஏந்தவில்லை இருத்திகா. என் முகத்தையே பார்த்தபடி சிலைபோல் நின்றிருந்தாள். அவள் முகம் கேள்விக்குறிகளால் மூடப்பட்டிருந்தது.

''சேது! நீங்கள் இல்லாமல் இரண்டு மூன்று நாளாய் இங்கே ஒரே குழப்பமாக இருக்கிறதாம். கௌதமன் யாரையோ தப்பாய்ப் பேசிவிட்டாராம். நப்பீசன் எழுந்து நடமாடுகிற மாதிரியே இல்லையாம். நீங்கள்தான் நிலைமை யைச் சரிப்படுத்த வேண்டுமென்று...''

''இருத்திகா! ஏன் இந்த வீண் பேச்சு? நான் இங்கே இருப்பதில்லையென்று எப்போதோ முடிவுசெய்துவிட்டேன். தயவுசெய்து என் சொந்த விஷயத்தில் வாதாடாதே.''

கிருத்திகாவின் முகம் இருண்டது. "சரி, சேது... பேச வில்லை" என்று கூறி என் பின்னே வெளிவந்தாள். ஒரு நிமிஷம் தயங்கினாள்.

"என்ன?" என்றேன்.

"என் அக்காவின் நினைவு வந்தது... நானும் அவளும் கடைசியாகத் தங்கிய இடமில்லையா இது... இங்கேதான் ஒருநாள் ஒரு பத்து ரூபாய் நோட்டைப் பறக்கவிட்டு விட்டுத் திண்டாடினாள். அதோ அங்கேதானே பேப்பர் படிப்பாள். சேது, இனி இன்னொரு முறை இங்கே வரு வேனோ மாட்டேனோ! கொஞ்சம் இருங்கள். ஓட்டலைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் புறப்படலாம்..."

எனக்கு அந்த யோசனை பிடிக்கவில்லை. ஆனால் இறந்துபோன ரஜனியின் நினைவில் இருக்கும் அவளைத் தடுக்கவும் மனமில்லை. "எனக்குச் சம்பந்தமில்லாத இடம்! ஊ-ம்... வா" என்று அழைத்துச் சென்றேன்.

ஓட்டலின் முன்புறங்களில் மட்டுமல்லாமல் பின்புறங் களுக்கும் போனோம். வழியில் பலபேர் என்னைப் பழைய மரியாதையுடன் விசாரித்தார்கள். நான் பட்டுக்கொள் ளாமலே விக்கிக்கொண்டேன்.

பாண்ட்ரியையும், ஸ்டோர் ரூமையும், தண்ணீர் டாங்க் கையும் தாண்டிக்கொண்டு சென்றவள், வெஜிடபிள் ரூமின் பாதாள அறைக்குள் புகுந்தாள்.

அங்கேயும் நுழைந்தேன்.

ஜில்லென்ற சூழ்நிலை என்னைக் கவ்விக்கொண்டது. அது கோல்டு ஸ்டோரேஜ். ஓட்டலுக்குத் தேவையான கறி காய்களை அங்கேதான் சேமித்து வைப்பது வழக்கம். கொத்தவால்சாவடியிலிருந்து பச்சைப் பசேலென வரும் கறிகாய்களும் இலைக்கட்டுக்களும் அந்த அறையெங்கும் அடுக்கப்பட்டிருக்கும். தினசரித் தேவைக்கு ஒரு பக்கம் எடுத்துக்கொண்டு, இன்னொருபுறம் புதியவற்றைக் கொணர்ந்து வைப்பார்கள். பூஜ்ய டிகிரிக்கும் கீழ்ப்பட்ட சீதோஷ்ண நிலையில் அந்த அறையை எப்போதும் வைத் திருப்பது வழக்கம். ஒரே ஓர் இரும்புக் கதவுதான் உண்டு அங்கே. சுரங்க அறைக்குச் செல்வதுபோல் படிக்கட்டின் வழியே கீழிறங்கிச் செல்ல வேண்டும். ஆட்கள் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருப்பதால் அனேகமாய் அந்தக் கதவுக்கு ஒரு முட்டுக்கொடுத்துத் திறந்தேதான் வைத்திருப் பார்கள்.



மளுக்கென்ற சப்தம் என் பேச்சை வெட்டியது. திரும்பிப் பார்த்தேன்.

நாங்கள் வந்தபோது மோதிவிட்டதாலோ என்னவோ அந்த ஆடமாடிக் இரும்புக் கதவு படக்கென்று சாத்திக் கொண்டிருந்தது.

"ஐயையோ! கதவு!" என்று வீரிட்டாள் கிருத்திகா.

"பயப்படாதே!" என்று சிரித்தவாறே அதை இழுத்துப் பார்த்தேன். தானாகவே பூட்டிக்கொண்டிருந்தது வெளிப் புறம்.

"அதைத் திறவுங்கள்! திறவுங்கள்! இல்லாவிட்டால் என் உயிருக்கே ஆபத்து!" என்றாள் கிருத்திகா.

"பைத்தியக்காரி!" என்று அவளைத் தேற்றிவிட்டு, கதவினருகே சென்று இழுத்தேன்.

அதே சமயம் மறுபுறத்திலிருந்தும் அதைத் தட்ட லானார்கள். நல்ல கனமான கதவு. துளிகூடச் சந்து இடையாது. எனவே, மறுபக்கத்திலிருந்து பேச்சுக் குரல் வெகு பலவீனமாகத்தான் கேட்டது. "யாரங்கே வெளியே? கதவைத் திறக்கச் சொல்!" என்று பலங்கொண்ட மட்டும் கத்தினேன். பலமுறை அவ்வாறு கத்திய பிறகுதான் மறு முனையில் ஏதோ பதில் சொல்கிறார்களென்று புரிந்தன. 'நாங்களும் அதற்குத்தான் முயற்சி செய்கிறோம்,' என் கிறாற்போல் ஏதோ சொன்னார்கள்.

இருத்திகாவின் வதனத்தை ஒரு துயரமான புன்னகை போர்த்துக் கொண்டிருந்தது. மெல்லத் திரும்பி அறையின் ஒரு கோடிக்குச் சென்றவள், காலைச் சற்று நீட்டினாற் போல் ஒரு கணித்துச் சாய்ந்து கொண்டாள். அவளுடைய தலை இருந்த இடத்தில் பசேலென்ற கொத்துமல்லிக் கட்டுக்களும், கால் இருந்த இடத்தில் செக்கச்சிவந்த தக்காளிகளும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றிலே ஒரு கவித்துவமான பொருத்தம் தெரிந்தது

தாழ்ந்த குரலில் நிறுத்தி நிறுத்திப் பேசினாள் அவள்: ''நான் இறக்கும்போது, அனாதையாக, ஒன்றியாகப் போகாமல் என் பிரியத்துக்குரியவர்களின் பக்கத்தில் இருக்க வேண்டும் என்று அடிக்கடி நினைத்துக்கொள்வது வழக்கம்;''

''உனக்குப் பைத்தியம்தான்! இப்போது ஏன் அந்தப் பேச்சு? ஓர் ஆபத்தும் இல்லை. விடிய விடிய இங்கே அடைபட்டிருந்தாலும் எதுவும் நேராது!'' என்று சொல்லிவிட்டு, தவிடம் மறுபடி பாய்ந்தேன். பிடிகளைப் பிடித்து உலுக் னேன். வெளியே பல பரபரப்பான நடமாட்டங்களை என் செவி உணர்ந்தது.

தரையோடு தரையாகக் கதவு பதிந்திருந்தபோதிலும், பூமியில் மயிரிழைக்கு ஓர் இடைவெளி இருந்தது. அதன் வழியே வெள்ளையாக எதுவோ வருவதைக் கண்டேன்

காகிதம்! மறுபுறத்திலிருந்து யாரோ கொடுக்கிறார்கள்!

தரையில் அழுத்தினாற்போல் இழுத்துப் பார்த்தேன்.

உன்னையும் கிருத்திகாவையும் விடுவிக்கத் தான் முயன்றுகொண்டிருக்கிறோம். பயப்படாதே. ஆபத்தில்லை. அறைக் கதவு பூட்டிக்கொண்டு விட்டது. ஒரு சாவி ராமப்பிரம்மத்திடம் இருக்கிற தாம். அவர் டவுனுக்குப் போயிருக்கிறார். எப்போது வருவாரோ தெரியவில்லை. இன்னொரு சாவி உண்டா?

—கௌதமன்



நல்லவேளை. என் பேனா, பையிலேயே இருந்தது. பரபரவென்று காகிதத்தின் பின்புறத்திலேயே எழுதி, வந்த வழியாகவே நகர்த்தித் தள்ளினேன்.

இன்னொரு சாவி உன் அப்பாவிடம் இருக் கிறது. அவர் சொல்கிற நிலையில் இருந்தால் சரி. இல்லாவிட்டால் அவருடைய அறையில் தேடிப் பார். முதலில் இந்த ப்ரீஸிங் டெம்பரேச்சரை நிறுத்து.

—சேது

திரும்பினேன் கிருத்திகாவிடம். ''சாவியைத்தான் தேடுகிறார்கள். இதோ திறந்துவிடுவார்கள்'' என்றேன்!

அவள் அந்தச் பேச்சை லட்சியம் செய்யவில்லை. விட்ட இடத்தில் தொடர்ந்தாள். ''எனக்குப் பிரியமானவர்கள் இரண்டே பேர்தான். ஒருத்தி, என் அக்கா. அவள் போய் விட்டாள். இரண்டாமவர் நீங்கள். உங்கள் பக்கத்தில் எனக்கு முடிவு நேருவதில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி சேது!''

''வாயை மூடமாட்டாய் நீ?''

''சேது! உண்மையை உணர்ந்துதான் பேசுகிறேன். நான் நடனம் ஆடுவதில்லையென்று என் அம்மாவிடம் வாக்குக் கொடுத்ததாக முன்பொருமுறை சொன்னே னல்லவா? அதெல்லாம் பொய்!''

''பின்னே?''

''எனக்கு இருதய நோய் சேது!''

''கிருத்திகா!''

ஆமாம். இந்தப் பலவீனமான இருதயத்துடன் ஆடக் கூடாதென்று பதினைந்து வருடத்துக்கு முன்பே டாக்டர் சொல்லிவிட்டார். அதன்பிறகுதான் அக்காவுக்குக் காரிய தரிசியாக இருந்து வரலானேன். அப்படியும்கூட, ஸ்விட்ஜர் லாந்துக்குப் போயிருந்தபோது திடீரென்று ஒருநாள் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன். அங்கேதான் டாக்டர்

இருதய நோய்க்குக் குளிர்தான் எமன் எச்சரித்தார்—என் இருதய நோய்க்குக் குளிர்தான் எமன் என்று. அந்த மாதிரியான குளிர் தேசங்களுக்கு நான் போகவே கூடாதென்று சொல்லிவிட்டார். பிறகு நான் அங்கே போகும் சந்தர்ப்பமும் ஏற்படவில்லை. ஆனால், சாதாரண ஏர்கண்டிஷன் அறைகளில்கூட நான் அதிக நேரம் தங்குவதில்லை... ஆனால் ஓட்டல் உமாவின் ஐஸ் அறையில் எனக்கு முடிவு காத்திருக்கிறது...

‘‘கிருத்திகா! ஏன் முன்பே சொல்லவில்லை இவ்வள வையும்?’’ என்று பதறிவிட்டுக் கதவினருகே ஓடி, ‘‘என்ன தான் செய்கிறீர்கள் இன்னும்?’’ என்று கத்தினேன்.

இன்னொரு வெள்ளைக் காகிதம் நகர்ந்து வந்தது. தாசரதி எழுதியிருந்தான் இம்முறை.

‘எலக்ட்ரிக் மெகானிக்குக்கு ஆள் போயிருக் கிறது. இந்த அறைக்கு மட்டும் மின்சாரத்தை நிறுத்துவது எப்படி என்று யாருக்கும் தெரிய வில்லை. கட்டிடம் பூராவுக்கும் நிறுத்த வேண்டும். அங்கங்கே முன்னெச்சரிக்கை செய்து கொண்டிருக் கிறோம். கொஞ்ச நேரம் பொறுக்கவும். எப்படியும் உயிருக்கு அபாயமில்லை.’’

‘‘உயிருக்கு அபாயமில்லையா! முட்டாள்களே! இங்கே ஓர் உயிர் ஊசலாடுகிறது!’’ என்று கதவின்மீது மோதினேன். தோள்கள் வலியெடுத்தன.

‘‘சேது! இப்படி வந்து என்னருகில் உட்காருங்கள்’’ என்று கிருத்திகா அழைத்தாள். அவள் குரல் மிகவும் பலவீனமாகிவிட்டதை உணர்ந்தேன். தாவி அவளை அடைந்து, அவள் கரங்களைப் பற்றிக்கொண்டு, ‘‘பயப் படாதே!’’ என்றேன் திரும்பத் திரும்ப.

‘‘சேது! கட்டாயம் நீங்கள் இதே ஓட்டலில்தான். பழைய பதவியில்தான் இருக்க வேண்டும்...’’

‘‘கிருத்திகா! அதைப்பற்றிப் பேச இப்போதுதான் சமயமா?’’



‘‘இப்போதுதான் சமயம். இது ஒன்றுதான் சமயம். என் அன்புக்குரிய சேது தன் இயல்பிலிருந்து மாறாமல், நான் நினைத்து வந்திருக்கிறபடி நேர்மையாளனாக, கடமை வீரராக இருக்கிறார் என்று உறுதிப்படுத்திக் கொண்டால் என் மரணம் இனிமையாக அமையும்.’’ அவள் என் பிடியில் துவண்டாள்.

‘‘கிருத்திகா! கண்டபடி உளறாதே. உனக்கு மரணமு மில்லை, ஒன்றுமில்லை’’ என்று அலறினேன்.

‘‘நீங்கள் சொல்லிவிட்டால் சரியாயிற்றா?’’ என்று புன்னகை செய்தாள் அவள். ‘சேது! அன்றொரு நாள் ரஜனியையும் கௌதமனையும் பிரித்தாக வேண்டுமென்று என்னிடம் சொன்னபோது, எப்படியெல்லாம் பேசினீர்கள்? நினைத்துப் பாருங்கள். ‘கண்ணீராலும் செந்நீராலும் கட்டிய ஸ்தாபனம் இது, இதைப் பாழடிக்கும்படி விட மாட்டேன். என்று நீங்கள் பேசவில்லையா?’’

‘‘இப்போதும் என்ன? நான் ஒருவன் விலகுவதால் இது பாழாகிவிடாது.’’

‘‘அதெப்படி நிச்சயமாய்ச் சொல்ல முடியும்? ஓட்டலை வளர்த்தவர், அனுபவமுள்ளவர், பிரமை பிடித்து, பாதி செத்துவிட்டார். அவருடைய மகன் எதுவும் தெரியா கோபக்காரராக இருக்கிறான். இரண்டு பேருக்கும் பாலமா இருக்கிற நீங்கள் மனம் வைத்தால்தான் ‘ஓட்டல் உமா பிழைக்கும்...’’ அவள் பேச்சு இணறிக்கொண்டே வந்தது

‘‘அதிகம் பேசாதே, கிருத்திகா. களைப்பு ஏற்படும்.’’ என்றேன்.

‘‘பரவாயில்லை. பேசுவதால் இந்த உயிர் சீக்கிரம் பிரிந்துவிடும் என்றால் அது இந்தப் பேச்சுப் பேசுவதாலேயே போகட்டும். ஏனென்றால் சேது, உங்களை இந்த ஓட்டலின் மானேஜர் என்பது தவிர வேறு எந்தவிதமாகவும் என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. இங்கேதான் உங்கள் உயிர் இருக்கிறது. உங்கள் சதை, ரத்தம் வியர்வை, உழைப்பு,

இருக்கிறது. வேறு
எல்லாம்—ஆன்மா உள்பட—இங்கேதான் இருந்தாலும் நீங்கள்
எந்த இடத்திலும் அது சுவர்க்கமாகவே
தரையில் போட்ட மீனாகத்தான் தவிப்பீர்கள்...''

அவள் பேச்சிலிருந்த உண்மை என்னைத் தகித்தது.
''ஆனால் நீ என்னை இருக்கச்சொல்வது நல்ல தண்ணீரில்
அல்ல! நச்சுத் தண்ணீரில்! இதைக்காட்டிலும் தரையிலேயே
தவிக்கலாம்! கிருத்திகா! இது பழைய சேது அல்ல. நம்பீச
னின் சொருபத்தை அறிந்துவிட்ட புதிய சேது!''

''நானும் கேள்விப்பட்டேன். ராமப்பிரம்மம் சொன்
னார். ஆனால், சேது, கொலைகாரன் ஒருவன் நீரூற்றினான்
என்பதால் ரோஜாச் செடியில் பூக்கும் மலருக்கு ரத்தத்தின்
நாற்றம் வந்துவிடாது சேது! பாவியொருவன் ஏற்றிவைத்
தான் என்பதால் ஊதுவத்தி மணக்க மறுத்துவிடாது.
உங்கள் இயல்பு துரோகமல்ல சேது; நேர்மையும்
விசுவாசமும், கடமையுணர்வும்தான். ஆயிரம் நம்பீசன்
களாலும் அதை அகற்ற முடியாது. குப்பை மேட்டைப்
பிடிக்கவில்லை என்பதற்காகச் சூரியன் தன்னைத்தானே
ஒளித்துக்கொள்வானா என்ன? சேது! உங்களை நீங்களே
மட்டமாக எடை போடாதீர்கள்...''

''கிருத்திகா! ஐயோ! அந்தக் கதவை யாராவது
திறவுங்களேன்!'' என்று அலறினேன் மீண்டும் மீண்டும்.
''எழுந்து கொஞ்சம் நட, கிருத்திகா. உடம்பில்
சூடேறட்டும்,'' என்று கூறி எழுப்பி அவளை நடத்தினேன்.

''சேது! உங்கள் மனக்கதவைத் திறந்து வெளிச்சத்துக்கு
வாருங்கள் முதலில்.'' சேது! நம்பீசன் என்ற ஒரு
தனி முதலாளி எப்படி வேண்டுமானாலும் ஒழியட்டும்.
நீங்கள் விசுவாசம் வைத்தது; உழைத்தது; அவருக்கல்ல. ஒரு
ஸ்தாபனத்துக்கு, முதலாளியைப் பிடிக்கவில்லை என்பதற்
காக, திறம்பட வளர்ந்த ஒரு ஸ்தாபனத்தை ஏன் பாழடிக்க
எண்ணுகிறீர்கள்? தினம் தினம் தெய்வத்தைக் கும்பிடுகிறீர்
களே, அந்த பக்தியெல்லாம் தெய்வத்துக்கா, தெய்வத்தின்
வெளிப்பாடுகளாக உள்ள நல்லியல்புகளுக்கா? நீங்கள்



கற்பூரம் கொளுத்தியதும் கன்னத்தில் போட்டுக் கொண்
டதும் படத்துக்கா, படத்தின் பின்னேயுள்ள பெருமை
களுக்கா? பேசுங்கள் சேது!''

பேசிக்கொண்டேயிருந்தவள், மீண்டும் கீழே ஊர்ந்து
வந்த காகிதத்துண்டைக் குனிந்து எடுத்தாள். ''சேது!''
என்று கூவினாள் அதைப் பார்த்ததும்.

இத்தனை நேரமும் தென்பட்டதைக் காட்டிலும் அதிக
மானதோர் பீதி—புதிய வகையான பீதி—அவள் முகத்தில்
பரவுவதைக் கண்டேன்.

''என்ன அது?'' என்று காகிதத்தைப் பிரித்துப்
படித்தேன்.

> திட்டம் விபரீதமாகிவிட்டது. கதவு நிஜ
> மாகவே சிக்கிக்கொண்டுவிட்டது. கவனிக்கிறோம்.
> கலவரப்பட வேண்டாம்.
>
> —கௌதமன்

திடுக்கிட்டுப் போனேன். ''கிருத்திகா? என்ன இதெல்
லாம்?''

''சேது!'' அவள் என் தோளைக் கட்டிக்கொண்டு விம்பி
னாள். ''எனக்கு இருதய நோயுமில்லை, குளிர்ச்சியினா
நான் சாவேன் என்று எந்த டாக்டரும் சொல்லவுமில்லை
ஆனால் உங்கள் பிடிவாதத்தை அகற்றுவதற்காக, பழை
படி உங்களை 'ஒட்டல் உமா'வின் மானேஜராக இருக்கச்
செய்வதற்காக இப்படியெல்லாம் நடிக்கச் சொன்னார்கள்.''

''கிருத்திகா!'' என் செவிகளை என்னால் நம்ப முடிய
வில்லை.

''ஆமாம் சேது! நீங்கள் என் அறைக்கு வரும் முன்னால்
கௌதமன் சொல்லிவிட்டுப் போனார் அவர் ராமப்
பிரம்மம், தொழிலாளர்கள்—எல்லோரும் சேர்ந்து இந்த
நாடகத்தை ஏற்பாடு செய்தோம்... எப்படியாவது உங்க
ளிடம் சத்தியம் வாங்கிக்கொண்டு...''

இம்முறை கிருத்திகா என்மீது நிஜமாகவே மயக்கமுற்றுச் சாய்ந்தாள். அதே சமயம் விளக்கு அணைந்தது. மின்சாரம் நின்றது. வெளியே முன்னைக் காட்டிலும் அதிகமான பரபரப்புக்கள் ஏற்பட்டன. கதவை இடிப்பதும் மோதுவதும் ஆளுக்கு ஆள் யோசனை சொல்வதும் அதிகப்பட்டன.

புதியதோர் தெம்பு என் மனத்தில் பிறந்தது. என் ஒருவனை இங்கே இருத்திக்கொள்வதற்காக, ஒரு மாபெரும் ஓட்டலின் மொத்தப் பேரும்—முதலாளி முதல் தொழிலாளி வரை—விரும்பி ஆசைப்பட்டுத் திட்டமிட்டிருக்கிறார்கள்! சேது! எவனுக்கடா கிடைக்கும் இந்தப் பாக்கியம்! இவர்களுடைய ஆசை, விருப்பம், கோரிக்கை—மாதக்கணக்கில் கிருத்திகா மன்றாடியிருந்தாலும் செய்திருக்க முடியாத மாற்றத்தை, புரட்சியை என் இதயத்தில் இந்த ஒரே ஒரு செயல் ஏற்படுத்திவிட்டது!

சேது! சீக்கிரமாக வெளியேறு! இந்தக் கரியமில வாயுக் குகையிலே வாழ்வை முடிக்காதே! உன் அன்பை யாசிக்கும் நூற்றுக்கணக்கானவரை ஏமாற்றிவிட்டு இந்த இருட்டுப் பாழிலே மக்கி மடிவதற்காகவா இறைவன் உன்னைப் படைத்தான்? இல்லை, இல்லை! சேது! அந்தக் கதவை உடை! தூளாக்கு!

கிருத்திகாவைக் கீழிறக்கினேன். உயிரை விடுவதானால் இங்கேதான் விடுவது என்ற உறுதியுடன், கதவின் பிடியை ராட்சதத்தனமாகத் திருகலானேன்.

தெய்வம் என் பங்கிலிருந்ததால், மறுபுறத்தில் மெக்கானிக்குகளின் முயற்சியும் வெற்றி பெற்றது. கதவு திறந்தது.

வெள்ளமாகக் கொட்டும் வியர்வையுடன் கிருத்திகாவைத் தூக்கிக்கொண்டு வெளியே பாய்ந்தேன்.



தயாராய்க் காத்திருந்த டாக்டர், என்னிடமிருந்து கிருத்திகாவைப் பெற்றுக்கொண்டு முதலுதவி அளிக்கலானார். கவலையும் மகிழ்ச்சியும் சேர்ந்த ஆரவாரத்துடன் அனைவரும் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள்.

நான் அவர்களையெல்லாம் நோக்கினேன். என்னைச் சுற்றிலும் தெரிந்த முகங்கள், பழகிய முகங்கள், பிரியமான முகங்கள், எனக்காக உயிரையும் கொடுக்கும் முகங்கள், என் வலுவான கரத்தின் உழைப்பையும், என் அசட்டுத்தனமான புத்தியின் ஆற்றலையும், தூய்மைப்படுத்தப்பட்டுவிட்ட என் இதயத்தின் விசுவாசத்தையும் பெற்றுக்கொள்வதற்காகக் காத்துக்கொண்டிருக்கும் முகங்களை என்னைச் சுற்றி எங்கெங்கும் கண்டேன்.

மறுவினாடி, ''ராமப்பிரம்மம்! எங்கே அந்த ராமப்பிரம்மம்?'' என்று கத்தினேன்.

''இதோ சேது!'' என்று முன்னால் வந்தார்.

''யாருக்கும் வேலை கிடையாதா இங்கே? போகச் சொல்லுங்கள் எல்லோரையும்!''

''சேது... நீ...''

''ஓட்டல் உமாவின் மானேஜர் சேது பேசுகிறேன். தெரியவில்லை?''

''சேது!'' என்னை உணர்ச்சிப் பெருக்குடன் அணைத்துக்கொண்டார் ராமப்பிரம்மம்.

**பொ**ழுதுகள் புலருகின்றன. அகத்தையும் புறத்தையும் தூய்மையாக்கும் ஆதவனின் ஒளி 'ஓட்டல் உமாவை' மெல்ல மெல்லத் தெளிவு பெறச் செய்கிறது. காலையிளங் காற்றின் சிலிர்ப்பை ரசித்தவண்ணம், டையைச் சரிசெய்துகொண்டு, பாண்ட் பைகளில் கை செருகிக்கொண்டு வெராந்தா வழியே நடக்கிறேன்.

இது நம்பீசனின் அறை. தாண்டிச் செல்கிறேன்.

'சேது! நில்லடா! முட்டாள் சேது!' என்று என் உள் குரல் கூப்பிடுகிறது. 'சேது! பைத்தியக்காரா! ஏனடா தாண்டிச் செல்கிறாய்? உனக்கேதடா வெறுப்பும் பகைமையும்! நிருத்திகா என்ற அற்புத மணி விளக்கு உன் இதயத்துக்குள்ளே ஒளிவீசுவது தெரியவில்லையா? அதன் கோடி சூரிய பிரகாசத்தில், இருளடைந்த வெறுப்புக்களும் அழுக்காறுகளும் காழ்ப்புக்களும் செத்தோம் பிழைத்தோம் என்று தலைதெறிக்க ஓடுவது கண்ணில் படவில்லையாடா மடையா! கோலமிட்ட பூஜைத் தரையாக விளங்கும் உன் மனத்தில், கண்ட கண்ட குப்பைகளைக் கொட்டாதேடா முட்டாள்!

நான் நம்பீசனின் அறைக்குள் நுழைகிறேன். அசைவற்று, விழிகளில்கூட உயிரற்று, மூச்சு மட்டுமே விடும் பதுமையாக நாற்காலியிலே கிடக்கும் முதலாளியின் முன்னிலையில் நிற்கிறேன். பாண்ட் பையிலிருந்து நாட்குறிப்பை எடுத்துப் பிரித்து வைத்துக்கொண்டு, "குழந்தைகளுக்கான பூங்கா வேலை முடிந்துவிட்டது. காண்டிராக்டருக்குச் செக் தர வேண்டும். எஜுகேஷனல் ஸெமினாருக்கு இடம் தருவது பற்றிப் பேச டெல்லியிலிருந்து திரிவேதி வருகிறார்—பிற்பகல் மூன்று மணி..." என்று அன்றைய அலுவல்களை ஒப்பிக்கிறேன்.

நம்பீசனின் விழிகள் அசையவில்லை. சூனியத்தை அவர் பார்க்கிறார். ஆனால் நானோ ஒளிமயமான எதிர்காலத்தைக் காண்கிறேன்.